பசுநீகாரம், ஆணவமலம், one of the three evil passions; pride.

பசுநுணலை, பச்சைத்தவளை, green frog.

பசுநுணலைநெய், பச்சைத்தவளை நெய், fatty grease of green frog.

பசுநெய், பசுவெண்ணெயை உருக்கிய நெய், இது மருந்துக்குதவும், clarified butter from cow's curd. It is much used in medicine. It is sweet, cool in its potency. It possesses excellent tonic and invigorating properties. It is the best of all kinds of ghee.

பசுந்தரை, புற்றரை, grassy plot — Lawn.

பசுந்தினை, செவ்வித்தினை, a kind of millet.

பசுந்து, நெற்றி, fore head; 2. அழகு, beauty; 3. பசுமை, greenness; 4. நேர்த்தி, fineness.

பசுபதிபாசஞானம், பசு ஞானம், பதி ஞானம்; பாசஞானம்; see under proper heads.

பசுபதிவீரம், சவ்வீரம், corrosive subimate — Perchloride of mercury.

பசுபாவம், ஆத்துமவியல்பு, nature of the soul; 2. உயிர்க்குச் செய்யும் பாவம்; கொலை முதலியன, sinful acts done to any living creature as killing.

பசுபோகம், ஆன்மநுகர்ச்சி, experience of pleasures and pains by the soul.

பசுபோதம், ஆன்மவறிவு, knowledge of the soul.

பசப்பவநீதம், சொர்ப்பனம், dream.

பசுமஞ்சள், பூசுமஞ்சள், raw turmeric used by women during bath. usually it is applied to the face; 2. ஓர் வகை அறியா மஞ்சள், a kind of saffron.

பசுமண், கிளியின் எச்சம், parrots excreta.

பசுமந்தம், வேம்பு, margosa tree — Azadiracta indica.

பசுமம், திருநீறு, holy ash prepared from cow's dung.

பசுமரம், பால்மரம், any tree yielding milky juice; 2. அமெரிக்க தேசத்திய பால்மரம், American rubber tree.

பசுமருந்து, பச்சிலைகளைக் கொண்டு செய்யும் மருந்து, a coarse medicine prepared from green herbs; 2. பச்சிலை, Indian spikenard — Basilla genus.

பசுமலர், வாடாத பூ. அப்போது பரித்தபூ. undried flower; fresh flower.

பசுலைக்குழலூற்று, பேரோசனை, இது ஓர் உபரசச்சரக்கு, an unknown drug forming one of 120 kinds of natural substances in Tamil Medicine.

பசுமலையடிமண், மஞ்சட் கல், a kind of yellow stone forming the lower strata in some mountains or hills.

பசுமாரணம், ஓர் மருந்து மூலிகை, cow killer Thalictrum folivaum. It is a herb useful in Medicine. Two other varieties are T. flavum and T. Javanium.

பசுமுல்லை, ஓர் வகை முல்லைக்கொடி, a kind of jasmine — Jasminum angustifolium.

பசுமுன்னை, நறுமுன்னை, Dusky firebrand tree — Premna integrifolia.

பசுமுன்னைக்கீரை, பசுமுன்னை, which see.

பசுமுன்னைவேர், உணவின் பேரில் விருப்பத்தை உண்டாக்கும் பசுமுன்னையின் வேர், the root of

Pasumunai inducing appetite of craving for food.

பசுமூத்திரம், பசுவின் மூத்திரம்; cow's urine. It is much used both internally and externally. It is a laxative and diuretic and so useful in constipation suppression of urine, colic, leprosy, jaundice, anasarca etc. It is found useful for purifying various drugs.

பசுமூலி, பச்சை மூலிகை, any green herbacious plant; 2. பச்சைப் புல், green grass.

பசுமெழுக்கு, புது மெழுகு, fresh wax; 2. பசுமை அல்லது பச்சை மஞ்சள் மெழுகு, fresh yellow wax — Beeswax.

பசுமை, பச்சை, greenness, 2. குளிர்மை, coolness; 3. ஈரம், moistute; 4. சாரம், essence; 5. பொன்னிறம், gold or yellow colour.

பசுமையானோன், நீல பாஷாணம், a prepared arsenic.

பசுமைரோகம், சூதகத்தடையினால் முகத்தில் பசுமை கலந்த மஞ்சள் நிறத்தையுண்டாக்குமோர்வித சோகை, இது கருச்சினைக் கோளாறினாலும் உண்டாகலாம். a peculiar anemia arising from mestrual disease. It is characterised by the appearance of yellowish green (pallor) colour on the face due to the non appearance or supperession of the menses at the usual time or may be due to the defective ovaria in some cases or Retention mensium i.e Amenorehoea — Greensickness — Chlorosis.

NOTE:- It may also mostly affect young girls at the age of puberty due to deranged condition of menses. It is marked by perverted appetite; impairment of digestion, bebility dismorrhoea. amonorrhoea and nervous disturbance.

பசுமைவெளியுப்பு, வளையலுப்ப Glass gall Felvitri.

பசும்படி, see பசுமருந்து; 2. மஞ்ச மங்குஸ்தான், Mangoostan.

பசும்பதம், அரிசி, பருப்பு, க முதலிய உணவுக்குரி சாமக்கிரியை, cooking ingredien necessary for food as rice, dho vegetables etc.

பசும்பயறு, பச்சை அல் பாசிப்பயறு, green gram.

பசும்பால், ஆவின் பால், இ உடம்பிற்கு மிக்க ஆரோக்கியத் தருவதுமல்லாமல், உடம் சூட்டைத் தணி தாதுபுஷ்டியையுந்தரும், இ விருத்தருக்கும் பாலருக்கும் மி உபயோகமானது. பொதுவாக

பழைய சுரம், விரணம், சூலைபிரமேகம், இவைகளுக்குப் பத்திய உணவாகக் கொள்ளப்படும். அன்றியும், மருந்து, தைலம், இலேகியம் முதலியவைகளிலும் சேர்க்கப்படும். யோகிகளுக்கு இது இன்றியமையாத உணவு, உடம்பின் தாபிதத்தைத் தணிப்பதுமன்றி வலிமையும் பலவிருத்தியுமுண்டாக்கும். இரத்தம் கக்குதலை நிறத்தும், cow's milk. It is wholesome to the body and is capable of cooling the system by removing the bodily heat and enrich the blood. It is equally useful as liquid food for the young and old. Generally. It is prescribed as diet food in cases chronic fever wounds and injuries rheumatic and venereal affections. It forms and useful ingredient in the preparations of medicines such as medicated oils, ghee electuaries etc. It serves as a main diet for yogis. It is demulcent and elixis. It is found useful in cases of hemoptysis.

பகற்பால்; பகல் முழுதுஞ் சுரந்திருந்து இரவில் கறப்பது பகற் பாலாகும். இதை முறைப்படி காய்ச்சி அருந்த தேக அழற்சி. கபநோய், கவாசம், பித்தகோபம், உட்சூடு, வெப்பம், கண்ணோய் இவைகள் போம். தேகத்தில் மினுமினுப்பு, சுக்கில விருத்தியும் உண்டாகும்; குழந்தைகளுக்குப் பக்குவமானது.

இராப்பால்; இரவு முழுதுஞ் சுரந்து பகலிற் கறக்கும் பால் இராப்பாலாகும். இதனை விதிப்படி காய்ச்சி அருந்த கண்ணோய்களும்; விந்துக் கெடுதியால் உண்டாகும் சிற்சில நோய்களும் நீங்கும்; பத்தியத்திற்கு உதவும்.

வெண்மைநிற பசுவின் பால்: பித்த கோபத்தையும், செம்மை நிற பசுவின் பால்: வாத கோபத்தையும், கருப்பு நிற பசுவின் பால் கபரோகத்தையும், கபில நிற பசுவின் பால்: திரிதோஷ கோபத்தையும் போக்கும், காராம் பசுவின் பால்: விழிப்பிணி, க்ஷயம், மற்ற பாலின் குற்றங்கள், இரத்த பித்த நோய், கபம் ஆகியவைகளை நீக்கும், பெரியோர்களை வசப்படுத்தும். மான் நிற பசுவின் பால்: முப்பிணிகளைப் போக்கும். நாரைப் பசுவின் பால்: முயல் வலியைப் போக்கும். கொம்பு அசையும் பசுவின் பால்: பித்த ரோகத்தைப் போக்கும். ஆனால் தனுஸ் தம்பவாதம், கபநோய், சுக்கில தாது இவைகளை விளைவிக்கும். மூன்றா மீற்றுப் பசுவின் பால்; நீடித்த கபநோயைப் போக்கும். நான் காமீற்றுப் பசுவின் பால்; மூன்று தோஷங்களையும், போக்கி சுக சரீரத்தையும், மகிழ்ச்சியையும் உண்டாக்கும். ஆகாப் பசுவின் பால்: முத்தோஷங்களை மார்பில் சேர்ப்பித்து க்ஷயத்தை விளைவித்து ஆயுளைக் குன்றச் செய்யும். உபயோகிக்கும் விதி: கறந்த நான்கு அல்லது ஐந்து நாழிகைக்குள் அதாவது கறந்த சூடு நுரை அடங்கு முன் அருந்த தேவாமிர்தத்துக்கு ஒப்பாகும். அதற்குப் பின் குடிக்க சிவனுண்ட ஆலகால நஞ்சுக்கு ஒப்பாகும். நன்றாக கொதிக்க வைக்க அந்த நஞ்சு தன்மை நீங்கும். காய்ச்சும் விதி: எட்டில் ஒரு பங்கு சுத்த நீர் சேர்த்து மூன்று கொதி வரும் வரை காய்ச்சி இளஞ்சூடாக அருந்த வேண்டும். அருந்தும் விதி: தனிப்பாலைக் குடிக்கக் கூடாது. இனிப்பு அல்லது கார்ப்பு சுவையுள்ள பொருள்களைக் கலந்து அருந்த வேண்டும். உதாரணமாக கற்கண்டு, சர்க்கரை, மிளகு, திப்பிலி.

The qualities of the milk drawn in the evening and morning, as well as those of the milk of white cow, red cow, black cow, black golden coloured cow; black cow with black udder and teats, deer coloured cow, narae cow, cow with shaky horns, cow of third lactation, cow of fourth lactation. forbidden, cows (ஆகாப்பசு) are given above.

The rules of using the raw milk. boiling and drinking the milk are also given above.

2. பசுங்கன்றினிடமாக அம்மை

குத்துவதற்காக எடுக்கும்பா serous exudate taken or coll from the vesicles cowpox — V lymph. It is used as a preve inoculation for the reaso produces active immunity ag small pox by the formatio antibodies — Lac Vaccinum.

பசும்பால் மூன்றாந் பசுவெண்ணெய், butter from c milk derived after three operatio

பசும்பாளை, ஆக்கினை.

பசும்பி, சீரகம், cumin seed.

பசும்பிடி, பச்சிலை மரம், My gamboge tree — Gar xanthochymus alias x pictorius — is an ever green tree.

பசும்பிடிப்பு, அறுகம்புல், couch g — Cynoden dactylon.

பசும்புண், புதுப்புண், fresh sor wound.

பசும்புல், பச்சைப்புல், green gra 2. பயிர் green crops.

பசும்பூ, பச்சைப் பூ; green flower.

பசும்பொன், மாற்றுயர்ந்தபொ superior gold; 2. கலப்பற்ற பொ pure gold; 3. பித்தளை, brass; பத்தரை மாற்றுப் பொன், gold $10^1/_2$carats.

பசுராசன், சிங்கம், lion.

பசுரோகம், பொதுவாக மாட்டுக்கு வரும் நோய்கள், இது அடியிற் கண்டபடி பல வகைப்படும். அவையானவ. cattle disease in common. There are many cattle diseases. The test known are:

1. மசூரிகை அல்லது அம்மை, lentil shaped eruptions known as cow pox — a kind of small pox.

2. அலரி அல்லது விஷசுரம், rinder foot.

3. அசைபோடாமை, loss of cud.

4. வயிற்றுவலி, griper or stomach pain.

5. கழிச்சல், diarrhoea (from affecting small intestines.)

6. கபாலசூலை, inflammation of the brain.

7. காற்கணை, soreness of the hoofs.

8. கால்நோய், various diseases of the feet.

9. கால், வாய்க்கோமாரி, foot and mouth disease.

10. காரக்கழிச்சல், a kind of acute diarrhoea.

11. காசம், affection of the chest — Bronchitis.

12. காய்ச்சல், fever of any kind.

13. காற்று நோவு, rinder pest. same as No.2.

14. காட்டுரோகம், dysentery.

15. கொடிறுசன்னி, lock jaw or tetanus

16. கொள்ளிவீங்கு, malignat sore throat (fatal)

17. கோமாரி, the same as No.9.

18. குடல்வாதம், affection of the intestine — Hernia.

19. குடலெரிச்சல், inflammation of the bowels.

20. குண்டிக்காயெரிச்சல், inflammation of the Kidney.

21. குலைமுட்டி, congestion of lungs and swelling of belly.

22. கல்லடைப்பு, calculus, stone in the bladder.

23. கண்ணோய், opthalmia in general.

24. நெஞ்சடைப்பான், inflammation of the lungs.

25. உடைந்த கொம்பு, broken horn.

26. ஒடுவாயு, a kind of rheumatism.

27. பிளவைக்காய்ச்சல், anthrax fever.

28. இரத்தகலச வெரிச்சல், inflammation of the heart.

29. இரத்தக் கழிச்சல், blood flux — dysentery.

30. இரத்தமூத்திரம், blood urine — Hematuria.

31. சிதமைக்குடல் மந்தக்கட்டு, fardal bound, torpidity of the bowels.

32. எரிகாய்ச்சல், inflammatory fever.

33. இரைப்பை வீக்கம், distension of rumen.

34. தொண்டையடைப்பான், malignant sore throat same as No.16.

35. வயிற்றுப்பிசம், distension stomach; tympanities.

36. ஈரலெரிச்சல், inflammation the liver.

37. மஞ்சட்காமாலை, jaundice

38. மகோதரம், dropsy great be

39. மண்டையடைப்பான், apoplexy.

40. சலகரோகம், disease in wh leeches are bred in the stoma

41. மூக்கடைப்பு, catarrh of nose.

பசுவம், கோரோசனை, a concre found in the liver of a cow — Bez

பசுவம்மை, பசவுக்கு வரும் அம்மை, cow pox.

பசுவாமீன், ஓர்வகைக் கடல்மீன் kind of sea fish.

பசுவிட்டை, பசுஞ்சாணி, cow du

பசுவிழிப்படலம், கருவிழியில் பசு நிறமான சதையை வளரச் செ நேத்திரகாந்தல், பார்வைக் குன முதலிய குணங்களையுண்டாக்குமோர் கண்ணோய், an eye disea of black of the eye characterised

the growth of a yellow flesh, burning sensation, pricking pain and dullness of vision.

பசுவினீர், கோசலம், cow's urine.

பசுவின் தயிர், பசும்பாலிருந்து தயாரிக்கும் தயிர், Cow's curd.

பசுவீரம், சவ்வீரம், corrosive sublimate.

பசுகம், வெள்ளுகா, a white variety of உகா, Mahomadan tooth brush tree — Salvadora persia.

பசை, ஈரம் moisture; 2. சாரம், essence; 3. பிசின், gum; 4. கொழுப்பு, fat, starch; 5. ஒட்டுப்பசை, paste, glutinous substance.

NOTE:- Starch, an adhesive substance — Amylum starch may be divided into starched used for food known as conjee and starch used for industrial purposes. The former is prepared mostly from rice, wheat, barley and arrow root and given to patients at home and hospitals. It is a simple food used in diet. In south India sago and plantain fruit are much used. The best kind of starch used for industrial purposes is white, soft, friable and easily reduced to powder, insolable in cold water, alcohol and ether but readily soluble in warm water affording a gelatinous solution.

பசைதல், ஒட்டுதல், pasting; 2. பசையாக்குதல், making a paste; 3. இளகுதல், softening to tenderness.

பசைத்தல், பசைமா, கூழ்ப்பசை, starch.

பசையுள்ள, நெய்ப்புள்ள, mucilanginous.

பசோங்கு, ஆமணக்கு, castor plant, castor seed.

பசோங்கு, ஆமணக்கு castor plant, castor seed.

பசோற்பவம், சிறுகுடலின் பகுதி, part of the small intestine — Duodenum.

பஸ்தகெந்தாசம், கிருமிசத்துரு.

பஸ்பித்தல், See பற்பித்தல்.

பச்சடி, பச்சையாகவே பாகம் பண்ணிய துவையற் கறி, a culinary preparation from raw vegetables, seasoned vegetable curry.

பச்சதாபுட்பம், செப்பு நெரிஞ்சில், red caltrops — Hedysarum prostratum.

பச்சநாபி, வச்சநாபி, aconite root — Aconitum ferox.

பச்சமஞ்சள், மரமஞ்சள், tree turmeric — Coscinium benestratum.

பச்சரிசி, உலர்ந்த நெல்லைக் குத்திய அரிசி, rice derived from dried paddy — raw rice as opposed to boiled rice புழுங்கலரிசி, derived from boiled and dried paddy; 2. அம்மான் பச்சரிசி, which see; 3. ஒருவகை மாங்காய். a kind of mango.

பச்சரிசிக்கஞ்சி, பச்சரிசி நொய்யினால் தயாரித்த கஞ்சி, conjee or porridge from broken or crushed raw rice.

பச்சவாயு, பக்கவாயு.

பச்சளைபு, பசுந்தயிர், see பசுவின்தயிர்.

பச்சன்னியம், மரமஞ்சள், பச்சமஞ்சள்.

பச்சாகிலியம், சண்பகம், champak tree Michalia champaca.

பச்சாளை, கொச்சி, which see.

பச்சான்கள்ளி, கண்டக் கள்ளி, round milk hedge — Euphorbia tirucalli.

பச்சிமம், நெற்றி, forehead; 2. பின், backward; 3. பின்புறம், backside; 4. முதுகு, back.

பச்சியகுன்மக்கட்டி, பச்சியமானகுன்மம், பழுத்த குன்மக்கட்டி, matured and enlarged abdominal tumour.

பச்சியம், பழுத்தநிலைமை, t matured state.

பச்சிராசன், கருடன், Brahmini kite

பச்சிரும்பு, உருகின இரும்பு, mel iron.

பச்சிலை, பச்சிலைமரம், Mys gamboge — Garcina Xanthochym alias Xanthochymus pictorius; பச்சையிலை, green leaf; 3. பச்சி மூலிகை, a green herb; 4. ப வாகை, which see.

பச்சிலை, பச்சிலைச்செடி, இது பூடு, 2-3 அடி உய மொசுமொசுப்புள்ளது. தண்டு எழும்பக் கூடியது. இலைகள் கா வாய்ந்தவை, பூந்தண்டு முனை கூராகவும், பூக்கள் நிரம்பி உள்ளது, பூக்கள் வெண் இலைகள் புகையிலையில் சே இதினின்று எண்ணெய் வா ரூபமாய் எடுப்பது இவ்வெண்ணெய் வாச திரவியங்களில் சேர்க்கப்ப இலையை வாசனைக் துணிகளில் வைப்பதுண்டு. வாசனைச் சரக்குகளுடன் சே உடம்பில் பூச விய நாற்றத்தைப் போக்குவது சொறி, சிரங்கு முதலிய நோய்களையும் பா உஷ்ணத்தையும் கபத்தை அறுக்கும். Acheen leaf, Marjoram — Pogostemon pat

alias Cariganum pubescent. It is suffruticose, 2-3 ft. high, pubescent, stems ascending, leaves petioled, spikes terminal and crowded with flowers; flowers white with red stamens. The dried tops exported to England are about a foot or more in length, they have a peculiar perfume and as such used for many purposes, leaves are used as an ingredient in tobacco; by dislihation they yield an oil which is used as a toilet prefume. The leaves are also used for imparting fragrance to clothes, they are also with other aromatic drugs applied to the body when bathing. It is an useful application for removing bad smell arising from perspiration and also curing scabies, itch and other culaneous diseases. It also removes bodily heat and phlegm in the chest.

NOTE:- It grows in abundance in Silet, Penang and Malaya, The odour is more powerful than that derived from any other plant and so it is exported to Europe in large quantities. The powdered leaves put into mustin bags prevent clothes from being attacked by moths. This plant is found wild in the concans. Muslims use this leaf in tobacco for smoking and for scenting the hair of women. It is also employed for stuffing mattresses and pillows as it is very efficacious in preventing contagious and infectious diseases.

பச்சிலைக் கழிச்சல், குழந்தை களுக்குக் காணும் பச்சை நிறமான பேதி, a form of diarrhoea in children in which the stools are of a green colour — green diarrhoea.

பச்சிலைக்கிச்சிலிக் கிழங்கு, ஒருவகை கிழங்கு, a kind of root tuber.

பச்சிலைதாள், பச்சைவாழை.

பச்சிலைமரம், மலைப்பச்சை, Mysore gamboge — Garcinia xanthochymus; 2. பன்றிவகை, bastard rose wood — Dalbergia paniculata.

பச்சிலையானோன், பச்சோந்தி இது தன்னிறத்தைச் சூழ்நிலைக்கேற்ப அடிக்கடி மாற்றும், green lizard — Chameleon. It is capable of suddenly changing its colour to that of its enviroment and is fabled to live on air.

பச்சிறைச்சி, சமைக்காத இறைச்சி, raw meat.

பச்சினி, பத்தாம் மாதம், tenth month; 2. பத்துமாதம் நிறைந்த கர்ப்பினி, a woman of full term pregnancy i.e ten months pregnant woman.

பச்சுடம்பு, குழந்தையுடம்பு, child's tender body; 2. புண்ணால் இளைத்தவுடம்பு, an emaciated body from an operation of wound or other injuries; 3. அம்மைப்புண் காயாத உடம்பு, body feebled by unhealed sore or pox; 4. பிள்ளை பேற்றால் மெலிந்தவுடம்பு, body of a woman rendered delicate from child birth.

பச்சுதி, நழுவுகை, displacement, dislocation.

பச்சுலி, ஓர் மரம், 1 same as பச்சுளி.

பச்சுளி, ஓர் வகைப் பச்சிலைச் செடி, woolly patchouly — Pogostemon vestitus.

பச்சுன், see பச்சிறைச்சி.

பச்சை, ஓர் வாசனைச் செடி, see பச்சிலை, 2. பச்சரிசி, raw rice; 3. தோல், skin. 4. பசுமை, greenness; 5. மரகதம், emerald; 6. ஈரம், moisture; 7. பச்சை நிறம், green colour, 8. இளசு, tender; 9. இஞ்சி ginger; 10. துரிசி, green vitriol; 11. வெள்ளைக்குங்கிலியம், dammer resin; நஞ்சுக்கொடி, naval cord; 13. வங்காளப் பச்சை, sub acetate of copper, verdigris; 14. உலராதது, that which has not dried, 15. அவியாதது, that which is not boiled; 16. பழத்தோல், outer skin of a fruit, rind; 17. வாசனை, fragrance; 18. பயறு pulse. 19. வெற்றிலை, betel leaf; 20. ஓர் வாசனைப்புல், a fragrant grass; see கற்பூரப் புல். 21. நீருமரி, sea side Indian salt wort — Suaeda mudiflora; 22. சமைப்பிற்குரிய உணவுக்கறி, raw vegetables intended for cooking; 23. முற்றாதது. that which has not riped; 24. சுத்திபண்ணப்படாதது, that which has not purified; 25 பச்சைப் பிள்ளை, a new born baby; 26. பச்சைக் கற்பூரம், borneo camphor — crude camphor; 27. பலாசு, Bengal kino — Buteo tomentosa; 28. பச்சை வெட்டி மருந்து, medicine prepared without subjective to heat or fire; 29. பூண்டின் முதற்பெயர், (உ.ம்) பச்சைப் பயறு. plants first term as green gram. 30. பூண்டின் இறுதிப் பெயர். (உ.ம்) திருநீற்றுப் பச்சை, plants last or end term as in holy ashes leaf; 31. புதிய; அப்போது பறித்தது. a new or just plucked; 32. கீரை; greens.

The following are the different plants ending with the same termination 'பச்சை' viz.

1. திருநீற்றுப் பச்சை, holy ashes leaf — Artemesia vulgaris.
2. சமுத்திராப்பச்சை, sea green — Argy reia speciosa.
3. மலைப்பச்சை, hill green — Garcinia xanthochymus.
4. தேன் பச்சை, honey green — Guazuma tomentosa.
5. வேனிற்பச்சை, summer green — Heliotropium indica.

6. நஞ்சறப் பச்சை, poison cutting green — Hoyapendula.

7. அவுரிப்பச்சை, crude camphor.

8. கதிர்ப்பச்சை, a fragrant plant.

9. வங்காளப் பச்சை, subacetate of copper — Verdigri. It is used by Vaidyans as a stimulating application for ill conditioned ulcers and sores.

10. மாரி பச்சை.

NOTE:- Nos. 7 to 9 refer to chemicals.

பச்சை அலரி, திருவாச்சிப் பூ. இதன் பட்டையைக் கஷாயமாகப் போட்டுக் கொடுக்க சீதள சுரம் போம், வாந்தியும் பேதியுமுண்டாகும், விதை பயங்கரமான பேதியையும், அதிகமாய் வாந்தியையும் உண்டாக்கும். foreign oleander — Thevetia nerii folia. It is a handsome sprading tree constantly in blossom. All parts of the plant yield abundance of acrid milky juice, which is highly venomous, bark, kernels, oil from the kernels are emetic and purgative. Bark is anteperiodic also; 2. மஞ்சள் அலரி. yellow oleander. Root bark and kernel are poisonous. cause vomitting and purging.

பச்சை ஆமை, கடலாமையின் ஓர் இனம்; இதன் இறைச்சியைச் சாப்பிடுவதுண்டு. ஆயினும் சில சமயம் விஷத்தன்மையது. hawk bill turtle; Indian caret — Chelonic virgata. South Indians eat their flesh but sometimes the flesh is poisonous.

பச்சை இராப்பாடி, பச்சை நிறமான இராப்பாடிக் குருவி, green bool bool. Title from its colour — Phyllorius jerdoni. Its usual call is like the king crow.

பச்சை ஊத்தை, பல்லில் படியும் பச்சைக் கறை.

பச்சை எருவை, பச்சையாகவே துரிசி முதலிய மருந்துகளை நல்லெண்ணெயில் அரைத்து இரணங்களுக்கிடும் ஓர் பூச மருந்து; சிலந்திக்குப் பூசு முலாம்; வெள்ளைப் பாஷாணம், அரிதாரம், துரிசி, கல்கண்ணம். சிவப்பு குங்கிலியம் இவைகளைச் சம எடை கொண்டு நல்லெண்ணெயில் 4 சாமம் அரைத்த பிறகு தண்ணீரில் அலம்பி துணியில் தடவி புண்கள் மீது போடும் ஆற்று மருந்து, an external ointment prepared by grinding copper sulphate *(பச்சை)* and other drugs and mixing and grinding them in gingelly oil. It is grinded for 12 hours, then it is washed, by grinding it with water. The water is thrown out. The ointment is taken and used for ulcers with over growth. The

important drugs contained in it are white arsenic yellow orpiment, lime and copper sulphats.

பச்சைக் கச்சோலம், பச்சை பூலாங்கிழங்கு, green poola root — Curcuma zedoaria; 2. பச்சை ஏலத் தோல், undried capsules of cardamom.

பச்சைக்கடலை, வேக வைக்காத வறுக்கப்படாத கொண்டைக் கடலை, raw bengal gram that is not roasted or boiled.

பச்சைக்கடுகு, செங்கடுகு, raw mustard.

பச்சைக் கடுகுரோகணி, உலராத கடுகு ரோகணி, undried black hellibore — Helli borus niger; 2. பச்சை நிறமுள்ள கடுகு ரோகணி — green coloured hellibore.

பச்சைக் கடுக்காய், உலராத கடுக்காய், undried gallnut; 2. அரிதகிக் கடுக்காய், green gall nut — Terminalia chebula; see பரிதிக்காய், அரோசகம் போம், மலம் கழியும், பசியுண்டாகும். It cures nausea, and causes motion and appetite.

பச்சைக்கட்டி, பழுக்காத கட்டி, unriped or unmatured abscess unfit for opening or incision; 2. பச்சைப் புற்று வீரணம், green cancer. 3. ஆறாதகட்டி, unhealed abscess.

பச்சைக்கட்டு, சாந்தி மருந்து, curative drug 2. சாந்தி செய்யும் மருந்து, any green drug which allays the disease; 3. தற்காலிக சாந்தி; green herbacious drugs which afford temporary relief.

பச்சைக் கந்தகம், பிறவிக் கந்தகம், common native sulphur, raw sulpur. It is very impure hard, whitish yellow in colour. It is the worst kind in the bazaar, See பச்சைக் கெந்தி.

பச்சைக்கரி, ஈரமான கரி, wet or moist charcoal.

பச்சைக் கருப்பூரம், செயற்கைக் கருப்பூரம், இது வேதை செந்தூரத்தில் ஓர் முக்கிய சரக்கு; இது வெண்மையாகவும், காரமாகவும், உருசிக்கக் கசப்பாயுமிருக்கும், எல்லாக்கடைகளிலும் விற்கப்படும். வைப்பு சரக்காகும். இதற்குப் பதிலாக அனேக போலிச் சரக்கும் விற்பார்கள்; இதற்கு குளிர்ச்சியை உண்டாக்கி கடிய ரோகங்களைத் தணிக்கச் செய்யும் சக்தியுமுண்டு. இதை சுரம், வாந்தி, கண்ணோய்; கிரந்தி இவைகளுக்கு உபயோகிக்கலாம். பெரும்பாலும் மருந்துகளில் சேர்த்துக் கொடுக்கப்படும். இது தாகம். வயிற்றெரிச்சல், ஈரல் அழற்சி போம், நுரையீரல் இரணத்தை ஆற்றும்; மூளைக்கு பலத்தைத் தரும். crude camphor. It is a prepared drus. It forms a chief ingredient in

alchemical and red oxide preparations of metal. It is known as philosopher's powder. It is sold in all bazaars. It is white or dirty white in colour. bitter to taste with a sert pungent smell. When applied to the eye it is very cooling. By its cooling effect it cures fever, vomitting, eye diseases etc. It is useful in thirst. inflammation of the lungs and liver. 2. ஓர் வகைப் பிசின், a kind of resin; 3. ஓர் வகைப் பூரம்; இது மூன்று வகைப்படும். அவையாவன; ஈசன், வீமன், பூதாச் சிறையன், a chemical preparation of camphora. It consists of three kinds as mentioned above.

பச்சைக்கல், பச்சைமணி, இது நவமணியிலொன்று, emerald; one of the nine oriental gems. It is distinguished from American emerald; 2. ஓர் வகைப் பச்சைக்கல்; a variety of green stone resembling the white stone of scotland; 3. பச்சைக் கல்லு, green stone principally composed of felspar and hornblende. It is a general name igneous rock; 4. பச்சைக் கருங்கல், certain plutonic rocks containing angite are also called green stones; 5. பச்சை நிறமான ஓர் வகைத் தாது; இதில் பாத்திரம், வளையல் முதலியவை செய்யப்படும். Jade. It is a mineral of greenish colour. Cups and bracelets are fashioned out of it by the chinese.

பச்சைக்காய். உலராதகாய், undried raw fruit; 2. பச்சை வர்ணக்காய், green fruit; 3. பழுக்காதகாய், unripe fruit; 4. வேகாதகாய், fruit not subjected to heat or fire; 5. ஈரக்காய், fruit with moisture in it.

பச்சைக்காரச் சீலை, தொடைவாழை, புற்று, சிலந்தி பிளவை முதலிய பெரும் விரண நோய்களுக்கிடுவதற்காக உபயோகிக்கும் மருந்துச்சீலை, அகத்தியர் இரண வைத்தியத்தைப் பார்க்கவும். corrosive plaster or other lint soaked in pungent or acrimonious drugs and inserted by a probe into the deep abscess of the thigh, cancer, venereal and syphilitic ulcers, carbuncle and other serious wounds. For mode of preparation and other details see Agasthiar's work on surgery.

பச்சைக்காளான், வாதத்திற்குதவுமோர் வகைக்காளான், green mushroon used in rheumatic affections.

பச்சைக்காரம், பவுத்திரம், காயம், குட்டம் முதலிய இரணங்களுக்குத் தூவி ஆற்றும் மருந்து, இதை மிருதாரசிங்கி, கௌரி, அரிதாரம், வெள்ளைப்பாஷாணம், மயில்துத்தம், சுட்டபழந்துணி முதலியவைகளைப் பொடி செய்து தயாரிப்பார்கள். a powder containing green vitriol, white arsenic, yellow orpiment, yellow arsenic (Gowri) mirtharsing and black ash of old clean cloth is used to dust over sinus wound and ulcers.

பச்சைக்கிளி, பச்சை வர்ணக்கிளி, green parrot; 2. பச்சை வெட்டுக்கிளி, green locust; green grass hopper Locustidae; 3. துருசு, green vitriol.

பச்சைக்கிளிமீன், பச்சைவர்ணக்கிளி மூக்கு மீன், parrot fish; green coloured — Douada; 2. பவளக் கொடிகளில் வசிக்கும் ஓர் அழகான பச்சைக்கிளி மீன், இது உண்பதற்குத் தகுதியுடையதல்ல, a sea fish found amongst coral reefs in the sea shore It is not fit for eating.

பச்சைக்கிளுவை, பச்சை வர்ணப் பட்டையுள்ள கிளுவை மரம், green barked hill balsam tree — Balsmodendron candatum; 2. பச்சை நிற சிறவிப்புள், common teal — Querquadula cricea; 3. பஞ்சித் தணக்கு Katearah gum tree — Cochlospermum gossypium; 4. கிளுவை மீன், a kind of small eell fish — Grig Marreca.

பச்சைக்குங்கிலியம், வெள்ளைக் குங்கிலியம், Indian dammer resin — Shorea robusta.

பச்சைக்குங்குமப்பூ உலரவைத்துப் பதப்படுத்தாத குங்குமப்பூ. இது உலர்ந்ததை விட மிகு குணத்தைக் கொடுக்கும், பச்சைச் சரக்கு தற்போது கிடைப்பதரிது, குங்குமப் பூ விளையும் பிரதேசங்களில்தான் பச்சையாகக் கிடைக்கும். இது உற்சாககாரி; இதனால், அதிவியர்வையால் பிறந்த துர்குணங்கள், செவி, கண், மூக்கு நோய்கள், நீரேற்றம், சிலேட்டும தோஷம் இவைகள் போம், an undried and unseasoned European saffron — Crocus sativus. This is available only in the place where it is grown. Ref: குங்குமப் பூ and குங்குமம்.

பச்சைக்குருவி, பச்சைவர்ணக்குருவி, green sparrow.

பச்சைக்குவடு, மரகதம், green gem — Emerald.

பச்சைக்குழந்தை, அன்றுபிறந்த குழந்தை, new born child; 2. முதிரா குழந்தை, baby, young child.

பச்சைக்குறவான், ஓர் நீல நிறமான கடல் மீன், a kind of blue trigge sea fish.

பச்சைக்கூடு, பருத்த உடம்பு. sto body; 2. தூலதேகம், physical bod as opposed to குக்குமதேகம், subt body, astral body.

பச்சைக்கெந்தி, வெட்டியெடுத் கந்தகம், mineral sulphur; 2. சுத் செய்யாத கந்தகம், impure sulphu 3. கட்டாத கந்தகம், இ

நெருப்புக்கோடும், (in alchemy) sulphur not consolidated. It passes or wastes away into fumes or vapours before fire.

பச்சைக்கொடு, மரகதப்பச்சை, green gem — Emerald.

பச்சைக்கொட்டை, ஆகாசத் தாமரை, sky lotus Pistia stratiotus alias Plantago aquatica; 2. பூச்சிக் கொட்டை, soap nut tree of South India.

பச்சைக்கொம்பு, இஞ்சி, green ginger.

பச்சைக்கொத்தமல்லி, கறிக்குதவும் கொத்தமல்லிக்கீரை, green leaves of coriander used in the preparations of curries.

பச்சைக்கோரான், இரும்பரிப்பி, jungle geranium — Lxora notoniana.

பச்சைச் சேர்வை, நெருப்புக் காட்டாதபடி பச்சையாகவே மருந்துகளை அரைத்துக் கலத்தல், a paste made by mixing serveral green or fresh herbs or other raw drugs reduced to a pulp without subjecting it to heat.

பச்சைச்சேர்வைச் சீலை, பச்சைக்கூட்டு மருந்தை ஊட்டிய சீலை, adhesive plaster prepared with raw drugs or chemical drugs as given below: வெள்ளைப் பாஷாணம், கெவுரி, அரிதாரம், மரமஞ்சள், நீலம், பச்சை வெட்டாக இவைகளைச் சம எடை கொண்டு நல்லெண்ணெயில் அரைத்து, பிறகு தண்ணீரில் கழுவிச் சீலையில் ஊட்டித் தயாரித்த மருந்து. இதை இரணங்களுக்குப் போட ஆறும்; பச்சைக்காரச்சீலை. see பச்சை எருவை.

பச்சைத் தண்ணீர், குளிர்ந்த தண்ணீர், cold water as opposed to வெந்நீர், hot water.

பச்சைத் தவளை, பச்சை நிறத் தவளை, green frog tinkling frog — lxalus variabitis, tongue without a papilla, fingers very slightly webbed, toes two thirds webbed, skin smooth, granular beneath. Varied colour, found in grass and amongst bushes, peculiar loud, clear, metallic tinkling call. It is a ventri loquist.

பச்சைத் தாம்பிரவுருண்டை, தாம்பிரக் களிம்பைக் கொண்டு தயாரித்துக் கண்ணோய்க்குபயோகிக்கும் ஓர் ஆயுள்வேத மருந்து. an Ayurvedic eye ointment used for eye diseases. It is prepared with verdigris combined with other ingredients.

பச்சைத்தாள், தானியமணி முற்றாத தாள், கேழ்வரகு, சோளம், மொச்சை முதலியன, இது மாடுகள் தின்னவுதவும், leaf stalk in which the grains or pulses are not fully matured as found in ragi maize or in dolicluos genus. It is used as fodder.

பச்சைத்தான்றி, உலராத தான்றிக்காய், undried fruit or nut of the tree called Devils abode, one of the three myrobalams.

பச்சைத்திப்பிலி, சிவந்த நீர்ப்பசையுள்ள திப்பிலி, இதன் வேரினால் ஆயாசம், பலமேகம், பித்தாதிக்கம், விதாகம் இவைகள் போம் சுக்கிலப் பெருக்கையும் அழகையுமுண்டாக்கும், காமவிருத்தி யுண்டாம், See திப்பிலி மூலம், raw long pepper containing red juice; 2. உலராத திப்பிலி, undried long pepper.

பச்சைத்துருசு, பிறவித்துருசு, blue vitriol found in nature as opposed to வைப்புத் துருசு, prepared blue vitriol.

பச்சைத்தேயிலை, உலராததேயிலை, undried tea; Assam tea — Thea Assamica alias camelia thea; 2. பதப்படுத்தாத தேயிலை, unseasoned or fresh tea; 3. பச்சைத் தேயிலை, green leaves of tea.

பச்சைத் தேரை, பச்சைநிறத் தேரை, green Indian toad — Bufo bengalensis.

பச்சைத்தைலம், பசுமருந்து மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கும் தைலம். இது இரணங்கள் ஆறவும், புண்புரைகள் மாறவும், மேற்பூச்சாக உபயோகிக்கலாம். medicated oil prepared from the leaves of the herbeceous plants for curing raw sores with Sinuses; 2. பச்சை எண்ணெய், தேங்காயெண்ணெய், துருசு, ஊமத்தைச் சாறு இவைகளினால் தயாரிக்கப்படும் எண்ணெய், green oil prepared with the following three ingredients — Cocoanut oil, Copper sulphate and Datura juice and used for carouncles and sloughing ulcers.

பச்சைத்தோல், புண்ணாறியபின் தோன்றும் புதுத்தோல், scale formed over a sore in healing; 2. பதப்படுத்தாத தோல், skin not tanned; 3. உலரவைக்காத தோல் undried skin of animals as sheep etc; 4. மீத்தோல், epidermis.

பச்சைநஞ்சு, கொடிய தாவர விஷம், virulent vegetable poison; 2 பாஷாணம், chemical poison; 3 பிறவிப் பாஷாணம், natural poison 4. பாம்பு விஷம், snake poison 5. பிறந்த குழந்தை நஞ்சக்கொடி navel cord of the new born.

பச்சை நன்னாரி, உலரவைத்து பதப்படுத்தாத நன்னாரி, undrie unseasoned sarsaparilla; fresh roots sarsaparilla, see நன்னாரி.

பச்சைநாகேசுரம், பச்சை நாடன் பழுத்தும் பச்சைநிற மாறாத வகை வாழைப்பழம்; நவ வாழை, green plantain fruit whi is green even when fully riped Musa paradisiaca.

பச்சை நாபி, ஓர் மருந்து, see பச்சைநாவி.

பச்சை நாமத் தவளை, பச்சை நிறமான நாமத்தவளை, green coloured நாமத்தவளை whichsee.

பச்சை நாவி, விசநாவிக் கிழங்கு, aconite root — Aconitum ferox: 2. கலப்பைக் கிழங்கு, country aconite — Methonica alias Gloriosa superba superba; 3. சவ்வாது, zibet; 4. புனுகு. civet; 5. கஸ்தூரி, musk; குழந்தையின் கொப்பூழ்கொடி; the navel cord.

பச்சை நாவிக்கிழங்கு, கலப்பைக் கிழங்கு, November plant — Gloriosa superba.

பச்சை நாவி மெழுகு, அண்ட முடியினால் செய்யப்பட்ட மெழுகைப் போன்ற ஓர்வித மருந்து, இதுஓர் சித்தர்மருந்து, a wax like medicinal preparation from the human skull. This is done by Siddars by process known only to themselves; 2. தலைச்சன் பிள்ளை நஞ்சுக்கொடியினின்று தயாரிக்கும் ஓர் வகை மெழுகு; இது மாந்திரீகத்திற்குதவும், a wax like preparation prepared out of placeutal cord of the first born and used for magic and mantaram.

பச்சை நாறாக் கரந்தை, பச்சைவர்ண சிவகரந்தை, undried i.e fresh and green shiva's Basil.

பச்சை நிலைக்கொடி, முசுமுசுக்கை; bristly bryony — Bryonia scrabrella alias B. madras patana.

பச்சை நிறக்கொடி, see பச்சை நிலைக்கொடி.

பச்சைநிறத்தாள், துரிசு, blue vitriol copper sulphate.

பச்சைநிறநிற்களன், see பச்சைநிறத்தாள்.

பச்சைநிறவாயு, பச்சையும் மஞ்சள் நிறமும் கலந்த வாயு, இதன் வாசனையால் மூச்சுத் திணறும். இது விஷத்தன்மையது, அசுத்தத்தைப் போக்கும், வெளுக்கச்செய்யும், a yellowish green gas of suffocating odour. It is a disinfectant and an instant poison It is used for disinfecting and bleaching — Chlorine.

பச்சை நீர், பிரசவித்த சில நாள் கழித்துப் பெண்களுக்கு யோனிவழியாய் அழுக்குடன் வெளிக்காணும் பச்சை நிறமான துர்நீர், a dirty green coloured discharge occuring a few days after delivery; 2. கிரந்திகட்குபயோகிக்கும் துரிசு சேர்ந்த மருந்து நீர், a lotion or fluid preparation with blue vitriol as the chief ingredient It is applied externally for wounds and syphilitic and venereal, ulcers; 3. குளிர்ந்தசலம், cold water.

பச்சை நெல், ஈர நெல், undried paddy; **2. அவிக்காத நெல்,** unboiled paddy, raw paddy; **3. பசுமை நிறமான நெல்,** green or yellow paddy; **4. முதிராத நெல்,** not fully matured paddy.

பச்சை நோய், ஒரு வகை நோய், green sickness — Chlorosis.

பச்சைப்பதம், இளம் பதம், premature state, unripe state; **2. உலராத பதம்,** undried or raw state.

பச்சைப்படி, அவியாமற் கொடுப்பது; paddy given as wages without boiling it.

பச்சைப்பயறு, பாசிப்பயறு, green gram — Phaseolus mungo.

பச்சைப் பயிறு கட்டு, பச்சைப்பயறு பொங்கல், பாசிப்பயறு, a preparation with rice and green gram.

பச்சைப்பலா, ஈரப்பலா; young iack fruit; **2. சீமைப்பலா,** foreign jack — Artocarpus incisa; **3. குரங்குபலா,** monkey jack — A.lokoveha.

ச்சைப்பாக்கு, அவிக்காதபாக்கு, reca nut not boiled; **2. காயாதபாக்கு,** seasoned or areca nut; **3.** பாக்கு, areca nut not fully red.

பாஷாணம், பிறவிப் ணம், native arsenic; **2.** உலோகங்களைப் பழுக்கச் செய்யும் பாஷாணம். (in Alchemy) an arsenic compound capable of transmuting base metals into gold; **3. சுத்தி செய்யாத பாஷாணம்.** impure arsenic, arsenic which is not purified.

பச்சைப்பாதிகம், வெள்ளைவாடா மல்லிகை, white variety of everlasting jasmine — Gomphrena globosa.

பச்சைப்பாம்பு, பச்சை நிறமான பாம்பு, இது சாட்டையைப் போல் சன்னமாகவும், நீளமாகவுமிருக்கும், உடம்பு முழுவதும் பச்சையாயும், வயிற்றின் பக்கம் இரண்டு வெள்ளை வரியுமுண்டு, தரையில் நடமாடுவதைப் பார்க்கிலும், மரக்கிளைகளில் வேகமாகச் செல்லும். அது பார்ப்பதற்கு அழகாகவுமிருக்கும். whip snak — Ophidii colubri formis. It is distinguished by its excessively slender body and is compared to cord of a whip. The body is green with two white stripes on the belly. Though movements are awkward on the flat ground but graceful and rapid in their natural haunts among the branches of trees; **2. கண்குத்திப் பாம்பு, இது புல்லின் பச்சை நிறம் வாய்ந்தது, முதுகின் பக்கம் சிறிது மஞ்சள் சாயை, வயிற்றுப் பக்கம் வெளிர்ப் பச்சை நிறமும், இரண்டு பக்கங்களிலும் மஞ்சள் வரியும் அமைந்தது. 7 அடிக்கு மேல் நீளமானது. பறவைப் பூச்சிகளைத்**

தின்றுவாழும், மரங்களில் விசேஷமாய்க் காணலாம். போக்குவரத்து சனங்களின் கண்களைக் குத்துவதற்கே நோக்கமாயிருக்கும். மற்ற விஷயங்களில் ஒரு தீங்கும் இழைக்காது; eye piercing snake, tree snake — Coluber mycterizens. Bright grass green colour, bronze shade in back, yellow stripe runs along each side of the pale green abdomen, length of more than seven feet, feeds on birds and lizards said to attack pasers aiming particularly at their eyes but otherwise harmless.

The other varieties are Tragops dispar and Tragops fronticinictus.

பச்சைப்பாலன், பச்சைப்பிள்ளை, baby, new born baby.

பச்சைப்பால், காய்ச்சாதபால், unboiled milk; 2. ஏடு கூடியபால், milk not separated from cream.

பச்சைப்பானை, பச்சை மண்பானை, pot not burnt.

பச்சைப்பிள்ளை, பிறந்த குழந்தை new born boby; 2. அறியாப்பிள்ளை, indiscreet child.

பச்சைப்புகை, see பச்சைவாயு.

பச்சைப்புண், உலராத புண், undried wound; 2.புதுப்புண், fresh wound; 3. சிகிச்சை செய்யாப்புண், untreated wound, raw wound; 4. ஆறாதபுண், unhealed or chronic sore; 5. மிக்க வலியோடுகூடிய புண், excessively paining. Sore c.f. உடம்பு பச்சைப்புண்ணாய் நோதல்.

பச்சைப்புல், பசும்புல், green grass as opposed to காய்ந்தபுல், அதாவது வைக்கோல், straw.

பச்சைப்புழு, மொச்சை அவரை முதலியவற்றில் காணப்படும் பச்சை நிறமான புழு, green worms in green pulse as country bean and leaves.

பச்சைப்புளி புளியங்காய், unripe tamarind fruit.

பச்சைப்புளிச்சாறு, பொங்கவிடாது காய்ச்சும் குழம்பு வகை, broth simply exposed to heat without allowing it to boil.

பச்சைப்புறா, பச்சைநிறப்புறா, தலையின் உச்சிப் பக்கம் சாம்பல் நிறம், கீழ்ப்பக்கம் பச்சை, கழுத்தும் மார்பும் மஞ்சள் நிறம், அடிவயிறும் பச்சை சாயல், மழைக்கு முன்னால் கூச்சலிடும், வால்மேல் சாம்பல் நிறம். அடிவால் பச்சை, 2 அங்குல நீளம், தின்பதற்கு நன்றாய் உருசியுள்ளது. தேக புஷ்டியும் வீரிய விருத்தியுமுண்டாம், green pigeon — Crocopus chlorigaster alias Treron jerdoni. Whole top of head ashy, whole under parts green, neck and

breast tinged with yellow, abdomen tinged with green shade, tail is uniformly ashy above and green at extreme base and about two inches long. It shouts before rain. excellent for eating. It gives strength and vitality; 2. ஓர்வகைப் பச்சை புறா. shouting bool boll, green bool bool — lora zeylanica alias l. melaceps.

பச்சைப்புனுகு, பதப்படுத்தாத புனுகு, civet drawn in a raw state, crude civet.

பச்சைப்புற்று, ஆறாதபுற்று விரணம், an un healed cancer — Green cancer; chloroma.

பச்சைப்பூ, பைம்பூ, green flower; 2. காயாத பூ. undried flower; 3. அப்பொழுது கொய்தபூ, newly plucked flower, fresh flower; 4. பால்குடிக்கும் குழந்தை, baby in arms.

பச்சைப் பூ நாகம், அப்போது தோண்டியெடுத்த பூ நாகம். இதை அரைத்துச் சுக சன்னிக்குக் கொடுக்கலாமெனக் கருதப்படும். இதை சட்டியிலிட்டுக் கருக்கி, தண்ணீரண் விட்டெரித்து, சுண்டியதும் கொஞ்சம் கொஞ்சமாக இறுத்துக் கொடுக்க சன்னி, காலராவினாலுண்டாகும் தாகம், சீதளம், வயிற்றுப் போக்கு, சாந்தமாகுமெனச் சொல்லப்படும். fresh earthworm. It is ground into a paste and given for fever caused by copulation with a woman in menses. For delirium. excess of thirst in diarrrhoea or chlorea the decoction of roasted earthworm is said to be useful.

பச்சைப்பூரம், பச்சைக் கற்பூரம் crude camphor; 2. சுத்தி செய்யாத பூரம் unpurified subchloride of mercury.

பச்சைப்பெருமாள், ஓர் வகை நெல், a kind of paddy.

பச்சைப்பை, ஓர் கொடி, an unknown creeper.

பச்சைப்போய், வெள்ளையாவான், தாளிப்பனை, tall pot tree — Corypha umbracultfera.

பச்சை மஞ்சள், உலிர வைத்த பதப்படுத்தாத மஞ்சள், undried and unseasoned tumeric.

பச்சைமணி, மரகதம், emerald; 2. பூ நீறு efflorescence on the soil o fuller's earth.

பச்சை மண், வேகாதமண், unburn mud; 2. ஈரமண், wet earth; 3 இளங்குழந்தை; baby.

பச்சைமதலை, see பச்சைப் பிள்ளை

பச்சை மரம், உயிருள்ள மரம், livin tree as opposed to பட்டுப்போ மரம், dead tree.

பச்சை மலம், வழலை, fuller's earth, probably referring to chlorine capable of bleaching. Hence the term **அழுக்ககற்றும் வண்ணான்.** It is for research scholars to investigate this.

பச்சைமா. இடித்த ஈரமாவு, undried flour; **2. வறுக்காத மாவு,** flour not heated or fried; **3. பணிகார மாவு,** flour got prepared for making eatables.

பச்சைமிளகாய், பச்சை நிறமிளகாய், green chilly as opposed to **காய்ந்தமிளகாய்,** dried chilly which is red in colour.

பச்சை மிளகு, ஈரமிளகு, fresh pepper which is green as opposed dried pepper which is black.

பச்சை மீன், உலராத மீன், unseasoned fish as opposed to **கருவாடு (உலர்ந்த மீன்)** dried fish; **2. அப்போது பிடித்த மீன்;** fresh fish; **3. அவிக்காத மீன்,** fish not cooked.

பச்சைமூங்கில், ஈரமூங்கில், wet bamboo which is green in colour as opposed to **உலர்ந்த மூங்கில்,** dried bamboo.

பச்சைமேனி, துரிசு, blue vitriol — Copper sulphate.

பச்சை மோர், காய்ச்சாத மோர், butter milk that is not heated, heated butter milk is administered for patients.

பச்சையட்டை, பச்சை நிற அட்டை, green leech — Sanquisuge officinalis.

பச்சையரிசி, நெல்லை வேகவைக்காது குத்தியெடுத்த அரிசி. raw rice as opposed to **புழுங்கலரிசி,** boiled rice.

பச்சையலரி, மஞ்சள் அலரி, இதற்கு சீமையலரி, திருவாச்சிப் பூ என்றும் பெயர், மரம் 12 அடி உயரம். நீள இலை. நரம்பு அதிகமாயில்லை. மொசு மொசுப்பாயிருக்கும். ஒரே பூ. மஞ்சள் நிறம், வாசனையாயிருக்கும். வருஷமெல்லாம் பூக்கும். அழகான பரவிய விருட்சம், பாதங்கொட்டையைப் போன்ற பெரிய கொட்டைகளுண்டு. உள் பருப்பு மிக்க கசப்பு; மெல்லுவதால் நாக்கு விருவிருப்பும், எரிச்சலும் திமிரும் உண்டாக்கும். பருப்பினின்று மஞ்சள் எண்ணை எடுக்கலாம். எல்லா பாகங்களினின்றும் பால் வரும்; இக்காய்க்குள் கொட்டையுண்டு. பால் மிக்க கொடிய விஷமானது. Yellow gonnair — Theveitia neriifolia. Native of West Indies but introduced here. It is alos called exile oleander. exile tree. foreign oleander. yellow oleander etc. It is so called from the colour of the flowers and as the tree almost resembles the oleander tree. Tree grows to the height of twelve feet. Leaves linear, glabrous, almost veinless, one flowered. Flowers are yellow and fragrant. A hand - some spreading tree constantly in blossom flowering throughout the year. It bears fruits with two nuts. Nuts are large almond like, kernels very bitter, when chewed produce numbress and heat in the tongue. They are poisonous oil extracted from them is clear bright yellow. All parts of the tree yield an abundance of acrid milky juice. Milk is highly venomous. Oil from the kernels is a strong emetic and purgative Bark is antiperiodic and substituated for cinchona.

பச்சையாய்த் தின்றல், காய்கறிகளைப் பச்சையாய்த் தின்னுதல், eating green vegetables and raw meat without boiling or cooking them.

பச்சையிதழ், பூவின் புறவிதழ், (in Botany) the outer covering — Calyx; **2. ஒரு செடி,** unidentified plant.

பச்சையிள நாவி, மூன்று மாதத்திய பிண்டம், foetus three months old.

பச்சையிள நாவிப் பழச்சாறு, மூன்று மாதத்திய கருப்பிண்டத்தை இடித்து அதிலிருந்து எடுக்கும் சாறு. an essence extracted from the three month's foetus by reducing it to a pulp and adopting some secret process; **2. கற்பூர சிலாசத்து,** which see.

பச்சையிள நீர், பச்சைநிற இளநீர், இதனால் பிரமேகம், பழைய சுரம்,

கபாதிக்கம், எரிகிருமி, யானைசொறி, கண்ணோய் இவைகள் தீரும், water of green tender cocoanut. When taken internally it is said to cure the diseases of the urinary tract, chronic fever, excessive deranged phlegm humour worms in the intestines, ichthyosis and diseases of the eye.

பச்சையிறைச்சி, சமைக்காத மாமிசம், uncooked meat — Raw meat.

பச்சையுடம்பாகும் காலம், பெண்களுக்குக் கருத்தரிக்கும் காலம், period of gestation or conceiving period in females; **2. பெண்கள் பிள்ளை பெற்ற பிறகு ஏற்பட்ட காலம்,** convalescent period after child birth in woman; **3. பருவ காலங்களில் பெண்களுக்கு இரத்தம் சுண்டி உடம்பு பச்சை நிறமாகத் தோன்றும் ஓர்விதச் சோகை நோய்** green sickness affecting girls about the age of puberty and marked by anemia green pallor of the skin etc — Chlorosis.

பச்சையுடம்பு, பிள்ளை பெற்றவளின் மெல்லிய உடம்பு, the delicate body of a woman after parturition; **2. பச்சைநிற வுடம்பு,** green pallor of the skin — Chlorosis. **3. நோயாளியின் மெலிந்தவுடம்பு,** the emacitated body of a convalescent.

பச்சையுடல், புண்பட்டவுடம்பு, body subjected to operation or inflicted by wound.

பச்சையுப்பு, சோற்றுப்பு, common salt; 2. கட்டாதவுப்பு, salt not consolidated or fixed.

பச்சையுப்புக்குணம், சோற்றுப்புக் கெட்டகுணம், அதாவது, 1. வியர்வையில் கக்குப் போகும்; 2 அமுரியில் இறங்கிவிடும்; 3. உடம்பு தளர்ந்து போம்; 4. நரைமெத்தவாகும்; 5. தந்தம் கழன்று போம்; 6. உடம்பில் கசிவு ஏற்படும். the six bad qualities attributed to the action of common salt upon the human system viz—1. finds its elimination through perspiration; 2. Its discension in the discharge of urine; 3. relaxation of badily muscles; 4. conversion into grey hairs. 5. falling of teeth. 6. in visible constant emission of moisture from the body through vital action.

பச்சை ரசம், கடையில் விற்கும் சுத்தி செய்யாத இரசம். impure mercury sold in bazaar as opposed to சுத்தரசம். purified.

பச்சை வசம்பு, உலர்ந்து பசுமையாகவுள்ள வசம்பு, fresh sweet flag (undried) Acorus calamus.

பச்சைவஞ்சி, பசுமையாகவுள்ள சீந்தில், fresh moon creeper — Tinosphora cordi folia.

பச்சை வடிவாள், பச்சைப்பாம்பு, which see.

பச்சை வயிறு, பிள்ளை பெற்ற வயிறு, painful abdomen after parturition; 2. வெந்த வயிறு, inflamed abdomen; 3. வெறும் வயிறு, empty stomach.

பச்சை வர்ணம், மரகதம்,. emerald; 2. பச்சை வர்ணக்கல், any green stone.

பச்சை வாயு, வெளுக்கச் செய்யும் புகைவாயு, chlorine gas fume.

பச்சைவாரிகம், பரம்பைமரம், Indian mesquit — Prosopis spicigera.

பச்சைவாழை, பழுக்காத வாழை, unripe plantain; 2. பச்சை நிற வாழை, see பச்சை நாடன், 3. சமைக்காத வாழை, raw plantain which is not cooked; 4. சீனத்து வாழை, Chinese plantain — Musa chiniasis.

பச்சைவானகம், சொத்தை ஈறுவல்லி, an unknown tree.

பச்சைவிலாமிச்சை வேர், விலாமிச்ச வேர், which see. It is opposed to உலர்ந்த விலாமிச்ச வேர் dried fragrant grass sold in bazaars.

பச்சைவீரம், சுத்தி செய்யாத சவ்வீரம், not purified subchloride of mercury.

பச்சை வெட்டாக நிறுத்தல், பச்சை வெட்டு, பழுக்காத காய், unripe fruit; 2. எரியவிடாத மருந்து. medicine not subjected to heat or calcination; 3. வாய் வேகச் செய்யு மருந்து, medicine causing inflammation of the mouth; 4. சுத்தி செய்யாத மருந்து (சரக்கு) medicinal drug not purified; 5. வெள்ளைக் குங்கிலியம். white Indian dammer.

பச்சை வெட்ட சந்தனம், அரைத்த சந்தனம், paste of sandal wood.

பச்சை வெட்டு வேதை, கட்டுவகையில்லாமலே நெருப்புக் கோடும் சரக்குகளைக் கொண்டு செய்யும் வேதை முறை. (in Alchemy) the process of transmutation without consolidation or fixtion of volatile substances.

பச்சைவெட்டை, ஓர் வகைச் சந்தனம், a kind of sandal tree.

பச்சை வெண்ணெய், உருக்காத வெண்ணெய், butter not clarified.

பச்சைவெயில், மாலைகாலத்து வெயில், evening sun shine.

பச்சை வேல், பச்சைநிற வேல், green vale — Acacia genus. It is so called from its green trunk see சீமை வேல், green babool — Parkinsonia aculeata.

பச்சோணான், பச்சை நிற ஓணான், green lizard. chameleon — Lacerta chameleon see காமரூபி.

பச்சோந்தி, பச்சை ஓணான், இதற்கு கோம்பிதண்டு, காமரூபி என்று பல பெயர். இதன் தலை பெரிது, கூச்சு அல்லது கோணமாயிருக்கும், உடல் சப்பை, தான்யம் போன்ற சிதல்களுண்டு, வால் நீளம், பிடிக்கக் கூடியது. மேற்பக்கம் கவர்ந்துள்ள சவ்வுக்கு நடுவே துவாரம் பொருந்தியது, காதின் உட்புற சவ்வு மறைந்திருக்கும், கால்கள் நீளம், நகம் 5, மரங்களில் வாழும், வால் பிடிப்புள்ளதாயிருந்தாலும் தரையிலும் தண்ணீலும் இது உபயோகப்படாது, அதிக நடை இராமலிருந்தாலும் பூச்சிகளைத் தின்று வாழும், கழுத்து விரைத்தப்படி நிற்கும். கண்ணமைப்பு அதிசயிக்கத்தக்கது, இது தன்னிறத்தை மாற்றுவதில் அதிக சக்தி வாய்ந்தது, இலையின் கிழாக, 10-12 முட்டைகள் இடும், ஓணான்களுக்கு நிறத்தை மாற்றும் சக்திபொதுவாயிருந்தாலும் தென் இந்தியாவில் காணப்படும் இவ்வினத்திற்குரிய மேன்மையாகவே சொல்லலாம். ஏனெனில் இரு பக்கத்திலே பல நிறங்களாகக் காட்டும் தன்மையது, இதன் கழுத்து வளைக்க முடியாது. நிமிர்ந்தேயிருப்பதினால் உண்டாகும் கெடுதல்களை அதன் கண்களின் அமைப்பு தீர்த்து

விடுகிறது, கண் விழிகள் பாதிக்கு மேல் வெளியில் துருத்திக் கொண்டுள்ளது. நன்றாக நாலு பக்கமும் சுழல முடியும், ஒவ்வொன்றும் தனியாகச் செயல்படும், அதாவது, இரண்டும் ஒன்றுக்கொன்று செயலியற்றுவதில் சம்பந்தமேயிராது. இதை தென் இந்தியாவில் எங்கும் காணலாம். தமிழ் வைத்தியத்தில் இது சிறப்பாக சொல்லப்பட்டிருக்கிறது, இதினின்று இலேகியம் செய்து காம விருத்தி, நரம்பு முதலியவைகளுக்குப யோகிப்பார்கள், இது மாந்திரீகத்திலும் வசியம் செய்ய மெத்த உபயோகமாகும். இதன் நெய் பின் இசிவு, நரம்புவலி, சிரநோய் முதலிய ரோகங்களையும் போக்கும். (Lit) green lizard but generally known as chameleon. It is also known by different names as Pachondy. Kamaroopi etc. — Chamaeliovulgaris reptilia. It has a large head, angular body compressed, covered with granular scales above and below; long and prehensible tail; tail exceedingly long, wormlike, very mobile, covered with a circular membrane which is pierced with a small central hole, tympanum hidden, legs thin each with five nails and toes, live trees, on the ground and in water it is helpless. Although extremely slow in locomotion, it feeds on insects. In flexibility of the neck wonderful structure of the eyes, faculty of changing colour much developed deposited its eggs under the leaves from ten to twelve. The representative species of Southern India is the common chamelan — Chamaetes vulgaries alias C. ceyonicus alias Lacerta chamelus. Most specimens are of a green colour, and the faculty of changing colour possessed by the chameleons. although common to numerous other lizards has become proverbial in this species and the faculty here is so much developed that one side may assume a colour different from that of the other. The inflexibility of the neck is compensaled by the structure of the eyes, which is so prominent that more than half of the ball stands out of the head. Not only they can be moved in any direction but each has an action independent of the other. The species will be found all over S.India. It is lughly spoken of in Tamil Medicine. It is useful in many ways in medicine and electuries prepared from it are aphrodisiac and as such capable of removing impotency. It is useful in magic especially for facinating and charming purposes. Its fat is highly efficacious as an external application in the sprain in the nape of the neck, opisthotomis neuraligiac pains diseases of the heads etc.

பஸ்பம், சாம்பல், உலோக வெள்ளை, see பஸ்மம்.

பஸ்பவிதி, see பஸ்மவிதி, rules of calcification.

பஸ்பித்தல், சூரணமாக்கல், calcification.

பஸ்மம், பஸ்பம், calcified substance or powder.

பஸ்மவிதி, உலோகத்தைக் கொண்டு பற்பம் செய்யும் முறைகள், rules of classification.

பஞ்சகஷாயம், ஐந்து வகைச் சரக்குகள், அதாவது தேன், நெய், பால், வாழை, சர்க்கரை இவைகளைக் கொண்டு ஆயுள்வேத முறையில் வடிக்கும் ஓர் வகைக் கஷாயம், (in Ayur-veda) a decoction extracted by boiling a mixture of substances viz-honey, ghee, milk, plantain and sugar; 2. நெல்லி, தும்பை, கடுக்காய், வெள்ளி லோத்திரம், மஞ்சிட்டி ஆகிய இவ்வைந்து சரக்குகளையும் கொண்டு தமிழ் முறைப்படி இறக்கும் கஷாயம்,(in Tamil Medicine) a kind of decoction extracted from five drugs viz-goose-bery leucas flower, gall nut, wood apple fruit shell, indian madder, 3. ஐந்து வகைக் கஷாய தினுசுகள், five varieties of decoction seperately or as a whole.

பஞ்சகத்திலொன்று, அத்தி, fig tree — Ficusindicus.

பஞ்சகந்தம், ஐந்துவகை வாசனைகள், அவையாவன, ஏலம், இலவங்கம், கற்பூரம், சாதிக்காய், தக்கோலம், five auromatics viz— Cardamom, cioves camphor, nut meg, chinapepper.

பஞ்சகமம், ஐந்து வகையான மருந்து மூலிகைச் செடிகள், அவை ஆடாதோடை, சீந்தில், கண்டங்கத்திரி, கையாந்தகரை, பெரும்பலா என்பன, the five medical plants viz - Malabar wintercherry, moon creeper, prickly night shade, eclipse plant.

பஞ்சகம், ஐந்தின் கூட்டு, a mixture or compound of five drugs or any aggregate of five substances.

பஞ்சகரணாதிப்பால், தில்லைப்பால் tiger milk tree.

பஞ்சகர்த்தர்கள், அயன், அரி உருத்திரன், மகேஷ்வரன் சதாசிவன், the five gods or deitie viz - Brahma. Vishnu, Rudra Maheswaran and Sadasivan; பஞ்சபூதம், five elements, earth water, fire, (vayu) alias air & ethe

பஞ்சகரு, மாந்திரீக நூலில் சொல்லி ஐந்துவித கருக்கள், the fi elementary substances described in t science of magic.

பஞ்ச கருமம், உடம்பைச் சுத் செய்வதற்காக வேண்டி, ஆயு வேதத்தில் சொல்லியுள்ள ஐ வகைச் சிகிச்சைக் கிரமங்க அவையாவன, வாந்தி, பே

நீர்ப்போக்கு, வியர்வை, தும்மல் இவைகளை உண்டாக்குபவை, a technical term for the application of five medical measures or process for purifying the body viz. emetics, purgatives, errhines, diureties and diaphoretics.

பஞ்சகலை, சந்திரகலை, the vital air passing through the left nostril; 2. ஆத்தும விருத்தி, அவையாவன, நிவர்த்தி, பிரதிஷ்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதம், the five developments of soul in its beatification viz. renunciation. performance, art, quiescence (motion less or dormant) and sacrificial offer.

பஞ்சகவ்வியம், பசுவினிடமாய்ப் பிறந்த ஐந்து வகை வஸ்துக்கள், அவையாவன, கோமயம், சாணம், பால், தயிர், நெய், the five substances derived or obtained from the cow viz- urine, dung, milk, curd, clarified butter.

பஞ்சகற்பமாத்திரை, சந்தனம், மஞ்சள், கடுக்காய், நெல்லி, தான்றிக்காய் இவைகளைச் சமனிடை கொண்டு, ஆடாதோடைச் சாற்றினாலரைத்துத் திரட்டி உலர்த்திய மாத்திரை. இதனால் மலச்சிக்கல், வெள்ளை, இரத்தக்கொதிப்பு, தாது துர்ப்பலம் போம், Pill or tablet containing sandal, turmeric and the three myrobalans. It is said to cure constipation, white discharge, blood pressure and weakness.

பஞ்சகற்பம், கடுக்காய்த் தோல், கஸ்தூரி மஞ்சள், நெல்லிப் பருப்பு, மிளகு, வேப்பம் வித்து, pancha karpam pericarp of gall nut i.e gall nut without the stone. musk turmeric, goose berrykernels pepper and margosa seeds.

பஞ்சகற்பவிதி, கஸ்தூரி மஞ்சள், மிளகு, வேப்பம் வித்து, கடுக்காய்த் தோல், நெல்லிப் பருப்பு ஆகிய இவைகளை கிரமப் பிரகாரம் காராம் பசுவின் பாலில் அரைத்துக் கொதிக்க வைத்து தலையில் தேய்த்துக் கொள்ளல், இதனால் நோய் ஒன்றும் அணுகாதெனக் கருதப்படும். rules of using pancha Karpam bathing after applying to the head the paste of and boiled the five substances ref: பஞ்சகற்பம், ground with the milk of the black cow with black udder and nipples. it is said to prevent diseases.

பஞ்சகாசம், ஐந்து வகையான காசரோகங்கள், அவையாவன: வாதகாசம், பித்தகாசம் சிலேட்டும காசம், இரத்த காசம், தொந்தகாசம், five kinds of bronchities — Vatha (wind humour) bronchities, Pitha (fire humour) bronchities, kapa (phlegm humour) bronchities, Raktha (blood) bronchities and thontha (combined) bronchities.

பஞ்சகாயம், ஐந்து வகை மருந்து சரக்குகள், சுக்கு, மிளகு, திப்பிலி, பெருங்காயம், வெங்காயம், five kinds of drugs viz - dried ginger, black pepper, long peper, asafoetida and onion.

பஞ்சகாரகம், கடுகு, வெந்தயம், பெருங்காயம், வெள்ளுள்ளி, வெங்காயம்; ஆக ஐந்து வகைக் காரச் சரக்குகள். five kinds of pungent substances viz- mustard, fenugreek, asafoetida, garlic and onion.

பஞ்சகாரம், ஐந்து வகையான காரச் சரக்குகள், அவையாவன: சீனக்காரம், அல்லது படிகாரம், வெண்காரம், பூங்காரம், காடிக்காரம், சவர்க்காரம், five kinds of alkaline salts, alum, borax, soda, lunar caustic (silver nitrate) and soap.

பஞ்சகாவிய கிருதம், காக்கை வலிப்புக்காக தயாரித்துக் கொடுக்கும் ஓர் ஆயுள் வேத மருந்து நெய். medicinal ghee prepartion used in Ayurveda for epilepsy.

பஞ்ச காவிய நிகண்டு, அகஸ்தியரால் செய்த ஐந்து பாகங்களடங்கிய வைத்திய நூல். a medical vocabulary complied by Agastiya consisting of five chapters.

பஞ்ச காவியம், வாதம், வைத்தியம் இலட்சணம், மாந்திரீகம், ஞானம் ஆகிய இந்த ஐந்து விஷயங்களைப் பற்றிய காவியங்கள் அடங்கிய ஓர் நிகண்டு. இது அகஸ்தியரால் செய்யப்பட்டதெனச் சொல்லப்படும், a Tamil vocabulary composed in verses on five different subjects viz — Alchemy, Medicine, Yoga philosophy; Spiritual philosophy, and general subjects. It is said to be compiled by the celebrated sage Agastiar (the founder of the Tamil grammer.)

பஞ்சகுத்தம், see பஞ்சகூடம்.

பஞ்ச குன்மம், ஐந்து வகை குன்ம நோய்கள் five varieties of gunmam (dyspepsia — Vatha (wind humour) gunmam, Pitha (fire humour) gunmum. Kapha (Phlegm humour) gunmam, 'Thonthagunmam — Combination of any two humours and Janni gunmam combination of all three humours. Generally eight are mentioned and is known as Asta gunmams.

பஞ்சகூடம், மை, tortoise, turtle.

பஞ்சகோசம், உயிர் நிலைக்கு ஆதாரமாக வியங்கும் ஐந்து வகை கோசங்கள், அவையாவன: அன்னமயகோசம்: 2. பிராணமயகோசம்; 3. மனோமய கோசம்; 4. விஞ்ஞானமய கோசம்; 5. ஆனந்தமயகோசம் என்பவையாம்; in philosophy sheaths (investitures) to the soul viz. 1. that supported by food — gross form, 2. organs of action;

3. organs of perception with the mind; 4. the same with intellect; 5. the elements of identity and wisdom.

NOTE:-1. Mukthi or Moksham consists in freedom from the five shackles and liberation from those doctrines or natural restrictions.

NOTE:-2. Those koshams (கோசங்கள்) represented in the term of body or in triple investures are as follows. No. 1 above mentioned refers to or agree with sthoolam or physical body. No. 2, 3 and 4 correspond to sookkumam or subtle or astral body.

2. அன்னம், நீர் காற்று, அக்கினி, ஆகாசம் இவைகளினால் ஆக்கப்பட்ட மானிடச்சரீரம்; (in physiology) the human physical body made up of five elements viz — food (earth), water, fire, air and ether (sky).

பஞ்ச கோலகிருதம், குன்மம், பச்சை நோய், மண்ணீரல், விருத்தி, இருமல், சுரம் இவைகளுக்கு ஆ. வேத முறைப்படி தயாரித்துக் கொடுக்கும் ஓர் மருந்து. an Ayurvedic medicinal ghee phlegm, dyspepsia, chlorosis, enlarged spleen, cough and fevers.

பஞ்ச கோலம், சுக்கு, திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வியம், சித்திர மூலம், ஆக ஐந்துவித கோலச் சரக்குகள், the five characteristic officinal drugs viz, dried ginger, long pepper. long pepper root, black pepper creeper (stem) Ceylon red wort (plumbago root). This compound increases the digestive function and excites bile and checks both the wind and phlegm humours.

பஞ்சகௌவியம், see பஞ்சகவ்வியம்.

பஞ்ச சுத்தி, தமிழ் வைத்தியத்திற் சொல்லியுள்ள ஐந்துவித சுத்தி முறைகள்: 1. மண்ணிற்குள் புதைத்து வைத்தல்; 2. தண்ணீர், கஷாயம், திராவகம், செயநீர், காடி முதலியவைகளால் கழுவுதல்; 3. அவித்தல், புடமிடல், எரித்தல் முதலியவை; 4. காற்றில் உலரவைத்தல்; 5. சூரியவெயில் அல்லது வெளிச்சத்திலிடல், (in Medicine) the five kinds of cleaning or purifying process adopted in Tamil Medicine viz- 1. burying under the earth, (mud, paddy, or other grains); 2. washing or soaking or boiling in water, milk, decoction tender cocoanut water acid pungent water, fermented liquids etc, 3. baking, calcining, burning or heating in fire; 4. drying or evaporating; 5. exposing to sun's rays or heat.

2. சைவசமயத்தைத் தழுவியவர்கள் கைக் கொள்ளும் சுத்தி முறைகள், அவையாவன: 1. குளியல், 2. தியானம், 3. பாத்திரங்கள் சுத்தி, 4. இலிங்கசுத்தி, இலிங்க ஆராதனை, 5. மந்திர உச்சரிப்பு; பஞ்சாட்சரம் ஓதல், வணக்கம், ஐவகை சுத்தி, ஆத்துமசுத்தி, இலிங்கசுத்தி, திரவியசுத்தி, பூதசுத்தி, மந்திரசுத்தி, (in Agama philosophy) the five kinds of purification practised among Saivites viz- 1. bathing or washing the body and clothes, 2. purification of the soul by prayer; 3. cerimonial purification of sacred vessels (used for worship); 4. Purification and adorning of lingam; 5. final purification by mental repitition of the mystic letters 'Om' and five lettered Panchakshsaram.

பஞ்ச சத்தி, உலக சிருஷ்டி சம்மார கிருத்தியங்கள் நடைபெறுவதற்காக சிவசொரூபமாகிய ஐந்து வகைச் சத்திகள். அவையாவன: the five operative female energiesd of Siva by which the creations and evolution of the Universe are effected.

1. இச்சாசத்தி, the powers of affection which is friendly to life or benevolent to the soul.

2. கிரியாசத்தி, power of creating words.

3. சிற்சத்தி or ஞானசத்தி, knowledge of illuminating the soul.

4. பராசத்தி, the power of manifestations or of doing a thing.

5. ஆதிசத்தி, the power of vital operation. See ஐஞ்சத்தி.

பஞ்ச சத்து செந்தூரம், கௌரி, கந்தகம், வெள்ளைப் பாஷாணம், மனோசிலை, தாளகம் ஆக இவை ஐந்தையும் இரசத்தாளிப் பழத்தால் அரைத்துப் புடமிட்ட செந்தூரம், இது வாதப்பிடிப்பு, சன்னி, சுரம் முதலியவைகளுக்கு உபயோகமாகும். a kind of red oxide prepared by calcining the product derived by grinding together the five drugs viz- yellow arsenic, sulpher, white arsenic, red arsenic and yellow orpiment with plantain fruit. It is prescribed for rheumatic affections, epilepsy, fever etc.

பஞ்ச சயனம், ஐந்தடுக்கு மெத்தை; 2. திருமாலின் ஐவகைச் சயனங்கள், five fold bed, the five varieties of God Vishnu's bed; 3. ஐந்தாலாய மெத்தை. அவையாவன, அன்னத்தூவி, இலவம்பஞ்சு, செம்பஞ்சு, மயில் தூவி, வெள்ளைப் பஞ்சு, செம்பஞ்சு, மயில் தூவி, வெள்ளை பஞ்சு, bed mattress filled with feathers of swan, silk cotton, cotton of red cotton plant, peacock feathers and cotton of ordinary (white) cotton plant.

பஞ்சம், ஐந்து, five; 2. ஓர் சிறந்த எண், a sacred number; 3. பூண்டின் முதற் பெயர், plants first term பஞ்சமூலம், five herbaceous roots

4. பஞ்சரசம், gall nut.

பஞ்ச சரக்கு, வீரம், கவுரி, இலிங்கம், அரிதாரம், பூரம் ஆகிய இவ்வைந்துவித சரக்குகள், the five kinds of minerals, corrosive sublimate, yellow arsenic, vermilion, orpiment and subchloride of mercury.

பஞ்சசரலவணம், கடுக்காய், gall nut — Terminalia chebula.

பஞ்ச சருக்கரை, சீந்தில்துண்டு, நீர்வள்ளிக் கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, நிலக்குமிழ் வேர், சுற்கோவைத்தண்டு; இவைகள் ஒவ்வொன்றிலுமிருந்து காய்ச்சி தனித்தண்ணீர் வாங்கிய 5 வகை சருக்கரை, இதை வங்க பற்பத்தில் கலந்து கொடுக்க நீரழிவு போம், calcified tin given with the five salts extracted from each of the above drugs separately.

பஞ்ச சர்கம், முன்னங்கை, the fore hand.

பஞ்ச சன்னியம், குதிரை, horse.

பஞ்ச சாரம், ஐந்து வகை சாரங்கள், நவச்சாரம், சத்திசாரம், சிவசாரம், வெட்சாரம், கதலிச்சாரம், the five kinds of acid salts viz salt petre or nitrate of potash, salammoniac, sakthi salt, Siva salt and plantain salt: 2. ஐந்துவித சத்துக்கள், அவையாவன, காய்ச்சியபால், சருக்கரை, தேன், திப்பிலி, நெய் ஆகிய இவைகளை நன்றாகக் கலக்கி உபயோகிக்கும் ஓர் ஆயுள்வேத மருந்து, இதை சன்னிபாதசுரம், சயம், காசம், இருதயவலி முதலிய நோய்களுக்குக் கொடுப்பதுண்டு, an Ayurvedic compound consisting of boiled milk, sugar, honey piper longum and clarified butter well stirred up. It is employed in casses of typhoid fever consumption, bronchitics and heart affections.

பஞ்ச சிகை, தலையுச்சி, crown of head, vartex; 2. கண்புருவம், eye brow; 3. பஞ்சசர்கம், which see.

பஞ்ச சித்தர், ஐந்து சித்தர்கள், அசுவினி தேவர், அகஸ்தியர், புலஸ்தியர், இராமதேவர், யூகிமுனி, the five well Siddhars viz- Asavin kumar, Agastyar, Pulastyar, Rama Devar or Yacob and Ugimuni.

பஞ்ச சிலேத்துமம், ஐந்து வகை சிலேத்தும வகைகள், அவலம்பகம், கிலேதம், போதகம், தற்பகம், சந்திகம், the five phlegms humours viz- Avalampagam, Kiletham, Pothagam, Tharpagam and Santhigam.

பஞ்சசீத எண்ணெய், இதுவே பொன்னாங்காணித் தைலம், வரட்சிமேகம், மூலம் காலெரிவு, கண்ணெரிவு போம், bathing oil prepared out of Illecebrum sessile. It cures neurities, piles etc.

பஞ்ச சீதம், பொன்னாங்காணி, சிறுகீரை ஆவாரை, வல்லாரை, சீந்தில் எனும் ஐந்தின் பொதுப் பெயர், five plants or herbs that cause cold.

பஞ்சசுண்ணக்குகை,
பஞ்சசுன்னக்குகை, ஐந்து சுண்ணாம்பினாற் செய்த மூசை, crucible made out of the five calciums.

பஞ்ச சுண்ணம், ஐந்துவகைச் சுண்ணம், குக்கிடத்தின் சுண்ணம், காரக் கிளிஞ்சில் சுண்ணம், வெள்ளைக்கல் சுண்ணம், கடல் நுரை சுண்ணம், வலம்புரிச் சங்கின் சுண்ணம், the five calciums or slaked limes viz. fowls' excreta (white portion) bivale shell calcium, lime stone calcium, cutle fish calcium and right twisted conch shell calcium.

பஞ்ச சூதமெழுகு, சாதிலிங்கம், பூரம், வீரம், சூதம், செந்தூரம் இவைகளைக் கொண்டு காசிபமுனிசூத்திரத்தில் சொல்லியபடி தயாரிக்கும் ஓர் வித மெழுகு, a calloid or waxlike preparation made as per process laid down in Kasila Muni Sutram from the followings five drugs viz: Virmilion, subchloride of mercury, corrosive sublimate, mercury and mercuric oxide.

பஞ்ச சூளை, அம்மி, உரல் - உலக்கை, துடைப்பம், அடுப்பு, நீர்க்குடம், ஆகிய ஐந்து மடைப்பள்ளி சாமான்கள், the five required articles of kitchen viz-grind stone, pestle and mortar, broom stick, oven, and waterpot.

பஞ்சடைதல், கண்துலக்கமறல் ஓர் மரணக்குறி, dimness of the eyes - a symptom of death: (உ-ம்) "காலன் வருமுன்னே கண் பஞ்சடைக்கு முன்னே" பஞ்சதசி ஐந்தெழுத்து மந்திரம், the most important Mantram recited for rousing the kundalin with cosmic power.

பஞ்சடைப்பு, கண்பஞ்சடைந்த நிலை, the state where in the eye looks grim, dim, and dark losing its reflex action.

பஞ்சட்டை, ஓர் பூடு, common Ceylon laurel — Litseae.

பஞ்சணிப்படலம், பீளை சேர்ந்து பார்வை புகைச்சல் கண் உறுத்தல் ஒருபுற பார்வை see பஞ்சு நீர்ப்படலம் an eye disease characterised by irritation, discharge from the eye squint eye etc.

பஞ்சதம், சாவு, death; 2. ஐம்பூதம், உடலினின்று பிரிதல், the dissolution of the five elements which composed the body.

பஞ்சதரு, ஓர் கற்ப மூலிகை, rejuvenating herb unknown.

பஞ்சதன் மாத்திரை, பஞ்சபூத மூலம், the subtle rudiments of the five elementary matter; 2. அறிவு மூலம், the five grounds of knowledge by senses.

பஞ்ச தாது, பஞ்ச பூதம், the five elements being the component parts of the body; 2. பஞ்சபட்சி பாஷாணம் a kind of prepared arsenic; பொன்னாதி ஐந்து, பஞ்சலோகம், பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, காந்தம், the five metals viz-gold, silver, copper, iron and magnet.

பஞ்சதாரை, நாட்டுச் சருக்கரை, unrefined country sugar coarse or red sugar.

பஞ்ச திரவியம், கோசலம், தயிர், நெய், பால், சாணம், see பஞ்ச கவ்வியம்; 2. ஐந்து கடைச் சரக்குகள், மிளகு, கோஷ்டம்; அகில், தக்கோலம், குங்குமம், five bazaar drugs viz- black pepper, Arabian costus, agil wood, saffron powder.

பஞ்ச தீக்கிகம், உதரம், கண், கை; மார்பு, மூக்கு ஆகிய உடம்பின் ஐந்து உறுப்புகள், five parts of the body viz - abdomen, eye, arms, chest and nose.

பஞ்ச தீபாக்கினி, சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலம் ஆகிய பசியை எழுப்பும் ஐந்து வித சரக்குகள், the five drugs that stimulate hunger, fire in the stomach viz. dried ginger, black pepper, long pepper, cuminseeds and cardmum.

பஞ்ச தீபாக்கினி சூரணம், திரிகடுகு, சீரகம், ஏலரிசி, இவை சம எடை சீனி 5 பங்கு சேர்ந்த சூரணம், the powder mixture prepared out of the drugs of Pancha deepagni. See பஞ்சதீபாக்கினி. Each drug one part and sugar five parts is the composition of the mixture powder.

பஞ்ச தீபாக்கினி லேகியம், சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலம் ஆகிய ஐந்து சரக்குகளைச் சூரணித்து சீனி, தேன் கூட்டிக் காய்ச்சிப் பதப்படுத்திய லேகியம், இது அசீரணத்திற்குக் கொடுப்பதுண்டு. an electuary prepared out of the five pancha deepagni drug and sugar and honey.

பஞ்ச தீபிகா, see உகாய்.

பஞ்ச தீர்க்கம், உதரம், கண், மார்பு, மூக்கு, கை ஆகிய ஐந்து உறுப்புகள் see பஞ்ச தீக்கிரகம்.

பஞ்சது, குயில், Indian cuckoo.

பஞ்சதூபம், ஐந்துவகை வாசனைத் தூபம், அகில், சாம்பிராணி, குந்துருக்கம், குக்குலு, சூடன், the five kinds of inceuses or auromatifumes viz- agil or eagle wood, franckincense, Indian olibanum, bdellium and camphor.

பஞ்சத்துவ கிரகணம், ஐம்பூதங்களின் நிலைமை அல்லது தன்மை உடன்பாடு, the acceptance of a state or condition of the five elements.

பஞ்சத்துவம், மரணம், death.

பஞ்சதை, பஞ்சபூதம், the five elements; 2. சாவு, death.

பஞ்ச நகக்கூர்மையோன், ஆமை, tortoise, turtle.

பஞ்ச நகம், ஆமை, tortoise; 2. புலி, tiger; 3. யானை, elephant; 4. நகங்கள் ஐந்து பிரிவினைப்பட்ட மிருகங்கள், animals in general with claws having five nails as tiger, lion etc.

பஞ்ச நகி, இரட்டை நாக்குள்ள உடும்பு, double tongue lizard or guanana — Lacerta iguana.

பஞ்ச நாடி, பஞ்சேந்திரியம்,ல the five senses of the body: 2. உடம்பிலுள்ள ஐந்து வகை நாடிகள், அவையாவன, the five kinds of pulsations in the body viz:

1. வாத நாடி, pulse indicating wind humour (Vatha nadi).
2. பித்த நாடி, pulse indicating bile humour (Pitha nadi)
3. ஐய நாடி, pulse indicating phlegm humour (Kapha nadi)
4. பூத நாடி, bootha nadi.
5. குரு நாடி, gurunadi.

பஞ்சநாமம், நாய், dog.

பஞ்ச நிதானம், நோயாளிகளினிடத்தில் பார்க்கக்கூடிய ஐந்துவித காரணக் குறிகள் அல்லது சோதனைகள், அவையாவன, the five observations or examinations to be made in a patient viz:

1. கண், the two eyes.
2. வாய் (நாக்கு, பல்), mouth i.e. tongue and teeth.
3. கை (நாடி), hand (pulse)
4. மூத்திரம், urine.
5. மலம், faeces.

பஞ்ச நிமிளை, திருமூலர் திருமந்திரத்திற் சொல்லியுள்ள ஐந்து வகை நிமிளைச் சரக்கு, அதாவது பொன்னிமிளை, வெள்ளிநிமிளை, செம்புநிமிளை, வெங்கலநிமிளை, காகநிமிளை, gold pyrites, silver

pyrites, copper pyrites, Bismuth (bellmetal pyrites) and iron pyrites or antimony referred to in Thirumoolar Thirumandiram.

பஞ்ச நிம்பம், வேப்ப மரத்தின் ஐந்து வகை உறுப்புக்கள், இலை, பட்டை, பூ, பழம், வேர், மேற்கண்ட நிம்பத்தின் உறுப்புகளையும் ஆதியாகக் கொண்டு இடித்து, தூள் செய்து ஆயுள்வேத முறைப்படி நெய்யும், தேனும் கலந்து தயாரித்து கொடுக்க, மஞ்சட் காமாலை, இரத்த பித்த கபம் இவைகளைப் போக்கும், the five parts of the neem or margosa tree viz- leaf, bark, flowers, fruit and root; an Ayurvedic preparation of the said five parts of the margosa tree powdered and mixed with ghee and honey and made into a tincture. It is prescribed for jaundice, piles excited blood, bile, phlegm and skin diseases; 2. ஐந்து வகை வேம்பு, the five kinds of neem plants; they are:

1. நல்வேம்பு, margosa tree.

2. மலைவேம்பு, hill neem.

3. நிலவேம்பு, french chiretta.

4. கறிவேம்பு, black neem (curry leaves tree).

5. சிவனார்வேம்பு, Shiva's neem.

பஞ்ச நிறக்கல், சிலாநகம்

பஞ்ச நீர், உடம்பினின்று கழியும் ஐந்து வகைத் துர்நீர், அதாவது மூத்திரம், விந்து, வியர்வை, வாய்நீர், கண்ணீர், the five kinds of excretions from the body viz. urine, semon, perspiration, saliva and tears; 2. ஐந்துவகைத் தண்ணீர், கடல்நீர், ஆற்று நீர், ஊற்று நீர், மழை நீர், சுனை நீர், the five sources from which water is obtained, 1. sea, 2. river, 3. spring, 4. rain, 5. mountain.

பஞ்சந்தாங்கி, கேழ்வரகு, ragi as famine food. It is so called as unlike paddy, it can be cultivated, even in drought condition and used.

பஞ்சந்தாளி, பஞ்சபசு, ஐந்து வகை பசு, நத்தை, பத்திகை, சுரபி, சுசூலை, சுமனை, the five kinds of cows viz- as described above.

பஞ்ச பஞ்சமூலம், இலகு, பிருக்தம், புனர் நவம், சிவகாதி திருணம் ஆக ஐந்துவித பஞ்ச மூலங்களோடு கூடிய 5 x5 அல்லது 25 வேர்கள், the five sub divisions as described above of each of the five roots mentioned under பஞ்சமூலம், which see.

பஞ்ச படலம், கருவிழியில் ஏற்படும் ஐந்து வித படலங்கள். தசை, நீர், இரத்தம், வரி, வெண்சதை, a spreading growth (as the name indicates) in the black of the eye which is divided into five varieties viz- fleshy, vesicular, bloody, streaky and white fleshy.

பஞ்ச பட்சி, ஓர் வைப்புப் பாஷாணம், a kind of prepared arsenic; 2. ஐந்து வகைப் பறவைகள், காகம், வல்லூறு, மயில், ஆந்தை, கோழி, (in Astrology) the five kinds of birds selected in Astrology with reference to human body and they are crow, kite, owl, peacock and fowl cock.

பஞ்சபட்சி பாஷாணம், மச்சமுனி, 800-ல் சொல்லியபடி பூரசம், அப்புரசம், மகாரசம், பச்சை, வெள்ளை, மனோசிலை, வீரம், இலிங்கம் இவைகளைப் பொடித்து குப்பியில் அடைத்து சீலைமண் 7 செய்து தாழியில் மணலிட்டு வைத்து குறுகத்தீயிட்டு 6 சாமம் எரிந்து தணல் ஆறியபின் குப்பியை உடைத்துப் பார்க்க பாஷாணமாம், this arsenic is prepared as per text mentioned in Macha Muni-800.

பஞ்சபத்திர கஷாயம், பற்பாடகம், கோரைக் கிழங்கு, சீந்தில் கொடி, அதிவிடயம், நில வேம்பு, இவைகள் சேர்ந்த கஷாயம், இதனால் வாதபித்த சுரம் நீங்கும், decoction prepared out of fever plant (Mollugo cerviana) root of Indian papryus, stem moon creeper, Indian atees and ground neem (french chiretta) It is indicated for all fevers.

பஞ்சபட்சிவாசி, வெள்ளைக் கிலு கிலுப்பை, white flowered rattle wort — Crotolaria laburnifolia.

பஞ்ச பத்திரம், ஐந்துவித இலைகள், ஆடாதோடை, கரிசலை, நொச்சி, அழவணை, கண்டங்கத்திரி, the herbacous leaves of Malabar winter cherry, eclipse plant five leaved notchy and nail dye.

பஞ்சபலோதகம், ஐந்துவித பழச்சாறு, எலுமிச்சை, குமுஞ்சி, தமரத்தை, நாரத்தை, மாதுளை, juices of five fruits viz- lime, orange, sweet blimbing, bitter orange and pomegranate.

பஞ்சபாண செந்தூரம், சூரத்த கற்பூரம், சாதிலிங்கம், மனோசிலை தாளகம், கந்தகம், இரசம் சங்குபாஷாணம், இவைகளை வகைக்கு 1 பலம் எடுத்துக் கொண்டு, மேனிச்சாற்றால் அரைத்து நிழலில் உலர்த்தி, மறுநாள் கறுப்பு வெற்றிலை (கம்மாறு வெற்றிலை) சாற்றாலரைத்து கடைசியாக கறுப்பு வெற்றிலை மீது பில்லை தட்டி வைத்து சீலைமண் செய்து ஒரு சாதி விறகால் 4 சாமம் எரித்து வாங்கவும், இஞ்சி அல்லது தேனில் 2 அரிசி எடை கொள்ள சன்னி சுரம் குட்டம், கிரந்தி, வாதம், குன்மம் சூலை, அரையாப்பு, பிளவை

முதலியவைகள் போம், ஒருவாரம் கொடுக்கவும், இச்சாபத்தியம், மறுபத்தியம் உண்டு, surat camphor, vermilion, red arsenic, yellow orpiment, sulphur, mercury, sanku pazhanam (white arsenic) are taken in equal quantities after purification and grinded with the juice of Acalpia indica for a day and then dried. The next day it is grinded with the juice of betel (black) leaf. Then it is made into a disc and dried. It is placed over the betel leaf and packed and sealed well as usual. It is then burnt with one kind of fuel for twelve hours and taken for use. Dose two rice weight with honey or ginger juice. It is daid to cure, delerious fever, skin diseases, syphilis, dyspepsia, rheumatism, bubo and carbuncle. Diet must be observed.

பஞ்ச பாணப்பூ, காமத்தை உண்டாக்கும் ஐந்துவகைப் பூ five kinds of flower for promoting lust.

1. தாமரை, lotus.

2. அசோகு, asoka.

3. மாமலர், mango flower.

4. கருங்குவளை, black Indian water lily.

5. முல்லை, small jasmine.

பஞ்சபாண்ட செந்தூரம், பிரமமுனி வைத்திய நூலிற் சொல்லியுள்ள வோர்வகை செந்தூரம், a red oxide prepared by process of calcination according to the principles laid down in Brahma Muni work in Medicine.

பஞ்சபாண்டவர் முல்லை, ஓர் வகை முல்லை, ஐந்திதழ் உடையது போலும், five petalled mullai jasmine.

பஞ்ச பாஷாணம், ஐந்து வகை பாஷாணங்கள், five kinds of poisonous drugs.

1. தாளகம், yellow orpiment.

2. கௌரி, Yellow oxide of arsenic

3. இலிங்கம், cinnabar

4. வெள்ளை, white arsenic

5. வீரம், corrosive sublimate

பஞ்ச பாண்டுரோகம், ஐவகை பாண்டுரோகம், five varieties of anaemia.

பஞ்ச பித்தம், ஐந்து மிருகங்களின் பித்துக்குள், கரடி, வெள்ளாடு, எருமை, வரால்மீன், மயில், bile of bear, bile of goat, bile of buffalo, bile of peacock and bile of viral fish (fresh water fish)

பஞ்ச பிராணன், மிக்க பிரியம், most beloved or affectionate; 2. தசவாயுவினுள்ளைந்து, அதாவது, five of the ten vital airs supposed to operate in the human body viz:-

1. அபானன், (apanan) wind from the anus.

2. உதானன், (Udanan) vital air promoting digestion.

3. சமானன், (Samanan) that which is essential for digestion.

4. பிராணன், (Pranan) that which essential for breathing.

5. வியானன், (Vyanan) vital air prevailing all over the body.

பஞ்ச பிராணாவஸ்தை, மனிதருக்குக் காமத்தினாலேற்படும் ஐந்துவித வேதனைகள், நேசிக்கின்றவரைப் பற்றி சதா நினைப்பதும், பேசுவதும்; 2. பெருமூச்செறிதலும், அழுதலும்; 3. அருவருத்தல்; 4. அனத்துதல்; 5. ஓலமிட்டு அலரல், effects of love on men and women, thinking and talking of the person loved; 2. sighing and tamenting for the person loved; 3. no appetite and blis like for everything; 4. languishing; 5. crying and shedding tears.

பஞ்ச பீசம், உலோகங்களின் தன்மையைப் போக்கித் தங்கச் செம்பாக மாற்றிப் பொன்னின் குணத்தை உண்டாக்கும் 5 வகை செம்பு. இது சித்தர் பொடியாலாகும். the alchemical substance known as Philosopher's powder used for converting the following metals into alchemical copper before they are transmuted into gold viz. தங்கசெம்பு, gold copper; 2. வெள்ளிச் செம்பு, silver copper; 3. அப்பிரகச் செம்பு, mica copper; 4. காந்தச் செம்பு, magnetic copper; 5. அயச்செம்பு, ferrous copper.

பஞ்சபுலன், ஐம்புலன் அதாவது:- மெய், வாய், கண், மூக்கு, செவி, the five sense organs viz- skin, mouth, (tongue) eye, nose and ear.

பஞ்ச பூத காரசாரம், பஞ்சபூத பிரிவினைப்படி ஐந்து வகையாக பிரித்த காரமும் சாரமும் alkalies and acids divided according to the five elements viz:

	காரம்- alkali	சாரம்- acid
1. பிருதிவு	— கல்லுப்பு	— இந்துப்பு.
Earth	— sea salt	— rock salt.
2. அப்பு	— சத்தி	— நவாச்சாரம்.
Water	— sathisalt	— sal ammoniac.
3. தேயு	— சவுட்டுப்பு	— வெடியுப்பு
Fire	— dhody earth	— nitre.

4. வாயு	— வெண் காரம்	— துரிசு.
Air	— borax	— blue vitriol.
5. ஆகாயம்	— பூரம்	— வழலை
Sky	— subchlorid of mercury.	— efforescence

பஞ்ச பூதக்கரு, ஐந்து பூதக்கரு, அதாவது, (1) மலம் - பிருதிவி, (2) சிறுநீர் - அப்பு, (3) உதிரம் - தேயு, (4) வாய் நீர் - வாயு, (5) விந்து - ஆகாயம், the five body excretions viz. 1. feaces; 2. urine; 3. blood, 4. saliva; 5. semen; representing the five elements earth, water, fire, air and sky.

2. செவி நஞ்சு, ear weax or cerumen, உரவண்டு - flery beetle, சவ்வாது - zibet, புனுகு civet, கருவண்டு, canthalides, இவ்வைந்தும் பஞ்சபூத கருவாக கருதப்படுகின்றன, these five are considered to be panch boothakaru.

பஞ்சபூஷண தைலம், அதிமதுரம், இலவங்கப்பட்டை, நன்னாரி, கருஞ்சீரகம், முத்தக் காசு, ஆகிய இவ்வைந்தும் சேர்த்து தயாரித்த ஓர் தலை முழுக்கு தைலம், a bathing medicated oil prepared with the following drugs; liquorice root or root of honey creeper, cinnamon bark, sarsaparilla, black cumin seeds and coray root (cyperus pertenuis root of)

பஞ்சபூதக்குகை, கடல் நுரை, கற்சுண்ணம், சாரம், கல்லுப்பு, சீனம், ஆகிய ஐந்து சரக்கினால் செய்த மூசை, இது வாதமுறைக்குபயோகப்படும், a crucible made out of the following five drugs viz- cutile fish (sea froth) lime stone, salammoniac, sea salt and alum. This is used for Alchemic purposes.

NOTE:- According to konganar work on Alchemy nitre and camphor are used instead of lime stone and salammoniac.

பஞ்சபூதக்கூறு, உடம்பினுள் அமைந்துள்ள பஞ்ச பூதத்தின் ஒவ்வொரு பகுதியிலும் பொருந்திய ஐந்து வகைப் பொருள் வகுப்புகள், ஆகவே இவ்வகுப்புகள் முழுவதற்கும் 5x5 அல்லது 25 பிரிவுகள் ஆகும். 25 constitutional parts of the human body which are proportioned as five substances to each of the five elements composing the body viz:-

1. பிருதிவு வகுப்பு — 5. மயிர், எலும்பு, தோல், சதை, நரம்பு, earth —hair, bone, skin, flesh, and nerve.

2. அப்பு வகுப்பு — 5. நீர், இரத்தம், மச்சை, வெண்ணீர், கொழுப்பு, water — lymph, blood, marrow, semon and fat.

3. தேயு வகுப்பு — 5. ஆகாரம், துஞ்சல், பயம், சோம்பல், போகம், fire — food, sleep, fear, laziness and sexuality.

4. வாயு வகுப்பு — 5. உடலோடு கிடத்தல், இருக்கை, நடத்தல்; இருத்தல், நிற்றல், air — lying, simply remaining, walking, sitting and standing.

5. ஆகாய வகுப்பு — 5. காமம், குரோதம், கோபம், மதம், மாச்சரியம், sky — evil passions lust' anger, desire. infatuation and envy.

பஞ்சபூதசெந்தூரம், வாதவித்தைக் கடுத்த ஓர் வகை செந்தூரம், இது தங்கம், வங்கம், செம்பு, இரும்பு, நாகம், வாதம் போம், an alchemical preparation of red oxide from gold, lead, copper, iron and zinc which are added in due proportion and calcined.

பஞ்சபூத செயநீர், ஐந்து வகை நீர், அதாவது பஞ்சபூத சரக்குகளைக் கொண்டு தயாரிக்கும் செய நீர், an alchemical pungent fluid prepared from five elementary drugs.

பஞ்சபூததாதுப் பொருள்கள், சட்டைமுனிநிகண்டில் சொல்லிய ஐந்து பூதங்களையும் குறிக்கும் தாது சரக்குகள், five minerals referring the five elements. They are yellow orpiment, corrosive sublimate, yellow arsenic and vermilion.

பஞ்சபூத நாடி, வாத நாடி, பித்த நாடி, சிலேட்டும நாடி, குரு நாடி, பூத நாடி, vatha pulse; Pitha pulse, Kapha pulse, Guru pulse, and Bhutha pulse.

பஞ்சபூத நாடி, see பஞ்சநாடி.

பஞ்சபூதநிறம், பஞ்சபூதங்களின் வர்ணம், colour of the five elements.

1. பிருதிவி	— மண்	பொன்னிறம்
earth	—	golden colour.
2. அப்பு	— நீர்	பளிங்குநிறம்
water	—	crystal colour.
3. தேயு	— நெருப்பு	செம்பு நிறம்
fire	—	copper colour.
4. வாயு	— காற்று	கருப்பு நிறம்
air	—	black colour
5. ஆகாயம்	—	புகை நிறம்
sky	—	smoke colour.

பஞ்ச பூதபதங்கம், அண்டவாதம் போம்.

பஞ்சபூத பாஷாணம், பஞ்சபூத பிரிவின்படி ஐந்து வகைப் பாஷாணங்கள், the five poisons divided according to the five elements.

பிருதிவி earth	-கெந்தி -sulphur	- தாளகம் -yellow orpiment.
அப்பு water	-வீரம் -corrosive sublimate	-வீரம் -corrosive sublimate
தேயு fire	-கௌரி -Yellow arsenic	-இலிங்கம் - cinnabar
வாயு air	-துரிசு -copper sulphate	-வெள்ளை -white arsenic
ஆகாயம் sky	-இலிங்கம் -vermilion	-கெந்தகம் -sulphur.

பஞ்சபூதப்பிரிவு, பஞ்சபூதங்களாகப் பிரிக்கப்பட்ட வகைகள், class of substances divided according to the five elements:

1. இலவணம், salts.
2. உலோகம், metals.
3. பாஷாணம், poisons.
4. உபரசம், natural substances.
5. தழை, herbs.

பஞ்சபூதமூலம், see பஞ்சதன்மாத்திரை.

பஞ்சபூத மூலி, ஐம்பூதங்களையும் குறிக்கும் மருந்து மூலிகைகள், வெள்ளெருக்கு, மாவிலிங்கம், கொடி வேலி, புனல் முருங்கை, பீர்க்கு, the five kinds of medicinal plants referring to the five elements viz. white madar, lingam tree, ceylon lead wort, wild morunga and luffa (ribbed gourd).

NOTE:- பீர்க்குக்குப் பதிலாக வாலுளுவையைச் சேர்க்கலாம். instead of luffa seeds of Spindle tree can be taken.

பஞ்ச பூதம், ஐந்து பூதங்கள், அதாவது மண், நீர், நெருப்பு, காற்று, விண், the five elements viz- earth, water, fire, air and sky.

பஞ்சபூத வமிசம், உடம்பினுறுப்புகளில் தங்கியுள்ள பஞ்சபூத விவரங்கள், the five elements found in the organs of the human system viz- 1. மூக்கில் பிருதிவி - earth in nostrils; 2. நாக்கில் நீர், water in the tongue; 3. கண்ணில் அக்கினி, fire in the eyes; 4. உடம்பில் வாயு wind in the akin; 5. காதில் ஆகாயம், sky in the ears.

பஞ்சபூதவுபரசம், பஞ்சபதப் பிரிவின்படி ஐந்துவகையாகப் பிரிக்கப்பட்டுள்ள உபரசச் சரக்குகள், the natural substances divided according to the principles of five elements.

1 பிருதிவி - earth: சிலாசத்து - bitumen; அப்பிரகம் - mica; கந்தகம் - magnet; பூநாகம் - earth worm; இராசவர்த்தக்கல் - lapis lazuli.

2. அப்பு - water, சங்கு - conch; கோழி முட்டை fowl's egg; நாகரவண்டு - cintharides; கிளிஞ்சில் - bivalve shell; நண்டு - crab, sea crab

3. தேயு -fire; எலும்பு - bone; இந்திர கோபம் lady's fly: மயிலிறகு - peacocks feather; நிமிளை - bismuth; வெண்கலம் - bronze or bell metal.

4. வாயு -air; சுகஸ்திரபேதி - universal solvant; கல்நார் - asbestos; கல்மதம் - bitumen; அன்னபேதி - green vitriol ; உரோமம் - hair.

5. ஆகாயம் -sky: துத்தம் -white vitriol; மலைகுது -fluid exudation from rock; சுக்கான் - lime stone; வைக்கிராந்தம் - a kind of arsenic; இரத்தபாஷாணம் red poison.

பஞ்சபூதவுப்பு, பஞ்சபூத வகைப்படி ஐந்து விதவுப்புகள், the five kinds of salts according to the five elements:

1. கம்பியுப்பு, nitre.
2. பாறையுப்பு, rock salt.
3. கல்லுப்பு, sea salt.
4. இந்துப்பு, sindh salt.
5. வளையலுப்பு, glass gall — Fel vitrl.

வேறு - another version: கம்பியுப்பு, nitre; கல்லுப்பு, sea salt; வளையலுப்பு, glass gall; சீனாகாரம், alum; பூநீர், efflorescence.

பங்சபூதவெழுத்து, பஞ்சபூத வகுப்பின்படி பிரித்த மந்திர எழுத்துக்கள்:

1. பிருதிவி, அ — A ந — Na ஐயும், Iyn.
2. அப்பு, இ — I ம — Ma கிலியும், Kiliyu.
3. தேயு, உ — U சி — Si சவ்வும், Cavvu.
4. வாயு, எ — E வ — Va றீயும், Ree.
5. ஆகாயம், ஒ — O ய — Ya ஸ்ரீயும், Sree.

பஞ்சபூதியம், பஞ்சபேதமூலி, see பஞ்சபேத மூலி.

பஞ்சபேதி, ஐந்து வகை பேதி, அன்னபேதி, மாங்கிஷ பேதி, சுகஸ்திர பேதி, சொர்ண பேதி அல்லது பரிச பேதி, தூம பேதி, the five kinds of solvents viz - green vitriol, fiesh solvent, universal solvent, aqua regia and fume solvent.

பஞ்சபேதமூலிகஷாயம், பஞ்சமகா பாவங்கள், கொலை, களவு, காமம், கள்ளுண்டல், பொய், the five capital vices viz - murder, theft, lust, intoxicating drink and he.

NOTE:- Instead of lust, some add குரு நிந்தை, to speak ill of the guru; teacher.

பஞ்சமயகோசம், see பஞ்சகோசம்.

பஞ்சமலம், ஆணவமலம், கன்மம், மாயை, மாயேயம், திரோதானம், அதாவது காமம், குரோதம், லோபம், மதம், மாச்சரியம், the five kinds of evil passions of the soul viz, lust, anger, desire, infatuation envy.

பஞ்சமாசியம், குயில், Indian cuckoo— noted for its melodious voice.

பங்சமாவாரை, see ஆவாரை பஞ்சாங்கம்.

பஞ்சமித்திரம், நல்லெண்ணெய், தேங்காய்ப் பால், இலுப்பைப் பூச்சாறு, பசு நெய், தேன் ஆகிய இவ்வைந்தும் கலந்த கூட்டு, a mixture of five liquid substances viz, gingelly oil, cocoanut milk, juice of mowah flower, cow's ghee and honey; 2. உலோகங்களை உருக்கும் போது அதைப் பேதிக்கச் செய்யும்படி சேர்க்கும் ஐந்துவித மித்துருச் சரக்குகள், அவை: குன்றி, நெய், வெல்லம், காரம், தேன், (in Alchemy) the five friendly drugs capable of effecting a change in metals viz — jeweller's bead, ghee, jaggery, alkaline substatance like Borax, honey, 3. உயர்ந்த செம்பு கிடைக்கவேண்டி இச்சரக்குகளை இட்டு உருக்க உபயோகப்படும், to obtain superior or high class copper these are used when melting it.

பஞ்சமிலேவவாதம், சிற்றாமணக்கு, castorplant (minor) - Ricinus communis (fructibus minoribus).

பஞ்சமுகக்குரு, பஞ்சமுகச்செடி, எலியாமணக்கு, adul oil plant — jatropha glandulifera.

பஞ்சமுகச் செந்தூரம், தாரம், இலிங்கம், இரசம், கெந்தி, வீரம், ஆகிய இவ்வைந்து சரக்குகளைக் கொண்டு தயாரிக்கும் ஓர் வகைச் செந்தூரம், a red oxide prepared by process of calcination from a mixture of orpiment, vermilion, mercury, sulphur and corossive sublimate.

பஞ்சமுகச் செப்புச்சலாகை, ஐந்து முகம் வாய்ந்தசெம்பினாற் செய்த ஓர் கருவி, இது சத்திரக்கருவி 26 -ல் ஒன்று, five faced copper probe, this is one of the 26 surgical instruments.

பஞ்சமுகருத்திரன், எலியாமணக்கு, See பஞ்சமுகச்செடி.

பஞ்சமுகருத்திரி, காட்டாமணக்கு, wild castor plant — Jatropha curcas, Croton Polyandrum.

பஞ்சமுர்தம், See பஞ்சாமுர்தம்.

பஞ்சமுஷ்டிக்கஞ்சி, துவரை, கடலை, உளுந்து, சிறுபயறு, பச்சரிசி இவ்வைந்தும் வகைக்கு ஒருபிடி யெடுத்து, தனித்தனியே மெல்லிய சீலைகளில் முடிந்து ஒரு பாத்திரத்திற் போட்டு அதில் ஆற்றுசலம் ஊற்றி எட்டிலொரு பங்காய்க் காய்ச்சும் கஞ்சி. இது நோயாளிக்குக் கொடுப்பது, இதனால் பித்தம், இளைப்பு, கபம், வாய்வு தீரும், a kind of conjee — porridge prepared with the following five substances viz- red gram, black gram, green gram and raw rice. It is useful for emaciated patients. It cures biliousness, phlegm and wind humours. Tie each substance in a muslin cloth and put them in a vessel containing river water which is boiled down to one eighth.

பஞ்சமுட்டி தாரகம், பத்தியத்திற்கு உதவும்படி ஐந்து வகை தானியங்களைக் கொண்டு தயாரித்த கஞ்சி, see பஞ்சமுஷ்டிக்கஞ்சி.

பஞ்சமுத்திரை, சைவ தவத்தோருக்குரிய அடையாளங்கள் அல்லது சின்னங்கள், 1. உருத்திராட்சம், 2. கமண்டலம், 3. காவி வேட்டி, 4. சடைமுடி, 5. யோகதண்டு, the five distinguishing marks of the Siva mendicants viz — holy beads, (Eleocarpus), dried shell of bottle gouard reddish brown cloth, tursted tuft of hairs of the head and yoga rod or stick. 2. யோக சாதனைக்காக ஏற்பட்ட ஐந்துவித ஆசனங்கள், the five different postures of a practising yogi.

பஞ்சமூர்த்தி, பிரமா, விஷ்ணு, ருத்திரன், மகேசுவரன், சதாசிவன், see பஞ்சகர்த்தாக்கள்.

பஞ்சமூர்த்திரசம், அஸ்திசுரத்துக்குக் கொடுக்கப்படும் ஓர் ஆயுள்வேத மருந்து, an Ayurvedic medicine given for rickets.

பஞ்சமூர்த்திதானம், உடம்பினுள் மூலாதாரத்தில் கணபதி, இதற்கு மேலுள்ள சுவாதி, மனிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை ஆகிய ஐந்து ஆதாரதானங்களில் முறையே பிரம்மா, விஷ்ணு ருத்திரன், மகேசுவரன், சதாசிவன் ஆகிய ஐவரும் பஞ்சபூத

ஈஸ்வரர்களாய் விளங்கி நான்கு வகை தோற்ற வடிவங்களுக்கு ஆதாரமாக இருந்து வருகிறார்கள். Ganapathi is the God that is supposed to occupy or govern the Moolaatharam. Brhama, Vishnu, Rudran, Mahaeswaran and Sadasivan are the five Gods representing the five elements earth, water, fire, air and sky respectively who govern the five atharams situated above the moolaatharam namely:- Swathi, Manipurakam, Anagatham Vizhuthi and Aginai.

பஞ்சமூலம், ஐந்துவகை மூலிகை வேர்கள், *1.* சுக்கு, *2.* செவ்வியம், *3.* சிற்றரத்தை, *4.* பேரரத்தை, *5.* கண்டு பாரங்கி, roots of the following five plants, dried ginger, black pepper plant, small galangal, large galangal andknot plant; *2.* சிறுபஞ்சமூலம், which see; *3.* பெரும் பஞ்சமூலம், which see; *5.* தசமூலத்திலிருந்து பிரித்தெடுத்த ஐந்து வகை மூலிகைகள்.

NOTE:- There seems to be some confusion in the recital of five roots as different authors chose differen roots to constitute the five roots. Moreover the druggists or bazaar men are also seen to substitute other drugs in the place of regular ones and sell them clandestinely. But the following seem to be the proper roots:- *1.* குமிழ், Gmelina arborea; *2.* பூதபுட்பம், Oroxylum indicum; *3.* முன்னை, Premina integrifolia; *4.* பாதிரி, Stereospermum suaveolens; *5.* வில்வம், Aegle marmelos (2.) the five kinds of medicinal drugs taken out from the Dasamoolam is known as சிறுபஞ்சமூலம், minor panchamoolam while the other five is known as பெருபஞ்சமூலம், major panchamoolam.

The minor panchamoolam are the following: *1.* கண்டங்கத்திரி, Solanum jacquini; *2.* சிறுவழுதுணை, Solanum idicum; *3.* சிறுமல்லி, Jasminum angustifolium; *4.* பேராமல்லி, Jasminum undulatum; *5.* சிறுநெருஞ்சி, Tribulus terrestris, The major are *1.* பெருங்குமிழ், Gmelina arborea; *2.* தழுதாழை, Clerodendron phlomoides; *3.* வாகை, Albizzia lebbek; *4.* பாதிரி, Stereospermum suaveolens; *5.* வில்வம், Aegle marmelos.

பஞ்சமூலவேர், ஐந்துவித மூலிகை வேர்கள்.

1. குமிழ், Cashmere tree — Gmelina arborea.
2. பூத புஷ்பம், Indian trumpet flower — Oroxylum indicum.
3. முன்னை, Indian headache tree — Premna integrifolia.
4. பாதிரி, Trumpet flower – Stereospermum chelonoides.

5. வில்வம், bael tree — Aegle marmelos.

பஞ்சமூலிகற்பம், கற்பத்திற்குதவும் ஐந்துவித மூலிகைகள், ஏலம், பத்திரி, தக்கோலம், சாதிக்காய், கோலவித்து, (திருமூ - 600) the five drugs useful in rejuvenation viz- cardamom, mace, cubeb pepper, nutmeg and root of long pepper.

பஞ்சமூலிகை, See பஞ்சமூலிகற்பம்.

பஞ்சமூலிக் கஷாயம், ஐந்துவகை மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கும் கஷாயம். அதாவது வெள்ளை எருக்கு, மாவிலிங்கம், சித்திரமூலம், வாலுளுவை, புனல் முருங்கை, decoction prepared with five drugs of பஞ்சப்பூதமூலி, which see.

பஞ்சமூலித்தைலம், பொடுதலை, தக்காளி, முசுமுசுக்கை, மயிற்பீலி ஆகியவிவ்வைந்து மூலிகைகளையும் சேர்த்து இறக்கிய மூழ்கும் தைலம், (தன்வந்தர் தைலம் *500*), a medicated bathing oil prepared from the five drugs viz- wild long pepper tomato (country) bristly rough bryony, peacock tail. Ref. Dhanvanthri Thailam 500; *2.* பொன்னாவரை, தசபலம், முதியார் கூந்தல், நெய்ச்சிட்டி, வல்லாரை ஆகவிவ்வைந்தும் சேர்த்து வடித்த தைலம், a herbacious oil prepared from the following five herbs viz- tanner's casia, thasapalam, virginian silria, ash coloured fleabane and Indian pennywort.

பஞ்சம் ஐந்து, five; *2.* துளசி, holy basil — Ocimum sanctum.

பஞ்சம்பசி, சாப்பாடில்லாமல் வருந்தும் பசி, scarcity and hunger.

பஞ்சயாகம், ஐந்து வகையாகம், கன்மயாகம், செபயாகம், ஞானயாகம், தபோயாகம், தியானயாகம், the five kinds of religious sacrificial offerings or oblations relating to actions, chanting of mantrams, wisdom, penance and contemplation.

பஞ்சரசச்சரக்குகள், ஐந்துவகை ரசம் சேர்ந்த சரக்குகள், இரசசெந்தூரம், வீரம், இலிங்கம், இரசகர்ப்பூரம், இரசகெந்தி, five mercurial compounds viz subchloride of mercury, corrosive sublimate, virmilion. red oxide of mercury and mercury sulphur mixture.

பஞ்சரச்செடி, புளியாரை, sour sorrel — Oxalis corniculata.

பஞ்சரத்தினம், ஐந்துவகை ரத்தினங்கள், முத்து, மரகதம், மாணிக்கம், வைரம், கோமேதகம், the five kinds of gems viz- pearl, emerald, ruby, diamond and cinnamon stone or sardonyx; *2.* திருவள்ளுவர்

செய்த ஓர் நூல், a treatise compiled by thiruvalluvar.

பஞ்சரம், கழுகு, eagle; 2. உடல், body; 3. செருந்தி மரம், golden champak; 4. பருத்தி, cotton; 5. இடம், place; 6. கூடு, cage.

பஞ்சரி, அவரை, bean, country bean — Dolichos albus; 2. ஒரு வீசையளவு — one viss weight.

பஞ்சரூபம், கஞ்சாகுடுக்கை, ganiah smoking pipe; 2. பஞ்சமூர்த்திகளின் வடிவம், the shape of the five Gods.

பஞ்சரோகணி, முகபாகங்களில் (வாய்) வரும் ஐந்துவித ரோகங்கள், five important diseases affecting face.

பஞ்சலவணம், நோய்களைப் பகுத்தறிவதற்காக வேண்டி ஏற்பட்ட ஐந்து கிரமங்கள் — the systems or principles adopted for diagnosing diseases.

பஞ்சலவணம், ஐந்துவகை உப்புகள் — இந்துப்பு, கல்லுப்பு, கறியுப்பு, வளையலுப்பு, வெடியுப்பு, Sindh salt, rock salt, common salt, glass gall and nitre. See பஞ்சபூதவுப்பு.

பஞ்சலவணசுண்ணம், பஞ்சலவணங்களைக் கொண்டு செய்யும் சுண்ணம், calcium prepared out of the five salts.

பஞ்சலவணபற்பம், ஐந்து வகை உப்புகளைக் கொண்டு செய்யும் உப்பு பற்பம், இது அசீரணத்திற்குக் கொடுக்கப்படும். the calcified powder prepared out of the five salts. It is given for indigestion.

பஞ்சலிங்கக்கல், படிகம் கணநாதம், சாலிக்கிராமம், அம்பிகை, பானம் என ஐந்து வகை கல்லுகள், இவைகளினால் லிங்கம் செய்யப்படும். the five kinds of stones from which phallus is generally made viz- 1. Padigam — Crystal quartz found in Vallum. (Tanjore;) 2. a species of ammonite of a red colour found in sonapatri river a tributory of Ganges; 3. a fossil with impressions of ammonites found in Gandaka river (Himalayas) 4. a kind of natural stone found in Swarnamuki river near Kalastri, (Chittoor Dist.) 5. a kind of stone found in Narbada river.

NOTE:- These are the five kinds of stone representing the five elements. Hence the name பஞ்சலிங்கக்கல்.

பஞ்சலிங்கம், ஐந்துவித லிங்கங்கள் இவை சிவனைக் குறிக்கும், அவையாவன: பிருதிவி லிங்கம், அப்பு லிங்கம், தேயு லிங்கம், பஞ்சபூதங்களையும் கொண்டவை, இந்த லிங்கங்கள் ஐந்து இடங்களில் தாபிக்கப்பட்டிருக்கின்றன. the five kinds of lingam (phallus) referring to emblem of Siva and they are: Prithivi lingam; 2. Appu lingam; 3. Theyu lingam; 4. Vayu lingam; 5. Aakasa lingam. representing the five elements the following are the five places in South India where they established.

1. காஞ்சிபுரம் — Conjeevaram where there is the Prithivi lingam made of earth.

2. சம்புகேசுவரம் — Jambukeswaram (Thiruvanaikaval) near Trichy where Appulingam is established. Water exudes perpetually under it.

3. திருவண்ணாமலை — Thiruvanamalai where the Tejolingam sparkles with light.

4. காளத்தி — Kallahti where Vayu lingam is established A lamp near the lingam constantly flickers showing that the wind or air is blowing. The other lamps there do not flicker.

5. சிதம்பரம் - Chidambaram where Akasa lingam or etheral lingam is kept in the temple (சிதம்பர ரகசியம்).

பஞ்சலோகச்சாயம், திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சுக்கு, கண்டுபாறங்கி, long pepper, root of long pepper, pepper creeper, dried ginger, and knot plant root.

பஞ்சலோகசிந்தூரம், ஐந்து வகை உலோகங்களைக் கொண்டு தயாரித்த சிவப்புப் பொடி. பஞ்சலோகங்களாவன, பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, காந்தம், red oxide by calcinning the five metals viz- Gold silver, copper, iron and magnet.

Note:- instead of magnet lead is used by some.

பஞ்சலோக செந்தூரம், see பஞ்சலோக சிந்தூரம்.

பஞ்சலோகப்புரவி, ஐந்தவித உலோகங்களைக் கொண்டு சீன தேசத்தாரால் உண்டாக்கிய சூட்சமான ஓர் ஆகாய விமானம், a kind of aeroplane in the shape of horse constructed by the ancient Chinese out of five metals. see பஞ்சலோகம், for purposes of travelling in the aerial regions.

பஞ்சலோகம், ஐந்து வகை உலோகங்கள், பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, காந்தம், five metals corresponding to the five elements viz- gold, silver, copper, magnet and iron.

NOTE:- in some books instead of silver and magnet, துத்தநாகம் zinc and காரீயம் lead are substituted.

பஞ்சவமுது, see பஞ்சாமிர்தம்.

பஞ்சவர்ண அந்திமல்லி, ஐந்து வர்ணங்களையுடைய அந்திமல்லி, four o'clock plant with five coloured petals.

பஞ்சவர்க்கம், ஐந்து வகை துவர்ப்பு, சுவையுள்ள மரங்களின் பட்டை, அதாவது; ஆல், அரசு, அத்தி, நாவல், இத்தி, five astringent barks from banian tree, peepal tree; fig tree, jamoon tree and rhomboid leaved fig tree.

பஞ்சவர்ணக்கிளி, ஐந்து வர்ணக்கிளி, five coloured parrot — Psittacus genus.

பஞ்சவர்ணப் பூ, பச்சை, மஞ்சள், சிவப்பு கருப்பு, வெள்ளை ஆகிய ஐந்து நிறமுடைய பூ, flowers with five colours; பஞ்சவர்ணம் which see.

பஞ்சவர்ணம், கருப்பு, சிவப்பு, பச்சை, வெள்ளை, மஞ்சள், ஆகிய ஐந்து நிறங்கள், the five colours viz- black, red, green white and yellow.

பஞ்சவர்ணம் ஏற்றல், கட்டிய உப்பை நான்கு பட்டையாக உருக்கி வார்த்து 4 பக்கத்திலும் முறையே 4 சரக்குகளாகிய, தாளகம், கெந்தகம், வீரம் அல்லது பூரம், இலிங்கம் இவைகளைப் பூசுதல், consolidated common salt is melted and made into four sided block and each side yellow orpiment, sulphur, corrosive sublimate or subchloride of mercury and cinnabar is imparted respectively.

பஞ்சவர்ணவுப்பு, கட்டியவுப்புக்கு ஐந்து வர்ணம் ஏற்றி மணியாகச் செய்து தாழ்வடமாய்க் கோர்த்து செபத்திற் குபயோகிக்கும் உப்பு. இதனால் தேவி பிரசன்னமாகும். consolidated salt tow hich five colours are imparted and beads made. These beads if used in worship Goddess is said to appear before the practising devotee.

பஞ்சவலக்கம், ஐந்துவித மரப்பட்டை, அத்தி, ஆல், அரசு, வேல், பூவரசு அல்லது நாவல் இதனால் காசம், மூச்சு, கண்ணோய் தீரும். the barks of five trees viz. fig. banyan, peepal, acacia, portia; some book mention jamoon instead of portia See பஞ்ச வர்க்கம் they form a remedy in asthma, bronchitis and opthalmia.

பஞ்சவன்னக்கிளி, ஐந்து வர்ணமுள்ள ஓர் வகைக்கிளி, a kind of parrot with five varied colurs — Love bird — Loriculus vernalis, see பஞ்சவர்ணக்கிளி.

பஞ்சவன்னம், ஐந்துவர்ணம், five colours, see பஞ்சவர்ணம்.

பஞ்சவாசம், ஐந்துவகை வாசனைச் சாமான்கள், அதாவது இலவங்கம், ஏலம், பச்சைக் கற்பூரம், சாதிக்காய், தக்கோலம், five kinds of auromatic drugs — cloves, cardamom, crude camphore, nutmeg and cubebs; 2. சாதிக்காய், சாதிபத்திரி, வால்மிளகு, ஏலம், இலவங்கப்பட்டை, nutmeg, mace, cubeb, cardamom, cinnamon bark.

பஞ்சவாயு, ஆயுள் வேதத்திற் சொல்லியுள்ள ஐந்துவித வாயுக்கள், see பஞ்சபிராணன்.

NOTE:- The Tamil writers recognise five more vital airs and call all of them as தச வாயுக்கள், which see.

பஞ்சவாயுத் தன்மை, பஞ்சவாயுகளின் தொழில், the functions of the five vital airs in the human body, they are: 1. Pranan remains in the head, the chest and the throat and causes the understanding, operates on the heart, emotion on the senses and is responsible for several functions of the mind, to act. It also helps sneezing, eractations, belching and degultition. 2. Udana which resides in the chest moves about the regions of the nose, the navel and the neck. It helps the operation of the organs of speech and the memory. It helps to move things upwards; 3. Vyana resides in the heart, circulates the blood to all parts of the body and helps locomotion such as standing, sitting, lying, winking of the eyes etc. It is spread althrough the body; 4. Samana abides in the stomach kindles the digestive fire, wanders through all over the stomach, the bladder, the spleen, the liver, the lungs, the anus; 5. Apana stays in the lower intestines and acts in the hips, in the pubic region, genitals and thigles and expels the semen, the menses, stools, urine and the foetus.

பஞ்சவில்வம், வில்வம், நொச்சி, மாவிலங்கை, முட்கிளுவை, விளா ஆகிய ஐந்துவித மரங்கள், the five kinds of trees viz. bael, notchy, lingam tree, thorny balsam and wood apple; 2. சில நூல்களின்படி வில்வம், ஆத்தி, மா, முட்கிளுவை, முல்லை, according to some literature bael, common mountain ebony, lingam tree, thorny balsam and wood apple.

பஞ்சவுப்பு, ஐந்துவகையுப்பு, see பஞ்சபூதவுப்பு, பஞ்சலவணம்.

பஞ்ச வேம்பு, ஐந்துவித வேம்பு, நல்வேம்பு, மலைவேம்பு, நிலவேம்பு, கறிவேம்பு, சிவனார் வேம்பு, the five kinds of neem — margosa, common bead tree, ground neem, curry leaf tree, Shiva's neem. See பஞ்சநிம்பம்.

பஞ்ச வெண்ணெய், ஐந்துவகை எண்ணெய், the five kinds of oils see ஐங்கூட்டெண்ணெய். They are oils of Indian beech, castor, gingelly, margosa and poon.

பஞ்சவறிவு, பகுத்தறிவு, மெய்யறிவு, பேரறிவு, ஆத்ம அறிவு, தத்துவ அறிவு, reasoning power, senses of the body, wisdom, knowledge of soul and philosophy.

பஞ்சனகம், கோணவாய், a disease (paralysis) in which the mouth is drawn to one side.

பஞ்சனம், பார்ப்பை அதாவது வன்னிமரம், vanny tree, edible prosopis — Prosopis spicigera. 2. அழித்தல், destroying; destruction.

பஞ்சணாவமிர்தம், புனல் முருங்கை, three leaved indigo — Indigofera trita alias I. arenata.

பஞ்சாகசூரணித்தல், மெதுவாகும்படி பொடி செய்தல், pulverising so as to become soft.

பஞ்சாகிகசுரம், ஐந்தாநாள், மாறல் சுரம், fever coming once in five days.

பஞ்சாக்கரம், See பஞ்சாட்சரம்.

பஞ்சாக்கினி, ஐந்துவித நெருப்பு, உதராக்கினி, மூலாக்கினி, சடராக்கினி, காமாக்கினி, கோபாக்கினி, five kinds of fire in the human system viz- gastric fire: 2. thermogenic heat; 3. animal heat; 4. sexual heat; 5. fiery anger; 2. சீரகம், cuminseed.

பஞ்சாக்கினிக்கொடி, பசிதீபனத்தை யுண்டாக்கும் ஐந்துவித கொடிகள், வேலிப்பிரண்டை, காட்டுக்கருணை, மருள், புளிநறளை, நறளைக்கிழங்கு five kinds of creepers capable of improving digestive faculties 1. adament creeper, 2. wild elephantyam, 3. bowstring hemp, 4. for grape, 5. iguana's foot.

2. காமம், sexual pasion: 3. கோபம், anger; 4. தீபனம், hunger.

பஞ்சாக்கினி செந்தூரம், சுத்தி செய்த அரப்பொடி, கந்தகம், காந்தம், நவச்சாரம் இவைகளுடன் சங்கு சுண்ணமும், சேர்த்து அரைத்து சூரிய புடத்தில் வைத்தல், ஓர் ஆயுள் வேத மருந்து, இதனால் அசீரணபேதி வாயு, மகோதரம், குன்மம், கிராணி, காமாலை, சோகை முதலிய நோய் குணப்படும். an Ayurvedic preparation containing iron, sulphur, magnet, salammoniac, chank. It cures indigestion, diarrhoea, anaemia, jaundice etc.

பஞ்சாங்க குத்தம், பஞ்சாங்க கூர்மை, ஆமை, tortoise, turtle.

பஞ்சாங்கப்புடம், ஐந்து வகை அங்கமும் பொருந்திய புடம், calcination satisfying the five conditions required.

பஞ்சாங்கமாகப்பரவி, ஐந்து உறுப்பும் நிலத்தில் பொருந்த வணங்கி.

பஞ்சாங்கம், மரத்தின் ஐந்து அங்கம், அதாவது வேர், பட்டை, இலை, பூ, காய், the five component parts of a plant viz. root, bark or stem, leaf, flower and fruit; 2. see ஆவாரைப் பஞ்சாங்கம், 3. (பங்ச + அங்கம்) ஐந்து பாகம், five parts; 4. ஆமை, tortoise; 5. ஆமணக்கு, castor plant; 6. குதிரை, horse.

பஞ்சாங்கி, விரண வைத்தியத்தில் ஓர் விதக்கட்டு, a kind of bandage in surgery.

பஞ்சாங்குலம், 2 ஆமணக்கு, castor plant Ricinus communis.

பஞ்சாங்குலம், ஆமணக்கு, castor plant.

பஞ்சாசயம், உடம்பினிலுள்ள ஐந்து தொகுதிகள், அதாவது ஆமாசயம், இரத்தாசயம், பர்ப்பாசயம், சலாசயம், மலாசயம், என்பன, the five systems or seats or receptacles in the human system viz - the seat of digestion (uodenum) the seat of circulation (heart)the uterus, the bladder and the rectum.

பஞ்சாசியம், சிங்கம், lion.

பஞ்சாடி, மயிர்க்கொன்றை, falsepeacock flower — Caesal pinia pulcherrina; 2. பெருமயிர்க்கொன்றை, ever green royal peacock flower tree — Poinciana regia.

பஞ்சாடித்திருக்கை, ஓர் வகை திருக்கைமீன், a kind of sea fish known as thorn back.

பஞ்சாடுதங்கை, இலந்தை jujube — zizyphusjujuba.

பஞ்சாடுதல், கண் பஞ்சடைதல், ஓர் மரணக்குறி. eyes growing dim - a death symptom.

பஞ்சாட்சரம், சிவ சொரூபமாகிய நமசிவாய என்னும் ஐந்தெழுத்து (in Mantric Science) the five sacred letters or formula — Na, Ma, Ci, Va, Ya - representing Shiva. இதில் பலவிதமுண்டு. there are some varieties; they are 1. சிவபஞ்சாட்சரம் - Shiva panchaatcharam; 2. ஆயி பஞ்சாட்சரம் Ahpanchaatcharam; 3. அமுத பஞ்சாட்சரம், Amutha panchaatcharam; 4. சமுத்திர பஞ்சாட்சரம், Samudara pancha atcharam; 5. தற்புருட பஞ்சாட்சரம், Tharpuruda panchaatcharam; 6. அகோர பஞ்சாட்சரம், Agora panchaatcharam, 7. வாமபஞ்சாச்சரம், Vama panchaatcharam; 8. சத்தியோசாதம், Satiyosatham; 9. ஈசான்யம், Esanyam.

பஞ்சாட்சரவருணி, நெல்லிக்காய், Indian gooseberry — Phyllanthus emblica.

பஞ்சாணிகம், கோரைக்கிழங்கு, corray root — Cyperus pertinuis or cyperus rotundus.

பஞ்சாணியம், மரமஞ்சள், tree turmeric — Coscinum fenestratum.

பஞ்சாதி செந்தூரம், அகஸ்தியர் கரிசல் 300-ல் சொல்லியுள்ள ஐந்து வகை செந்தூரங்கள், the five kinds of red oxides obtained by process of calcination as laid down in Theraiyar kgrisal 300; 1. பூரண சந்திரோதயம்; 2. வால சந்திரோதயம்; 3. நாக சந்திரோதயம்; 4. சத்தி சந்திரோதயம்; 5. தங்க சந்திரோதயம். They are; 1. Poorna chandrodayam; 2. Vala chandrodayam; 3. Naga chandrodayam; 4. Sathichandrodayam; 5. thanga chandrodayam.

பஞ்சாநநம், சிங்கம், lion from its broad face.

பஞ்சாப் கோதுமை, பாஞ்சால தேசத்தில் விளையும் கோதுமை, wheat grown in punjab.

பஞ்சாமியம், இலந்தை, see பஞ்சாடு தங்கை.

பஞ்சாமிர்தம், ஐந்து வகை அமிர்தக் கூட்டு, அதாவது சர்க்கரை, தயிர், தேன், நெய், பால், இவைகளுடன் வாழைப்பழமும் திராட்சைப் பழமும் சேர்த்துக் கூட்டியது. a mixture of plantain fruit and dried grapes with five kinds of substances — Sugar, curd, honey, ghee and milk offered to God — Muruga in worship.

பஞ்சாமிலம், புளி, மாதுளை, இலந்தை புளியாரை, நெல்லி, எலுமிச்சை இவைகள் ஐந்தும் சேர்ந்தது, the five sour substances — the sour pomegranate, jujube, sour sorrel, gooseberry and lime.

பஞ்சாமுதம், பஞ்சாமிர்தம், which see.

பஞ்சாயக்கோன், திரள் கோரை, a kind of sedge grass of the — Cyperus genus.

பஞ்சாயம், முத்தக்காசு, see பஞ்சாணிகம்.

பஞ்சாய், கோரை, sedge grass — Cyperus genus.

பஞ்சாய்ப்பறத்தல், முழுதும் அறவே நீங்குதல், getting rid entirely as diseases from the body.

பஞ்சாலை, பூவரசு, portia tree — Thespesia populnea.

பஞ்சாவஸ்தை, ஐந்து உயிர்நிலை உபாதிகள், அதாவது சாக்கிரம், சொற்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம், the five weal positions of the soul in the body viz- waking state, dream, deep sleep or trance, entire quiescence and complete cessation from corporeal entanglements.

பஞ்சாவத்தம், பிணம், corpse.

பஞ்சானன், வெளுச்சிப் பிசின், gum of wood apple tree.

பஞ்சான்யம், பஞ்சாணியம், which see.

பஞ்சான், பச்சைக்குழந்தை, new born baby.

பஞ்சான்மா, ஐந்துவகை ஆன்ம நிலை, அந்த ரான்மா, சீவான்மா, தத்துவான்மா, பூ தான்மா, மந்திரான்மா, the five states or stations of the soul in the human bodyinner soul, life soul, spiritual soul, individual soul and mystic soul.

பஞ்சி, see பஞ்சு; 2. இலவு silk cotton; 3. பஞ்ச பூதம், which see.

பஞ்சிகம், தாளி, a running creeper of Convolvulus genus.

பஞ்சிடுதல், பஞ்சுவைத்தல், covering with cotton; 2. பஞ்சடைத்தல், plugging with cotton.

பஞ்சிட்டம், கொள், horse gram.

பஞ்சிதம், சாணம், cow dung.

பஞ்சித்தணக்கு, மலைப்பருத்தி, hill cotton — Cochlos - permum gossypium.

பஞ்சிலூட்டல், மருந்துகளை பஞ்சில் நனைத்தல், soaking cotton in medicine; 2. மரணவாயிலிருப்போருக்கு, கஞ்சி அல்லது பாலைப் பஞ்சில் துவைத்து உட்புகட்டல், feeding person in death bed by soaking cotton in milk or conjee and letting in by drops.

பஞ்சில் சாரித்தல், பஞ்சில் புரட்டல், steeping in cotton.

பஞ்சினொய்தாதல், அஷ்டசித்தியி லொன்று, அதாவது இலகிமா one of the eight supernatural powers ie becoming as soft and light as cotton or extremely light as dust. It also includes the art of loating or walking on the surface of water or in the atmosphere.

பஞ்சீகரணம், உடம்பிலுள்ள பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றும் தன்னையும் மற்றைய நான்கையும் தனித்தனியாய்ப் பற்றும் போது தத்துவமுறைப்படி புதியதாக ஏற்படும் அனேகவித செயல்கள், மனோதத்துவங்கள் உடம்பின் சக்திகள் இப்படி பிண்டத்தில் தோன்றும் மாறுபாடுகளே அண்டத்திற்கும் பொருத்தமானது, இப்பஞ்சபூத செயல்களின் தத்துவத்தை சுருக்கமாக அடியிற்கண்ட பஞ்சீகரண சக்கரத்தில் காட்டியுள்ளது விவரத்திற்கு யோக நூல்களைப் பார்க்கவும், the operation of the elements in the human body by the varied union of which separately with each of the five elements by way of permutations and combinations according to Tatwa systam; different operations or acts of mutual faculties or corporcal powers are considered to be effected. In cosmogony the same reduction into union and order of chaos or the discordant principle

of matter or other, results by the harmonious blending together of the five elementary substances. The said operations of the five elements with the five elementary substances can be briefly understood in the diagram shown below of course with the aid of a detailed study of yoga philosophy dealing on the subject.

பஞ்சீகரணம், பஞ்சபூதங்கள் தமக்குள் பல விகிதங்களில் சேர்ந்து ஒன்றுபடுதல், literally means mixture or combination of the five elements in different proportions.

பஞ்சு, See பருத்திப்பஞ்சு, cotton plant — Gossypium herbaceum; *2.* பஞ்சி, cotton in common; *3.* இலவம்பஞ்சு, silk cotton — Bombax malabaricum; *4.* பலவகைப் பஞ்சுகளுக்குப் பொதுப்பெயர், a common term for different varieties of cotton; *5.* செடியின் இறுதிப்பெயர், plants second term.

இது அடியிற்கண்டபடி பலவகைப்படும், it consists of different varieties as mentioned below:-

1. நாட்டுப் பஞ்சு, country cotton Gossypium indicum.
2. சீமைப்பஞ்சு, இதுவே சீமைப்பருத்தி, which see.
3. கோங்கிலவம்பஞ்சு, golden silk cottion — Cochlospermum gossypium.
4. முள்ளிலவம்பஞ்சு, thorny silk cotton tree — Bombax malabaricum.
5. செம்பஞ்சு, red cotton — Gossypium barbadeuse.
6. இலவம்பஞ்சு, cotton silk tree Bombax pentandrum.
7. பூளைப்பஞ்சு, true silk cotton—Eriodendron anfractusum.
8. காட்டுப்பஞ்சு, or காட்டிலவம்பஞ்சு, large flowered and capsuled silk cotton — Bombax insigne.
9. பாறையிலவம்பஞ்சு, the same as No.8.
10. மலைப்பஞ்சு, see மலைப்பருத்தி.

பஞ்சு, பஞ்சு செடிப்பொது, இதில் அனேக விதமிருந்தாலும் செடியின் மருந்துக் குணங்களில் வித்தியாசம் மிக்க இராது. ஆனால் வைத்தியத்தில் பருத்திப் பஞ்சு, இலவம் பஞ்சு ஆக இரண்டும் தான் எடுக்கப்பட்டது. ஆகவே வைத்தியத்தில் இவ்விரண்டுவித செடியின் பொதுக் குணத்தையும் உபயோகத்தையுமே கூறுவர். தீக்சுட்ட புண்ணுக்கு இதை உபயோகிக்க, காற்று புகாமற் காக்கும், இதே மாதிரி அழற்சி கண்ட அக்கினி விசர்ப்பி, முதலிய விரணங்களுக்கும் காயப்புண்களுக்கும் இதை மேல் வைத்துக் கட்ட உபயோகப்படும்.

இதை சீக்கிரம் எரியக்கூடிய திராவகங்களிலிட்டு ஊறப்போட்டு தயாரித்த துப்பாக்கிப்பஞ்சு என்று ஒன்று தயாரிப்பதுண்டு, இது விரணம், கிரந்திப்புண்கள், சருமநோய், உதட்டு வெடிப்பு, முலைக்காம்பு வெடிப்பு, தீப்புண், அக்கி முதலியவைகளுக்கு மேல் வைத்துக் கட்ட மெத்த உபயோகிப்பதுண்டு. இச்செடியின் வேர் தாதுக்களின் எரிச்சலைத் தணிக்கும் நாட்டு வைத்தியர்கள் இதன் கஷாயத்தை நீர்ச்சுருக்கு, கல்லடைப்பு, சீதபேதிகளுக்குக் கொடுப்பார்கள். இக்காயின் விதையினின்று எடுக்கும் எண்ணெய்க்கும் எரிச்சலை யடக்கும் குணமுண்டு. இதன் பிசின் மூத்திரத்தைப் போக்கும். இதன் இலையும், கொழுந்தும், குழந்தைகளுக்குக் காணும் சீதபேதி, வயிற்றுவலி, பிரலாபசன்னி முதலிய நோய்களுக்குபயோகப்படும், விதை பால் சுரப்பதற்காகவும், பாம்பு கடிக்கும் உபயோகப்படுத்தப்படும். இதன் பிண்ணாக்கு மாடுகளுக்கு உணவாகும். cotton — Gossypium genus. It is a common term referring to several varieties of plants and trees. In medicine the properties of these plants do not very much. The only two varieties spoken of in medicine are herbaceous cotton and silk cotton which are useful in external application especially in burns where it proves serviceable by excluding the air and maintaining an equable temperature. It is also applied, on this principle to erysopelatous and inflammed surfaces. The wool is mixed with inflamable acids in the preparation of gun cotton or pyroxylin which in turn is the source of collodion. This collodion is intensively used in burns, wounds, diseases of the skin, cracked lips and nipples etc., as external application. Decoction of cotton root is however demulcent. Native practitioners prescribe this for children in cases of dysentery, colic, hysteria. Seeds increases the secretion of milk and is also used as an antitode in snake poison. Cotton seeds cake is a valuable food for cattle. In some places the seeds is employed for intermittent fevers. The seeds in the form of emulsion are given in dysentery. They are laxative demulcent, expectorent and aphrodisiac. As a nervine tonic, they are given internally in headache and brain affections. The seeds when pounded and mixed with ginger and water are applied to orchitis. In the form of a poultice, they make a good application to burns and scalds. The oil expressed from the seeds known as cotton seed oil is largely consumed in England and America. It makes a good liniment in rheumatic affections, it is useful in clearing the skin of spots and freckles. The juice of the leaves is a good remedy in

dysentery. A tea or infusion of tender leaves is useful in vapour bath for the anus in cases of tenesmus. Root is an emmanagogue. Leaves externally applied hastens the maturation of boils and oil is applied to gouty joints. A decoction of the bark may be useful in cases of dysmenorrhoea and suppression of menses (amenorrhoea). Decoction of the root may be given in large doses especially during the initial stages of labour. A syrup of the flowers in found to be of great use in hypochondriasis on account of its stimulating and exhilarating effect. The young tender fruit is given in acute dysentery.

பஞ்சுக்கொட்டை, see பருத்திக் கொட்டை.

பஞ்சுசெடி, பஞ்சு உற்பத்தியாகும் செடி, common cotton plant — Ereodendron an fractuosam.

பஞ்சுத்துணி, புண்ணுக்கிடும் பஞ்சுசீலை, linen scraped into a soft substance and used for dressing and cleaning wounds and sores.

பஞ்சுநாபிஞ்சம், பச்சைநாபி, fresh aconite.

பஞ்சுநாளகம், see அடப்பங்கொடி

பஞ்சுநீர்ப்படலம், கண்கள் முழுவதும் வெள்ளை படர்ந்து, பார்வை புகைந்து, வலி, நீர்வடிதல், பீளைகட்டல் ஆகிய விக்குணங்களையும், சிலசமயங்களில் கடைக்கண் உறுத்தலோடு வலியும் காணும் ஓர்வகைக் கண்ணோய், a disease of the black of the eye in which white films are formed over the pupil. It is marked by dullness of vision, pain, watery and mucopurulent discharge, irritation of the corners or angles of the eye and pain: 2. கருவிழியில் நீர்க்கோர்த்து காணல், milky white opacity of the Cornea — Leukoma.

பஞ்சு நீலப்பாணி, துருசு, blue vitriol — Copper sulphate.

பஞ்சு போலோடுதல், see பஞ்சுபோல் பறத்தல்.

பஞ்சுபோல் தட்டல், பஞ்சு போலிடித்தல், மெதுவாகும்படி இடித்தல், நையும்படி இடித்தல், pounding into a soft pulp.

பஞ்சு போல் பறத்தல், முழுவதும் அறவே நீங்குதல், getting rid off entirely — disappear leaving no residue.

பஞ்சுபோல் வெளுத்தல், பஞ்சுபோல் வெண்மையாதல், to become as white as cotton.

பஞ்சுமயிர், மெதுவான பறவையின் இறகு, soft feather of birds constituting a bed.

பஞ்சுமூலி, பருத்திசெடி, cotton plant.

பஞ்சுருட்டான், பச்சை நிறமான ஓர் சிறிய பறவை, இதன் கூட்டில் அகப்படும் ஓர் பூண்டின் வேர், இது வாத முறையில் மிக்க உபயோகமானது. இதன் கூட்டைக் கொளுத்த வேர் வேகாது, a small green coloured bird. In its nest will be found a root which would remain unburnt when the whole nest is set on fire.

பஞ்சுருட்டான்வேர், See பஞ்சுருட்டான்.

பஞ்சுவாய்க் கொள்ளுதல், முலைக்கொள்ளுதல், nursing at the breast, being nursed by the mother's milk.

பஞ்செனத் தட்டல், பஞ்சுபோ லிடித்தல், which see.

பஞ்சேந்திரியத் தத்துவம், ஐம்பொறிகளின் வகையும் காரணமும் தெரிந்தவர்களுக்கு உலகே கட்டுமென்பதுதான், இதன் உண்மையைக் குறளில் காட்டப்பட்டுள்ளது. "சுவையொளி யூறோசை நாற்றமென்றைந்தின், வகையறிவான் கட்டேயுலகு." இதையொட்டியே பவணந்திமுனிவரும் தாம் இயற்றிய நன்னூலில் உலகிலுள்ள உயிர்ப் பிராணிகளை யெல்லாம் பஞ்ச அறிவின் வகுப்பின்படி பிரித்துக் கூறியுள்ளார், அவையாவன: the five senses (In Sankhya Philosophy) the five senses are, at one stage of creation, the cause of all that exists, Therefore, he who possesses the knowledge of all that relates to the five senses is supposed to know all that is in the world (In Tamil Phillosophy). This principle is enunciated in Kural as follows "the world is within him who knows the properties of taste, sight, touch, hearing and smell". Bavanandhi inhis Nannool classifies all living things organised life into five classes according to the efficiency of the endowment of one or more of the five senses. It is as follows:-

1. ஓரறிவு உயிர் — பரிசம் ஒன்றே அதாவது தாவர வர்க்கம், one sense being - having body or sense of touch or feeling as the vegetable kingdom.

2. ஈரறிவுயிர் — இரண்டறிவுள்ளது. அது பரிசம், உருசி, that which has body and tongue two sense - touch and taste.

3. மூவறிவுயிர் — மூன்று அறிவுள்ளவை, பரிசம், உருசி, வாசனை, that which possesses body tongue and nosetouch, taste and smell the three senses.

4. நான்கறிவுயிர் — நான்கு அறிவுள்ளவை, அதாவது, உடம்பு — நாக்கு, மூக்கு, கண், பரிசம், உருசி, வாசனை, பார்வை, (உ-ம்) வண்டு , that which is having body, tongue,

nose and eyes, the four senses - touch, taste, smell and sight.

5. ஐந்தறிவுயிர் - ஐந்து அறிவுள்ளவை, அதாவது; மெய், வாய், கண், மூக்கு, செவி, that which possesses body, tongue, nose, eyes and ears and has all the five senses - touch, taste, smell, sight and hearing as celestials, men, infernal beasts birds etc.

பஞ்சேந்திரியம், ஐம்பொறி, அதாவது மெய், வாய், கண், மூக்கு, செவி, the five sense organs viz- body (skin) mouth (tongue) the eyes, the nose and ears.

பஞ்சை மயிர், பூனைமயிர், thin soft hair like that of a cat.

பஞ்சை, பலவீனன், man of weak constitution, a weak man; 2. எளிமை, poverty.

பஞ்சைகுடல், உணவு செரியாது பலவீனப்பட்ட குடல், feeble intestines incapable of digestion and absorbtion.

பஞ்சைப்பட்ட, பலவீனப்பட்ட, weak.

பஞ்சைப்போலாதல், இலேசாதல், தூசியாதல், இதனால் தண்ணீர் அல்லது ஆகாயத்தில் மிதக்கலாம், see பஞ்சினோய்தாதல்.

பஞ்சை மொழிபகரல், பணமில்லை யென ஏழ்மை கொண்டாடல், pleading poverty.

பஞ்சையன், பலவீனன், see பஞ்சை.

பஞ்சையீரல், பலவீனப்பட்ட ஈரல், weak or sluggish liver.

பஞ்சையுடம்பு, பலவீனப்பட்டவுடல், weak constitution.

பஞ்சோட்டி, ஓர் பூடு, a herb — Dichopsis elliptica.

படகம், கவரிமான், ஓர் வகை மான், a kind of deer the yak was grunnicus - the Tibetian yak; 2. விஷ்ணுகரந்தை, Vishnu's basil — Sphaernthus indicus; 3. பற்பாடகம், fever plant, sparrowleg — Mollugo cerviana.

படகிராசன், கட்டியலுப்பைக் கொண்டு செய்யும், உப்புமணி, salt beads prepared from consolidated salt; 2. கட்டிய உப்பு, consolidated salt.

படங்கம், புராமுட்டி, (பிராய்முட்டி) serrate irregular rhomboid leaved Parroqueet Burr — Triumfetta rhomboidea.

படங்கன், ஓர் வகை கடல் மீன், a kind of sea fish; 2. ஓர் வகைப் புறா, a kind of pigeon; 3. சப்பாங்கு sappan wood — Caesalpinia sappan.

படங்கு, பெருங்கொடி, any plant having thick creeper as pumpkin; 2. சலாகை; probe; 3. பதங்கித்தல், process of sublimation as இரசபதங்கம், sublimed mercury.

படபட, ஓர் இரட்டித்த ஒலி, a reduplicated sound; 2. நாடியின் துடிப்பு, the rapid beating of the pulse.

படபடத்த நாடி, ஒரு நிமிடத்துக்கு 75 தடவைக்கு மேற்கொண்டு அடிக்கும் நாடி நடை, the rapid pulsation exceeding seventy five beats per minute.

படபடத்தல், துடிதுடித்தல், ; 2. விரைதல், hastening 3. நடுங்குதல், trembling; 4. மனம்கலங்குதல், throbbing of mind; 5. படபடப்பு, which see; 6. உதடு துடித்தல், wavering of the lips.

படபடப்பு, நெஞ்சு துடித்தல், palpitation of the heart; 2. மனக்கலக்கம், agitation of mind; 3. நாடித்துடிப்பு, high rate of pulse — rapid pulse.

படபடெனல், நாடிநடையின் வேகம், the rapidity of the pulse.

படபடெனல், நாடிநடையின் வேகம், the rapidity of the pulse.

படப்பிரண்டை, நாகப்பிரண்டை, a kind of adamant creeper — Vitex negundo.

படப்புக்கால், தொட்டிக்கால், bandy legged.

படப்பூவை, பரம்பை, Indian mesquit - Prosopis spicigera.

படப்பொறி, துத்தி, country mallow — abution asiaticum; Indian marsh mallow — Sida mauritiana.

படமகி, வெட்பாலை, dysentery rose bay — Holarrhena antidysenterica.

படமக்கி, படமடக்கி, படமடக்கு, தாழை, Indian screw pine — Pantanus Odaratissimus, 2. சிறியாணங்கை, small mangai polygale genus.

படம், நாகப்படம், hood of cobra; 2. உடல், body; 3. பாதத்தின் முற்பகுது, the for part of the foot; 4. காத்தட்டி, thorny caper — Capparis horrida.

படரப்பன், படராப்பாண், ஓர் வாந்திமூலி, a kind of emeticnut — Randia gardneri.

படராமூக்கி, வெண்ணாயுருவி, white flowered Indian burr — Achyranthes aspera (alba)

படரி, See படர்கொடி; 2. இலந்தை, jujuba.

படருபறச்சி, நிலவாகை, East Indian senna — Cassia angustifolia alias Cassia senna.

படருப்பு, பூமியில் படரும் உப்பு, ioncrustation of salt; 2. உழமண்

தரையில் படரும் உப்பு, mealy powder or minute crystals of salt found on the surface of earth; 3. முடியண்ட படருப்பு, a whitish crust or light crystallization found deposited on the human skull — Efflorescence.

படருருக்கி, செந்நாயுருவி, red Indian burr — Achyranthes aspera (ruburn)

படரை, ஆவிரை, Tanner's senna — Cassia auriculata; 2. ஆரைக்கீரை, four leaved vegetable green — Marsilea quadrifolia.

படர், துன்பம், pain; 2. நோய், disease; 3. படருதல், the act of spreading, 4. பூண்டின் முதற் பெயர், plants first term as படர் கொடி, spreading creeper; 5. நினைவு, thought; 6. நினைவாலுண்டான நோய். an ailment characterised by exaggerated anxiety, frequent thought mainly as to what concerns the health etc — Hypochondria.

படர்காய், பீர்க்கு, luffa creeper — Luffa acutangula; 2. கொடியின் காய், fruit of any creeper as அவரை been; 3. பூசினி, pumpkin etc.

படர்காளி, தக்காளி, Indian tomato — Physalis.

படர் கொடி, விரிவாக படரும் கொடி, wide spreading creeper; a creeping plant; 2. பீர்க்கு, luffa.

படர்க் கொடிக் கூந்தல், பிரிதோன்றில் பின்னிக் கொள்ளக்கூடிய கொடிக் கொழுந்து, a slender twining growth by which a plant attaches itself to some support — Tendril as வெற்றிலைகொடி betel vine, பிரண்டை, adamant creeper.

படர்க்காரை, காரைச் செடி, thorny webera — Canthium parviflorium.

படர் சுணங்கு, உடம்பில் பல விடங்களில் படரும் தேமல், Yellow patches spreading on the skin especially in females on the breast which is considered as adding to beauty.

படர் செண்பகம், கொடிச் செண்பகம், Champak creeper — Michelia genus.

படர் தடிப்பு, வண்டுகடி, bettle bite; 2. சில விஷக்கடியினால் உடம்பில் பலவிடங்களில் சதை தடித்துக் காணல், thick spots or raised patches spreading on the skin due to poisonous bites of insects.

படர்தல், அகலமாய்ப் பரவல், wide spreading; ஓடுதல், running as running creeper; 3. விசாலமாதல், widening; 4. பெருகுதல், increasing; 5. நடத்தல், walking; 6. நினைவிற்படல், striking in mind; 7. கிளைத் தோடுதல், running in branches; 8. நினைத்தல், thinking; 9. செல்லுதல், passing.

படர் தவசி, சன்னிநாயகம், any plant capable of or having the virtue of curing apoplexy of any kind, probably referring here to some spreading creeper.

படர் தாமரை, தோலைப் பற்றிய ஓர்வகைக் குட்டம், a kind of skin disease that spreads like ring worm. see புண்டரீக குட்டம்; 2. உடம்பில் பலவிடங்களில் பரவும் ஓர் வகைக் கரப்பன் நோய் a skin disease characterised by eruption of inflamed vesicles or scales spreading on the body as an orbicular lotus leaf — Ringworm; 3. வண்டுகடி, raised patches on the skin gradually spreading due to poisonous insect bites — Tetter; 4. எச்சில் தழும்பு, see எச்சிற்றழும்பு.

படர் தாமரைத் தைலம், தேங்காயோடு இடித்துப் பொடியாக்கி அத்துடன் வெண்ணாபிசாரம், கொட்டைப் பாக்கு, எட்டிவிதை, காடிக்காரம் $^1/_4$ பலம், நாய்வெண்மலம், இவைகளை வகைக்கு பலமிட்டு குழித்தைலமிறக்கும் தைலம், இதனால் படர்தாமரை, வண்டுகடி, கரப்பான் முதலிய சருமநோய்கள் குணமாகும், an oil extracted from the mixture of coconut, aconite, unbroken areca nut, sal ammonac, seeds of nuxvomica, silver nitrate, white part of dog's dung. It is applied for ringworm, eczema etc.

படர் தேமல், சருமநோயைப் போலல்லாமல் உடம்பில் தடிப்பில்லாத மஞ்சள் தழும்புகளை யெழுப்பும் தோல் மாற்றம், இது உடம்பில் பலவிடங்களிற் படர்ந்து மேனிக்கு அழகைக் கொடுக்கும், a mild affection or change in the colour of the skin marked by yellow patches not elevated above the surface of the skin. It is considered as adding beauty to the skin.

படர்த்தி, படரும்படி செய்வது, that which induces or causes spreading on the surface; 2. கடைக்கண்ணிற் காணும் சதைவளர்ச்சி, filmy growth on the corners of the eyes — Pterygium; 3. கண்ணின் வெள்விழியிற் காணும் சதை வளர்ச்சி, fleshy growth on the white of the eye.

படர் நெல்லி, கொடி நெல்லி, goose berry creeper of the Phyllanthus genus.

படர் நோய், நினைவினாலுண்டாகும் நோய், see. படர், hypochondria; 2. குட்டம், skin disease rapidly spreading: 3. தொத்து நோய், infectious disease such as cholera, small pox etc., spreading to the surrounding places; 4. பரவு, spreading disease.

படர் புண், உடம்பில் பரவிக் கொண்டே வரும் புண், spreading sore on the surface of the body as herpes.

படர் மல்லிகை, கொடிமல்லிகை, creeper jasmine — Jasminum grandiflora; 2. பெரும்பீர்க்கு, common luffa — Luffa acutangala.

படர் முன்னை, கொடிமுன்னை, pointed leaved hogwood — Boerhavia rependa, See கொடிமின்னை

படர் மூலி, மூலிகைக் கொடிகள், medicinal creepers as distinguished from herbaceous plants and trees; 2. தரையில் படர்ந்த படி முளைக்கும் பசுமூலிகை, a low spreading plant as செருப்படி, which see.

படர் மேகருட்டம், மேகநோய்களினால் உடம்பு முழுவதும் கிரந்திப்புண்ணெழும்பி, குட்டத்தைப் போல் துன்புறுத்தும் நோய், a kind of skin disease with characteristic symptoms of leprosy affecting or spreading over the whole body. It is due to venereal or syphitic causes.

படலகாசம், கண்ணின் கருவிழியையும், பாவையையும் தாக்கும் ஓர் கண்ணோய், இதனால் பார்வையில்லாமல் குருட்டுத்தனம் ஏற்படும். opacity of the cornea and crystalline lens affecting the sight — Leukoma and Cataract.

படலத்தி, see படாத்தி.

படலம், வெள்ளை விழியில், பாலாடை போல் சவ்வு படர்ந்திருக்கும் ஓர் வகைக் கண்ணோய், இது கண்ணின் விழியின் மேலுள்ள 4 அடுக்கு தோல்களையும் பற்றும், அதாவது முதல் அடுக்கு முன்பக்கமாயுள்ளது. இரண்டாவது விழித்தோல்; மூன்றாவது வெள்விழி, கருவிழித்தோல்; 4. பாவைத் தோல்; இது அடியிற் கண்டபடி பலவகைப்படும். milky white opacity of the cornea due to filmy growth on the sclerotic coat of the eye. It may also affect any of the four coats, layers or films of the eye first coat is anterior coat; the second is choroid; the third is sclerotic and cornea and the forth is retina (Dristi). It consists of different kinds as follows:-

1 கண்ணூறுபடலம், opacity of cornea and the lens — Cataract.

2. கருப்புப்படலம், inflammation of the cornea — Keratitis.

3. வெள்ளைப் படலம், inflammation of the white of the eye.

4. உதிரப்படலம், reddish growth.

படலம், பாவை முழுதும் தாக்கப்பட்ட கண்ணை இருளடையச் செய்து பார்வையை இழக்கச் செய்யும் ஓர் கண்ணோய், அப்படி மிக்க ஆழ்ந்த தன்மை ஏற்படாவிட்டால் சந்திரன் நட்சத்திரங்கள், மின்னல் முதலியன கண்ணுக்குத் தோன்றும்; வாயு மிகுந்தால் நோயாளிக்குப் பார்வை யெல்லாம் சிவப்பாய்த் தோன்றும்; பித்தம் கோளாறடைந்தால் சூரியன், வானவில், மின்னல் இவைகளைப் பார்க்கக்கூடும், மற்றவைகளெல்லாம் இருண்ட நிறமாகவும். பலவர்ணமாகவும் மயில் இறகைப் போன்ற நிறங்களுமாகத் தோற்றப்படும்; சிலேட்டுமக் கதிப்பினால் ஒவ்வொரு வஸ்துவும் வெள்ளையாகவும், எண்ணெய் பூசியது போலும் காணப்படும், திரிதோஷம் ஏற்பட்டால் ஒவ்வொரு வஸ்துவும் பல நிறமான, புள்ளிகள் வாய்ந்தது போல் காணப்படும், ஆனால் இரத்தம் கோளாறடையும் பட்சத்தில் எல்லாவ வஸ்துவும் சிவப்பாகவும், 1. சதைப்படலம், 2. இரத்தப்படலம், 3. நீர்ப்படலம், 4. வரிப்படலம், 5. கருநாகப்படலம், 6. மாமிசப்படலம், 7. பசுவிழிப்படலம், 8. பஞ்சுநீர்ப் படலம், 9. செவ்வேர்ப்படலம், 10. வெண்மாசுப் படலம், 11. சுடர்ப்படலம், 12. பக்கப்படலம், 13. செவ்வரிப் படலம், 14. வெள்ளைப் படலம். See கண்ணோய் வகை, an eye disease — Cataract. In this case whole crystalline lens is affected and it not very deep the person can see the moon, stars and lightning when air humour is increased the patient sees every object red and when bile humour increases he can see the sun, the rainbow and lightning and in other cases everything appears black, variegated and like the feather of peacock and when affected by phlegm humour every object appears as if covered with oil and white. When all the three humours are affected every thing appears spotted as of a mixture of different colours, when blood is deranged every object appears red and dark.

The fourteen kinds are as mentioned above.

படலம், அடுக்கு, layer, cuticle of the eye; 2. போர்வை, coat; 3. அதிகரிப்பு, increase; 4. நேத்திரப்படலம், cataract of the eye; 5. மூடி, cover; 6. இரத்தினக்குற்றம் a flaw in gems; 7. மாசு, 1 ; 8. சவ்வு, membrane; 9. ஆணவமலம், one of the evil passions or inherent principles of the soul, lasting until its final liberation ie pride or arrogance.

படலி, துளசி, holy basil — Ocimum sanctum.

படலிகை, பெரும்பீர்க்கு, luffa —Luffa acutangula; 2. வட்டவடிவு, circular space; 3. இளைப்பு, emaciation; 4. see படலம், 5. ஓர் கொடி, a creeper.

படலெலைவஞ்சி, கீழ்க்காய் நெல்லி, feather foi! — Phyllanthus polyphyllus.

படலை, 2 கடற்கரைத் தாழை, screw pine on the sea shore; 2. பச்சிலை, green leaves, 3. படை, ring worm.

படல், அத்தமித்தல், , ; 2. உண்டாதல், becoming sick or ill; 3. ஒன்றுடனே தோய் தல் blending mixing as in நிழல்படல், casting shade; கெடுதல், becoming destroyed; 5. சாதல், dying; 6. படுதல், passing of menses or any discharge from the vagina; 7. புலனில் ஏறுதல், perceiving by senses as செவிபடல், கண்ணில்படல், hearing, seeing etc; பூத்தல், flowering, தடைபடல், being obstructed as in respiration; 10. அடைப்பு, obstruction; 11. பிரிக்கும் தட்டி, partition; 12. படற்கள்ளி, spreading spurge; 13. பட்டுபோதல், perishing as trees.

படவாசகம், வாசனைத்தூள், fragrant or scented powder.

படவிகம், நுணாமரம், noona tree — Morinda citrifolia.

படவை, சிறுசெருப்படி, a prostrate herb in rice fields — Glinus dictamnoides.

படறிப்பால், பனங்கள், palmyra toddy.

படற்கள்ளி, see படல்; 2. சப்பாத்துக்கள்ளி, hedge prickly pear — Opuntia dillbenii.

படற்பொரி, துத்தி, Indian marsh mallow — Sida maurithania.

படற்றி, ஓர் வகை வாழை, a kind of plantain tree.

படன், பேய், devil, demon.

படா, பெரிய big.

படாகை, பண்ணைக்கீரை, cocks comb, a vegetable green — Celosia cristala alias C. albida.

படாச்சாரம், சத்திசாரம், a kind of prepared acid salt.

படாதபாடு படுதல், நோயால் மிக்க துன்புறல், abnormal suffering from a disease.

படாதுபடுதல், see பாடுபடுதல்.

படாத்தி, கடைக்கண்ணில் ஏற்படும் சதை வளர்த்தி, இது மூன்று வகைப்படும், நீர்ப்படாத்தி, சதைப்படாத்தி, இரத்தப்படாத்தி filmy growth in the corners of the eye. It consists of three kinds viz- growth with fluid, growth of flesh and growth with blood streaks; 2. வெள்விழியைப் பற்றிய நோய், இது மூன்று விதம், சதைப்படாத்தி வரிப்படாத்தி, சேரிப்படாத்தி, a filmy growth affecting the sclerotic of the eye. It is of three kinds viz - growth with flesh, growth with streaks and growth with blood. see படர்த்தி.

படாமுலை, சாயாமுலை, breast not hanging, pointed breasts of females.

படாம், நாதாக்கள் சட்டை, fibrous coat worm by Siddhars. It is made of fibres from the bark of trees.

படாராமுக்கி, நாயுருவி, Indian burr — Achyranthe aspera; 2. வெண்ணாயுருவி, white species of Indian burr see பிடாரமுக்கி.

படி, குணம், disposition; 2. நூறுபலம் கொண்ட நிறை, weight of 100 palams; 3. நாழி, a measure; 4. earth பூமி, 5. செருப்படி; see படவை; 6. $2^1/_2$ நாழி கொண்டது, a quantity consisting $2^1/_2$ Nalis; 7. ஆயுள்வேதப்படி 16 பலம் கொண்டது. in Ayurveda weight of 16 palams; 8. ஒரு படி, a regulated measure of capacity; 9. மூன்று வித படி, அதாவது தலை இடை, கடை, 3 kinds of weights for details see under respective heads viz தலைப்படி, இடைப்படி, கடைப்படி; 10. உண்ணுமளவு, prescribed quantity for consuming.

படிகக்கல், வெண்கல், quartz.

படிகக்கல்லீயம், படிகக்கவ[...] படிகசிலை, மஞ்சட்கல், a kin[...] yellow stone.

படிகச்சீனி, சீனக்காரம், படிக[...] alum.

படிகச்செம்பு, திருமூலர் திருமந்[...] 1000 ல் சொல்லியுள்ள முறை[...] செய்யப்பட்ட ஓர்வகைச் செம்[...] kind of copper prepared as [...] prescription laid down in Thirum[...] thirumanthiram — 1000; [...] கொங்கணவர் வாத காவியப்[...] பளிங்குக்கல்லை மாவாக இ[...] அரைத்து கும்மட்டியில் வை[...] எடுக்கும் வாதமுறைக்[...] ஓர்வகைச் செம்பு, accordin[...] Konganava's work on Alchemy [...] (stone) is pounded and reduc[...] fine powder and placed in a c[...] and heated sufficiently to de[...] kind of copper which will be [...] in Alchemy.

படி கட்டுக்கல், see படிக்கட்[...]

படிக பாத்திரம், கண்[...] கல்லினால் செய்த பாத்திரம், [...] made of glass.

படிகப்பச்சை, ஓர் வகை இரத்[...] அதாவது சமுத்திர வண்[...] beryl — Aquamarina It is a [...] composed of silicate of alumi[...] glucina occurring in he[...] pyramids. It is a bluish gree[...] brough from Ceylon and Peg[...]

படிகப்பச்சை, படிக ரூபமான பச்சைக்கல், இது இலங்கை பக்கோ இவ்விடங்களிலிருந்து கொண்டு வரப்பட்டது, இதற்கும் மரகதப் பச்சைக்கும், நெருங்கிய சம்பந்தமுண்டு, ஏனெனில் குணத்திலும் கூட்டுப் பாட்டியுலும் ஒரே தன்மையது, ஆகவே இதையும் ஒரு பச்சை யெனவே கொள்ளப்படும், ஆனால் இப்பச்சைக்கல்லில் மரகதம் பச்சையைப் போல் அவ்வளவு கதித்த நிறம் கிடையாது, a mineral compound of silicate of aluminia and glucina and of great hardness occurring in green or bluish green six sided prisms known as Beryl!— Aqua Marina. These stones are brought from Ceylon and and Pegu. They are so analogous in their properties and composition. to emeralds that they have been called varieties, but chrome has not been discovered in the beryl and to this is ascribed the rich green colour of the emerald. see படிகப்பச்சை.

படிகப்பொரி, பொரித்த படிகாரம், heated alum.

படிக மணி, படிகத்தினால் செய்த மணி, crystal glass beads.

படிக மலை, பூமிக்குள்ளே கல் அனேகவிதமாக மாறி கடைசியாக உருப்படும் படிகம், metamorphic rock which has undergone several chemical changes to become a crystal.

படிகம், பளிங்கு, glass crystal; 2.வெள்ளிலோத்திரம், bark of wood apple tree, lodhra; 3. வெள்ளைப் பாஷாணம், white arsenic; 4. வாகை, common sirissa tree — Albizzia lebbec; 5. அமுதநீர், fluid secreted by glands; 6. ஓர் உபரசச் சரக்கு, one of the natural substances contemplated in Siddhar's medical science; 7. கண்ணிலே மிகுத்திருக்கும் பளிங்கு போன்ற நீர், the vitreous humour or body, the semifluid transparent substance which lies between the retina and the lens of the eye.

படிகலிங்கம், வல்லத்தில் கிடைக்கும் கண்ணாடிப்பளிங்கு, crystal glass found in Vallam near Tanjore. South India.

படிக வஸ்து, பளிங்குவஸ்து, crystalline matter.

படிகவமிலம், படிகத்திராவகம், crystalline acid.

படிக வாதம், வஸ்து விளைவுவழி, the doctrine or science of crystallization of rocks, crystals etc — Crystallagraphy.

படிகாகரணம், உப்புகளைச் சுத்தி செய்து தண்ணீரில் கரைத்து வெயிலில் வைத்துக் கட்டியானபின் எடுத்தல், the formation of crystals, if a saturated solution of a salt is allowed to evaporate — Crystallization. This phenomenon becomes a little more complex when the solution contains two or more salts which do not act upon one another.

படிகார பற்பம், 2 படிகாரத்தை புடமிட்ட பற்பம், இது எவ்வித வாந்தியையும் நிறுத்தும், calcined powder of alum. It will stop vomitting of any kind.

படிகாரம், சீனாகாரம், alum.

படிகி, see படுகி.

படிகீகரணம், தண்ணீரைப் படிகமாகச் செய்தல், crystallisation of water.

படிகுந்தம், மனம் நொந்து, கண்கள் உறுத்தி வலித்து, கருவிழி அதிக கருப்பாகி, சந்திரன் கண்ணுக்குத் தோற்றாது, எதைப் பார்த்தாலும் பள்ளமாயிருக்கிறது போல் காணப்படும் ஓர் கண்ணோய், (அ.நய-விதி) an eye disease affecting the cornea of the eye. It is marked by agitation of mind, irritation of the eyes, black of the eye deeper in colour, appearance of objects with depression; 2. கண்சிறுத்து, பார்வை மங்கி, வலியையுண்டாக்கு மோர் கண்ணோய், an eye disease characterised by pain no clear vision and the eye appears small.

படிகை, 2 நந்தியாவட்டம், Indian rosebay — Tabernaemontana coronaria alias Nerium coronarium; 2. சீனாக்காரம், alum.

படிக்கட்டுக்கல், படிக்காக உபயோகப்படுத்தும் கல், step stone; 2. குன்றுகளின் பக்கங்களில் காணப்படும் படியைப் போல் அடுக்கடுக்காயுள்ள பாறைக்கல், tabular green stone and basaltic rocks occuring in hills with step. like terraces on the sides.

படிக்கமிடல், படிகமாகச் செய்தல், crystallising.

படிக்கம், see படிகம், எச்சுமிழுங்கலம், a vessel to receive discharges of spittle — Spittoon.

படிக்கல், படிக்கட்டு, நிறைகல், troy weight.

படிக்காரசத்து, களிமண் சத்து, இது மற்ற இரும்பு, சாரம் முதலிய உலோகங்களோடு சேருவதினால் தனிப்பட்ட உலோகமாக மாறி நிறத்தைப் பெற்று பிரகாசத்தில் வெள்ளியைப் போலவும் ஆனால் வெள்ளியைவிட மிகவும் இழிந்ததுமான உலோகமாகும். Aluminium, the oxide of which is the most abundant of earths being almost every where present in the form of clay. Combined with other metals iron, ammonium etc, it exists

in the form of alumina from which the metal is isolated. It is a white metal with a bluish tinge and a lustre resembling but inferior to that of silver.

படிகார நீர், படிகாரத் தண்ணீர் solution of alum — Alum water; 2. படிக்கார கலப்பு நீர், a compound of alum liquor — Liquor alumnis compositus.

படிக்காரம், சீனக்காரம், இது பெரும்பாலும் சிசிலி, இட்டாலி, ஐஸ்லாந்து முதலிய தேசங்களில் அக்கினி மலைகளின் அடிவாரங்களில் இயற்கையாகவே விளையும் சரக்கு அன்றியும் இந்தியாவில் நேபாளம், சிநது, கச்சு, பாஞ்சாலம் முதலிய பல தேசங்களிலும் பூமியிலிருந்து அகப்படும். இதைப் பாஞ்சாலம், பீயார், சிந்து முதலிய விடங்களில் செய்யவும் செய்வார்கள், இது வெண்மையாயும், கட்டிகளாயும், புளிப்பும், துவர்ப்புமாயும் இருக்கும், இதில் நீர் கோத்திருப்பதால் தீயிலிடப் பொங்கி நீரகலும், இது இந்தியாவில் எல்லா மருந்துக் கடைகளிலும் இடைக்கும், பார்வைக்கு சீனாக் கற்கண்டைப் போலிருக்கும்.

இதை சாதாரணமாக கண்ணோய், இரத்தவொழுக்கு, இரணம் புண், பிரமேகம், பல்நோய் இவைகளுக்கு உபயோகப்படுத்துவதுண்டு, அனேக மருந்துகளிலும் சேர்த்து கொடுக்கலாம், இதன் தூளைத் தண்ணீரில் கரைத்து, கண்களைக் கழுவும் நீராக உபயோகப்படுத்தலாம், முட்டையின் வெண் கருவோடு சேர்த்து, கண்ணோய்களுக்கு வைத்துக் கட்டலாம், இதை அபினியில் கலந்து கொடுக்க நீர்த்துவாரம், நுரையீரல், மூத்திரப்பை இவைகளின் அழற்சியைப் போக்கும். அன்றியும் நீர்ப்புண், இவைகளையும் குணப்படுத்தும்; இதை சாராயத்தோடு கலந்து துணியில் நனைத்து மருத்துச் சீலையாக சுளுக்கு இரத்தக் கட்டி இவைகளுக்குப் போடலாம்; இதைத் தூளாகச் செய்து சீமைச் சுண்ணாம்புடன் சம எடையாகக் கலந்து கொடுக்க, பெண்களுக்கு ஏற்படும் சூதகப் பெருக்கும், மூக்கு, பற்கள் இவ்விடங்களிலிருந்து வரும் இரத்த வொழுக்கும் நீங்கும், மேலும் ஆயுள் வேதப்படி பெண்களின் வெள்ளை யொழுக்கு, நீர்ச் சுருக்கு, வாந்தி, வெண்குட்டம் முதலியவைகளுக்கு இப் படிக்காரம் உபயோகப்படும்.

மேலும் சீதபேதி, குழந்தைகளுக்குக் காணும் வாந்தி, பேதி, வயிற்று நீர்க்கோவை, வங்கச் சேர்க்கையாலும் ஏற்பட்ட வயிற்றுவலி, கக்குவான், மார்ச்சளி முதலிய நோய்களுக்குக் கொடுக்கக் குணமுண்டாகும். பல்லீறுப் புண்களுக்கும் உண்ணாக்கு

வளர்த்திக்கும் இதன் நீரைக் கொப்புளிக்கலாம்; பெண்களுக்கு படும் வெள்ளை, வெட்டை, பெரும்பாடு, கருப்பை நழுகல், அடிதள்ளல், இவைகளுக்கு இதை ஊசியிலேற்றலாம். விரணத்தின் இரத்த வொழுக்கு, அழிபுண், ஊழ்த்தசை, முதலிய விரணப் புண்களுக்கு, சீலை மருந்தாகவும், மேல் தூவும் பொடியாகவும் உபயோகிக்க நன்மை தரும், அபூர்வமாக உள்ளுக்கும் கொடுக்கப்படும், alum — Alumen.It mostly occurs in native state at the volcanoes in Sicily, Italy, Iceland and other places and also in many parts of India as Nepaul, Sindhu, Cutch, Punjab etc. from the soil. It is extensively manufatured in India, chiefly in Punjab, Bihar, Sindh Cutch etc. It is white and available in lumps and it is sour and astringent to taste. It contains water and so boils when heated. It is available in all the druggists bazaars, to all appearance it resembles China sugar candy.

It is generally used with great advantage in opthalmia hemorrhage, ulcers, sores, venereal complaints, tooth complaints, bleeding gums etc. It is also given mixed with other medicines. The powder is dissolved in water and applied to eyes as an eye wash, mixed with albumen of the egg, it is externally applied in diseases of the eye such as catarrhal ophthalmia, opthalmianeonatorum, opthalmia tarsi, ecchy mosis of the eye etc. Mixed with opium it is given in cases of inflammed, uretera, lungs, and bladder, mixed in arrack and steeped in cloth it is used as a lint in cases of sprain, abscess, contusion etc. Its powder mixed with chalk in equal proportion, or dehydrated alum powder three parts mixed with red ochre five parts is prescribed for menorrhagia, epitaxis bleeding gums etc. (The later is given in doses of three grams with can jaggery for menorrhagia). In Ayurved it is considered useful in leucorrhoea stranguary, vomitting, white lepros etc. See படிகார பற்பம்.

Moreover in atonic diarrhoea, infanti cholera catarrhal affections of th stomach, colic pictonum hooping coug bronchorrea, it has been administere internally with benifit. It is used a local application in various form cynanche, relaxation of the ovu scorbutic ulceration of the gums (a gargle) in leucorrhoea, gonorrho menorrhagia prolapses of the uter and the rectum (as an injection); a ulcerations attended with prof discharge, exuberant granulations, f ulcers and gangrene in the form lotion or powder. It is rarely u internally.

NOTE:- It is a double sulphate of aluminium and potassium. It has long been produced artificially from different ores. It is brittle, inodorous, and cystalisis as transparent. It has an acid, sweetish astringent taste. The common imported alum contains potash. Vaidyans employ it as astringent, styptic and anti septic Pharmocopia preparation is dried alum — Alumen exseccatum used for cleaning muddy water.

In most of the bazaars alum is sold in more or less in the impure state, and it may be rendered fit for medicinal purposes by dissolving it in water and evaporting the solution and cooling it afterwards so as to obtain crystals.

It forms the principle constituent conioined with the oxide or iron of slajet *(சிலாசத்து)* or alum earth of Nepaul which forms an important article in the Indian Materia Medica.

படிசம், தொண்டைப் புண்களை *அறுக்குக்கத்தி*, urgical knife used for throat operations.

படிதம், *ஓர் வகைச் சாதி மாணிக்கம்*, a kind of superior ruby.

படிதல், குளித்தல், bathing; *2.* *இறங்கல்* decreasing as fever; *3.* *திருந்தல்*, being set right as fracture; *4.* *அமருதல்*, being deposited as rust in iron, *துருபடிதல்*, *5.* *கலத்தல்*, getting mixed as *மாசுபடிதல்*, being stained; *6.* *தாழ்தல்*, lowering as *கீழ்படிதல்*.

படித்தரம், ஒழுங்கு regular course; *2.* கட்டளை, "*படித்தரமாக வப்பா பாய்ச்சிடு நாழி நீரை.*"

படித்தளம், see *படித்தரம்*.

படித்திரம், சூட்டிறைச்சி, roasted meat.

படிப்படி, *சிறுகச் சிறுக*, little by little, by degrees; *2.* *படிப்படியாய்*, step by step, gradually; *3.* *ஒழுங்குமுறை* in due cours; *4.* *கிரமப்படி*, regularly.

படிப்பிளை, வங்கமணல், lead ore.

படிமம், கண்ணாடி, glass; *2.* வெண்மை, whiteness or white colour; *3.* *திருட்டாந்தம்*, example; *4.* *தவவேடம்*; spirutual disguise.

படியரிசி, உணவுக்குக் கொடுக்கும் *அரிசி*, ration of rice.

படிரம், *சந்தனம்*, sandal, sandal wood — Santanum album; *2.* *சிவப்பு*, redness; *3.* *உதரம்*, abdomen; *4.* *வாதம்*, wind humour.

படிவம், *உடலுறுப்பு*, bodily organ; *2.* *உடலுருவம்*, shape of the body; *3.* *உடல்*, body; *4.* *தோற்றம்*, appearance.

படிவாந்தம், *பறங்கிபாஷாணம்*, a prepared arsenic so called from its being imported formerly from China.

படிறு, *களவுப்புணர்ச்சி*, illegal intercourse; *2.* *பொய்*, false.

படீரகம், see *படீரம்*.

படீரம், கருங்காலி, black wood; *2.* *சந்தனம்*, sandal wood; *3.* *வாதக்கூறான நோய்*, diseases caused by wind humour such as rheumatism; *4.* *உதரம்*, belly; *5.* *சிவப்பு*, red colour.

படீரயம், செந்நாயுருவி, red species of Indian burr — Achyranthes aspera.

படு, குளம், tank; *2.* *உப்பு*, salt; *3.* *குலை*, bunch; *4.* *கொத்து*, cluster; *5.* *வெப்பம்*, heat; *6.* *கள்ளு*, toddy; *7.* *சாதல்*, dying; *8.* *படுத்தல்*, lying; *9.* *மிகுதி*, excess as in *படுகாயம்*; *10.* *பெரிய*, big, large; *11.* *கொடிய*, virulent.

படுகட்டை, *உபயோகமற்ற கிழவன் அல்லது கிழவி*, an old man or woman who is not useful to society.

படுகரணை, *படுகர்*, *மருதநிலம்*, agricultural tract; *2.* *குளம்*, tank; *3.* *வயல்*, rice field; *4.* *இளைப்பாறுதல்*, taking rest.

படுகளி, *பெருஞ்சேறு*, great mire.

படுகாடு, சுடுகாடு, cremation ground.

படுகாயம், உயிருக்கு அபாயமான *காயம்*, serious injury grievous hurt; *2.* *மரணகாயம்*, mortal wound.

படுகாய்ச்சி, கட்டையிற் புகையிலை, a kind of tobacco.

படுகாரம், வெண்காரம், borax — Biborate of soda.

படுகி, *சீனக்காரம்*, alum — Alumen anunonia alum.

படுகிடை, படுத்தபடி கிடத்தல், being bed ridden; *2.* *நோயாற் கிடத்தல்*, prostration through disease; *3.* *பிடிவாதமாய்க் கிடத்தல்*, Prostration through vengeance.

படுகையாமணக்கு, *ஆற்றோரம் அல்லது நீர் நிலையில் முளைக்கும் ஆமணக்கு*, castor plant growing in river side or in places of stagenant water.

படுகொலை, கொடுங்கொலை, deliberate murder; cold murder; cruel murder.

படுக்கெனப் போதல், *திடீரெனச்சாதல்*, sudden or instantaneous death as in *மாரடைப்பு*, heart failure.

படுக்கை, படுத்தல், lying; 2. மக்கட்படுக்கை, man's bed.

படுக்கைசேரல், பெண்ணோடு படுத்தல், sexual intercourse.

படுக்கை பொருந்தாமை, படுக்கையிற் புரளல், restlessness in bed.

படுக்கை பொருந்தாவிருமல், படுக்கமுடியாமல் இருமுதல், இது உள்நாக்கு வளர்ச்சியினாலும் மூக்கடைப்பினாலும் உண்டாகும், cough on lying down seen in elongation of uvula and in obstruction of nasal passages — Balne's cough.

படுக்கைப்புண், பலவீனத்தால் நோயாளிகள் ஒரே பக்கமாய்ப் படுத்துக் கிடப்பதால் ஏற்படும் புண், sore caused by lying down in bed in one position for a long time; 2. ஊழ்த்தசை அல்லது எலும்பு உராய்ந்த புண், an obstinate and sometimes gangrenous sore caused by the pressure of the body of a patient against the bed — Bedsore.

NOTE:- The patient himself is aware of the formation of sore as the pressure that produces the sore deminishes the sensibiity of the parts affected and so examination should be frequently effected. Moisture from from perspintion, urine, faeces are also likely to cause the sores and so great care should be given to these patients.

படுக்கையறை, பள்ளியறை, bed room.

படுக்கையில் தாழ்த்தல், படுக்கையில் அமிழ்ந்துதல் அதாவது நோயாளி படுக்கையினின்று எழும்பமுடியாமல் இருத்திவிடல், causing to patient to be ridden.

படுக்கை விரணம், see படுக்கைப்புண்.

படுக்கை விலக்கல், சையோக புணர்ச்சியினின்று விலகுதல், absolute sexual abstinence; 2. பெண்ணோடு புணராமை, not having copulation, to be free from sexual intercourse.

படுக்கைவேளை, நித்திரைப் பொழுது, bed time; 2. பெண்ணோடு புணரும் காலம், period for sexual intercourse.

படுங்கம், see வாதஞ்சி.

படுசுட்டி, மிகுந்த புத்தி கூர்மையுள்ளவன், man of keen intellect or with acute knowledge.

படுசூரணமாக்கல், மிக்க நேர்மையாக்கல், reducing to fine powder or dust.

படுசூரணம், மருந்துத்தூள், medicinal powder; 2. முழுநாசம், total annihilation.

படுசூல், முதிர்ந்த கருப்பம், mature or full term pregnancy.

படுஞாயிறு, வாயுவானது கபத்தோடு கூடி, கண், புருவம், நெற்றியாகிய இவ்விடங்களில் சஞ்சரிக்கும் பொழுது உற்பத்தியாகி சாயுங்காலத்தில் வலிமிகுந்து நடுராத்திரிக்குப் பின் குணப்படும் ஓர் கபால நோய், சந்திர வர்த்தம், a kind of headache exhibiting its severity in the evening and slowly ceasing after midnight. It continues only as long as the moon is above the horizon. It is ascribed to the combination of wind humour with phlegm humour which prevail on the eyes, eye brows and forehead. It is opposed எழுஞாயிறு (சூரியாவர்த்தம்).

படுதல், பூத்தல், blossoming; 2. காய்த்தல், bearing fruit; 3. உண்டாதல், coming to existence; 4. see படல், 5. சாதல் dying; 6. அகப்படுதல், being entangled or attacked as நோய்வாய்ப்படுதல், being attacked with disease; 7. சகித்தல், bearing; 8. மனதிற்றேற்றுதல், striking in mind; 9. ஒன்றன் மீது ஒன்று உறுதல், rubbing against; 10. துன்பமடைதல், suffering; 11. புண்காய்தல், healing; 12. பெரிதாதல், becoming large.

படு தாமரை, see படர்தாமரை.

படுதுருமம், வெள்வேல், white bapul — Acacia iencophloca.

படு தேவடியாள், பேர்போன வேசி, a reputed prostitute.

படுத்தடி, முரட்டுத் தன்மை, rudeness.

படுத்தல், கொலை செய்தல், killing; 2. படுத்துக்கொள்ளல், lying down; 3. அகப்படுத்தல், causing to be entangled; 4. நிலைபெறச் செய்தல், stabilising; 5. உள்ளாக்கல், making liable, bringing under the power or dominion of: 6. உடம்பிற் பூசுதல், smearing on the body; 7. துன்புறுத்தல், causing to suffer; 8. செய்தல், to make.

படுத்துதல், துன்பம் செய்தல், causing to suffer; 2. உண்டாக்குதல், bringing about, creating.

படுத்துருமம், வெள்வேல் மரம், see படுதுருமம்.

படு நஞ்சு, கொடிய விஷம், virulent poison or deadly poison.

படு நாயகி, பாற்சோற்றி, gutla parcha, rubber plant.

படு நாயிறு, see படுஞாயிறு.

படுநிலம், பாலைநிலம், desert; இடுகாடு grave yard.

படு நெருப்பு, கொடுந்தீ, great fire, conflag ration.

படுபட்சி, வலியிழுந்த பறவை, feeble bird.

படுபருவு, படுபழம், முதிர்ந்தபழம், matured or fully riped fruit.

படுபனை, காய்க்கும் பனை, yielding palmyra female palmyra.

படுபாதி, சரிபாதி, half and half.

படுபாலை, நரிப்பாலை, ape flower — Mimusops roxburgiana.

படுபாவி, வழலையுப்பு, alchemical salt; 2. கொலைக்கஞ்சாத கொடியன், murderer who never hesitates to kill.

படுபிளவை, பக்கப்பிளவை, carbuncle.

படுபொழுது, மாலைநேரம், evening time.

படுமரம், பட்டமரம், withered tree.

படுமலைப்பாலை, ஏழுவகைப் பாலிலொன்று, one of the seven kinds of milk plant — Mimusops genus.

படுவநாயகி, see படுநாயகி.

படுவம், சேற்றுநிலம், marshy land.

படுவனெய், தொண்டைப் புண்ணுக்கிடு மருந்து நெய், a medicated ghee used for throat sore or affections such as cynanche.

படுவன், காற்படுவன், அதாவது காலில் வரும் ஓர்வகைப்புண், an eczema like ulceration below the knees, a kind of phlegmonous celluliris; 2. ஓர்வகை வாந்தி பேதி, a virulent type of cholera, குடற்படுவன்; 3. ஓர்வகைக் கீரை, a kind of vegetable green; 4. வித்திரதிக்கட்டி, an abscess.

படுவன்மேல்விசூழி,

படுவேப்பெண்ணெய், மிக்க கசப்புள்ள வேப்பெண்ணெய், margosa oil of a very bitter type.

படை, நித்திரை, sleep; 2. படரும் சருமநோய், spreading skin disease. இது ஆறு வகைப்படும். This is of six kinds.

1. எச்சிற்படை — echirpadai.

2. தொத்துப்படை — thothupadai

3. பித்தப்படை — pithapadai.

4. மேகப்படை — megapadai

5. எரிச்சற்படை — erichalpadai

6. தேமற்படை — themalpadai

3. செருப்படை, a low spreading

plant — Coldenia procumbens; 4. மெத்தை, mattress; 5. கல் முதலியவற்றின் அடுக்கு, a layer or bed of any substance spread out as sand, stone, limestone etc — Stratum.

படைக்கரசன், See படைமூர்க்கன்.

படைக்கலம், ஆயுதங்கள் பொது, war weapons.

படைக்கிரந்தி, உடம்பில் பலவிடங்களில் படரும் மேகக் கிரந்தி, a spreading syphilitic or venerial ulceration or sore.

படைச்சி, நீர்க்குறிஞ்சா, swallow root — Asclepias asthmatica alias Tylophora asthmatica.

படைதுரத்தும்ராசன், வெடியுப்பு, nitre.

படைத்தல், சோறு, கறி முதலியவற்றை பரிமாறுதல், serving food and curry — catering; 2. உணவை உண்கலத்திலிடல், serving meal in a dish.

படைப்பறியன், பேராமுட்டி, fragrant sticky mallow — Pavonia odorata.

படைப்பு, See படைத்தல்.

படைப்பேயன், துவரை, red gram — Cajanus indicus.

படைமுறிவாள், கொசு, musquito.

படைமூர்க்கன், வானகெந்[...] gunpowder.

படையறுதல், வலிமையிழத்த[...] losing strength.

படையிராசனுப்பு, படைராசனுப்[...] பொட்டிலுப்பு, salt petre.

படையிராசன், வெடியுப்பு, nitre; 2[...] பொட்டிலுப்பு, salt petre — Nitrate of potash.

படையுப்பு, வெடியுப்பு, nitre.

படையோன், வெடியுப்பு, nitre.

படைலோகம், சிப்பி oyster shell; 2. பேய்ப்புடோல், wild snake gourd — Trichosanthes lasciniosa.

படைவகுப்பு, தூசி, dust; 2. நெற்றி, forehead.

படோலகம், பேய்ப்புடோல், see படைலோகம்.

படோலங்கி, படோல், படோல்ராசி, பேய்ப்படோல், see படைலோகம்.

படோலம், முள்ளு வெள்ளரி, foreign cucumber — Cucumis sativus.

படோலி, சொக்காக் கீரை, which see.

படோலிகை, புடல்வெள்ளரி, snake cucumber; 2. நிலவு, moon, see படோலுகை.

படோலுகை, புடல், snake gourd — Trichosanthes dioica alias T. anguina.

பட்கை, பாம்பின் மேல் வாயில் ஓர் பல், one of the fangs on the upper row of cobra.

பட்சகன், பேருண்டியன், glutton, epicure.

பட்சகிதம், see பட்சகாதவாதம்.

பட்சகாதவாதம், ஓர்வித பக்கவாதம், இதனால் ஒருபாதி உடம்பில் இரத்தோட்டம் குறைவுபட்டு அப்பக்கத்து கையும் காலும் உதாவதிருத்தலோடு மெலிந்து போதல், a kind of hemiplegia i-e. paralysis on one side of the body, and the limbs get emaciated, see பக்கவாதம், பச்சவாதம்; 2. இளம்பிள்ளைவாதம், infantile paralysis — Polio myelitis.

பட்சசங்காதம், பூநீறு, an efforescence on the soil of fuller's earth.

பட்சசாரம், பறவை, bird.

பட்சசுரம், பதினைந்து நாளைக்கு ஒரு முறை வரும் காய்ச்சல், a kind of fever occuring once in fifteen day — fortnightly fever.

பட்சணம், இரை, prey, 2. உணவு, food; 3. சிற்றுண்டி, lancheon; 4. தின்பண்டம், eatable.

பட்சணி, உண்போன், one who eats, 2. பெருந்தீனி தின்போன், one who indulges to excess in eating — Epicurean; 3. அகஸ்தியர் செய்த ஓர் தமிழ் வைத்திய நூல்; a Tamil treatise on medicine complied by Sage Agastiya; 4. யோக ஞானத்தைப் பற்றி, பரிபாஷையாக 132 செய்யுட்களால் பாடிய ஓர் நூல், a secret science of yoga practice and philosophy complied in 132 poems or verses.

பட்சணித்தல், உண்ணுதல், eating food.

பட்சணியம், உண்ணத்தகுந்த பொருள், substance fit or suitable to eat.

பட்சணை, see பட்சணம்.

பட்சபாதக வாதம், see பட்சபாத வாதம்.

பட்சபாதவாதம், வாத சிலேட்டுமம் கூடி அதனால் இவ்வியாதி கண்டு, நாக்கு, கை கால், இழுத்து அசந்து போகச் செய்யுமோர் வாத நோய், a kind of paralysis marked by loss of sensation and function of the tongue, face and the limbs due to the concerted action of wind and phlegm humours.

பட்சபித்து, நிலாமுகில்புள், a bird supposed to live on moon's beams — Greek partridge or bartavelle — Perdizrufa.

பட்சமகோபம், வாதத்தினால் கண் இரப்பைகளை அசையச் செய்வதினால் இரப்பை மயிர்கள் முறைப்பாகவும், கூர்மையாயும் மாறிக் கண்ணுக்குள் பிரவேசித்து அடிக்கடி கண்ணின் வெள்ளை அண்டத்திலும், கருவிழியிலும், உராய்வதனால் வீக்கமுண்டாகிக் கண்வலி யேற்படும், இரப்பைமயிர் மேலுக்கெழும்ப வலியடங்கும், கண் இரப்பை மயிர்கள் உதிர்ந்து காணும், ஓர் வகைக் கண்ணோய், இதனால் சிறிது காற்றையாவது வெப்பம் அல்லது நெருப்புக் காங்கையாவது கண் தாளாது, a disease in which the eye lashes flutter owing to deranged wind phlegm about the eye and consquently the hairs of eye lid are rendered stiff, rough and sharp pointed and rub against the sclerotic and the cornea of the eye giving rise to pain and swelling but affording relief when drawn off. In this disease the eye cannot bear the least breeze or heat or glare of fire.

பட்சமசாதமம், See பட்சமசாதம்.

பட்சமசாதம், மூலத்திலிருக்கும் பித்தம் பிரகோபமடைவதனால் இரப்பை மயிர்க் உதிர்ந்து நமைச்சல், தாபம் இவைகளை உண்டாக்கும் ஓர் வகைக் கண்ணோய், an eye disease, the fire in the Mooladharam in creases to a great degree and causes this eye disease which is marked by fall of hairs of the eye lashes, itching, heat and suffering.

பட்சமமண்டலம், இரப்பைவட்டம், circles of the eye lashes.

பட்சமூலி, சித்தர்கள் பசியெடுக்காதிருக்க வேண்டி பதினைந்து நாளைக் கொருதரம் உட்கொள்ளுமோர் மூலிகை, an unknown drug taken by Siddhars once in a fortnight to keep them off from hunger so that they may not be disturbed in their yoga practice.

பட்சம், பதினைந்துநாள் கொண்டது, a period of fifteen days, fortnight; 2. சித்திர மூலம், ceylon lead wort — Plumbago zeylanica; 3. மீனம்பர், ambergiris; 4. சிறகு, wing.

பட்சம் போடுதல், 15 நாள் வரை வெயிலில் காய வைத்தல், drying for fifteen days under the sun.

பட்சம்வைத்தல், 15 நாள் வைத்திருத்தல், to keep for fifteen days.

பட்சயமாதர், கொசுகு, mosquito.

பட்சயம், போசனம், food; meal.

பட்சவாதம், ஒருபுறம் நரம்பிழுத்து உடம்பினில் வாதம்பற்றிச் சபித்தியம் பெருகி, பலம் குறைந்திருக்கும் பக்கம் நரம்பு செத்துக் கிடக்கச் செய்யுமோர் வாதம், (யூகிமுனி — 1200) இதனால் கைகால்கள் செத்தாற் போல் சோர்ந்து உணர்ச்சியின்றி மயிர்க்கூச்சும் திமிர்ப்பும் உண்டாம், சில சமயம் வாய்க்கோணி நீர் வடியும், a kind of paralysis marked by muscular contraction on one side, loss of sensation due to the degeneration or atroply of the part affected such as limbs, horripilation numbness from deranged wind humour and excess of chillness and sometimes distortion of mouth followed by discharge of saliva — Hemiplegia c.f. பக்கவாதம்.

பட்சி, பறவை, bird; 2. குதிரை, horse; 3. பறக்குந் தன்மையுடைய பிராணி, any creature capable of flying.

பட்சிக்கப்பு, சங்கு, conch.

பட்சிக்கல், கருடக்கல், which see.

பட்சிக்கல்லீரல், பறவைகளின் கல்லீரல், the stony muscular stomach of a bird — Gizzard.

பட்சிதோஷம், தாய் தந்தையர் குற்றத்தினால் பிள்ளைகளுக்கு நேரும் ஓர் தோஷநோய், அன்றியும் அந்தி சந்திகளிலும் நடுப்பகலிலும் குழந்தைகளைத் தெருக்கடக்க கொண்டு போவதால் ஏற்படும் தோஷம், இதனால் குடித்தபால் எதிர்க்களித்தல், கண் மயக்கம், தலைவலி, சுரம், வயிற்றுக்கடுப்பு, சீதளம் முதலான குணங்கள் ஏற்படும்; இது 12 விதப்படும், morbid diathesis affecting especially the infants is said to be caused by the exposure of the infants to the foul or contaminated air, or shadow of birds which have copulated. That is why, the infants are forbidden to be taken out in the morning or evening hours across open spaces. It is marked by sour erructations or vomitting, giddiness, headache fever, greenish diarrhoea cold etc. It consists of four kinds ஆண் பட்சி, male bird. பெண் பட்சி, female bird, மலட்டுப்பட்சி, sterile bird and அலிபட்சி, bird which neither male or female.

பட்சியம், பலகாரம், cake, confection.

பட்சியிராசன், கருடப்பச்சைக்கல், beryl — Aqual Marina. It is a mineral bezoar; 2. பால் கருடக்கல், a white stone or concretion supposed to be derived from the eye or head of Brahmini kite.

பட்சியெச்சம், பொன்னம்பர், amber — Sucinum or electrum of chemists. 2. see பட்சியெச்சல்.

பட்சியெச்சல், பட்சியெச்சம், excreta of birds.

பட்சிராசன், கருடன், Brahmini kite; 2. முப்பு, the quint essence salt derived from the efflorescence found on the fuller's earth.

பட்சிவாதவித்தை, உரோம ரிஷி நூலிற் சொல்லியபடி பறவைகளின் எச்சங்களினின்று செய்யும் ஓர் வாதவித்தை, a process in Alchemy mentioned in the works compiled by Roma-rishi by which metals can be transmuted into gold with the aid of the excreta of various birds.

பட்டகசாலை, உண்ணுமிடம், dining place.

பட்டகம், புழுக்கொல்லி, worm killer, — Aristolochia indica இதுவே ஆடுதின்னாப்பாலை; 2. பட்டகசாலை which see.

பட்டகாரி, சிறுநீலி, small leaved indigo plant — Indigoferra tinctoria.

பட்டகி, ஓர் நீண்ட புழு, tape worm.

பட்டகேசரி, பட்டக்கடம்பு, பெண்கடம்பு, female cadamba — Stephegyre harvifolia.

பட்டங்கம், சப்பாங்கு, which see.

பட்டச்சீலை, மெருகிடும் காகிதம், sand paper.

பட்டடை, நரம்புகளின் இளி, sound of a nerve.

பட்டடைப்பல், கடைவாய்ப்ப[l] molar tooth.

பட்டணத்துக்கள்ளி, சப்பாத்துக்கள்ளி or பலகைக்கள்ளி.

பட்டதாளி, ஒரு வகைச் செடி, laurel — Actinodaphne madraspata

பட்டத்திரி, நெருப்புத்திரி, fire wi

பட்டத்துக்கருடன், கருடக்கல், a wh stone or concretion to be found the eye or head of brahmini ki It is used as an antidote to sna poisons.

பட்டப்பகல், நடுப்பகல், broad d light — Midday.

பட்டபாடு, அனுபவித்த துன்ப suffering.

பட்டபாறு, ஒரு வகை சாதிக்கா a kind of nut meg — Myristic laurifolia (typica) see பட்டைபாறு

பட்டபோது, அஸ்தமனம், sun se time.

பட்டமரம், உலர்ந்துபோன மரம் withered tree.

பட்டம், கவரிமான், a kind of deer or yawk — Bosgrunmens; 2. குளம், tank; 3. நீர்ப்பள்ளம், pond; 4. பொன், gold, 5. மனிதர்படுக்கை, human bed.

பட்டர், அம்பளங்காய், a kind of China fruit.

பட்டாசு, ஓர் வகைக் காய்ச் செடி, a herb.

பட்டாசுகாய், சிலந்தி நாயகம், ulcer plant — Ruellia prostrata alias R.ripens.

பட்டாணி, ஓர் வகைப் பயறு கொடி, இதன் விதை கடலையைப் போலிருக்கும், இது சாதாரணமாக தோட்டங்களில் பயிரிடப்படும், தின்பதற்குதவும், இதினின்று சூப் எடுத்து, ஆங்கிலேயர் குடிப்பார்கள், இது இந்தியாவில் மத்திய மாகாணம், பெங்களூர், மைசூர் இவ்விடங்களில் விசேஷம்.

இது நுரையீரலுக்கும் இருதயத்திற்கும் பலத்தைக் கொடுக்கும், அதிகமாக உண்ணில் சிறிது வாயுவையும் குடல் வலி, மந்தத்தையுமுண்டாக்கும், இதைப் பச்சையாயும் வறுத்தும் உபயோகப்படுத்துவது உண்டு. pea plant — Pisum sativum alias P. quadratum cultivated in gardens. It is generally eaten like Bengal gram. It is much used in European tables as pea soap. It is grown in Central India (Madya Pradesh) Mysore, Bangalore, Ootty etc. It strengthen the heart and the lungs. It is good for breakfast. It tends to increase wind humour. It is eaten after boiling or roasting. If taken in excess it up sets digestion causes dullness of apptite and wind; 2. கொண்டலாத்திக் குருவி, mountain bulbul — Ixosmonticolous.

பட்டாணித் திரிகம், சிறுபூலா, water poolah — Phyllanthus multiflorus.

பட்டாணித் தைலம், ஓர் சிரங்கெண்ணெய், a medicated oil used for itch and sores.

பட்டாணிப்பயறு, பட்டாணி விதை, sea seeds, see பட்டாணி.

பட்டாணிலோத்து, ஓர் மூலி, an herb.

பட்டாரகன், சூரியன், sun; 2. பெற்றோர், parents; 3. ஞானகுரு, spiritual teacher.

பட்டாவியம், பட்டாவியா (ஜாவா) நாட்டில் பயிராகும் ஆரஞ்சு அல்லது கிச்சலி, orange grown in Batavia (Java).

பட்டாவியாமகிழம், சீமை மகிழம்.

பட்டி, ஓர் பூஞ்செடி, a flower plant known as peri winkle — Vinca rosea; 2. பிள்ளை, child; 3. பலகறை, cowry; 4. ஆட்டுக்கிடை, sheep fold; 5. வாலையந்திரம், distilling apparatus, still, 6. சிறியசங்கு, short chank; 7. இடம் place; 8. கட்டு, bandage; 9. நாய், dog; 10. புண்கட்டும் சீலை, bandage cloth.

பட்டிகட்டல், மெல்லிய சீலைத் துண்டை தைலம் அல்லது மருந்து நீரில் நனைத்து புண், வீக்கம், வலியுள்ள விடங்களில் கட்டுதல்; bandaging wounds sores, swellings or painful parts of the body with a lint steeped in medicinal oil or other solutions; 2. சீலைமண் செய்தல், luting.

பட்டிகட்டியிறக்குதல், தைலமிறக்கும் பாண்டத்தின் வாயைச் சீலைகொண்டு கட்டிப் பிறகு தைலத்தை வடித்தல், filtering medicated oil by trying the mouth of the vessel containing it with a piece of cloth and turning it down.

பட்டிகட்டுதல், துணியை தைலத்தில் நனைத்து நோயுள்ள விடத்தில் சுற்றுதல், tying round the affected part with a lint or piece of cloth soaked in medicated solution or oil.

பட்டிகம், நந்தியாவட்டம், rosebay - Tubernoemon tania, coronarium.

பட்டிகை, சீந்தில், moon creeper — Tinosphora cordifolia.

2. நந்தியாவட்டம், see பட்டிகம்.

3. எட்டி, nuxvomica — Stryc nuxvomica.

4. முலைக்கச்சு, stays for breast.

5. அரைநாண், waist string.

6. ஓர் மரம், a kind of tree.

7. செவ்வந்தி, European chamom — Anthemis nobilis.

8. தாழை, Indian screw pine - Pandanus odoratissimus.

9. தேற்றா, water clearing nut - Strychnos potatorum.

10. பாதிரி, trumpet flower - Bignonia chelonoides.

பட்டிக் கடா, பொலி யெருது, copulation bull — Stud bull.

பட்டிடை, நந்தியாவட்டம், see பட்டிகம்.

பட்டிணி, see பட்டினி.

பட்டிதவியம், பூனைக்காலி, common cowitch — Mucana pruriens.

பட்டிப்புன்னை, நாய்த்தேக்கு, dog teak; fish bone tree — Uenia pentagyna.

பட்டிவிழுதல், கருப்பையின் மேற்புறம் முன் அல்லது பின்னாக வளைதல், flexion of the uterus.

பட்டினி, பசியாகவிருத்தல், fasting; 2. பசி, hunger.

பட்டினிகிடத்தல், பசியாயிருத்தல், இப்படி இருத்தல் சுரம், அசீரணம், குன்மம் முதலிய நோய்களுக்குச் சிறந்த அவுஷதமாகும், ஆனால் மெலியச் செய்யும். சயம், காசம் முதலிய நோய்களுக்குதவாது, அன்றியும் மோகம், கவலை, கோபம், தூக்கம் முதலியவை உடையவர்களுக்கும் பட்டினி கிடப்பது கூடாது, பட்டினி கிடப்பதால் திரிதோஷம் சீர்திருத்தமாகும், பசி அதிகமாக உண்டாகும், சாப்பாட்டின் பேரில் இச்சையுண்டாகும். அதிகமாக பட்டினி கிடப்பதால் பலம் குறையும், மயக்கம், அயர்வு, களைப்பு முதலியவை உண்டாகும், மேலும் யோகம் செய்பவர்களுக்கு இவ்விதமாயிருப்பது மிக்க நன்மை தரும், ஏனெனில் தூக்கத்தினின்று விழிப்பு நிலைமையைத் தரும், fasting. It is the best remedy in cases of fever, indigestion, dyspepsia etc., but prohibited in cases of wasting diseases such as consumption, asthma etc., in disturbed state of mind as lust, anger, grief etc. It also corrects and sets right the deranged doshas and kindles the digestive power and promotes relish for food. excessive fasting will produce loss of strength, vertigo doziness, fatigue etc. fasting among yogis very common for the reason that it tends to prevent sleep and keep them always in a waking state.

பட்டினிபொறுத்தல், பசியைப் பொறுத்தல், suppressing hunger.

பட்டு, ஓர்வகைக் கள்ளி, a kind of spurge; 2. பட்டுப்பூச்சி, lady's fly; 3. பட்டுப்பருத்தி, which see.

பட்டுக்கருப்பட்டி, ஓர் வகைக் கருப்புக் கருப்பட்டி, a kind of black jaggery or palmyra jaggery.

பட்டுக் கருப்பு, பட்டெரித்த சாம்பல், ashes derived from burent silk; 2. ஒருவகை மருந்து, a medical preparation, See Siddha Pharmocopoeia.

பட்டுடையாதி, இந்திரகோபப் பூச்சி, lady's fly — Mutella occidentalis. It is an insect with red veloetty appearance.

பட்டுநூற்பூச்சி, பட்டுப்பூச்சி, silk worm — Bombyx moris.

பட்டுப்பருத்தி, செம்பருத்தி, red cotton; 2. செம்பஞ்சு, cotton impregnated with red colouring matter; 3. நார்பருத்தி, fibre.

பட்டுப்பலம், see பட்டுப்பழம்.

பட்டுப்பழம், காட்டத்தி, wild mangosteen — Diospyros embryopteris.

பட்டுப்புழு, See பட்டுப்பூச்சி.

பட்டுப்பூச்சி See பட்டுநூற்பூச்சி; 2. இந்திரகோபப் பூச்சி, see பட்டுடையாதி; 3. பட்டுப்பூச்சிமரம், white mulbery tree.

பட்டுப்பூச்சிநீர், சூதகநீர், menstrual, blood.

பட்டுப்போதல், உலர்ந்து போதல், drying away; 2. இறத்தல், dying as plants.

பட்டுப்போல் தூளாதல், பட்டுப்போலிருக்கும்படி தூள் செய்தல், to pound into a nice powder.

பட்டுப்போல் தூளாதல், பட்டுப்போலிருக்கும்படி தூள் செய்தல், to pound into a nice powder.

பட்டுமந்தாரை, ஓர் வகை மந்தாரை, pink and yellow mountain ebony — Bauhinia variegata.

பட்டை, மரப்பட்டை, bark of a tree, tree bark; 2. இலவங்கப் பட்டை, cinnamon; 3. பரங்கிப்பட்டை, china root; 4. மரவுரி, bark tree; 5. plate; 6. பட்டைக்கோடு, str மருந்துப்பட்டை, அடியிற்கல் பலமரங்களின் பட்டை:

1. ஆவாரம்பட்டை, tanner'

2. சன்னலவங்கம் ப cinnamon bark (thin)

3. சீமைவேலம்பட்டை, bl white or silver wattle.

4. வேலம்பட்டை, bark of genus.

5. சூரைப்பட்டை

6. சுருள்பட்டை.

7. பெருஇலவங்கப் ப cinnomen bark (thick).

8. கருவாப் பட்டை, sam No.2.

9. காட்டுரிப்பட்டை.

10. கஸ்தூரிப் பட்டை.

11. மாவிலங்கப் பட்டை, ba lingam tree.

12. பிசின் பட்டை, bark common tallow laurel.

13. பூதகரப்பன் பட்டை, bark of foeted tree — Sterculia foetida.

14. அக்காரப்பட்டை, bark of sour mango tree.

15. கிளியூரற் பட்டை.

16. பரங்கிப் பட்டை, chinna root.

17. புழுக்கைப் பட்டை.

18. வேம்பாடம் பட்டை.

19. பூச்சாந்துப் பட்டை.

20. ஆலம் பட்டை, banian bark.

21. அரசம் பட்டை, peepul tree bark.

22. வேப்பம்பட்டை, இதனால் மகோதர விஷம், குன்மம் போம், margosa bark.

23. பூவரசம்பட்டை, portia bark.

24. ஒதியம்பட்டை, odiana bark.

25. வெள்வேலம்பட்டை, bark of white babool.

26. கருவேலம் பட்டை, bark of Indian gum arabic.

27. அழிஞ்சிற்பட்டை, bark of sage leaved alangium.

28. நாவற்பட்டை, bark of jamoon tree.

29. பூலாம்பட்டை, bark of phyllanthus.

30. மருதம்பட்டை, bark of arjuna tree.

31. எருக்கம்பட்டை, bark of calotropis — madar bark.

32. முருங்கைப்பட்டை, moringa bark.

33. உகரப்பட்டை, bark of sack tree.

34. செங்கத்தாரிப்பட்டை, bark of false peacock foot tree.

35. அசோகம்பட்டை, bark pongamia.

36. புங்கம்பட்டை, bark pongamia.

37. புரசம்பட்டை, bastard kino bark.

38. அத்திப்பட்டை, bark of fig tree.

39. மருதோன்றிப்பட்டை, mindie bark.

40. நெல்லிப்பட்டை, goose berry bark.

41. கோங்கிலவம் பட்டை, bark of golden silk cotton tree.

42. ஊழலாற்றிப்பட்டை, bark of oosalarti.

43. கருங்காலிப்பட்டை, bark of acacia catchu.

44. கொ(மு)ஞ்சிப்பட்டை, lemon bark.

45. பெருமரப்பட்டை, same as No.13.

46. திருகுக்கள்ளிப்பட்டை, bark of twisting spurge.

47. சீக்கிரான்பட்டை.

48. பிரமிப்பட்டை.

49. மாம்பட்டை, bark of mango tree.

50. குமிழம்பட்டை, bark of Gmelina asiatica.

51. நிலக்கடம்புப்பட்டை, bark of cadamba.

52. புன்னைப்பட்டை, bark of poon tree Alexandrian laurel.

இவை சிலவற்றின் குணங்கள், actions of some of these barks.

1. மருதம்பட்டை — துவர்ப் a stringent.

2. தேற்றாம்பட்டை - வா வீக்கம் போம், it cures vat and swelling.

3. பெருமரப்பட்டை — இ நோய், கிராணி போம், u for diseases of blood and ch diarrhoea.

4. கடலிராய்ஞ்சிப் பட்டை வறட்சி, மேகம், போம், u for dryness, Mega diseases

5. பரங்கிப்பட்டை — குட்டம், சன்னி, கி முடக்குவாதம் போம், useful for sking and ve diseases.

6. முருங்கைப்பட்டை, usef poisoning and vatha disea

7. வன்னிப்பட்டை — போம், cures diabetes ins

8. பூவரசம்பட்டை — சல போம், புண்ணாற்றிடும் for chronic venereal & disease.

9. இத்திப்பட்டை, ஆலம்ப சலரோகம், பெரு பித்தம், பிணி போம், g menorrhagia, bile and diseases.

10. அரசம்பட்டை — சலரோகம், பெரும்பாடு போம், urinary diseases and menorrhagia.

11. நாவற்பட்டை — சலரோகம் போம், useful in diabetes.

12. அத்திப்பட்டை — அதிசாரம், காய்ச்சல், பித்தசுரம், பெரும்பாடு, வயிற்றுப் புண், அக்காரம், வயிற்றுக் கடுப்பு, சலரோகம், இவைகள் போம், stomatitis, diarrhoea, menorrhagia, fever, dyspepsia and peptic ulcer are cured.

13. வேப்பம்பட்டை — மகோதரம், வலிப்பு, விஷம் போம், useful in ascites, fits and poisons.

14. நிலவேம்புப் பட்டை — பித்தசுரம் போம், good for pitha fever.

15. மலைவேம்பின் பட்டை — பீனசம் போம், useful for diseases of nose.

17. சிவன்வேம்புப் பட்டை —குட்டம், புண், பிளவை, வாதம் போம், கற்பமாகும்; தேகம் பொன்னாம், useful for skin diseases, leprosy, carbuncle and vatham. It is a rejuvenating drug.

18. புளியம்பட்டை — வாயுபோம், cures vayu.

19. கருவாப்பட்டை, or இலவங்கப்பட்டை, good stomachic.

20. சன்னலவங்கப்பட்டை, very good stomachic!

21. மாம்பட்டை — உபதம்சரோகம் நிவர்த்தி, useful for venereal diseases.

22. காட்டுவாகைப்பட்டை — பூச பக்கு கட்டி ஆறும், useful for ulcers.

(வேர்ப்பட்டைக் குணம்) (qualitie of some rootbarks.)

1. தேற்றாம் வேர்ப்பட்டை — விஷம் போம், good for poisons.

2. கொன்றை வேர்ப்பட்டை — குட்ட நோய் விஷம்; குறிகளின் புற்றுபோம் good leprosy and cancer.

3. வில்வவேர்ப் பட்டை — விஷம், காணாக்கடி போம், urtecarea.

4. வேங்கை வேர்ப்பட்டை, புளியம்வேர்ப்பட்டை, — அயபற்பம் செய்ய உதவும். calcifies and oxidises iron.

5. பொன்னாவிரை வேர்ப்பட்டை — கபம், மதுமேகம் போம், useful in diabetes and diseases of phlegm humour.

பட்டை எலும்பு, தட்டையாகவுள்ள எலும்பு, flat bone.

பட்டைகேசரி, சூடனுண்டாகும் மரம், camphortree — Cinnamomum camphor.

பட்டைக் கடம்பு, நீர்க்கடம்பு, striped cadmba — Stephegyne parviflora.

பட்டைக்காலிகம், சன்ன லவங்கப்பட்டை, Ceylon cinnamon, common cinnamon — Cinnamomum zeylanicum.

பட்டைக்குலிகம், பரங்கிப்பட்டை, Chinaroot.

பட்டைச் சாதம், அன்னக்கட்டி, compressed or packed cooked rice.

பட்டைச் சாராயம், வெள்வேலம் பட்டையினின்று வடிக்கும் ஓர் மதுபானம், arrack, liquour of white babul — Acacia leucophloca. It is distilled from solution of jaggery from various palms.

பட்டைச் சாற்றில் நல்ல பாகம், செங்கத்தாரிப்பட்டை, bark of false peacock tree — Nicbuhria.

பட்டைச்சீலை, உப்புத்தாள், sand paper.

பட்டைதாளி, ஓர் வகைத் தாளி மரம், a kind of palm talura palm — Corypha taliera.

பட்டைபானு, காட்டுச் சாதிக்காய் மரம், jungle nut meg tree — Myristica laurifolia (typica)

பட்டைப்பல், கடைவாய்ப் பல், grinder, mill tooth, molar tooth.

பட்டைமரம், நெட்டாவில், அதாவது மரவுரி, இதை தபசிகள் சட்டையா உபயோகப்படுத்தியதால் இப்பெயர், bark tree, sack tree — Antiaris toxicaria alias A. saccidora. It is so called from its use as clothing by hill tribes and mendicants in older days.

பட்டையரக்கு, கொம்பரக்கு, shell lac, stick lac.

பட்டையிட்டுப் போதல், சிரங்கு புண், காயம் விரணம் இவைகள் ஆறிவரும் போது காய்ந்து பக்கிட்டு பட்டையிட்டுப் போதல், the necrotic transformation of a tissue into a black mass as in itch. sore, wound, scab, the crust of superficial sore, the crust of a dry gangrene etc., due to the death of circumscribed portion of tissue.

பட்டையுரித்தல், மரத்தினின்று தோலை சீவியெடுத்தல், removing the bark of a tree branch or trunk.

பட்டையெலும்பு, தோள்பட்டையெலும்பு, shoulder blade.

பட்டைவீச்சு, see பட்டைவிரசு.

பட்டைவிரசு, குருவிரசு அல்லது குருவிச்சை, wory wood — Ehretia laevis.

பணகரம், பணதரம், பாம்பு, snake.

பணத்தூக்கம், பணத்தூக்கு, பணவிடை, five grains weight.

பணந்தூக்கு, see பணத்தூக்கு.

பணபனன், அரசமரம், peepul tree — Ficus religiosa.

பணபாலை, நரிப்பாலை, ape flower — Mimusops roxburgiana.

பணபேதி, பாஷாணத்தைப் பேதிக்கு மருந்து, any chemical acting on or bringing about a chemical change on arsenic poisons.

பணப்பாஷாணம், சூதபாஷாணம், mercurial poison.

பணமணி, நாகமணி, ruby supposed to be on the head of a cobra.

பணம், பருமை, thickness; 2. பாம்பின் படம், the expanded hood of a cobra; 3. பாஷாணம், arsenic, arsenical poison, any poison; 4. பாம்பு, snake; 5. காசு, money in general; 6. பொற்காசு, anciently a small gold coin; 7. பணவிடை, fanam which was of silver or base gold; 8. வெள்ளிப்பணம், silver fanam worth about 2 pence; 9. விஷம், poison; 10. நாகம், cobra; 11. பொன், gold; 12. நாணயம், coin in general; 13. பட்டணத்துப்பணம், Madras fanam worth 2½ annas (16 paise)

பணம்போல் வில்லைத்தட்டல், பணமளவுத் தட்டல், to make dises of size of fanam.

பணர், மரக்கிளை, branch of a tree.

பணவியிரி, கருடன் கிழங்கு, snake caper — Bryonia epigaca (root of).

பணவிடை, மூன்று குன்றிமணி 6 grains weight.

2. ஐந்து குன்றிமணி எடை, 10 grains weight.

3. களஞ்சியில் பத்து அல்லது பனிரண்டில் ஓர் பாகம், அதாவது ஒன்றே கால் ரூபாய் எடை, one tenth or one fifth of a kalanji or equivalent to about 1¼ tola.

4. பட்டணத்துப் பணம், அல்லது 2½ அணா எடை, Madras fanam.

5. தட்டார் எடைப்படி இரண்டு மஞ்சாடி கொண்டது. according to troy weight or gold smith weight two manjady.

6. ஒன்பதில் ஒருபங்கு விராகனெடை ⅑ of pagoda weight.

7. குன்றிமணி அல்லது அரைக்கால் விராகனெடையுள்ள பொன்னிறை, 2 grains or 1/8 of pagoda weight of gold.

பணவெடை, see பணவிடை.

பணவை, கழுகு, eagle; ஓர் அளவை, a measure.

பணாதரம், பாம்பு, snake; 2. நாகம், cobra

பணாபவம், see பணாதரம்.

பணாமகுடம், பாம்பின் படம், expanded hood of cobra

பணாமணி, நாகரத்தினம், see பணமணி.

பணாமரம், கொப்படர்த்தியானமரம்; any tree with close thick twigs and branches; 2. பூத புட்ப மரம், tende[r] wild jack — Pajanelia rheedi; 3. ... பாதிரி மரம், Indian trumpet flowe[r] tree.

பணாவிருத்தம், பாவட்டை; commo[n] Indian pellet shrub — Pavetta indica

பணி, பாம்பு, snake; 2. எருமை buffalo; 3. நாகம், cobra.

பணி ஆரி, ஒட்டொட்டி, which see

பணிகாரத் துத்தி, see பணியார துத்தி.

பணிகாரம், அப்பம், மாப்பண்டம் rice cake.

பணிக்கம், எச்சில் உமிழுங்கலம் spittoon, — sputum indicum.

பணிக்கன், விஷ வைத்தியன், one who treats poisoning or poisonous bites; 2. சாராயங் காய்ச்சுகிறவன், one who distils arrack or other liquors 3. நாவிதன், barbar.

பணிக்கு, ஆரோக்கியம், good health நல்லதேகக்கூறு, good constitution.

பணிக்கை, நேர்த்தியாய் அல்லது சுகமாய் இருக்கை, keeping good health.

பணிதல், உண்டல், eating; குறைதல். decreasing.

பணிதி, தண்ணீர் விட்டான் கிழங்கு, water root — Asparagus racemosus (root of).

பணிபாதடம், செபம், prayer; 2. வழிபாடு, worship.

பணிப்பகை, பாம்பின் பகை, அதாவது கருடன்; மயில், enemy of snake i.e. Brahmini kite; peacock.

பணிப்பெண், ஆயா, nurse.

பணியநாக்கு, see பணிதி.

பணியம், சங்கு, conch.

பணியறுத்தல், செயலற்று நிற்றல், being inactive.

பணியாநாக்கு, see பணியநாக்கு.

பணியாரத்துத்தி, பெருந்துத்தி, cake mallow — Abutilon indicum (typicum)

பணியாரம், see பணிகாரம்.

பணியாரி, ஒட்டொட்டி, a sticky grass — Desmochacta attopurpurea c.f. ஒட்டுப்புல்.

பணியிரும்பு, வேலைக்கு நயமான இரும்பு, wrought iron as opposed to வார்த்த இரும்பு cast iron.

பணியினாக்கு, பாம்புநாக்கு, snakes tongue; 2. see பணியநாக்கு.

பணிலம், சங்கு, conch; 2. வலம்புரிச்சங்கு, conch having its spiral or windings turned to the right.

பணிவைரி, பாம்பின்பகை, see பணிப்பகை; 2 கருடன் கிழங்கு, see பணவயிரி.

பணினம், பாம்பு, snake.

பணுக்கம், வசியம், hypnotising or attracting or influencing one by magic or charm.

பணை, அரசமரம், peepul tree — Ficus religiosa; 2. மூங்கில், bamboo — Bambusa arundinacea; 3. பருமை, thickness; 4. உயரம், height; 5. கிளை, branch of a tree; 6. ஐந்தாண்டு கொண்ட காலவளவு, a period of five years; 7. சாணைக்கல், whet stone; 8. தோள், shoulder.

பணைத்தல், பருத்தல், growing or becoming bulky.

பணைத்திராய், ஓர்வகைப் பெருந்திராய், Indian chick weed with its branches spreading exuberantly — Mollugo or Pharnaceum genus.

பணைப்பு, கிளைப்பு, branching; 2. பருத்தல், becoming bulky.

பண்கொடி, பிரம்பு, cane; 2. பிரப்பங்கொடி, cane creeper.

பண்டகம், பெருமூங்கில், thick or stout bamboo.

பண்டகி, பெருந்திப்பிலி அல்லது யானைத் திப்பிலி, elephant long pepper climber — Scindapsis officinalis; 2. சேம்பு, Indian kale — Colocasia antiquorum.

பண்டகிரி, வல்லாரை, Indian penny wort — Hydrocotyle asiatica.

பண்டமண்டலி, வெள்ளைச் சாரணை, white shauranay (trianthema) — Trianthema decandra.

பண்டம், அறிவு, knowledge, intellect; 2. பணியாரம், cake or any confection; 3. பொன், gold; 4. வயிறு, belly; 5. பழம், fruit; 6. மெய்யறிவு, wisdom; 7. உணவுப்பொருள், food stuff; 8. கலைக்கியானம், knowledge of science; 9. தானியம், grain; 10. பொருள், thing, substance; 11. பாத்திரம், vessel; 12. ஆடு மாடுகள், cattle; 13. உடல், body; 14. சரக்கு, articles of commerce; 15. கல்வி, erudition.

பண்டரைத்தசாறு, முன்பு அரைத்து வைத்த சாறு, juice extracted before.

பண்டன், ஆண்தன்மை யில்லாதவன், impotent man.

பண்டாகி, சேம்பு, See பண்டகி; 2 சிறுவழுதலை, wild brinjal — Capparis sepicria; 3. கத்தரி, egg plant — Solanum melangenum.

பண்டாங்கி, சிறுவழுதலை, see பண்டாகி.

பண்டாரம், குங்குமம், Indian saffron powder; 2. மஞ்சட்பொடி, turmeric powder; 3. இனிய தின்பண்டம், Sweet eatables; 4. சிவன் கோயில்களில் பூஜை செய்பவர், priest in the temples of Shiva or mendicant (he may be learned)

பண்டாரி, பண்டாரிமரம், false bog myrtle.

பண்டி, வயிறு, stomach; 2. உடல், body.

பண்டிதம், வைத்தியம், art of healing; 2. வித்துவத்துவம், learning, erudition; 3. கல்வி, science.

பண்டிதம் பண்ணல், வைத்தியம் செய்தல், according treatment; applying remedies, cure diseases; practising medicine, application of remedies on a patient or a disease; 2. பௌதிக முடித்தல், subjecting to the chemical action of a substance.

பண்டிதம் பார்த்தல், see பண்டிதம் பண்ணல்.

பண்டிதரிலக்கணம், நல்ல வைத்தியரின் குணம் முதலிய

லக்ஷணங்கள், the qualities of a good physician; 1. வாகடம் கற்றல், அதில் பழக்கமுறல்; 2. பொருளாசையற்று நிற்றல்; 3. சரக்கு மூலிகை நிறை குணமறிதல்; 4. சினம் நீத்து அடக்கமுறல், 5. மருந்து செய்யும் திறத்தை அறிதல், 6. கடவுள் பக்தி வழிபாடு, 7. அறமியற்றல், 8. குருவையடுத்து முறையைக் கற்றல்; 9. நெடுநாள் பழக்கமுறல்; 10. கைபாகம் செய்பாகத்தில் தெளிவுறல்; 11. இலக்கண இலக்கியம் பாண்டித்தியம் கற்றல்; 12. பிறர் உயிரைத் தன்னுயிரைப் போல் பாவித்தல்; 13. அனுபானபேதமறிதல்; 14. நோய்குறி குணங்கள் அறிதல்; 15. சரக்கு சுத்தியில் தேர்தல், 16. சத்துரு மித்துரு பேதம் அறிதல்; 17. உலோகங்களைப் பற்ப செந்தூரமாக்கு முறையில் தெளிதல்; 18. நாடி நடையறிதல், அதாவது நாடிப்பரீட்சை; 19. பஞ்சபூத நிலையும் திரிதோஷக் குற்றமுமறிதல்.

Distinguishing qualities and features or character of a good physician are; 1. He should be thoroughly skilled in all the literature on the Siddha system; 2. he should have no desire for money or wealth; 3. he must possess thorough knowledge of the drugs and herbs used in Medicine; 4. he must avoid anger and develope a calm temperament, 5. must know the action and strength of the medicine he uses; 6. must be a religious and pious man; 7. must be charitable; 8. must be obedient and true to his Guru and learn things from him; 9. must have long experience and training in medicine; 10. must know how to prepare medicines; 11. must possess good literary knowledge; 12. must consider other as his oneself; 13. must know the qualities of various vehicles used to administer medicines; 14. possess thorough knowledge of the signs and symptoms of the diseases; 15. must know to purify drugs; 16. possess knowledge of antagonistic and friendly drugs; 17. must know how to calcify mineral and other drugs; 18. possess thorough knowledge of the pulse besides; the eight methods adopted to diagonise diseases; 19. must know the three dosha theory.

பண்டிதர், அறிவுடையோர், intelligent people, 2. கலைஞர், man of arts; 3. விற்பன்னர், scientists; 4. வைத்தியர், physicians; 5. சத்திரம் செய்வோர், surgeons; 6.நாவிதர் barbar.

பண்டிதலாட சிங்கி, வல்லாரை, Indian pennywort or Indian birthwort —Hydrocotyle asiatica.

பண்டிதவாய், கடுக்காய், gall nut, myrobalan.

பண்டிதன், வைத்தியன், physician, doctor.

பண்டிமலம், அதிகமாக மலம் தள்ளும் ஓர் நோய், a disease in which abnormal quantity of fecal matter is discharged.

பண்டு, பழம், ripe fruit; 2. ஈருள்ளி, onian.

பண்டுகசோபிதம், சோதி விருட்சம், a tree luminous in the dark.

பண்டுகம், ஓமம், omum plant — Carum copticum; 2. நெல்லரிசி, rice derived from paddy; 3. செவ்வகத்தி, red sesbane —Coronilla coccin; 4. அசமதாகம், a kind of omum — Carum roxburghum.

பண்டுபம், கொம்மட்டி, fowl's cucumber — Bryonia callosa.

பண்டுலி, சிறுகீரை, pig green —Amaranthus compestris.

பண்டுலிகம், see பண்டுலி.

பண்டுவம், வைத்தியம், medical practitioner.

பண்டுவன், வைத்தியன், see பண்டுவம்.

பண்டை, முற்காலம், ancient days; 2. பழமை old.

பண்டைத் தலைவலி, நாட்
தலைநோய் chronic head ach

பண்டை நாள், பூர்வ காலம்,
days.

பண்டைவினை, பூர்வ க
actions of previous birth.

பண்ணல், பருத்தி, cotton;
பண்ணுதல், making.

பண்ணவர், முனிவர், hermit,
semi gods.

பண்ணவன், திண்ணியன்,
man, able bodied man; 2. மு

sage.

பண்ணி, பன்றி, pig; 2. சிறு
ruddy black jamoon or plu
Eugenia rubicunda.

பண்ணிகாரம், பணியாரம், cak
அப்பவருக்கம், rice cake var

பண்ணிகுரும்பன், நிலப்
ground palm — Curculigo orch

பண்ணிக்குரும்பனை, see ப
குரும்பன்.

பண்ணியசாலை, அப்பசாலை,
house; 2. பலகாரக்கடை, lu
home.

பண்ணியம், பலகாரம், eatables, confection; 2. பாம்பு, snake; 3. சிற்றுண்டி, lunch; 4. அப்பவர்க்கம், confectionary, pastry.

பண்ணியாரம், see பணியாரம்.

பண்ணிமோத்தை, சிறு குறட்டை, small variety of shavarifruit — Trichosanthus palmata, see சவுரிக்கொடி.

பண்ணிமோந்தான், see பன்றி மோத்தை.

பண்ணிமோந்தான் கிழங்கு, see பன்றி மோந்தான் கிழங்கு.

பண்ணியடைப்பன், மாட்டுக்குவரும் ஓர் அடைப்பன் நோய், a cattle disease.

பண்ணுதல், சமைத்தல், cooking; 2. செய்தல், manufacturing; 3. ஆயத்தம் செய்தல், preparing.

பண்ணை, வயல், field; 2. நெல்வயல், rice field; 3. see பண்ணைக்கீரை; இரசம், mercury; 5. வெடியுப்பு, nitre; 6. மூங்கில், bamboo; 7. குளம், tank; 8. சம்சாரம், family; 9. மகளிர் கூட்டம், women folk; 10. தோட்டம், garden; 11. சாவற் சூட்டுப்பண்ணை, அதாவது சாவலின் கொண்டை, cock's crest plant; 12. ஓர் வகைப்பிசின், a kind of gum.

பண்ணைக்காலிகம், சூரைச்செடி, jackal jujube — Capparis sepiaria.

பண்ணைக்கீரை, சேவற் பண்ணைக் கீரை; மலைப்பண்ணைக் கீரை; இதன் இலையையும் கொழுந்தையும் உணவிற் கூட்டப்படும். இதைப் பருப்புடன் கூட்டிச் சமையல் செய்து உண்ண குடலுக்கு நன்மைத் தரும்; இது மலத்தைச் சிக்கலின்றிப் போக்கி, குடலைச் சுத்தப்படுத்தும், அன்றியும், ஆமம், விரணம், கரப்பான், கிரந்தி இவைகளை நீக்கும், இக்கீரையில் பலவகையுண்டு, cock's comb greens —Cetosia argentia alias C. cristata; its leaves and young shoots are used as greens in food. If cooked with dholl and eaten with rice, it does immense good to the bowels. It is a laxative and as such eleanse the intestines. Moreover, it cures indigestion, ulcers, eczema, syphilitic sores etc. It consists of different varieties and vary much in their growth c.f. பிண்ணாக்குக் கீரை.

NOTE:- There are five or six varieties 1. Bears numerous heads of bloom resembling so many golden sponges; 2. heads of flowers bright crimson; 3. dwarf variety with sponge like heads of tawny orange coloured flowers; 4. leaves as well as heads of flowers bright crimson, the other common species are polygonoides and pulchella.

பண்ணைச்சேவிதம், சங்கஞ்செடி, four spined monetia — Azima tetra cantha.

பண்ணைமாரிதம், இண்டங்கொடி, sensitive creeper — Mimosa rubicaulis.

பண்ணையரிசி, மூங்கிலரிசி, bamboo sago; 2. அரிசி, rice.

பண்ணையுப்பு, வெடியுப்பு, nitre; 2. மூங்கிலுப்பு, a white silicious matter found in the joints (nodes) of female bamboo — Tabasheer; bamboo salt.

பண்பகப்பூ, சீரகம், cumin seed; 2. கிராம்பு, clove; 3. கோஷ்டம், Arabian costus — Costus.

பண்படுதல், சீர்திருந்தல், become or turn good.

பண்படுத்தல், சீர்ப்படுத்தல், to set right or to correct.

பண்பான பழத்தி, சர்க்கரைக் கொம்மட்டி, water melon; 2. கொம்மட்டி, see பண்டுபம்.

பண்பு, குணம், quality; 2. தகுதி, fitness; 3. விதம், mode, manner; 4. இயல்பு, nature; 5. நற்குணம், good quality; good disposition; 6. அழகு, beauty; 7. பொறியால் உணரப்படும் குணம், quality perceived by the senses.

பண்புடையோன், தேறினவன், the best among S
2. நற்குணம் வாய்ந்தவன், good quality.

பண்மையனான், செம்புக்கல் gem.

பண்மையாதி, விசுத்தி, one six centres of the body; i the neck region.

பதகம், ஓர் பறவை, a bird.

பதகரம், அறுகம்புல், couch panic grass; bent grass — C dactylon.

பதகரி, காப்பிக் கொட்டை, seed, coffea beans; 2. ஓர் சருமநோய், a kind of skin 3. ஓர் இரண நோய், a k ulcer.

பதக்கிரமம், காலடி, foot prin

பதகிரி, ஓர் சருமநோய், see

பதக்கு, இரண்டு மரக்கால் குறுணி கொண்டது, 2 (two) m or four Madras measures.

பதக்கேடு, பக்குவம் கெடுதல், இலேகியம், தைலம், spoil becoming spoiled in perfection the preparation of medicat electuary, syrup etc.

பதங்க கந்தகம், பதங்கித்த கந்தகம், sublimed sulphur. See பதங்கித்த கந்தகம்.

பதங்கச்சி, இந்திரபாஷாணம், one of the 32 kinds of prepared arsenic.

பதங்கத்திற்சமைந்தநாரி, கார்முகிற் பாஷாணம், a prepared arsenic so called because its colour resembles that of cloud.

பதங்கமம், பறவைப்பொது, birds in common; 2. விட்டில், grass hopper, locust; 3. see பதங்கம்.

பதங்கமுறை, பதங்கம் செய்யும் வகை, the process of sublimation.

1. The appearatus consists of two earthern pots placed one above the other with their rims luted together with clay. The lower pot contains the medicine to be sublimated and it is put on fire while the upper pot is kept cooled with wet rags. The sublimate is deposited in the inner side of the upper pot.

2. This is another process. This apparatus consists of a glass bottle well tuted with several layers of clay and cloth. In it is placed the medicine to be sublimated and well corked. The bottle is heated on a sandbath. The sublimate is deposited in the nect of the bottle whence it is extracted by breaking the bottle.

பதங்கமேறல், எரிப்பதனால் ஆவியாக மாறிப் படிதல், being deposited after heating into vapour.

பதங்கமேற்றல், எரிந்து ஆவியாக மாற்றிப் படியச் செய்தல், raising by heat into vapour which on cooling returns again to thhe solid state by setting at the top of the apparatus — Sublimating.

பதங்கமேற்றுதல், See பதங்கமேற்றல்.

பதங்கம், மருந்தை எரிப்பதனால் மேற்படிந்த வஸ்து, product of sublimation. 2. இரசப்பதங்கம், sublimed mercury; 3. சிறகுள்ள பிராணி, winged bird or creature; 4. பறவைப் பொது, birds in common; 5. சந்தனம், sandal; 6. விட்டில், locust; 7. சரக்குச் சத்து, essence of drugs derived from sublimation; 8. ஓர் நெல், a kind of paddy; 9. ஓர் வைத்திய முறை, அதாவது கற்பூரம், கந்தகம், பூரம், வீரம், சாம்பிராணி முதலிய ஓடும் சரக்குகளைப் பாண்டத்திலிட்டு மூடிக்காப்பதினால் மூடியிருக்கும் பாத்திரத்தின் கீழ் ஆவியாக மாறிய வஸ்து படிந்திருக்கும் முறை, the process of sublimation by which solid substances such as camphor sulphur, impure subchloride of mercury, corrosive sublimate, benzoin etc., are brought into the state of vapour by heat and condensed again into a solid by cold without melting them; *10.* *சாம்பிராணி பதங்கம்*, benzoic acid obtained from benzion by sublimation; *11. சப்பாங்கு*, sappang — Caesalpinia sappan.

பதங்கரசபற்பம், பதங்கமுறையாய்ச் சுத்தி செய்த இரசத்தினின்று தயாரித்த பற்பம், calcined oxide of mercury which is obtained by process of sublimation cinnabar — Vermilion.

பதங்கரசம், பதங்கித்த ரசம், sublimed mercury i.e. mercury purified by process of sublimation, வாலை ரசம், mercury purified by distillation.

NOTE: Mercury is obtained almost exclusively from cinnabar. When the cinnabar is roasted; the sulphur it contains is oxidised and the metal mercury is liberated which easily sublimates, according to modern chemistry different condensing arrangements are employed in different chemical works. It may be cleaned by filtration through chamois leather and purified by distillation from iron retorts. In the laboratory mercury is often purified by running a fine spray of mercury down a long coloum of dilute nitric acid followed by distillation in vacuo.

பதங்கராசன், கருடன், brahimini

பதங்கன், சூரியன், sun.

பதங்கவிதி, பதங்கமுறை சரக்குகளை எடுப்பதற்கு வே அனுசரிக்கும் விதிகள், rules sublimation.

பதங்கலிங்கம், சாதிலிங் vermillion, red sulphate or merc — Cinnabar.

பதங்கித்த கந்தகம், பதங்க முறைய முடித்த கந்தகம், இது பச்சை மஞ்சளும் கலந்த நிற இருக்கும், ருசி வாசனையுமிராது, வைத்தியத்திற்குபயோகப்படும், இது சொறி சிரங்கு முதலிய ச நோய்களுக்கு உள்ளுக்கும் கொடு மேலுக்கும் பூச மருந் உபயோகப்படுயும் அன்றியும் வ விஷம் இரச வேக்காடு, இரசவேக பாரிச வாயு, வாதபிடிப்பு, வலிப்பு, மாரடைப்பு, கக்குவா சுவாசகாசம், கண்டமாலை முத நோய்களுக்கு மெ உபயோகப்படும், மேலும் உபத்திரவம், ஆசனச் சுருக்க அடிதள்ளல், நீடித்த சீதே இவைகளைச் சாந்தப்படுத்து sublimed sulphur — Sulph sublimatum. It is pure sulpur prepar from crude or rough sulphur sublimation. It is a gritty powder a greenish yellow colour without tas odour. It is an alternative a

diaphoretic in small doses and mildly aperient in large doses. It is mostly used in medicine and as such its therupentic uses are — In scabis and other cutaneous affections and is valuable both as internal and external remedy. Amongst other diseases in which it has been prescribed internally with advantage are colica pictonam and various other forms of lead poisoning, pytialism, mercurial tremors palsy, chronic rheumatism, spasmodic asthma, angina pectoris, whooping cough, chronic bronchitis and scrofula. In hemorroidal affections, in stricture and prolapses of the rectum and in chronic dysentery, it forms a very mild aperient. It is also employed very advantageously in the form of aqueous or vapour bath.

பதங்கித்தல், பதங்கமேறும்படி செய்தல் see பதங்கமேற்றல்.

பதங்கிப்போதல், பதங்கமாக மாறல், turning into sublimate.

பதங்கு, பதங்கம், which see.

பதசகம், அத்தினி சாதிப்பெண், சாதி நால்வகைகளிலொன்று, one of the four classes of women divided according to their lust.

பதசம், பறவை, bird; 2. சந்திரன், moon; மயிர்ப்புழு, a minute worm thin as hair.

பதஞ்செய்தல், see பதப்படுத்தல்.

பதடி, உமி, husk; 2. பதர், chaff, blighed corn.

பதத்தல், ஈரமாதல், being moistened, becoming damp.

பதத்திரவிரியம், பிரம்பு, cane.

பதத்திரி, பறவை, bird.

பதத்தில் வடித்தல், பதம் வந்தவுடன் வடிகட்டிக் கொள்ளுதல், to decant or filter when it reaches the proper stage.

பதத்திறக்கல், சரியான பக்குவத்தில் மருந்தை அடுப்பினின்றுயிறக்கல், remove the medicine from the fire when it reaches the proper stage.

பதநியாசம், ஒரு பூண்டு, an unknown herb; 2 காலடி, foot print, foot impression or mark.

பதநிறம், மாமிசச் சிலை, a kind of mineral stone dissoving flesh.

பதநீர், கருப்பநீர், fluid discharge from uterus; 2. பனிக்குடத்து நீர், amniotic fluid; 3. பனஞ்சாறு, sweet drink extracted from the female palmyra tree.

பதந்திரவல்லி, முடக்கொத்தான், smooth leaved heart pea — Cordiospermum halicacabum.

பதபட்டை, ஓர்வகை கொத்து நேர்வாளச் செடி, Cluster croton.

பதபத்திரம், நந்தியாவட்டம், Indian rosebay — Tabernae montana coronarium.

பதபாதம், காலடி, foot print.

பதப்படுதல், சீர்படுதல், getting to normal condition, 2. பக்குவபடுதல், coming to proper condition.

பதப்படுத்தல், See பதமாக்கல்.

பதப்பலம், காற்பலம், 1/4 palam weight.

பதப்பாடு, பக்குவமாக்குகை, reaching perfection; 2. பழுக்குதல், ripening.

பதமம், See பதரியாசம்.

பதமழிவு, See பதனழிவு.

பதமாக்கல், பக்குவப்படுத்தல், making fit; 2. இளகச் செய்தல், making soft; 3. உபயோகப்படும்படி செய்தல், 4. பக்குவ நிலைக்குக் கொண்டு வருதல், bringing to perfection.

பதமாயிறக்கல், see பதத்திறக்கல்.

பதமாயெரித்தல், பக்குவப்படும்படி யெரித்தல் burning or heating so as to bring to perfection; 2 அளவுப்படி யெரித்தல், heating as per prescribed degree.

பதமாய்க்கிளறல், இலேகிய முதலிய மருந்துகளைப் பக்குவப்படும்படி தீயிட்டுக் கிளறுதல்,stirring medicine on fire during preparation till it reaches perfection.

பதமிடல், மருந்து பூசல், rubbing medicine; 2. எண்ணெய்பூசுதல், anointing with medicated oil to soften the affected part; 3. மெதுவாகும்படி செய்தல், to soften.

பதமுறக்காய்ச்சல், மருந்து குணம் கெடாத படி கைமுறையாய் பக்குவப்படி காய்ச்சுதல், boiling or heating medicine under preparation so as not get it spoiled in its quality.

பதமை, 2 அமைதி, quietness, tranquility; 2. மென்மை, softness; 3. மந்தகுணம், dullness.

பதமோதகம், பயிரவ சாதியாகிய ஆண் சாதி நால்வகைகளுள் ஒன்று. one of the classes of men divided according to their lust.

பதம், அடையாளம், mark; 2. ஈரம், moisture dampness; 3. அறுகம்புல், couchgrass — Cynsden dactylon; 4. உண்டல், eating; 5. காலம், time, period; 6. கால், leg; 7. கொக்கு, stork; 8. சோறு, cooked rice; 9 பக்குவம், matured ness, maturity 10 நாழிகை, a period of 24 minutes 11. தண்ணீர் water; 12. கள், toddy 13. இளம்புல், tender grass; 14 பாதம், foot.

பதம் செய்தல், இளகச் செய்தல், See பதமாக்கல்.

பதரம், இலந்தை, zyzyphus jujuba.

பதரவாக்கினி, கடல்நுரை, cuttle fish bone, sea froth.

பதரி, இலந்தைமரம், Indian apple tree — Zyzyphus jujuba.

பதரிகண்டம், ஒட்டைமரம், camel tree — Echinops echinotus.

பதரிகா, கருப்பு நாயுருவி, a black variety of Indian burr — Achyranthes aspera (nigrum)

பதரிரீட்சம், See. பதரிகண்டம், ஒட்டைமரம்.

பதர், உள்ளீடு அற்ற நெல், blighted corn; 2. உமி, husk.

பதர்பேணி, ஓர்வகைக் கோதுமைப் பலகாரம், a sweet preparation of wheat flour.

பதலபம், கருப்புத்தேக்கு, black teak wood.

பதலை, வாயகன்றபாத்திரம், அதாவது குண்டான், தாழி, சாடி முதலியன, a wide or broad mouthed vessel as basin.

பதலைவங்கு, மலைக்குகை, mountain cave.

பதவம், அறுகு, couch grass — Cynoden dactylon.

பதவல், குப்பை, rubbish.

பதவாடம், மாக்களி, pastry made out of flour.

பதவாடை, மாக்களிக்கட்டு, poultice; a soft composition of meal to be applied to abscesses, sores etc.

பதவாடைகட்டல், பதவாடை செய்தல், applying poultice.

பதவாடைசெய்தல், மாக்களி கட்டுதல், applying poultice.

பதவாயுதம், சேவற் கோழி, cock fowl.

பதவி, முத்திவழி, the way to heaven; 2. முத்தி, final beatitude in absorption; 3. நான்கு வகைப்பதவி, அவையாவன; சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம், (in Saiva Philosophy) the four kinds of bliss viz dwelling with the deity. Proximity to the deity, indentity with the deity, in form entire absorption with the deity the highest state of bliss.

பதவியன், சாதுவானவன், one mild in disposition; 2. அமைதியானவன், one of amiable qualities.

பதவு, அறுகு, see பதவம்; 2. புல், grass; 3. அமைதி, quictude.

பதறல், பதறுதல், which see.

பதறிடல், விரைதல், being restless; 2. திடுக்கிடல், being taken by surprise; 3. முன்யோசனையின்றி அவசரப்படல், hastening or hurrying thoughtlessly.

பதறுதல், see பதறிடல்; 2. நடுங்குதல், trembling.

பதறை, வெந்தோன்றி, November flower plant with white flowers — Gloriosa superba.

பதனபாண்டம், வைத்துப் பத்திரப்படுத்தும் பாத்திரங்கள், pots, bottles or articles serving to keep medicine safely.

அவையாவன, They are:

1. கண்ணாடிக் குப்பி, glass bottle.

2. பீங்கான் பாத்திரம், porcelain vessel.

3. மண்கலம், earthern pots.

4. மண்சாடி, earthern jars.

5. தந்தச்சிமிழ், wory box.

6. மாட்டுக் கொம்பு, horn box தேங்காய் சுரைக்குடுக்கை முதலியன, cocoanut shell, gourd shell etc.

பதனம், பதமழிதல், getting rotten; 2. பத்திரம், safe custody.

பதனம் செய்தல், பத்திரப்படுத்தல், keeping in safe custody; 2. மருந்தை காற்று புகாத பத்திரமாக புட்டிகளில் அடைத்தல், preserving prepared medicines in air tight bottles.

பதனம்பண்ணுதல், பத்திரமாக வைத்தல், preserving; 2. ஒளித்து வைத்தல், keeping concealed.

பதனிழிதல், ஊழ்த்தல், getting rotten; 2. பக்குவ நிலை தவறுதல், losing the stage of perfection; 3. அழிதல், becoming mortified.

பதனிழிவு, ஊழ்ப்பு, sphacelus; decay; 2. உருசியறல், losing taste; 3. பதக்கேடு, loss of vitality.

பதனார், முசுமுசுக்கை, bristly or rough bryony — Bryonia scabra alias Mukia scabrella.

பதனாறுவி, அழுகண்ணி, Indian weeping plant — Drosera indica.

பதனி, பதநீர், பனஞ்சாறு; sweet drink extracted from palmyra; palmyra juice. See பதநீர்.

பதன், பக்குவம், see பதம்.

பதாசி, சாம்பற்சாரம், potash.

பதாதிகேசம், see பாதாதிகேசம்.

பதார்த்த குண சிந்தாமணி பதார்த்தங்களின் குணங்களைப் பற்றி விவரிக்குமோர் நூல், that branch of medical science which treats about the drugs etc employed in medicine — Materia Medica. It is a science in which are fully described the properties of drugs belonging to the animal, vegetable and mineral kingdoms and of the articles of food, essentials to the maintance of health and strength.

பதார்த்தகுண பாடம், சிகிச்சையைப் பற்றிய மருந்துகளின் குணம் மூலிகை மர்மம், சரக்குகளின் குணாகுணம் முதலியவைகளைப் பற்றிக் கூறும் நூல், science book relating the qualities of curative medicines secrets of herbaceous plants, properties of medicinal drugs etc.

பதார்த்தகுணம், பதார்த்தத்தின் குணாகுணங்கள், மருந்துகள் சேர்க்கும் போது கிரமம் அறிந்து சேர்ப்பதற்கு இது அவசியம், அப்படித் தெரியாவிட்டால் நோய் நீங்காது. நோயாளிக்கும் அபாயம் நேரிடும். action and qualities of medicinal drugs. They must be properly understood. If in compatables are added danger may occur to the patient.

பதார்த்தக் கூட்டுமுறை, பொருள்களைச் சேர்க்கும் வகை, method of combining various drugs to prepare medicines.

பதார்த்தசார நூல், மருந்துகளின் சிகிச்சையும், ரோக நிவாரணங்களைப் பற்றியும் விவரிக்கும் வைத்திய நூல், a branch of medicine dealing with the application and operation of remedies, art of healing and scientific account of the tratment of diseases. It also treats of regulation of diet— Therapeutics.

பதார்த்தம், வஸ்துவினால் ஆக்கப்பட்ட பொருள், (in Metaphysics) all substances made up of mater, material substance that which underlies all phenomena; 2. கண்களால் பார்க்கப்பட்ட வஸ்து (lit) any visible thing; 3. உடம்பு அல்லது அவயவத்திற்கு அடிப்படை அல்லது காரணமான வஸ்து; (in Anatomy) the material of which an organ or body is made up; 4. தெய்வசக்தி பொருந்தியுள்ள வஸ்து, (in theology) that in which the divine attributes inhere or exist; 5. தின்பண்டம். eatables; 6. மூலிகை, drug; 7. கறி, vegetable; 8. போசன வஸ்து, food stuff; 9. வஸ்து, substance; 10. மூவகை மூலப்பொருள்கள், the three elementary substances; 11. உணவோடு கூடிய வஸ்து, accompainments for relish of food.

பதி, வேர், root; 2. நாள், day time; 3. இடம், place; 4. குதிரை, horse; 5. உறைவிடம், abode; 6. நாற்று, seedlings, cuttings.

பதிகம், பாசி, cryptoganic plants of small size floating on water such as algae, moss etc; 2. நீர்ப்பூடு, aquatic plants.

பதிகரம், நீர்ப்பாசி, water moss, duckweed.

பதிச்சம், வாலுளுவை, spindle tree — Celastrus paniculata.

பதிச்சியம், கருங்குவளை, black Indian water lily — Pontederia vaginalis.

பதிஞானம், தேவ அறிவு, knowledge of God; 2. துறவி, hermit, — குறிப்பு — தானே.... பிரகாசமும் தன்னையும் விளக்கி ஆன்மாவையும் விளக்கி, பரப்பிரமமாய் நின்று எல்லாப் பொருளையும் இனிது விளக்குவது, அந்த ஞானமாகிய பிரகாசத்தைப் பெற்றவர் அப்பதிப் பொருளை ஞான திருஸ்டியால் காண்பார்கள், இதையே முத்தியென்று சொல்வது, the wisdom which reveals the truth about one self, soul and other subs tances. One who possesses this faculity will see the God. This is called salvation.

பதிதல், பள்ளமாதல், forming depression; 2. ஆழ்தல், deepening as sunken eyes.

பதித்தல், அடுத்துதல், setting as setting false eyes or teeth; 2. வைத்தல், placing, putting; 3. பதிய வைத்தல், fixing.

பதித்திரி, உலைத் துருத்தி, smith's bellows.

பதிநாராயணம், வாத நாராயணம், which see.

பதியரம், சத்திசாரம், alkaline salt.

பதியம், பாசிப்பூடு, moss alge etc; 2. இலைப்பாசி, large leaved moss — Lemna obcordata; 3. பாசி, moss - Lemna.

பதிரன், செவிடன், the deaf.

பதில்சரக்கு, see பதிற்சரக்கு.

பதிவாகமூடல், காற்றுப் புகாத படிக்கும் ஆவி போகாதபடிக்கும் பொருந்தும்படி மூடுதல், covering with a vessel closely so that air may not enter into or vapour cannot escape out through the opening between the lids.

பதிவிளக்கு, சுடர் தைலம் தயாரிப்பதற்கு உபயோகிக்கும் விளக்கு, a lamp used in the preparation of medicated oils.

பதிவு, குனிவு, bent posture; *2.* சாய்வு, slanting position; *3.* அழுந்துகை, pressure; *4.* பள்ளம், depression; *5.* மனம் ஊன்றுகை, setting mind.

பதிற்சரக்கு, ஒரு மருந்திற்குப் பதிலாக உபயோகிக்கும் அல்லது பிரயோகப்படுத்தும் அதே குணமுள்ள பிறிதொரு சரக்கு, the drug which takes the place of some other drug because of its kindered properties, substitute — Succedanum, what supplies the place of or is used for something else.

பதினாலுவேக மறித்தல், அடியிற்கூறிய *14* வேகத்தைத் தடுத்தல்.

பதினாலுவேகம்; உடம்பில் இயற்கையாகவே ஏற்பட்டுள்ள பசி, தாகம், மலம், சலம், தும்மல், இருமல், விக்கல், கொட்டாவி, ஏப்பம், காற்று, சிரிப்பு, அழுகை, சந்தோஷம், துக்கம் முதலியவைகள், இவைகளை அடக்குவதால் பலநோய்கள் உண்டாகுமெனக் கருதப்படும், the fourteen involuntary actions — urgings — naturally attributed to the human body viz - hunger, thirst, defecation, urine, sneeze, cough, hiccup, yawning, belching, wind (passing out through anus) sleep vomitting, tears and semen. It is considered that suppression or obstruction of any of these natural urgings will being about diseases in the human system.

பதினாறாங்குட்டம், உடம்பழிந்து சீழ் கொண்டு தினவுமிகுந்து கை கால் விரல்கள் கழன்றுவிழும் ஓர் வகைப் பெருவியாதி, a kind of leprosy associated with constitutional disorder and marked by atrophy of the skin suppuration of the lesions, itching sensation, mutilation of the degits etc.

பதினான்காம்குட்டம், உடம்பு வீங்கி கறுத்து, கண்ணும் மூக்கும் வெளுத்து, இருமலை யுண்டாக்கு மோர்வகைக் குட்டம், a stage of leprosy characterised by swelling of the whole body, discolouration of the skin, paleness of the eyes and nose, cough etc.

பதினி, பதநீர், அதாவது பனைமரத்தின் பாளையினின்று ஒழுகுஞ்சாற்றை, புளிப்பேறா வண்ணம் சுண்ணாம்பு தடவி மண் குடுவையில் வாங்கும் ஓர்வகை தித்திப்பான நீர், the sweet juice serving as drink extracted from the spathes of the palmyra tree and drawn into a mud pot, the inner side of which is smeared or coated with chunnam to prevent formentation. See பனஞ்சாறு, பதனி.

பதினைந்தாங்குட்டம், கண் சிவந்து, உடம்பு நாற்றமெடுத்துப் புண்ணாகி, புழுக்கள் ஏற்பட்டு, கழுத்துக்கோணி, கால் விரல்கள் கழலும் ஓர்வகைக் குட்டம். a form of leprosy marked by inflammation of the eyes, strong offensive smell of the body from ulceration, microbes in the lesions distortion of the neck and mutilation of the digits.

பதினெண்குட்டம், பதினெட்டுவகைக் குட்டங்கள், the eighteen kinds of skin affections.

பதினெண் சித்தர், மூல வர்க்கப் பதினெட்டு சித்தர்கள் அவர்களாவார், முறையே; போகர், நந்தி, திருமூலர், புலஸ்தியர், இடைக்காடர், அகஸ்தியர், புண்ணாக்கீசர், பூனைக் கண்ணர், புலிக்கீசர், கொங்கணவர், அழுகண்ணி, பாம்பாட்டி, குதம்பை, கரூரார், காலாங்கி, அகப்பேய், தேரையர், சட்டை நாதர்.

2\. கக்கேயர் அதாவது புசுண்டர், கோரக்கர், போகர், மச்சமுனி, தன் வந்திரி, இராமதேவர், உரோமரிஷி சுந்தரானந்தர், சிவவாக்கியர், கடைப்பிள்ளை, புலிப்பாணி, பிலஸ்தியர், பவந்தர், கமலமுனி, கலசமுனி, பிரமரிசி, கருணாநந்தர்; the eighteen members of the original Siddhar's school viz-Bogar, Nandi, Thirumoolar, Pulasthiyar, Idaikkauder, Agastya, Punnakkisar, Poonai kannar, Pulikkeesar, Konganavar, Kaulangi, Agappei, Terayar and Sattanather.

NOTE: the names of the said eighteen members vary according to different writers who lived at different times, For full details see introduction Vol-I.

பதினெண்பாஷை, கடவுளால் ஆக்கப்பட்டது பதினெண் பாஷையெனத் தமிழர்கள் சொல்வது, அவையாவன: The Tamlians say that the following (18) eighteen languages were granted by the Diety.

1. திராவிடம், Tamil and its cognate Languages in South India.
2. அங்கம், Bengal proper.
3. வங்கம், Bengal province as a whole.
4. அருணம், Agra.
5. சீனம், North of India as China.
6. கொங்கணம், Konkon.
7. கோசலம், N.W. Provinces and Oudh
8. கௌசிகம், Cutch proper
9. மறாட்டம், Maharatta.
10. பாப்பாரம், Guzeratty.
11. சவ்வகம், Javanese.

12. மகதம், Bihar.

13. சிம்மளம், Singhalese.

14. சிந்து, Sindh.

15. சோனகம், Hindustani.

16. துளுவம், Tulu between konkan and canara.

17. கலிங்கம், தெலிங்கம், Northern circurs.

18. காம்போஜம், Cumboge.

பதினெண்மூலம், பதினெட்டு வகை வேர்கள், அவையாவன; the eighteen kinds of roots viz:-

1. சித்திர மூலம், Plumbago zeylanica.

2. எருக்கு, Madar — Calotropis gigantea.

3. நெருஞ்சி, cowthorn — Tribulus terrestris.

4. முருங்கை, moringa drumstick tree — Moringa ptery gosperma.

5. முள்ளி, Indian night shade — Solanum indicum.

6. மாவிலங்கு, lingam tree — Crataeva religiosa.

7. சங்கங்குப்பி, sangu plant — Cleodendron inerme.

8. தழுதாழை, wind killer — Cleodendron phdomoides.

9. குவளை, water lily — Pontederia.

10. கண்டங்கத்திரி, yellow berried night shade — Solanum jacquini.

11. பாதிரி, trumpet flower tree — Bignonia chelanoides.

12. வில்வம், india bael tree — Aegle marmelose.

13. தூதுவளை, three lobed night shade —

14. சிற்றாமல்லி, Jasminum angustifolia.

15. சுக்கு, dried ginger — Zingiber officinalis.

16. கரந்தை, sweet basil — Ocimum basilicum.

17. பேராமல்லி, long tubed Arabian jasmine — Jasminum sambac alias J. undulatum.

18. இராகவேகமுத்து (ஆமணக்கு) castor plant — Ricinus communis.

பதினேழாங்குட்டம், உடம்பு முழுவதும் வெளுத்துக் காட்டும் வெண்குட்டம், white leprosy in which several white patches will be found in several parts of the body.

பதின்மூன்றாங் குட்டம், உடம்பு சிவந்து உதடு வீங்கி, தொண்டை கட்டி, புண்ணில் சீழ் கோத்துப் புழு நெளியும் ஓர் வகைக் குட்டம், a form of leprosy marked by coppe colour of the skin, swelling of the lips affection of the larynx and the pharyx, ulceration with supuration attended with microbes.

பதுகரம், see பதுகரை.

பதுகரை, பதமுண்ணிப்பாலை.

பதுகளா, பழமுண்ணிப்பாலை, Adam's apple of the granese — Mimusops kanki.

பதுக்காயன், குள்ளன், dwarf — Short man.

பதுக்காய், உள்ளான் குருவி, snipes; 2. கூழை, shortness; 3. பருத்துக் குள்ளமாயுள்ளது, வளர்ச்சியற்றது; stunted growth.

பதுக்காரம், ஓர் வகைக்கும்மட்டி, a kind of bitter apple — Citrus colocynthis.

பதுக்கை, சிறு தூறு, small growth or off shoots of plants; 2. பாறை rock; 3. பாலைமரம், trees of deser 4. மாரியுள்ளான், a kind of snip much frequenting in the rainy seaso common snipe.

பதுபரணி, பெருங்குமிழ், coom tea — Gmelina arborea.

பதுமகம், தாமரை, lotus flower.

பதுமகண்டக ரோகம், (பதுமம் கண்டகம் = தாமரை +முள் தவளைச் சொறி, பிரம்மதண்டு சமூல சாறு. மேலே பூச இது திரும் a kind of skin disease where the skin is like that of frog or sand paper toad skin — Phrynoderma This is cured by applying the juice o mexican poppy and administering vitamin A or codliver oil see பதுமின கண்டகம்.

பதுமகாஷ்டம், துண மரத்தைப்போன்ற ஓர் வாசனைக் கட்டை, இது தென்னிந்தியா மாளவம் முதலிய இடங்களில் கிடைக்கும். a fragrant wood resembling toon grown in South India and Malwa.

பதுமகெந்தகம், தாமரைக் கிழங்கு, lotus root.

பதுமகுல்கந்து, வெண்டாமரைப் பூவினிதழ் உலர்ந்ததைக் கொண்டு

தயாரிக்கும் ஓர் யுனானிச் சர்க்கரைப் பாகுமருந்து, a confection of dried white lotus petals prepared in sugar or honey, candied white lotus prepared by Unani physicians.

பதுமகெந்தி, see பதுமகெந்தகம்

பதுமகேசரம், புன்னைமரம், poon tree — Alexandria laurel

பதுமக்காழ், தாமரை விதை, lotus seeds.

பதுமசாரிணி, ஓர் தாமரை, a kind of lotus; 2. வெளித் தாமரை, sky lotus — Plantago aquatica.

பதுமசோமாசீடம், தாமரைத்தாது, filaments, of lotus flower.

பதுமதந்து, தாமரைநாளம், the hallow stalk of lotus plant.

பதுமநாளம், தாமரைக் கொடி, lotus creeper 2. தாமரைத் தண்டு அல்லது தாமரை வளையம், lotus stalk.

பதும நிதி, தாமரையுருவாய்க் கிடக்கும் பொன், gold ores found in oval masses.

பதும நோய், ஓர் வகைக் கண்பில்லம், இதில் கண்ணின் மேலிமையைப் புரட்டிப் பார்க்க சிவப்பாய் சதை வளர்ந்திருக்கும்; சதை பில்லம், an eye disease of the eye lids marked by growth inside — Trochoma.

பதுமபத்திரம், தாமரையிலை, lotus leaf.

பதுமபத்திரி, வெளித்தாமரை, see பதுமசாரணி.

பதுமபந்து, சூரியன், the sun; 2. தேனீ, honey bee.

பதுமபர்ணம், see பதுமபத்திரி.

பதுமமணி, தாமரைக்கொட்டை, lotus nut.

பதுமமூலம், தாமரைக் கிழங்கு, bulbous root of lotus.

பதுமம், ஈயம், lead; 2. ஓர் குளிகை, lotus pill; 3. தாமரை, lotus plant — Nilumbium speciosium; 4. பதுமாகனம், which see; 5. (in palmistry) See பதுமரேகை; 6. ஓர் வகை மாணிக்கம், a kind of ruby; 7. (in Anatomy) முடியுறுப்பு ஐந்தினொன்று; one of the five organs of the head resembling lotus (oval) in shape; 8. (in ophthalmology) கண்ணிமையின் ரோகத்து ஓர் வகை பேதம், an eye disease of eye lid. See பதுமநோய்; 9. ஓர் வகை யோகநிலை, (in yoga philosophy) a posture in the practice of yoga.

பதுமரசாதி, அத்தினி சாதியாகிய பெண் சாதி நால்வகைகளி லொன்று, (in Erotic science) one of the four class i.e. last class of women divided according to their lust see பதுமினி.

பதுமராகம், கெம்பு, ruby one of the nine gems.

பதுமரேகை, கைரேகையிலொன்று, one of the lines in the palm.

பதுமரோகம், கண்ணிரப்பைக்குள் சிவப்பாய் சதை வளரும் ஓர் நோய், see பதும நோய்.

பதுமலச்சி, கடலை, Bengal gram.

பதுமாதீதம், மூன்றெழுத்தி லொன்றாகிய சவ்வு, (in Magic) one of the three mystic letters 'Cawvic'.

பதுமவீசம், பதுமாக்கம், see பதும மணி.

பதுமாசனம், ஓர்வித யோகாசனம்; see பதுமம்; 2. கோக்கோகத்தில் சொல்லியுள்ள ஓர் வித காமலீலை; இதில் சம்போகத்தில் பெண்மல்லாந்தபடி படுத்து தன் தொடைகளை மேல் தூக்கி முழங்காலை படித்தும் கால்களை குறுக்காகவும் வைத்திருப்பது. (in Sexual science). It is a posture in which the woman lying on her back raises her thighs upwards and flexes the knees with legs crossed horizontally in the air — Lotus posture. It falls under loose fit union.

NOTE:- This should not be confounded with the sitting posture adopted by a yogi. In his yoga practice according to yoga Philosophy. Ordinarly Hindus in their religious practice adopt this attitude while in prayers.

பதுமாடம், கடுகுரோகணி, black hele bore — Helleborus niger.

பதுமாதனம், பதுமாசனம், which see.

பதுமாந்தரம், தாமரையிதழ், petals of lotus flower.

பதுமார்க்கம், கவிழ்தும்பை, stooping leucus flower — Leucus procumbens allas Nepata indica.

பதுமார்க்கியம், see பதுமார்க்கம்.

பதுமாலயம், ஸ்ரீதேவி செங்கழுநீர் purple fleabane — Vernonia anthelmintica; 2. பொன்னாங்கண்ணி sessile plant Illecebrum sessile.

பதுமினி, பெண்சாதி நால்வகையுள் முதல் சாதி; Padmini is the first of the four classes of women classified according to their lust.

NOTE: (பதுமினி) She is the woman of the first or most excellent of the four classes into which the sex is distinguished. second being சித்தினி (chittny) wounderful one endowed with various talents and excellences; the thir

being *சங்கினி* (sanghini) resembling conch is of the middle class; the fourth *(அத்தினி)* resembling elephant is the lowest class; *2. உத்தம சாதிப் பெண்;* a chaste woman of sterling character.

பதுமுகம், *ஓரிருக்கை,* a seat.

பதுமை, *ஓரிதழ்த் தாமரை,* one petal lotus — lodinium suffruticosum.

பதுராந்தமாது, *பத்மினி சாதிப் பெண்* see *பதுமினி.*

பதுலிகம், *பெருங்குரும்பை,* aloe — Aloe hyacinthoides; *2. பனங்கொட்டை,* palmyranut.

பதுவை, *வலம்புரிக்காய்,* fruit of twisting stick — Helicteres isora.

பதை, *கடுகு,* mustard; 2. see *பதைத்தல்.*

பதைத்தல், *அவத்தைப்படல்,* suffering; *2. நடுங்குதல்,* trembling.

பதோற்பாலம், *வெடியுப்பு,* nitre — Potassium nitrate.

பத்தகேசரி, *கற்பூரம்,* camphor — Camphora officinalum.

பத்தங்கம், *செஞ்சந்தனம்,* red sandal; *2. தசாங்கம்,* anything consisting of ten parts or organs.

பத்தங்கி, *சப்பங்கி,* red wood tree — Caesaipinia sappan.

பத்தசந்தம், *போசனப்பிரியன்,* one who indulges in the luxuries of the table.

பத்தசாரம், *உணவின் சாரம்,* essence of food; *2. காடி நீர்,* fermented rice water: *3. தானிய சாரம்,* malt; *4. அன்னநீர்,* boiled rice water.

பத்தம், *உணவு,* food, *2. உண்மை,* truth as opposed to *அபத்தம்* false hood.

பத்தரா, *முசுமுசுக்கை,* rough bryony — Mukia scabrilla alias Bryonia scabra.

பத்தராசு, *அந்திமந்தாரை,* 4 o'clock plant which flowers at 4 p.m. — Mirabilis jalappa see *பத்திராட்சி.*

பத்தரிதருதம், *இலவங்கப்பத்திரி,* the cinnamon leaf.

பத்தரூபி, *கற்பூரம்,* camphor, see *பத்தகேசரி.*

பத்தர், *வெள்ளி,* silver; *2. தொட்டி,* tub; *3. இருவினைபந்தமுள்ள ஆன்மாக்கள்,* (in Philosophy) souls responsibe for both virtue and vice.

பத்தல், *தொட்டி,* tub; *2. நீர்ச்சால்,* water jar.

பத்தாங்குட்டம், *உடம்பு முழுவதும் கடுகைப் போல் வெள்ளை பற்றி நிற்கும் ஓர் குட்ட நோய்,* a form of leprosy marked by small white dots of the size of the mustard seeds all over the body.

பத்தாசி, *சர்க்கரைப் பாகினால் தயாரித்த மிட்டாய்,* a kind of sweet prepared from syrup.

பத்தாமிடம், *பூநீறு,* efflorescent salt found deposited on the soil of fuller's earth.

பத்தாம்பிறப்பு, *பத்தாவது குழந்தை,* the tenth child born to a woman; *2. பத்துமுறை புடம் போடுவதால் உண்டாகும் மருந்து,* calx or the product derived or obtained after a mineral has been subjected to violent heat or calcination ten times over.

பத்தாயி, *கொளும்பு சாராயம்* columbo arrack; *2. ஓர்வகைக் கற்கண்,* a kind of sugar candy; *3. ஓர்வகைக் கற்பூரம்,* a kind of camphor.

பத்தாயிகற்பூரம், see *பத்தாயி.*

பத்தாலகம், *நரிவழுக்கை,* diabetes plant — Gratiola monnieria alias Herpestes monnieria.

பத்தானதூபம், *தசாங்கப் பொடி அதாவது பத்து வகைச் சரக்குகள் சேர்ந்த பொடி;* any fumegation powder composed of ten drugs.

பத்தி, *இந்திரபாஷாணம்,* (in Chines medicine) one of the 32 kinds c arsenics.

பத்திசூலம், *ஓர்வகை சூலை நோ* disease attended with pin prick pai

பத்திடை, *ஆயிரப்பலம் கொண்* *நிறுத்தல் அளவு,* weighing mesu of 1000 palams.

பத்திநெறி, *பத்திமார்க்கம்,* path devotion; *2. கடவுளிடத்துள் அன்பொழுக்கம்,* religio observences in the love of God.

பத்திமம், *தாமரைத்தாது,* filaments lotus flower.

பத்தியக்கடுமை, *பத்தியக் கொடுமை* rigidity of diet.

பத்தியக்கட்டுப்பாடு, *பத்தியபந்த* restriction of diet N.B. diet inclu actions too.

பத்தியக்கறி, *பத்தியத்திற் பயன்படும் காய் கனிகள்,* vegetal and fruits useful for those on di

பத்தியக்காரி, *சிறுகீரை,* pig's gre — Amaranthus campistris.

பத்தியக்குறைவு, *பத்திய முறை விரோதமாக பல பண்டங்கள் சாப்பிடுவது,* improper diet ac against or contrary to principles diet non - observance of diet.

பத்தியக்குற்றம், அவபத்திய தோஷம், faults or disorders arising from non-observance of diet.

பத்தியக்கேடு, பத்தியத் தவறுதலில் ஏற்படும் நோய்கள், diseases that crop up due to non observance of diet.

பத்தியங்காத்தல், பத்திய முறைப்படி யிருத்தல், adhering to the restrictions of diet, obstenious living; 2. பத்தியங் கெடாதபடி யிருத்தல், guarding against the violation of dietetic principles.

பத்தியசிகிச்சை, பத்தியங் காத்தலினால் நோயைக் குணப்படுத்திக் கொள்ளும் ஓர் வைத்தியமுறை, treatment of diseases by dietetic measures only — Trophotherapy.

பத்தியத்தவறு, see பத்தியக்கேடு.

பத்தியத்தாழ்வு, see பத்தியக்குறைவு.

பத்தியநிபந்தனை, see பத்தியவிதி.

பத்திய நிர்ணயம், பிணியின் வன்மையும் நோயாளியின் உடம்பினிலைமையும் அறிந்து பத்தியத்தை நிச்சயித்தல், determining, the regimen in diet, taking into account or consistant with the virulence of the disease and the bodily nature of the patient at that time see பத்தியம்.

பத்தியநூல், பத்தியங்காத்தலைக் கூறும் நூல், a treatice of book on dietary — Bromatology.

பத்தியபதார்த்தம், பத்தியத்திற்குதவும் உணவுப் பொருள்கள், article used for those on diet. see பத்தியா பத்தியம்.

பத்தியபாகநூல், பத்திய உணவைக் குறித்த நூல், book on the preparation of food for those on diet.

பத்தியமாயிருத்தல், see பத்தியங்காத்தல், observance of regimen of diet.

பத்தியபேதம், இரண்டு விதமான பத்திய வகைகள் அவையாவன; 1. இச்சாபத்தியம்; 2. கடும்பத்தியம், while taking medicine two kinds of diet are observed 1. Itchpathiyam, 2. Kadumpathiyam or salt free diet.

பத்தியப் பெருமை, பத்தியம் இருப்பதின் சிறப்பு அல்லது மேன்மை மருத்துவர் விதித்த பத்தியம் மாறினால் மருந்துகளின் பயனும் வீணாயொழியும், அஃதன்றியும் உடம்பிலுள்ள தாதுக்களில் எலும்புவரை முன்னுள்ள நோய்கள் முன்னையிலும் மிகுதியாகவே தோன்றி வருத்தும், பத்திய முறை தவறாதாயின் மருந்து உபயோகம் உடற்குறுதியாவதுடன் அவிழ்தங்கட்கும் நன்மதிப்புண்டாம். greathness and usefulness of observing diet; if one doesnot observe the diet prescribed by the physician, the medicine will not act, not only that the disease in the body will be increased and aggravated and cause more suffering, on the other hand if strictly observed not only the disease will disappear the body gets strengthened but the physician and medicine will get good name and be held in high estimation.

"பத்தியத்தா லுண்டாகும்
பண்டிதற்குப் பேராண்மை
பத்தியத்தா லுண்டாகும்
பாண்டிதங்கள் — பத்தியத்தை
விட்டார் பிணிவகைகள் வித்தரிக்கும்
விட்டிடலை
விட்டாற் பறக்கும் வினை"
— தேரன் வெண்பா செய்-600.

பத்திய முரிச்சான், அகத்தி, sesbane — Sesbania grandiflora.

பத்திய முரித்தல், பத்திய முறை அனுசரிப்பதைவிடல், breaking off or discontinuing the observance of diet.

பத்தியமுறிவு, see பத்தியக்கேடு.

பத்தியமுறை, see பத்திய விதி rules and principles of diet.

பத்திய மூலிகை, காய கற்ப சிகிச்சை காலத்தில் கற்ப மருந்து சாப்பிடும் போது உதவும் பத்திய மூலிகைகள், அவையாவன: 1. கோரக்கர் மூலி; அதாவது கஞ்சா; 2. கஞ்சாங்கோரை; 3. விடதாரி, 4. கருஞ்சூலி, 5. கடுக்காய்; 6. வெண்காரை, 7. எட்டி; 8. துவரை; 9. பொன்னாவிரை, 10. ஏறழிஞ்சில்; 11. கரும்பசளை; 12. குட்டித்தக்காளி, 13. கருந்துளசி, 14. பேராமுட்டி, 15. ஆடையொட்டி, 16. பாவட்டை, 17. கையாந்தகரை, 18. நெல்லி, 19. கருணைக்கிழங்கு, 20. புளியரணை; The following herbs can be used in diet by those who take medicine for rejuvenation; Indian hemp; Ocimum alba Mimosa cineria, Karunsooli, gallnut, Vensarai, ruxvomica, red gram, tanners cassia, erazinil, Indian spinach (black) kuttithakalli, black Ocimum sanctum, Pavonia odarata, sand binder, pavetta indica, eclipse plant, Indian gooseberry, yam and Indian sorrel.

பத்தியம், மருந்திற்கிசைந்தவுணவு, regimen or regulation of diet. see பத்திய நிர்ணயம்; 2. கடுக்காய் மரம், gall nut tree; 3. போசனம், food; 4. பூவாது காய்க்குமரம், bearing fruit without flowering eg. fig.

பத்தியம், இதில் தேகபலம், மருந்து பலம், பிணியின் வன்மை, தேக நிலைமை, தேக சுபாவம், கால பலம், சீதோஷண நிலை முதலியவைகளை அனுசரித்து அதற்கு தக்கப்படி இலகு பத்தியம் கடும் பத்தியம், நிர்ணயிக்க

வேண்டும், தெரியாவிடில் தெரிந்தவர்களிடமாவது கேட்டு அதன்படி நடக்க வேண்டும். the sort of diet to be observed either simple or rigourous depends on various factors such as patient's strength and nature, nature of the disease, quality of medicine, time, climate etc. If one cannot come to a conclusion he must consult experienced men and observe diet to get rid of the disease.

பத்தியம் பிடித்தல், see பத்தியமாயிருத்தல்.

பத்தியவிதி, பத்தியம் இருக்கும்போது அனுசரிக்க வேண்டியவிதிகள் — பத்திய முறை

1. இச்சாப்பத்திய விதி.

''உலகிலிச்சாப் பத்தியங்கள் முர்கூர
மாங்கா
யலகினமைக் காய்கொத்தவரை -
கலகமுனி
மற்றவகை கூஷ்மாண்ட மாகடுகென்
னென்றோது
மிந்தவகை நீத்துண்பதே''
— தேரன் தைலவர்க்கச் சுருக்கம்.

இச்சாப்பத்தியம் என்பது முள்ளுள்ள பாகல், மா, கத்தரி, கொத்தவரை, வெள்ளைப் பூசனி என்னும் இவற்றின் காய்கள், அகத்திக்கீரை, மந்தவகைப் பதார்த்தங்கள், கடுகு, எள்ளு இவைகளை நீக்கியுண்பதாம், போகத்தையும் நீக்க வேண்டும் என்ற விதியுமுண்டு. see பத்தியாபத்தியம்.

2.உப்பில்லாப் பத்திய விதி:

''உப்பினா எப்பானா
ளோட்டுப்புண் பின்போம
வப்பி டப்பானா ஸாம்பிரமேற் -
றுப்பினா
டொப்பிராப் பாரதமீ துற்றதை
லாதிகளுக்
குப்பிராப் பத்தியமீ தோர்''
— தேரன் தைலவர்க்கச் சுருக்கம்.

தனக்கு உவமையில்லாத பாதரசத்திற்கும்' இது சொந்த தைலாதிகளுக்கும் உப்பில்லா பத்தியம் வைத்த நாளளவும் மறுபத்தியமிருந்து, பின்னாளில் உப்பு வறுத்துக்கூட்டி அதற்குப் பின்னால் பின்னாட்களில் முறையே ஓமப்பாலிட்டு மூழ்கி, புளி சேர்த்து, பசுநெய் தேய்த்து ஸ்நானம் செய்யவும், rules and regulations to be observed while taking medicine.

1. Itchapathiyam avoid taking bitter gourd, mango, brinjal, cluster beans, ash pumpkin, sesbania (agathi), articles that do not easily digest but cause flatulence and loss of appetite, mustard, gingelly. See பத்தியாபத்தியம்.

2. Salt free diet (Kadum pathiyam) for all medicines containing mercury salt must be avoided as long as the medicine is consumed and for the same number of days after stopping the medicine. Then bath must be taken smearing the head and body with the paste of omum and cow's milk, fried salt can be used in diet. After three days bath must be taken with cow's ghee. Then tamarind can be used in diet.

NOTE:- For medicines containing iron itchapathiyam must be observed, for those containing mercury and allied salts, salt free diet and for those containing copper tamarind free diet must be observed.

பத்தியவுப்பு, கட்டுப்பு, இந்துப்பை பொற்றிலையின் சாற்றினால் இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி சீலை மண் செய்து உலர்த்திப் புடமிட கட்டும். இதை பத்திய காலங்களில் கறிவகைகளில் சிறுகப்போடவுதவும், consolidated salt used while observing diet, consoliation is done in the following manner. A sufficient quantity of Sindh salt ground with juice of Bee plant (eclipse plant) for 6 hours (six hours) is made into several discs dried luted and subjected to fire as is done in the case of calcination. These discs will be found to be a compact mass, when they can be used in the preparations of diet for patients.

பத்தியாபத்தியம், நோயாளிக்கு உதவும், உதவாத பண்டங்கள்; உதவும் அல்லது ஆகும் பொருள்கள்; அவரைப் பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, தூதுளங்காய், மணத்தக்காளி வற்றல், சுண்டைக்காய் வற்றல், பொன்னாங்கண்ணி, சிறுகீரை, கருவேப்பிலை, துவரை, வயற்பயறு, சிறு பயறு, மிளகு, சீரகம், வெந்தயம், லவங்கம், லவங்கப்பட்டை, ஏலம், சாதிக்காய், சருக்கரை, பசுபால், பசுநெய், கவுதாரி, காடை, உடும்பு, என்பனவாம். அல்லாமலும், பீர்க்கு, புடல், கத்தரிப் பிஞ்சு, மாவடு, நெல்லிக்காய், முயல், ஏரி மீன், அயிரை, தேன், சுறா, காட்டெலி, வெள்ளாடு, முளைக்கீரை, காயப், உப்பு வறுத்துக் கொட்டிவிட்ட, அச்சட்டியில் முறித்தமோர், சிறுபுளி, தாம்பூலம் (புகையிலை நீங்கிய) இவைகளும் ஆகும் என, சிலர் சொல்வார்கள்.

2. பத்தியவிலக்கான பொருள்கள் அல்லது உப பொருள்கள்:

''இலவணம் புளிகடுவெண் ணா
முதலாக
வொவொரு குணமா யொழிவ
- நவிலிறைச்சி
கூழ்ப்பாண்ட மச்சம்பெ
கோத்திரங்கொள் பிரமபத்திரி
தீழ்ப்பாகு மெத்தவிது ஈ''
— தேரன் வெண்பா, 6

உப்பு புளி, கடுகு, எள் என்னுமிந் நான்கு முதலாக மருந்து முறைக்கேற்ப ஒவ்வொன்றாக நீக்கத் தகுந்தவைகளை நீக்கவும்; மேலும் இறைச்சி வகை, பூசணிக்காய், மீன் வகை, பெண் போகம், வரகு, கொள்ளு, புகையிலை இவைகளை நீக்க வேண்டும். See பத்திய நிர்ணயம், பத்தியம், பத்தியவிதி.

Substances that can be used for those on diet and substances that should not be used for those on diet.

Substances that can be used are: tender kitchen garden lablab or country bean tender drumstick, fruit of three lobed night shade (solanum trilobatum) dried fruit of Solanum nigrum, dried fruits of (Solanum verbacifolium) Chundai, sessile (Alternathera or llecebium sessile) pigs green (Amaranthus campestris), red gram (Cajanus cajan) seeds of Phaseolus trilobus and Phaseolus aureus, Phaseolus mungo, black pepper (Piper nigrum) cumin (Cuminum cyminum) seeds, fenugreek seeds, (Trigonella foenum graecum), clove (flower bud of Jussiaea suffruticosa) bark of cinnamon (Cinnamomum zeylanicum) fruit or seeds of cardamom(Ellectaria cardamomum) nut meg (Myristia fragrans), cane sugar, cow's milk and ghee, Indian partridge (Perdix orientalis), quail (coturnix) and guanu (Sacerta iquana). Some advocate the use of ridged gourd, snake gourd, tender brinjal and mango, Indian gooseberry, rabbit, fresh water fish as herring fish (Cobitio thermalis) etc., shark, wild rat, goat. Ammaranthus (young green), asafoetida, heated butter milk, tamarind and betel (without tobacco). Substances that should not be used are:

Salt, tamrind, mustard and gingelly, any of them should be prohibited as warantted by the medicine taken. Further flesh, fish ash pumpkin. sexual intercourse, kodo millet (Paspalum scrobiculatum) horse gram (Dolichos biflorus) and tobacco. See பத்தியவிதி பத்தியம் and பத்திய நிர்ணயம்.

பத்திரகம், இலை, leaf: 2. சந்தனம், sandal; 3. இறகு, feather; 4. வீழி, which see.

பத்திரகாளி, இராசபலை, king's tonic— Paederea foetida.

பத்திரகாளிரசம், சகல சுரங்களுக்குமாக பத்திர காளியால் கூறப்பட்ட ஓர் ஆயுள்வேத மருந்து, an Ayurvedic medicine for fevers which is supposed to be told by Goddess Badirakali.

பத்திரகெந்தம், தாளிசபத்திரி, East Indian plum — Flacourtia catapharacta.

பத்திரங்கம், செஞ்சந்தனம், red sandal wood — Pterocarpus santalinus.

பத்திரசந்தனி, நன்னாரி, Indian sarsaparilla — Hemidesmus indicus.

பத்திரசியம், சந்தனம், sandal.

பத்திரசிரேட்டம், வில்வம், Indian bael — Aegle murmelos.

பத்திரசுரம், எழுத்தாணிப்பூடு, style plant — Microrhynens sarmentosus.

பத்திரசூசி, முள்ளு, thorn; 2. இலைமுள், leaf thorn.

பத்திரதருணி, செவ்வந்தி, chemomile flower — Chrysanthemum roxburghii.

பத்திரதாருகம், தேவதாரு, deccany deodar, bastard sandal — Erythroxylon monogynum.

பத்திரதாலி, சாதிமல்லிகை, Arabian jasmine — Jasminum sambac; 2. சாதிப்பூ, spanist jasmine — Jasminum grandiflorum.

பத்திரதாளம், பத்திரதானம், இலைக்கட்டு, application of leaves on an ulcer or boil, abscess etc.

பத்திரபதி, சிற்றாமுட்டி, ceylon sticky mallow — Pavonica zeylanica.

பத்திரபலா, பத்திரபாலா, பலத்தைக் கொடுக்கு மூலிகை.

பத்திரபாணி, பூசிணி, ash pumpkin.

பத்திரமஞ்சம், ஓர் நார்ப்பூடு, a variety of saccharum — Saccharum munja.

பத்திரமடந்தை, நாய்ப்பாகல், buffalo carolah — Momordica hispida, alias Bryonia mysorensis.

பத்திரமுத்தக்காசு, கோரைக் கிழங்கு, nut grass root - tuber cyprus rotundus.

பத்திரமுஸ்தை, நாகமுத்தக் காசு, அதாவது நீண்டகோரை, straight sedge — Cyprus pertinus.

பத்திரம், இரும்பு, iron; 2. பொன், gold; 3. இலை, leaf; 4. அழகு, beauty; 5. இறகு, feather; 6. எருது, buffalo, ox; 7. பூவிதழ், flower petal; 8. மலை, mountain; 9. மெல்லியதகடு, thin metal foil; 10. சௌக்கியம், health; 11. யானை, elephant.

பத்திரயௌவனம், இலைக்கொழுந்து, tender leaf; 2. இளந்தளிர், young shoots.

பத்திரவாகம், பட்சி, bird.

பத்திரவீரியகம், பிரம்புசெடி, rattan plant; 2. கோணாமூங்கில், straight bamboo.

பத்திரா, குமிழ், coomb teak — Gmelina arborea.

பத்திராக்கியம், தாளிசபத்திரி, see பத்திரகெந்தம்.

பத்திராங்கம், ஊமத்தை, datura — Datura stramonium; 2. செஞ்சந்தனம், red sandal wood — Pterocarpus santalinus; 3. இலவங்கப்பட்டை, Cinnamonbark — Cinnamomum zeylonicum.

பத்திராசம், நாவல், jamoon tree — Eugenia jambolina.

பத்திராசனம், கருங்காலி, ebony — Acacia sundra; 2. ஓர்வித யோக நிலை, one of the postures in the yoga practice.

பத்திராசியம், சந்தனம், sandal wood.

பத்திராசிரம், கொடிச் சண்பகம், creeper champak — Pergularia minor.

பத்திராசிரயம், see பத்திராசியம்.

பத்திராசிலியம், see பத்திராக்கியம்.

பத்திராஞ்சனம், மை, collyrium, black paint.

பத்திராட்சம், பத்திராட்சக் கொட்டை, nut of the 4 o'clock plant.

பத்திராட்சி, அந்திமந்தாரை, அல்லது அந்திமல்லிகை, அதாவது சாயுங்காலத்தில் பூக்கும் செடி, இது ஓர் மூலிகைச் செடி, மஞ்சட்பூ ஓர் இனம், சிவப்பு மற்றொரு வகை, அன்றியும் சிவப்பில் மஞ்சள், வரி வாய்ந்த வேறு இனமும் உண்டு, வெள்ளைப் பூ மற்றொரு இனம், இப்படி பல உண்டு, இதன் வேர் அடியில் கிழங்கு முண்டு, இது மேற்புறம் கருப்பாயும், வளையமிட்டவரி படர்ந்துமிருக்கும், உட்புறம் சிறிய வெண்மை அல்லது சாம்பல் நிறம், முதிர்ந்த கிழங்கு கடினமாயும், இளங்கிழங்கு தோலைப் போல் மிருதுவாயு மிருக்கும், சிறிது குமட்டும் வாசனை, ருசிக்க சிறிது தித்திப்பாயும் விருவிருப்பாயுமிருக்கும், இக்கிழங்குக்கு விரேசன குணமுண்டு, இதன் இலைகள் கட்டி, கொப்புளம் இவைகளுக்கு வெதுப்பி வைத்துக் கட்டப் பழுத்துடையும், சீழ் கொள்ளாவிடின் அழுந்திவிடும், இக்கிழங்கைச் சமையல் பாகப்படி செய்து சாப்பிட மூலம் போம், evening jasmine, four o'clock plant — Mirabotis jalappa alias M. dichotoma. It is a herbecious plant with flowers of varied colours — white yellow crimson and various double colours, root underneath is cylindrical above, and tapering below, aged ones ie roots of aged plants are hard and those of young plants are of leathery consistence, root purgative like jalap, leaves used as a poultice in abscess and boils which subsides if not supurrates quickly. The root when cooked and eaten as curry proves a good remedy for piles.

பத்திராதி, ஆகாச கருடன், sky root — Bryonia epigea.

பத்திராத்தியம், திப்பிலி மூலம், root of long pepper.

பத்திராபகுலம், பத்திராபருவம், பூசபத்திரி, an unknown plant.

பத்திராவதி, பெருங்குமிழ், comb teak — Gmelina arborea.

பத்திரி, இலை, leaf; 2. குதிரை, horse; 3. பறவை, bird; 4. சாதிப்பத்திரி, mace; 5. தாளிசபத்திரி. see பத்திராக்கியம், 6. வில்வம், bael tree — Aegle marmelos.

பத்திரிகம், சீரகம், cumin seed Cuminum cyminum.

பத்திரிகா, வெள்ளை நாகணம், white croton plant; 2. இருள்விடுசெடி, an unknown plant.

பத்திரை, நற்பசு, gentle cow; 2. அவுரி. indigo plant — Indigofera tinctoria; 3. மஞ்சள், turmeric — Curcuma longa; 4. கீரிபுரண்டான் செடி, mungoose plant — Indian snake root — Ophiorrhiza mungos.

பத்திரோல்லாசம், இலைத்தளிர், tender leaf, young shoot.

பத்தினி, பதிவிரதை, chaste woman.

பத்தினிமாது, சிவகமூலி, அதாவது சீந்தில், moon creeper — Menispermum cordifolium.

பத்தினியாள் அளித்த பிள்ளை, பத்தினிக்குப் பிறந்த குழந்தை, child born to a chaste woman.

பத்து, பற்று, medicinal coating.

பத்துக்காலோன், நண்டு, crab (ten legged).

பத்துக்கால்மன்னன், See பத்துக்காலோன்

பத்துமகெந்தஞ்சம், See பத்மகெந்தஞ்சம்

பத்துநாடி, உடம்பினுள் பிராணனுக்கு ஆதாரமாயுள்ள பத்து நாடிகள், the ten vital nerves or arteries in the body essential for existence, see தசநாடி.

பத்துமணிக்கேசாசம், தாமரைத்தாது filaments of lotus.

பத்துமேகம், சிலேட்டுமத்தால் உடம்பில் ஏற்படும் பத்துவகை மூத்திரமேக நோய்கள் அவையாவன; the ten kinds of urinary diseases arising from the aggravated phelgm humour in the system viz:-

1. உத்தமன், Uthaman.

2. வித்தகன், vithagan.

3. மயில்நாகு, Mayilnagu.

4. சுக்கிலன், Sukilan.

5. பிராட்டி, Piratti.

6. பேயன், Peyan.

7. சித்தன், Sithan.

8. குடோரன், Kudoran.

9. அகோரன், Akoran.

10. இலவணன், Ellavanan.

பத்துரோசனம், நாரத்தை, citron, bitter orange — Citrus aurantium bigaradia.

பத்துவண்ணம், பத்துதடவை, ten times; 2. பத்து நிறம், ten colours.

பத்துவயது, வாலை, the Goddess Sakthi appearing like a girl of ten years.

பத்துவர்ணம், பத்து மாற்றுப் பொன், அதாவது தங்கம், pure gold of ten mattru or 24 carats.

பத்துவனேஷ்டம், மிளகு, pepper.

பத்தூரம், பொன்னாங்கண்ணி, sessile plant — Illecebrum sessile.

பத்தெரு, பத்து எரு முட்டை, ten cow dung cakes.

பத்தெருபுடம், பத்து எரு முட்டையைக் கொண்டு போடும் மருந்துப்புடம், calcination effected with the aid of ten cow dung cakes.

பத்தை, வெந்தோன்றி, white November plant — Gloriosa suberba; 2. மூங்கிற்பத்தை, bamboo splint.

பத்தைகட்டல், முறிந்த எலும்புக்கு மூங்கிற்பத்தை வைத்துக் கட்டுதல், bandaging with bamboo splints for broken or fractured bone.

பத்தொடு எட்டுக் கொள்ளல், பத்துடன் எட்டு சேர்த்தல், இது வாசிப்பழக்கத்தைக் குறிக்கிறது போலும் (உ-ம்).

"நேசமுடன் பத்தோடு எட்டுங்கொண்டு நெடுங்காலம் வாழ்ந்திருப்பான் புவியின் மீதில்."

adding eight to ten, probably referring to the scientific breathing of yogis.

பத்மகம், ஓர் வகைமரம், a kind of tree.

பத்மகெந்தஞ்சம், தாமரைக்கிழங்கு, lotus root.

பத்மகேசரம், தாமரைத்தாது, filaments of lotus flower.

பத்மம், பத்துமம், தாமரை, lotus.

பத்மபத்திரம், பொன்வண்ணச்சாலி, an unknown plant.

பத்மாசனம், ஒரு யோகநிலை, a posture in yoga practice.

பத்மாட்சம், தாமரைமணி, lotus beads or seeds.

பத்மினி, see பதுமினி; 2. 9 அல்லது 10 மாதத்திய கருப்பிண்டம், foetus of 9 or 10 months old; 3. வழலை, mystic salt of alchemist.

பத்மினிகண்டகம், தாமரைச் செடியின் முட்களைப் போல் உடம்பின் தோலைப் பற்றி உண்டாகும் ஓர் நோய், தவளைச் சொறி, a skin disease marked by thickening and keratinisation of the skin, follicular and papular eruptions and degeneration of sebaceous and sweet glands toad skin — Phrynoderma See பதுமகண்டகரோகம்.

பத்மினிசாதிப் பெண், நால்வகைச் சாதிப் பெண்களில் முதல்சாதி, உத்தம சாதிப் பெண், see பதுமினி.

பத்மினிசியா, see பத்மாட்சம்.

பத்மினிசெயநீர், 9 அல்லது 10 மாதத்திய கருப்பிண்டக் கருவினின்று தயாரிக்கும் செயநீர், a pungent liquid extracted from a foetus of 9 or 10 months old.

பநசம், பலாமரம், jack tree — Artocarpus integrifolia.

பந்தகம், பந்தம், கட்டு, bandage; tie.

பந்தக்கினம், கண்டில் வெண்ணெய், which see.

பந்துசாரம், ஓர் வகை வைரம், a species of diamond.

பந்தநாடி, இழுத்துப் பிடித்தநாடி, strained pulse.

பந்தம், அழகு, beauty; 2. கட்டு, bandage; ligature; 2. பாசம் attachment to worldly objects; 4. திரட்சி, lump — mass; 5. மயிர் முடி, hair lock; 6. முடிச்சு, knot; 7. சம்பந்தம், relation; 8. பொன், gold; 9. பெருந்துத்தி, large bellows; 10. மலம், faeces; 11. மலக்கட்டு, obstruction to the free passage of stock 12. சம்பந்தம், connection of the soul with matter; 13. ஆத்ம சம்பந்தம், spiritual bandage.

பந்தரம், காண்டக பாஷாணம், an unknown mineral poison; 2. கற்கடக பாஷாணம், one of the 32 kinds of native arsenic

பந்தரி, *பிடா லவணம்,* a prepared salt.

பந்தல், *பிடிப்பு,* catching as in *வாதப்பிடிப்பு,* rheumatism.

பந்தல்கத்திரி, *வெள்ளரிக்காய்,* cucumber.

பந்தவரிசை, *குதிரைப்பல் பாஷாணம்,* red orpiment — Arsenicum rubrum.

பந்தற்பூ, *இலுப்பைப்பூ,* mowah flower — Bassia longiflora.

பந்தனம், *கட்டு,* tie; *2. தடை,* obstruction; *3. மறியல்,* suppression as urine or stool; *4. விசி,* ligature; *5. வளையக்கூடிய இழுவற்ற தடிப்பான சவ்வுக்கயிறு,* any flexible in elastic tough fibrous band; *6. எலும்புகளை பிணைக்கும் கடினமான கயிறு போன்ற வஸ்து,* a strong compact substance serving to bind one bone to another — Ligament; *7. அரைஞாண்;* waist string; *8. கட்டு,* fastening binding; *9. சிறைப்படுத்துகை,* restricting or rest raining the actions or movements as of davils, spirits, dieties etc; *10. தினை,* millet.

பந்தன், *சிர்பந்த பாஷாணம்,* a kind of prepared arsenic.

பந்தாதி, *கத்தரிக்காய்,* brinjal — Solanum melongena.

பந்திபந்தனா, *ஆத்தி மல்லிகை,* an unknown plant said to be useful in rejuvenation.

பந்திடலின் பழம், *எலுமிச்சம் பழம்,* lime fruit — Citrus aurantifolia.

பந்தித்தல், *கட்டுதல்,* binding; *2. ஆன்மாவை பந்தத்திற் குள்ளாக்குதல்,* connecting the soul with matter.

பந்தியம் கூறுவாள், *கொசு,* mosquito.

பந்திவிட்டோடல், *நோய் நீங்கல்,* getting rid of the disease.

பந்துகம், *ஓர் பூடு,* Penta peles phoenicea.

பந்துபந்தாய்விழல், *கூட்டோடே விழல்,* falling in lumps as round worm from the intestines.

பந்துமுலை, *பப்படாம்,* see *பற்பாடகம்.*

பப்பரப்புளி, *பெருக்கமரம், பார்ப்பாரப்புளி,* brahmin tamarind — Adansonia digitata see *பொந்தம்புளி.*

பப்பரமுள்ளி, *குத்துச்செடி, கண்டங்கத்திரி,* brahmin mully, Indian night shade — Solanum indicum.

பப்பரம், *பூர்வக்கூச்சரம்,* ancient Guzerat.

பப்பளி, See *பப்பாளி.*

பப்பாளிப்பால், See *பப்பாளி.*

பப்பளிமாசு, *பம்பளிமாசு,* which see

பப்பாயி, *பப்பாளி,* which see.

பப்பாளி, *பப்பாளி மரம்,* இதற்குப் பப்பாயி என்றும் பெயர்; இது 20-30 அடி உயரம், கிளைகள் கிடையாது, இலைகள் மாறி மாறியிருக்கும், காய்கள் நீளம்; ஐந்து பற்கள்; பூவினுட்பக்கம் ஐந்து பிரிவினையுடையது, மஞ்சள் நிறம், காயினின்று பிசுபிசுப்பான பால் போன்ற ரசம் வரும்; காய் பழுக்கப்பழுக்க பால் குறைந்து போகும் 3 வருஷத்திற்குள் காய்க்கும், இது ஒழுங்காக வளர்ந்து பனை முதலியவைகளைப் போல் மட்டைகள் விடும். இலைகள் ஏழு பிரிவினையுள்ளதால் இம்மரத்தை எளிதில் அறியலாம். இதன் இலை ஆமணக்குச் செடியின் இலையைப் போலிருப்பதால் இதற்குப் பரங்கி ஆமணக்கு என்றும் பெயர், காய் பலாக்காயைப் போல் தொங்கும், தேங்காயைப் பார்க்கிலும் பருமனுடையது, காயை மாமிசங்களை மிருதுப்படுத்துவதற்காக உபயோகப்படுத்துவார்கள், குழந்தைகளுக்கு இதன் பாலை எடுத்தும் உபயோகிக்கலாம், சிலர் ஊறுகாயும் போடுவார்கள். பால், வயிற்றுக் கிருமிகளை வெளிப்படுத்தும்.

இதன்பழம் வெயிற்காலத்தில் சாப்பிட உருசியாயிருக்கும், காயைக் கறியோடு சமைப்பார்கள், இதைப் பச்சடியாகவும் காடி சேர்த்துச் செய்வார்கள், காய், பழம் கருவைக் கரைக்குந் தன்மையது, ஆகவே கருப்பினிகளுக்கதவாது, இதன் பாலைக் கருப்பைக்குள் நுழைத்துத் தடவலால் கருகரையும்; இதன் பாலை சர்க்கரையில் கலந்து கொடுக்க; குன்மம், வயிற்றுவலி, சொறி இவைகள் போம்; பழத்தை மேகப் படை, வண்டுகடி, படர்தாமரை இவைகளிற் பூசக் குணமுண்டாகும், காயினால் உடம்பின் வாதவலி நீங்கும். பெண்களுக்குப் பால் சுரப்புண்டாகும், சூதகச் சிக்கல் ஒழுங்குபடும், வயிற்றுக்கிருமி சாகும், காய்ப் பாலைத் தேனோடு கூட்டி வெந்நீரும் கலந்து சாப்பிட மலக்கிருமி வெளியாகும், பாலை தேள் கொட்டின விடத்தில் தடவ விஷ மிறங்கும், இலையை வதக்கி நரம்புவலியுள்ள இடங்களிற்போட வலி நீங்கும், காயைக் கடலைப் பருப்புடன் சேர்த்து சமைத்து சாப்பட உடம்புவலி போம், — Papaw mango Papaya — Carica papaya. The tree is 20-30 ft. high without branches, leaves alternate, fruits long, oblong, calyx five toothed,

corolla divided into five segments yellowish. The fruit secretes a milky. viscid juice which gradually found decreased as fruit gets ripened. The tree is fast growing and bears fruit in three years. it grows straight and erect, leaves like palmyra are seven partite and palmate and so it can be easily recognised and resemble those of castor plant the tree is known as foreign castor oil plant. The fruit is found suspended like the jack fruit and is much larger than a cocoanut, it is used for making meat tender and soft, its fresh milk may also be given to children and the fruit itself is pickled. The riped fruit is best for eating during the summer, when green it is used by natives for curry. it is cut into small pieces and served by mixing it with vinegar salt and pepper. It is a palatable dish. It has a tendency to cause abortion and as such should not be taken pregnant woman. The milky juice of the plant is applied locally to the osuteri with the view of inducing abortion, mixed with sugar, it forms a useful remedy in cases of dyspepsia, colic, scabies etc. The milk from the fruit is anthelmintic. The fruit or the juice is applied externally for ringworm, eczema and other cutaneous affections. The green fruit is a good lactagogue and is used with great advantage in rheumatic affections and amenorrhoea. The juice of the fruit mixed with honey and a little water. when taken internally is said to kill worms in the intestines. The milky juice is an antitode to scorpion sting, the leaves gently heated and applied locally is said to cure neuralgic pain. The green fruit mixed with the pulse of bengal gram boiled and used as curry is supposed to remove bodily pain.

NOTE:- This remarkable plant was first introduced from America but is now found all over India. the fruit has the extraordinary power of hastening the decay of muscular fibre, when the latter is exposed to its influence, the juice is also found to have similar properties. In a tropical climate like India, there should be atleast one tree in the backyard of each house. The leaves are employed by negroes to wash linen instead of soap. Anthelmintic virtues have also been attributed to its seeds which have a pungent taste. It is believed to have emmenagogue.

பப்பிலி, *சுருள் பட்டைக்கொடி*, a creeper — Ventiligo Madras patanam.

பாமரம், *வண்டு*, beetle.

பம்படாயம்,
மூன்றெழுத்திலொன்றாகிய கிலி, (in Magic) one of the three mystic syllables 'kili'.

பம்மந்திராய், *இதன் இலை பிரசவ அழுக்கு, மாதாந்திர உதிரச்சிக்கல், உதிரக்கட்டை வெளிப்படுத்தும்*, spreading chickwood - molling a parriflora.

பம்பம், see *பம்பந்திராய்.*

பம்பரத்தி, *காமாதுரமுள்ளவள்*, a passionate woman; **2.** *ஆடுமாலை*, one who does not stay at one place.

பம்பரை, *ஓர்பலா*, a kind of tree.

பம்பவெட்டி, *ஓர்வகை மரம்*, a kind of tree.

பம்பவெட்டி, *ஓர்வகை மரம்*, a kind of tree.

பம்பளிமாசு, *பெருநாரத்தை*, batavian orange — Citrus decimana (typica), in taste some whate resembles sweet orange, the juice of this fruit cures thirst biliousness and nausea. Their flesh clour is white or of various grades of pink.

பம்பாய்வாத்து, *உணவுக்கு முக்கியமான ஓர் கடல்மீன், இது தட்டையாயிருக்கும்*, a sea fish called Bombay duck. It is flat and is much relished in food.

பம்பாரி, see *பத்திராவதி.*

பம்பிகை, *பீர்க்கு*, luffa — Luffa acutangularis.

பம்பிளிமாசு, *பம்பளிமாசு*, which see.

பம்புதல், *பரவுதல்*, spreading; **2.** *பாரி*[...] *வடிவு*, broad figure.

பம்பேயம், *நொச்சி மரம்.*

பம்பை, *சுருட்டைமயிர்*, curly hair; **2.** *பறட்டைமயிர்*, bushy hair; **3**[...] *பறவைப் பொது*, birds in common.

பம்பைத்தலை, *பறட்டைத் தலை*[...] which see.

பம்மணி, *ஓர்வகைக் குதிரைநோய்*, a kind of disease in horse.

பம்மவிடல், *பம்மல்*, *மூடுதல்*[...] covering; **2.** *மந்தாரம்*, cloudness.

பம்மாரி, *பெருங்குமிழ்*, se[e] *பத்திராவதி.*

பய, *நீர்முள்ளியிலை*, leaf of wate[r] thorn — Hygrophila spinosa; **2.** *பைய* *மெல்ல*, slowly.

பயக, *முலைப்பால்*, breast milk.

பயகை, பயரை, *ஓர்மரம்*, a tree no[t] known.

பயகர்ப்பதம், பயகற்பதம் ஒ[...] *கற்பமிருக்க மற்றொரு கர்ப்ப*[...]

தரித்தல், pregnant lady concewing again super imposed pregnancy.

பயங்கரநோய், அச்சத்தை விளைவிக்கும் கொடிய நோய், dreadful disease, terrible disease.

பயங்கரம், அச்சம், fear; 2. நடுக்கம், terror.

பயசம், see பயசி; 2. தண்ணீர், water; 3. பால், milk; 4. முலைப்பால், breast milk; 5. பயம், fright.

பயசா, மான் செவிக்கள்ளி அல்லது இலைக்கள்ளி, leafy milk spurge; deer's ear spurge — Eurphorbia nerifolia.

பயசி, திருநாமப்பாலை, wild sarsaparilla — Smilax macrophylla alias Artanesia vulgaris.

பயசு, See பயசம்.

பயசுவனி, பாலிருள் செடி, an unknown plant.

பயச்சுரம், பயத்தினால் ஏற்படும் நரம்பைப் பற்றிய சுரம், இது நடுக்கம், வியர்வை, பலவீனம், நித்திரைப் பங்கம், மயக்கம் முதலிய குணங்களைக் காட்டும், fever due to fear or shock. It is marked by shivering, perspiration, weakness, sleeplessness, giddiness etc.

பயடுதி, பயதி, பயசி, which see.

பயணம், மரணம், death.

பயணம் வைத்தல், சாதல், dying.

பயணவிரோதி, பூனை, cat, the crossing of which is most inauspicious for starting.

பயதம், வண்டு, beetle.

பயதிரா, சுழல் வண்டு, whirling bettle.

பயத்தல், உண்டாதல், deriving; 2. பிறப்பித்தல், begetting; 3. நிறம் வேறுபடுதல், undergoing change of colour or complexion.

பயந்தவர், தாய், தந்தையர், parents.

பயந்தாள், தாய், mother.

பயப்படல், அஞ்சுதல், fearing, being afraid; 2. பயன்படல்.

பயப்பு, நிறம், colour; 2. பசப்பு, gold colour; 3. தேமல், yellow spots on the skin.

பயம், பால், milk; 2. நீர், water; 3. அச்சம், fear; 4. குளம், tank; 5. சதை nectar; 6. பழம், ripe fruit; 7. இன்பம், pleasure; 8. பயன், use.

பயலை, ஓர் நோய், an unknown disease.

பயளை, See பசலைக்கீரை; 2. சிற்றாமுட்டிவேர், root of Ceylon sticky mallow — Pavonia zeylanica.

பயறம்மை, see பயறி; 2. சிச்சிலுப்பை, whice see.

பயறி, ஓர் குருநோய், an eruption disease; 2. பயறம்மை, small pox with small vesiclour eruptions of the size of green gram.

பயறு, தானியப் பருப்பு, pulse, lentil; 2. காய், தானியம், seeds of leguminous plants; 3. பாசிப்பயறு, green gram —Phaselous aurcus.

பயறு, பருப்பு, காய் தானியப் பொதுப் பெயர், இத்தானிய வகைகளை நெல் முதலிய தானியங்கள் பயிரிடும்போது இறுதியில் சேர்த்து பயிரிடுவார்கள், இது உடம்புக்கு வலிவைத்தரும் உணவுமன்றி ஆரோக்கியத்தைத் தரும். இதை வறுத்தாவது அவித்தாவது சாப்பிடலாம். இதன் பருப்பு கறியோடு சேர்த்துச் சமையல் செய்வதுண்டு, மாவு பலகாரம் செய்யப்படும். இது அடியிற் கண்டபடி பல விதமுண்டு, pulse grain. It is a common name for the seeds of leguminous plants. It is grown generally as a subordinate crop with other cereal grains as maize, ragi etc. It is wholesome and nutritious — chief source of protein for vegetarians; It is eaten either boiled or roasted. It is broken, husk is removed, and cooked with vegetabiles as curry. It is flour is used for preparing cakes. It consists of the following varieties viz:

1. பாசிப்பயறு, green gram — Phaseolus.
2. உளுத்தம்பயறு, black gram — Phaseolus. mungo.
3. தட்டைப்பயறு, cow pea — Vigna unguiclata.
4. வயப்பயறு, a species of No. 8 dry pulse — Phaseolus trilobius.
5. காராமணிப்பயறு, same as No.3.
6. மொச்சைப்பயறு, Dolichos lablab var typicus.
7. கொள்ளுப்பயறு, horse gram — Dolichos biflorus.
8. சிறுபயறு, field gram — Phaseolus trilobus.
9. பீனிசப்பயறு.
10. மின்னிப்பயறு, same as No.13.
11. சடைப்பயறு, thickear tufted green gram — Phaseolus.

12. நாய்ப்பயறு, dog green gram.

13. நரிப்பயறு, fox or jackal green gram — Phaseolus aonitifolius.

14. காட்டுப்பயறு, wild gram.

15. எலிப்பயறு,

16. துலுக்கப்பயறு, same as No.13

17. பனிப்பயறு, dew gram as No.13.

18. கொல்லைப்பயறு, garden gram — Phaseolus trilobus.

19. கற்கடகப்பயறு.

20. நீர்ப்பயறு.

21. பிச்சிப்பயறு, same as No.16

22. கொடிப்பயறு.

பயறுமுந்திய, கொட்டையுண்டான்.

பயற்றுங்கள்ளி, கள்ளிமரம், tursted spurge tree — Euphorbia tortilis.

பயற்றங்கன்னி, காராமணி, cow pea — Vigna unguiculata.

பயற்றங்காய், ஓர் கறிக்காய், இது மருந்தை முறிக்கும், ஆயினும் கபாதிக்கம், இரத்தவாத குன்மம், அருசி இவைகள் போம், பசி தீபன முண்டாகும், kidney bean — Dolichos tranquebaricus. It destroys the effect of medicines but is calculated to be a remedy in cases of expectoration, retained menstruation, loss of appetite. 2. தட்டைப் பயறு, which see.

பயற்றங்கு, காடைக்கண்ணி வரகு, Indian oats — Panicum miliaccum.

பயற்றம்பருப்பு, ஓர் வகைப் பச்சைப் பருப்பு split green gram.

பயற்றம்மை, See பயறம்மை.

பயற்றாம்பருப்பு, ஓர் வகைப் பருப்பு, a kind of split gram.

பயனீகரி, செந்தாழை, red fragrant screw pine — Pandanus odoratissimus.

பயன், அகலம், breath; 2. நீர், water; 3. பால், milk; 4. சாறு, juice; 5. பசு, cow.

பயன்மரம், இனிய பழந்தரும் மரம், any tree yielding sweet fruit.

பயாசுமிருதா, செம்பை, common sesbane — Sesbania aegyptiaca; 2. சீமைச் செம்பை, foreign sesbane — Parkinsomia aculeata.

பயானகம், புலி, tiger; 2. அச்சம், fear.

பயிட்டம், ஓர் வகை முத்து, a kind of pearl.

பயித்தியகோபம், பயித்திய காசம், மனத் தடுமாற்றத்தை யுண்டுபண்ணும் காசம், asthma causing depression of mental faculties.

பயித்தியக் கரப்பான், பைத்தியத்தை உண்டாக்குமோர் வகைக் கரப்பான், a variety of skin eruption causing insanity or unsoundness of mind.

பயித்தியம்கொள்ளல், பித்துப் பிடித்தல், grwoing mad, becoming insane.

பயித்திய தோஷம், காலையில் எழுந்தவுடன் சுத்த நீர் குடிப்பதால் நீங்கும், a disease which is cured by taking pure water as soon as getting from well.

பயித்திய நாசனி, மலை மா, hill mango, hill balsam tree — Balsmodendron caudatum.

பயித்தியந் தெளிதல், பித்து நீங்கல், being cured of madness, getting rid of insanity.

பயித்தியம், பைத்தியம், மதிகேடு, madness; 2. திராமோகம், incurable lasciviousness; 3. பித்தம், bile; 4. ஒரே எண்ணம், mania.

பயித்திய வாயு, பயிந்தரி, ஏகம்பபாஷாணம், a mineral salt.

பயிரபதிசாதி, ஆண் சாதி நால்வகைகளிலொன்று, one of the four classes of men divided according to their lust.

பயிரவமாத்திரை, சீதளம், இரணம் இவைகளுக்குக் கொடுக்கும் மாத்திரை, pill given for phlegm, humour, ulcers etc.

பயிரவன், ஓர் சிலேட்டுமக்கூறு, a phlegmatic disposition.

பயிரவனஸ்தி, பயிரவி, முடக்கொத்தான், smooth leaved heart pea — Cordiospermum helicacabum; 2. குப்பைமேனி, rubbish plant — Acalypha indicum.

பயிரவீதி, தங்கரளி, yellow, excile or foreign oleander — Theretia nereiflora.

பயிரி, பசலைக் கீரை, which see.

பயிரிளம், வெள்வேல், babul with white bark — Acacia lencophloea.

பயிருகம், பழம்பாசி, aquatic plant — Anisomeles malabarica of கொடிப்பாசி.

பயிரெரித்த பாவி, செம்பல்லி, which see.

பயிரெரிப்பவள், பயிரெரித்தபாவி, which see.

பயிர், விளையும் பயிர், growing crop; 2. பறவைக்குரல், voice of birds; 3. குருத்து tender leaves shoots; 4. பசுமை, greenness.

பயிர், வெள்ளாமை செய்யும் போது முளையும் பயிர், இப்பயிர்கள் முதிர்ந்து தானியமாக அறுக்கும் வரை இதற்குச் செய்வகையில் அடியிற் கண்டபடி அநேகம் பெயர்களுண்டு, அவையாவன; the standing crops during cultivation. In agriculture this crop assumes different names at different stages till harvest as mentioned below:

1. கதிர்ப்பயிர், crops in which corn is just earing.
2. களைபறிபயிர், crops after weeding.
3. கீழ்ப்பயிர், not well growing crops,
4. மேற்பயிர், well growing good crop
5. நடவுப்பயிர், Crops transplanted.
6. பச்சைப் பயிர், crop that turns green after transplanting.
7. பால் கட்டுப்பயிர், crops having corn in which vital juice is just collecting.
8. முதுபயிர், crop with ripe corn.
9. இளம் பயிர், young crop.
10. நாற்றுப் பயிர், crop in seed bed.

NOTE:- This should not be confused with நன்செய்பயிர், wet crop and புன்செய்பயிர் dry crop raised in wet land and dry land respectively.

பயிர்ப்பு, பிசின் gum, resin; 2. அசுத்தம் uncleanliness; அருவருப்பு, loathing, abomination.

பயிர்ச்செழிப்பு, பயிர் வளர்ச்சி, vegetation, growing of plants; 2. தாவர விருத்தி, vegetation.

பயிலல், பழகல், getting accustomed as நடைபயிலல்.

பயிலகம், தட்டுப்பலா, an unknown tree probably a variety of jack tree.

பயிலி, பசளை, which see.

பயிலிகம், see பயிலியம்.

பயிலியம், குப்பைமேனி, rubbish plant — Acalypha indicum.

பயிலுதல், See பயிலல்.

பயில், பழக்கம், exercise; 2. பாதி, half; 3. நடை, walk.

பயில்விழிகாட்டல், பெண்களிடத்தில் கண்ஜாடைக் காட்டல், wink at girls.

பயிற்சி, பழக்கம், exercise; 2. அப்பியாசம், practice.

பயிற்றுதல், படிப்பித்தல், tuition; 2. பழக்குதல், training; 3. கற்பித்தல், instructing; 4. திருத்துதல், correcting.

பயினாசெல்லி, ஓர்பூடு, a plant — Acanthus ilicifolia.

பயினி, ஓர்மரம், a kind of tree; 2. ஓர் பானம், see பதினி.

பயின், உட்படுகுருத்து, the inner most tender leaves of palm sprouts; 2. பிசின், gum; 3. குருத்து, shoots of the palm; 4. அரக்கு, lac.

பயூதாலை, வெள்ளி, silver.

பயோகனம், ஆலங்கட்டி, hail stone.

பயோதகம், சமுத்திரம், ocean; 2. மேகம், cloud.

பயோதகி, பால்கடல், milk sea; 2. கடல், sea.

பயோதம், முகில், cloud.

பயோதரம், சமுத்திரம், sea; 2. மேகம், cloud; 3. முலை female breast; 4. கரும்பு, sugar cane; 5. பால், milk.

பயோதி, கடல், sea.

பயோதிகம், கடல்நுரை, sea froth — Guttle fish bone.

பயோத்தி, தயிர், curd.

பயோநிதி, சமுத்திரம், sea.

பர, வேறு, different; 2. அன்னிய, foreign; 3. மேலான, prominent; 4. முன், before or in time.

பரகம், உயர் பிராணிகளிலும் தாவரங்களிலுமுள்ள மூலதாதுப்பொருள்கள், a name for the root tissues in animal and plants, the pulp of plants — Parenchyma.

பரகற்பம், ஒரு கருப்பமிருக்க மற்றொரு கருத்தரித்தல், fertilisation in the same uterus .(womb of two foetus) formed at different menstruation periods, the fecundation of a woman already pregnant — Super foretation.

பரகாத்தியமம், விழிவெண்மையாகி அதில் ஒரு மறுவுண்டாகி வலி, அதிக வீக்கம்; சிவப்பு முதலிய குணங்களைக் காட்டுமோர் கண்ணோய், an eye disease marked by a raised patch of inflammation swelling pain and opacity of cornea.

பரகாயப்பிரவேசம், கூடுவிட்டுக் கூடுபாய்தல், இது 64 கலைக்கியானங்களுள் ஒன்று, the art of passing the soul from ones body into that of another — Metampsychosis.

(உ-ம்) மற்றொரு சரீரத்திலும் புகுத்தலாம்.

(தாயுமானவர்)

entering into another body, the power of leaving ones own body and make his soul to enter the lifeless body of another at pleasure; 2. மறுபிறவி, the passing of the soul from one animal body to another body after death. This is involuntary being a fresh incarnation, transmigration of souls according to the law of nature.

of pus due to the inflammation of the gums arising from venereal heat and is maked by bleeding gums foetid smell of the breath and formation of tarter.

பல்சுத்தி, பல்லின் ஊத்தையை நீக்குதல், cleaning of teeth.

பல்சொத்தை, பல்லில் புழு துளைத்தல் worm eaten or dacayed tooth. Caries in which black holes appear in the teeth.

பல் துலக்கல், பல் விளக்கல் cleaning or brushing the teeth; 2. வைத்திய முறைப்படி பல் அழுக்கு முதலியவைகளை நீக்கிச் சுத்தி செய்து கொள்ளல் the cleaning the scraping and polishing of the teeth - Odontexesis.

பல் தூள், பல் விளக்க உபயோகிக்கும் பொடி, tooth powder for cleaning the teeth- Dentrifice.

பல் தெரித்தல், பல்லொடிதல் fracture of breaking of tooth - Odontoclasis.

பல்தேய்தல், நாளடைவில் பல் தேய்ந்து போதல். see பல்தேய்வு.

பல் தேய்த்தல் see பல் துலக்கல்.

பல்தேய்வு, பல நாளாவட்டத்தில் தேய்ந்து சிறுத்துப் போதல். attrition or wearing away of the teeth and consequent dimunition in size - Odontotripsis.

பல்தைத்துவம், ஆதொண்டை which see.

பல் நெருடல் பல்லை நறுநறுவென்று சப்தமுறக் கடித்தல், chattering of teeth - Odonterism.

பல் நோய் பொதுவாக பல்லுக்கேற்படும் நோய், any disease of the tooth - Odontopathy. This is of 23 varieties; 2. பற்பல நோய்கள், various diseases; 3. பல்வலி, tooth ache.

பல்நோவு பல்வலி tooth ache.

பல்பக்கல் மாக்கல் flour stone, pot stone see பற்பகல் It is a sort of soap stone out of which, cup kitchen untensils (மாச்சட்டி) are generally made.

பல்பசை, tooth paste.

பல்பம் பல்பக்கம் which see.

பல்பல பற்பல several numerous many.

பல்பாசி ஊத்தை dirt of the teeth - Sordes.

பல்புழு, பல்லீறிலுண்டாகும் புழு dental germ or microbe.

பல்பூச்சி, see பல்புழு

பல்பொடி பல் தூள் tooth powder.

பல் மாணிக்கம், பல்மினுக்கி which see.

பல்மினுக்கி, ஒருவகைச் செடி Myristica baurifolia.

பல்முரசு, see தந்தவேட்டம் inflammation of the dental socket. This affects the root of the tooth due to vititotion of blood.

பல்முளைவு, see பல் முளைத்தல்.

பல் முளைத்தல், பல்லுண்டாதல், பல் முளைக்கும் இழுப்பு cutting of the teeth in infancy - Dentition.

பல்ரோகம் பல் நோய் (23 வகை) which see.

பல்லகண்ணி, ஒருவகைமரம் child's amulet tree - Hemicyclie vemista.

பல்லகம், கரடி, bear.

பல்லகி, see பல்லாதகி.

பல்லசைவு, பல்லாட்டம் shaking of the tooth, 2. பல்லினின்று சீழ் இரத்தம் வருவதால் ஏற்படும் பல்லாட்டம். இதற்கு ஆலம்பாலும் காட்டாமணக்கம்பாலும் பூசி வரவும். due to discharge of blood and pus as in phorrihoea, the tooth becomes shaky; milk of banyan tree and milk of physic nut plant (jatropha curcus) can be applied.

பல்லழகி செம்மரம், அழிஞ்சில் மரம் red wood - Alanglum decaptitalum.

பல்லடிசவ்வு, பல்லின் அடிபாகத்திலிருக்கும் சவ்வு.

பல்லடிப்புண், பல்லீறிலுண்டாகும் புண். gengrenous inflammation of the gum. It is a disease in which the teeth become loose and the gums, palate and lips becomes rotten.

பல்லம், கரடி, bear; 2. சேரான் மரம், marking nut tree - Semicarpus anacordium; 3. செம்மரம், see பல்லழகி, 4. சரகண்ட பாஷாணம், a kind of arsenic.

பல்லரணை, பல்லரனை ஓர் வகைப் பல்நோய் gum abscess, it is a disease in which affected at a time and is marked by violent pain and swelling. see தந்தபிரலூனம் and தந்த வித்திரதி.

பல்லாம், பல்லை சுரண்டுவதற்கு பயன்படும் கருவி - surgenon's file for rubbing or scraping the teeth - xyster, raspatory.

பல்லவத்தி, அசோக மரம் asoka tree - Uvaria longifolia.

பல்லவத்திரு, see பல்லவத்தி.

பல்லவபரணி, புளிப்பிலந்தை, sour jujuba.

பல்லவம், இலை leaf; 2. தளிர் sprout or shoot; 3. புளியம்பிரண்டை sour adamant creeper - Vitex genus.

பல்லவாதம், மான், deer.

பல்லவை, பல பொருள்கள் different things.

பல்லழகி, அழகிய பல்லையுடையவள் a woman having a fine set of teeth. 2. சாதிக்காய் nut meg so called from its lending beauty to the teeth; 3. வெற்றிலை, batel leaf.

பல்லழுக்கு, பல் ஊத்தை tooth dirt, dirt collecting on the teeth - Scordes.

பல்லாடகம், பல்லாடம், சேரான், see பல்லம்.

பல்லாட்டம், பல்லசைவு which see.

பல்லாண்டு, பலவருடம் many or several years.

பல்லாதகம் see பல்லாதி.

பல்லாதகி see பல்லாதி

பல்லாதகிகிருதம் சேராங்கொட்டை, நெய், a medicinal ghee the chief ingrident of which is marking nut.

பல்லாதாரினி, நாறுகரந்தை, which see.

பல்லாத்தி, பல்லாதி, சேரான் see பல்லம்.

பல்லாயிரக்கணக்கு, பெருவாரி epidemic.

பல்லாவு, புனல் முருங்கை Indian coral plant.

பல்லி, வீட்டுப்பல்லி, இது எல்லோருக்கும் தெரிந்த பிராணி. அகன்ற தலை, ஆழ்ந்த கண, நீண்ட வால் உள்ளது. வால் துண்டித்து விழக்கூடியது. நான்கு கால், இப்பல்லி சொல்லுக்குப் பலன் கூறும் ஓர் நூலும் உண்டு. குஷ்டத்திற்கு இதை உபயோகிப்பதுண்டு. house lizard, wall lizard - Geckotidae sawvia. It is a well known creature frequenting mostly houses. It is a reptile with broad head, depressed eyes, tapering tail which easily breaks off and easily renewed, has four legs. A small book known as lizard science *(பல்லி சாஸ்திரம்)* contain information regarding its chirping and it is ascertained by formula whether the omen is auspicious or not. Its fall on the various parts of the body implies various consequences or happinings eg. its fall on the crown of the head forebodes or predicts death. This is also contained in the book. As an electuary it is used for leprous affections.

பல்லிகா, see பல்லாதி.

பல்லிகி, see பல்லாதி.

பல்லிகை, பல்லிக்கை பல்லி lizard; 2. சேங்கொட்டை, which see.

பல்லிற்காற்பூடு, பல்லிக்காலைப் போன்ற பூடு, lizard foot - Sauropus albicans.

பல்லிசிவு, ஓர் பல் நோய் tooth ache - Dentalgia.

பல்லிடுக்கு, பற்சந்து tooth gap, interstices between the teeth aerola of the teeth.

பல்லிடை, பல்லின் இடைவழி between the teeth; 2. இரண்டு பற்களின் இடையேயுள்ள வெளி; the space between the two contiguous teeth - interdentium.

பல்லிப்பூடு, கொல்லைப்பல்லி, இதனால் பாம்பு விஷம் போம். பாஷாணம் தாளகம் சுத்தியாகும் lizard plant - Buchnara asiatica.It purifies arsenic, and orpiment and is useful in snake poisoning of நின்றிடம் தீய்ஞ்சான்.

பல்லிப்பூண்டு பல்லிப்பூடு, which see.

பல்லியம் தீபக மருந்து tonic which increase the appetite; 2. எலும்பு bone.

பல்லிரத்தம், பற்களினின்று ஒழுகும் இரத்தம், bleeding from gums.

பல்லிறுகல் பல் அசையாது கெட்டிப்படல் teeth getting firm.

பல்லிருள், இரும்பிலி cochin, china ebony tree - Maba buxifolia.

பல்லில்லா.

பல்லிறுக்கி, வெண்குந்திரிக் கற்பம் powder of purified white dammer; 2. முத்து பற்பம், calcined pearl which hardens the teeth; 3. மலைவேம்பு bastard cedar - Chukrussia tabularis.

பல்லினர், சதுரக்கள்ளி square spurge - Euphorbia antiquorum.

பல்வினர்குழவி, மலைப்பச்சை painter's gamboge - Garcinia xanthochymus.

பல்லினார், கிலுகிலுப்பை rattle wort - Crotolaria laburnifolia.

பல்லினார்மரம், அத்திமரம் common mountain ebony - Bauhinia racemosa.

பல்லினாற்குழவி, சவுரிக்கொடி which see.

பல்லீறு, பல்லிடையின் முரசு, gum of the teeth, termination of the teeth- Gingiva.

பல்லீறு எரிச்சல், பல்லினீறு எரிவு கண்டு, சீழொழுகிப் பல் விழும் a disease of the teeth marked by burning sensation of the gums, sappuralion and failing of the teeth.

பல்லீறுப்புண், பல்லீறில் காணும் அழற்சியாலேற்பட்ட புண். inflammation of the gum - Gingivitis, Odontitis; 2. பல்லீறில் காணும் கொப்புளம் gum boil.

பல்லு, பல் which see.

பல்லுகம், கரடி, bear; 2. பெருவாகை, big sirissa - Albizzia lebbek.

பல்லுக்கடித்தல், பற்கடித்தல் grawing the teeth.

பல்லுக்கடுங்கூத்தன் துரிசு, blue vitriol.

பல்லுக்கழுகு, வெற்றிலை, betel leaf.

பல்லுக்கழலை, பற்கழலை a tumour composed of tooth substance - Odontinold.

பல்லுக்கிட்டுதல் அலகு பூட்டுதல் lack jaw.

பல்லுக்கிளிஞ்சில், ஓர் கிளிஞ்சில் இது பல்லைப் போலுருவமுடையதா யிருப்பதாலிப் பெயர் dentate shell.

பல்லுக்குத்தல், பல்வலி shooting or acute pain in the teeth - Toothache; 2. பற் சந்திலிருக்கும் அழுக்கைக் குத்தியெடுத்தல், picking the teeth for removing any substance sticking.

பல்லுக்குத்தி, பல்குத்தும் கருவி tooth picker.

பல்லுக்குரிய, பல் சம்பந்தமான pertaining to teeth.

பல்லுக்குவெளி பாக்கு arecanut.

பல்லுக்கூச்சம் see பல்கூச்சம்.

பல்லுக்கொரிக்கல், ஓசைபட அரைத்தல் grinding or chattering the teeth.

பல்லுங்கம், மூங்கில் bamboo tree.

பல்லடிச்சதை பல்லுக்கும் தாடை உட்குழிக்கும் இடையேயுள்ள சவ்வு சதைபாகம், membrance or tissue which occupies the space between the root of the tooth and the alveolus of the jaw.

பல்லுத் தீட்டுதல், see பல் விளக்கல்.

பல்லுநோவு, see பல்நோய்.

பல்லு விளக்குதல், பல்லை மினுக்குதல் cleaning the teeth.

பல்லுளைச்சல் பல்லீறில் ஏற்படும் குத்தல் நோய், neuralgia of the gums - Gingivalgia.

பல்லுளுத்தல் பல் பொடிப் பொடியாக உதிர்தல் necrosis of the tooth as a consequence of vitiated blood and bile humour. The tooth turns dark in colour.

பல்லுளைவு see பல்லுளைச்சல்

பல்லுறச்சி, சாதிக்காய் nutmeg.

பல்லுறுசெங்களை, குதிரைப்பல் பாஷாணம், red orpiment or realgar - Arsenicum rubrum.

பல்லூகம் கரடி bear; 2. குரங்கு monkey.

பல்லூத்தை பல்லழுக்கு, incrustation that forms in the neglected teeth; 2. பற்பாசி, Scrumal tartar, see பற்காரை.

பல்லூழி பல வருடம் many or several years - several ages.

பல்லூற்றை see பல்லூத்தை.

பல்லூன்றல், உதட்டில் பல் பதியும்படி மெல்லக் கடித்தல் bitting the lip of the loved, see பல்வடுவழுத்தல்.

பல்வடுவழுத்தல் உதட்டின் மேல் பல் பதியும்படி மெல்லெனக் கடிக்கும் ஓர் காம விளையாட்டு this is a love play wherein one sucks and slightly bites the lip of the other.

பல்வதிந்தன், பஞ்சொட்டி tooth pulp.

பல்வலி, பல்நோய் which see.

பல்வலாவாசம் ஆமை tortoise, turtle.

பல்வழுக்கை see பல்லடி சவ்வு; 2. See பல்லடிச் சதை.

பல்வாதம், பல்லின் வாதம், tooth pain - Odontodynia; 2. பல்லின் வாதவலி, a disease in which the teeth seem as if being cleft as under with a violent pain. See பல்லாட்டம்.

பல்விழல், பல்லறல் sheding of the teeth the fall or loss of tooth - Dedentitism.

பல்விளக்கல், பல்லைத் தேய்த்து சுத்தி செய்தல், cleansing the teeth.

பல்விளக்கி, பற்குச்சி tooth twig, tooth brush; 2. செந்நாயுருவி which see.

பல்விளக்கு மூலிகை, பல் துலக்கவுதவும், ஆல், வேல், பூலா, வேம்பு, நாயுருவி முதலியவற்றின் குச்சிகள், the green twigs of various plants - Banian, babul, poolah margosa, Indian burr - for brushing and cleaning the teeth.

பல்வைரம், பல்லின் மேல் அமைந்துள்ள பளபளப்பான பளிங்கு போன்ற வெண்ணிற வஸ்து, the white hard substance covering the crown of the tooth - enamel of the tooth.

பல்வேர், பல்லடி root of the tooth.

பவணம், கழுகு, eagle.

பவணை, see பவணம்.

பவமானம், பவமானன் தீ, fire; 2. வாயு wind.

பவம், காற்று, wind, 2. பிறப்பு birth.

பவர், கொடி creeper.

பவலம், சாதி லிங்கம் vermillion.

பவலாயம், ஐகாரம் the mystic letter 'I' (ஐ)

பவழக்காலி, see பவளக்காலி.

பவழங்கசாதி அஸ்தகக சாதியாகிய ஆண் சாதி நான்கு வகையில் ஒன்று one of the four classes of men divided according to lust.

பவழநிறச்சாத்தி, நாகதாளி which see.

பவழபற்பம், பற்பமாக்கிய பவழம் calcined coral. It is soaked for one night in the juice of lime fruit, then washed. Then covered with the paste of the leaves of jujuba, luted and calcined as usual. It cures, cough, dysentery etc. see பவளம்.

பவழம் see பவளம் coral.

பவள அகத்தி செவ்வகத்தி, sesbania grandiflora (rubrm)

பவளக்கல் கானகக்கல், a stone with black dors.

பவளக்காலி சிவந்த காலுள்ள ஓர் பறவை, a kind of bird with red legs - Erythropess longipus corollanius 2. பேருமரி, coral plant - Salicornia brachiata.

பவளக்காய் மல்லிகை see பவள மல்லிகை.

பவளக் குண்டு கடுக்காய் gall nut; 2. சாதிக்காய் nut meg.

பவளக் குருந்தம், பவளக் குருந்து, செங்குருந்து Atlantiagenus.

பவளக்குறிஞ்சா, செந்நிறக்குறிஞ்சா unarmed orange nail dye - Crossandra undulaefolia.

பவளக்குறிஞ்சி சினாப்பு செங்குறிஞ்சி Indian liac - Legerstroemia indica (typica).

பவளக் குற்றம் பவளத்திலுள்ள குற்றம் - blemishes in the coral.

பவளக்குன்றி, குண்டுமணி, இதனால் வெள்ளை, இரத்த பித்தம், சயம், கரப்பான் போம் jeweller's bead.

பவளக்கொடி, கொடிப்பவளம் coral creeper.

பவளசயிண்டு, செவ்விண்டு, a red variety of இண்டு Mimosa genus.

பலளச் சத்து, இரசத்தை பொன்னாக்கு மருந்து (in Alchemy) essence or active principle in coral, it is capacity of transmuting mercury into gold.

பவளச் சர்க்கரைவள்ளி, சிவப்பு சர்க்கரை வள்ளி red variety of sweet potato Ipemoea balatas (ruburm)

பவளச்சேர்க்கை, முருங்கைக்கல் coral polyps or other zoophytes - Coralline.

பவளச்சோளம், சிவப்புச் சோளம் red miaze.

பவளத் தீவு, பவளக் கொடி தீவுகள், islands as Laccad Maldives containing low co - Atoll

பவளத்துத்தி, சிவப்புத் து கற்பமூலி red and pink - A rejuvenating drug - indicum.

பவளத்துவம், புனல் முருங் coral tree - Erythrina indica

பவள நிறம், பவளத்தின் நிறம், six different colours

பவள நெய்ச்சிட்டி, சிவப் சிட்டி, a red variety of நெ which see.

பவளபாதத்தோன், சவர்க்கா

பவளப்பற்பம், see பவ calcined oxide of coral.

பவளப்பிச்சி, see பவளக் பவள மல்லிகை; coral j Nyctanthes arbortristis.

பவளப்புற்றுப்பாஷாணம், வைப்புச் சரக்கு, மச்சமுனி சொல்லியபடி கெந்தி, ம அரிதாரம், பச்சை, ரசம், வீரம், லிங்கம், இவைகளை நன்றாய்ப் காசிக்குப்பியில் முறைப்படி மணல்

தாழியில் வைத்து மவுனக்கடுவாய் எரித்திடு. குளிர்ந்த பின் உடைத்துப் பார்க்கப் பவளம் போலிருக்கும். it is artificially prepared as per the process laid out in Machamuni 800. It is as red as coral.

பவளப்பூச்சி, ஓர் வகை கடல் மீன், a kind of see fish.

பவளப்பூண்டு, see பவளப் பூலா, இது கீழ்க் கடலோரங்களில் காணப்படும், பழம் சிவப்பு, பூ சிறிது பச்சை நிறம், இதன் இலையைப் பிளவை, கழலை இவைகளுக்கு விளக்கெண்ணையில் வதக்கிக் கட்ட உபயோகப்படும். இதன் வேர்ப்பட்டையுடன் திப்பிலி, இஞ்சி சேர்த்துக் கஷாயமிட்டு, பலவிருத்தி மருந்தாகக் கொள்ளலாம்; காய்ந்த இலையை புகையிலைச் சுருட்டு மாதிரி உபயோகிக்க சயித்தியக் கட்டு குணமாகும். அழகுக்காக இச் செடியை வேலிகளில் வைத்துப் பயிராக்கப்படும். red poolah, poolah coral tree - Breynia rhamnoides alias Phyllanthus rhamnoides. The plant is common in coromandal coast. Fruit bright red flowers small greenish; leaves are used to reduce tumours especially, carbuncles. They are applied warm with castor oil. Decoction of the bark of the root mixed with long pepper and ginger is drunk as a tonic. Dried leaves smoked like tobacco relieves swollen tonsils, Planted for ornamental hedges.

பவளப்பூல், ஒருவகைச் செம்பூலா see பவளப்பூலா.

பவளமல்லிகை, பவளக்கால் மல்லிகை. இச் செடி அல்லது மரம் எல்லாத் தோட்டங்களிலும் காணலாம். மரம் 15-20 அடி உயரம், இலைகள் சொரசொரப்பு. இதழ்கள் வெண்மை, சிறு சிறு சிவப்பு காம்பு, பூ வாசனையுள்ளது. மாலையில் பூத்துக் காலையில் உதிர்ந்து விடும். இதன் இலை சூலைப்பிடிப்பு, சுரம் இவைகளுக்கும், இலைக்கஷாயம் வாத நோய்க்கும் கொடுக்கலாம். இலை ரசத்தைக் குழந்தைகளுக்குக் கொடுக்கப் பேதியாகும். இதன் பட்டையை வெற்றிலை பாக்கோடு சேர்த்து மெல்ல மார்பிலுள்ள கபத்தைக் கரைக்கும். இதன் விதையை சூரணித்து, தலையில் உண்டாகும் சொறி, சிரங்குக்குப் போடவுதவும். இலைக் கொழுந்துடன் இஞ்சியைச் சேர்த்து அரைத்து உட்கொள்ள தீராத முறைக் காய்ச்சல் தீரும். Coral jasmine - Neytanthes arbor tristis - trees of sadness, weeping Nyetanthes. Tree is 15-20 ft. high found common in all gardens. Leaves scabrous, short petioled, flowers very fragrant, petals white, stalk red (hence the name பவளக்கால் மல்லிகை), blossoms in the evenings and drops in the mornings. Leaves are useful in gout and fever, decoction of leaves is given in rheumatic complaints, juice of the leaves is given to children as a purgative. The bark mixed with betel and nut and chewed as usual is said to remove the phlegm of the chest powdered seeds form and useful remedy in scabies and scurfs in the head. Young leaves mixed with ginger and made into a bolus is an efficacious remedy in chronic alternative fevers.

பவளமனச்சிலை, பவளமனோசிலை இலிங்கம் Vermillion; 2. உலாந்தா லிங்கம், Holland vermilion - Cinnabar - Red mercuric sulphide.

பவளமுத்து, சிவப்பு முத்து pink pearl.

பவள மூக்கரைச்சாரணை, சிவப்பு மூக்கரைச் சாரணை red shaurany - Orygia deccumbens.

பவளமொத்த, பவளம் போன்ற coralline, resembling coral - coralloid.

பவளம், நவரத்தினங்களிலொன்று பவளம், இதில் சுண்ணாம்பு சத்து சேர்ந்திருக்கும். சாதாரணமாய்ச் சமுத்திரத்தின் அடியில் வசிக்கும் சில பிராணிகளின் எலும்புச் சத்துகள் சதா சேர்ந்து கொண்டிருப்பதால் அப் பிராணிகளுக்கு அது வசிக்குமிடமாகும். இது பார்ப்பதற்குச் செடிகள் போல் காணப்படும். இதற்குத்தான் பவளக்கொடி என்று சொல்வது. இது ஜப்பான், சுமித்திரா, மால்டிவ் தீவுகளில் கடலோரங்களில் செழுமையாய் வளரும். நமது தேசத்தில் ஆபரணமாக அணிந்து கொள்வார்கள். சில பூச்சி அரித்த பவளங்களை மிக்க சிலாக்கியமாகக் கொண்டாடுவார்கள். ஏனெனில் அதில் தெய்வ சக்தியுண்டு என்ற அபிப்பிராயந்தான். ஐரோப்பிய தேசத்தில் மருந்தில் உபயோகப்படுத்துவார்கள். தமிழ்நாட்டு வைத்தியர்கள் இதினின்று பற்பம், செந்தூரம் செய்து நீரிழிவு, மூலக்கிராணி, இருமல், கபம், அரோசிகம், நாவறட்சி இவைகளுக்குக் கொடுப்பார்கள். தேனில் கொடுக்க கரம், குளிர், வயிற்றுளைவு, கண் புகைச்சல் இவைகள்போம் - Coral - Corallium. It is a hard calcareous substance found in the ocean secreted by marine polyps for their common support and habitation. The stony skeleton secreted by them continuously grow like plants which are called coral reefs. It is commonly found near the island of japan. Sumatra Maldives etc. It is used as personal ornaments as necklace, bracelets, rings etc. It is of one of the nine gems. Indian have a preference to the worm eaten beads from a belief that Gods dwell in the recesses. In Europe it is used in medicine. Vaidyans in Tamilnad calcify it and use it in case of diabetas, bleeding piles, consumption etc. red calcined powder is used for cough, phlegm, nausea, parched tongue etc. With honey it is given for fever,

cold dullness of vision. see பவழ பற்பம்.

பவளம், பூவழலை menstrual blood.

பவளவகத்தி, செவ்வகத்தி west India sesbane - Sesbania grandiflora (coccinea)

பவளவங்க செந்தூரம், பவழமும் வங்கமும் சேர்ந்து செய்யப்பட்ட செந்தூரம், calcined red of coral and tin.

பவளவங்கார வாச்சி, ஓர் வகைக் கீரை, a kind of pot herb used as edible greens - Sesudium portulacastrum.

பவளவல்லி, செவ்வல்லி, red Indian waterlily - Nymphae odorata.

பவளவறுகு, சுவாசத்தைப் போக்கும் செவ்வறுகு a species of red cough grass used for respiratory disorders.

பவளவாருதி, சிறுசண்பகம், cananga flower tree - Canangium odaratum.

பவனம், காற்று, air; wind; 2. பூமி earth; 3. பூனை, cat; 4. காடு forest; 5. பவனவாய் anus; 6. பொழுது, time; 7. பேரரத்தை greater galangal - Alpinia galanga (major)

பவன குமரப்பூடு, தீமுறிப்பூடு, an unknown plant.

பவனவாசல், ஆசன வாய் anal orifice.

பவனவாயு கீழ் நோக்கும் வாயு அபான வாயு wind from anus.

பவனவெளிச்செவி, சிவப்பு எலிச் செவிக் கீரை a red variety of rat ear plant.

பவனன் காற்று, air, wind.

பவனாசனம், பவனாசனன், பாம்பு snake; 2. வாயுவால் சீவிப்பவை, that which feed on air.

பவனாதமாது, பசளை spinach - Portulaca quadrifolia.

பவனாதி, பசளைக் கொடி creeper of Indian spinach.

பவனிவாறாடம், தேவாங்கு Indian sloth, slendor oris - Lemur.

பவனீதம், தண்ணீர் water.

பவனேந்திரியன், இந்திரிய சத்து இல்லாதவன், one whose vital seed his been dried up or who is bereft from birth of vital power.

பவாசிவித்து, ஓர் மரத்தின் விதை, the seed of an unknown tree used for leucoderma; 2. கார்போகவரிசி; scrufy pea, psoralla - Psoralea corylifolia.

பவி, நீர் water; 2. தண்ணீர் cold water.

பவிதம், மிளகு, black pepper; 2. சுத்தம் cleanliness.

பவித்திரகம் அத்திமரம் fig tree - Ficus indicus; 2. அரச மரம் peepul tree - Ficus religiosa; 3. நெய் ghee; 4. தர்ப்பை sacrifical grass - Cynodon dactylon.

பவித்திரம், பவித்திரி, பவித்திரி, தர்ப்பை, see பவித்திரிகம்.

பவித்திரியம் see பவித்திரம்.

பத்திரீகணம், பத்திரீகரணம், நெய், ghee.

பவினி, நாணல் reed.

பவுண்டிற்கம் கரும்பு sugar cane - Saccharum officinarum.

பவியம், உகர மரம் which see.

பவீகயம், நிலவிளா ground wood apple tree - Ferodium elephantum.

பவுதிகம், இரசாயன நூல் chemistry see பௌதிகம்.

பவுதிகன் இரசாயனன் chemist.

பவுதிகாம்பரியம், மின் தாதுவாதம் galvanism.

பவுந்திரப்புரை, பவுத்திரப் ...
காணும் துளை sinus in fi...

பவுத்திரம், யானை...
குதிரையேற்றம், சதாகுந்தி...
அளவு கடந்த பெண்
முதலிய காரணங்களினால்
வாயிலண்டை துவ...
யுண்டாக்கி அதன் ...
மலஜலம் வெளிப்படச் செய்...
புண். இது எண் வகை; fis...
ano or anal fistulla. It results
from the formation of an ...
in the anus due to excess ...
of the part arising from several
as riding on an elephant, ho...
sendantry habits, excessive
intercourse etc. Not healing pr...
it leaves an opening in the
region through which foecal ...
is issued out.

Note: — It is sinus like sore oc...
in the side of the auns at a di...
of about an inch inwards from
opening. Discharge of pus an...
froth takes place. If the so...
developed, sinus is formed and th...
it stools, urine and semen will u...
pass. It is difficult for ordinary
and the only course left ope...
by operation.

பவுத்திரவிரல், மோதிர விரல் ...
finger.

பவுத்திரம் வைத்தல், துவாரம் உண்டாதல், formation of sinus which burrows under the skin or any membrane.

பவுத்துவம், மரகதம் emerald.

பவுந்திரம், பகந்திரம் urinary fistula.

பவுரகம், நொச்சில், five leaved chaste tree - vitex negundo.

பவுரிக்காய், சவுரிக்காய், which see.

பவுருசத்துவம், ஆண் தன்மை virility.

பவுரோவம், நறும்பிசின், a kind of fragrant resin.

பவுரைக்கல், கற்சிட்டம் over burnt light brick.

பவேசம், மோவாய்க் கட்டை jaw, chin.

பவ்வத்தேமல்.

பவ்வம், நுரை froth, 2. நீர்க்குமிழி water bubble.

பவ்வியை, யானைத்திப்பிலி elephant long pepper - Scnidapsis officinalis.

பவ்விருஷியம், நீர்க்கடம்பு water cadamba - Nanclea purpurea alias N.parvifloris.

பழகல் பழகுதல் practising, becoming accustomed.

பழகாத பழக்கம், கெட்ட பழக்கம் bad habits.

பழகிய குடுவை, கையாண்ட பாத்திரம் used mud pot.

பழகிய சட்டி, see பழகிய குடுவை 2. நெய்ச் சத்து முதலியவைகளை குடிக்க வொட்டாதபடி உபயோகித்துக் கையாண்ட மண்பாத்திரம் mud pot is used and prepared in such away that it is incapable of absorbing oil ghee etc.

பழக்கம், சாதனை habit, practice.

பழக்கம் பண்ணல், சாதித்தல் practising.

பழக்கம்பாதி சுபாவம், பழக்கம் இயற்கையாதல் practice becoming habitual - second nature.

பழக்கவழக்கம், நாட்பட்ட பழக்கம் continued practice in life, habit in life.

பழக்காடி, பழச்சாறிலிறக்கிய காடி fermented fruit juice like wine.

பழக்காய், செங்காய் half ripe fruit.

பழக்காய்ச்சல், பழைய சுரம், chronic fever.

பழங்கஞ்சி, ஆறிய கஞ்சி cold rice water; 2. புளித்த கஞ்சி sour conjee.

பழங்கண், இளைப்பு weariness; 2. பலக்குறைவு weakness; 2. மெலிவு emaciation.

பழங்கடுரோணி

பழங்கறி, கண்டக்கறி curry prepared on the previous day and boiled to lessen the quantity and keep off staling.

பழங்காடி, பழச்சாற்றினின்று இறக்கிய காடி vinegar from fruit juices such as lime, graps etc. 2. புளித்தகாடி any fermented liquid; 3. புளித்த பழச்சாறு vinegar; 4. ஆறு மாதத்திய காடி vinegar six months old.

பழங்காய் வேம்பு margosa fruit.

பழங்கூரை வைக்கோல், பழங்குடிசையி விருந்து பிரித்தெடுத்த வைக்கோல் old straw removed from a thached hut.

பழசு, சாரமற்றது that which has lost its essence due to long standing or keeping.

பழசுபடுதல், சத்து அறுதல் losing in essence, becoming stale; 2. பழையதாதல், becoming old by losing its freshness.

பழச்சாறு ஆறு மாதத்திய காடி, six month old; 2. பழத்தின் juice of fruit; 3. தலைப்பிண் மூளை, the brain of the first in women; 4. தலைப்பிண்ட an alchemical preparation o from the frist foetus of a 5. எலுமிச்சம் பழச்சாறு ju lime fruit; யூகிமுனி பரிபாலை கறியுப்பும், பொட்டிலுப்பும் திராவகம் according to yugi extracted from common salt and

பழச்சாற்றில் அயமும் செம் செங்கத்தாரி which see.

பழஞ்சரக்கு, சாரமற்ற சரக்கு any drug which has lost its potency.

பழஞ்சாதம் இரவில் நீர் பூ சோறு cold cooked rice prese in water for use in the next mor

பழஞ்சிட்டம், பழய சிட்டக்கல் over burnt brick.

பழஞ்சீலை, பழைய துணி old cl

பழஞ்சுரத்துக்கட்டி, மண்ணீ வீக்கம், spleen enlarged due to fe

பழஞ்சுரம், நாட்பட்ட சுரம் chro fever.

பழஞ்சோறு பழஞ்சாதம் which see

பழந்தண்டுலம், பழய அரிசி old rice, stocked rice.

பழந்தண்ணீர், நீராகாரம் cod rice and its water; 2. நாட்பட்ட தண்ணீர் reserved water; 3. காடி நீர் fermented liquid.

பழந்தின்னி பழந்தின்று சீவிக்கும் பறவை, birds living purely on fruits.

பழந்தின்னி வௌவால், இது ஒரு பெரிய வௌவால். மரங்களில் தலை கீழாகத் தொங்குவதைப் பார்க்கலாம். இதன் பிடரி தலைப்பக்கம் கருப்பாயிருக்கும். கழுத்து, புயம், மஞ்சள் நிறம், இதற்கு வால் கிடையாது. இறக்கை $4^1/_2$ அடி நீளமாயிருக்கும். இது விசேஷமாய் நாட்டு வாதுமையைத் தின்னும். பகலில் வெளிப்படாது. இரவில்தான் வெளிக் கிளம்பும். இதைப்பற்றி வைத்தியத்தில் வெகு சிலாக்கியமாய்க் கூறப்படும். கை கால் பிடிப்பு, சூலை முதலிய ரோகங்களுக்கு நல்லதெனக் கொள்வதால் இதைச் சுட்டு ஆகாரத்தோடு உட்கொள்வார்கள். A kind of fox bat - Ptercopus edwardsi. It is so called because it lives on fruits. They are found in clusters roosting in the branches of trees with their heads hanging down. Hence it is also called Rishi bird. Nape and hed black, neck and shoulder yellow; from wing to wing it will be $4^1/_2$ ft. They live generally upon country or wild almond which is their favourite food. It medicine it is highly esteemed because of its being eaten in case of rheumatism, gout etc. for which they are shooted at.

பழந்தேன், நாட்பட்ட தேன் old and long kept honey.

பழபடையாதி, எட்டிமரம் vomica tree - Srychnine nuxvomica.

பழபட்சணி, பழத்தைத் தின்று சீவிப்பது, that which lives on fruits - Frugirorus.

பழப்பாசம், கருஞ்சீரம் black cumin seed - Nigella sativa.

பழப்புளி பழைய புளியம்பழம் old tamarind fruit that has turned black.

பழப்பேசி செப்பு நெரிஞ்சில் red caltrops - Indigofera enmeaphylla alias. I pulchella.

பழமலம் குடலில் தங்கி நிற்கும் நாட்பட்ட மலம் old foecal matter in deposit in the large intestines.

பழமறை, பூர்வ வேதம், இது நான்கு வகையாம் the four vedas.

பழமுண்ணிப்பாலை ஓர் வகைப் பாலை. மணிலாக் காரை என்றும் பெயர். இது ஓர் மரம். இலைகள் மாறி மாறி இருக்கும். அடிப்புறம் வெள்ளையாயிருக்கும். கிளைகளின் நுனியில் கொத்தாகத் தொங்கும். பூக்கள் வெளிர் மஞ்சள் நிறம், ஓரம் செந்நிறம், இது மலையாளத்தில் பழத்திற்காக வேண்டி மிகுதியாகப் பயிரிடுவார்கள். பட்டை துவர்ப்பு; மருந்திலுபயோகப்படும். இலையை இஞ்சி மஞ்சளோடு சேர்த்து அரைத்து கழலைக்கு வைத்துக் கட்டுவதுண்டு. இலைகளை நல்லெண்ணெயில் வேக வைத்து பட்டைத் தூளோடு சேர்த்து பெரி பெரி சுரத்திற்குக் கொடுப்ப துண்டு. இப்பழம் அதிகப் பசியையுண்டாக்கும். a kind of edible paulay, it is also known as Manilla caurai - Mimusops karai tree; leaves alternate, silvery beneath clusters at the end of branches, flowers pale yellow with red or rosy margins. The tree is extensively cultivated in China and Malabar on account of its acid and esculent fruit. The bark is astringent and yield's a gummy fluid and is used largely in medicine. The leaves ground, along with turmeric and ginger are used as cataplasm for tumours. The leaves boiled in gingelly oil and mixed with the pulverised bark forms a good remedy for beriberi fever. The fruit is said to increase the appetite. Seeds yield oil which can be applied to the eyes in ophthalmia.

பழமுண்ணியரிசி மாதளை விதை seeds of pomegranate.

பழமை, காரமின்மை devoid of essence potency; 2. பூர்வம் oldness, antiquity.

பழமைபாராட்டல் அன்னியோன்னியத்தைக் கொண்டாடல் breeding familiarity.

பழம், கனி fruit; 2. எலுமிச்சை lime fruit; 3. வழலை quint essence salt; 4. வயது முதிர்ந்தோன் un epithet for very old man; 5. தின் பழம் edible fruit.

பழம் பஞ்சு உருளைக்கிழங்கு common potato - Solanum esculantum alias S.tuberosum.

பழம்பலா பலாமரம் jack tree.

பழம் பாசகம் கருஞ்சீரகம் black cumin.

பழம்பாசி, கொடிப்பாசி moss creeper - Hydrilla verlicillata; 2. see கொட்டைப் பாசி; 3. வேலிப்பாசி, இது குளிர்ச்சிக்காகத் தலைக்குத் தேய்த்து முழுகவதவும், fruit moss - Sida hnmillis. It is used as cooling application to the head before bathing.

பழம்பாண்டம், பழகிய பாண்டம், used or handled vessel or pot as opposed to புதுப்பாண்டம் new vessel. see பழகிய சட்டி.

பழம்பிசின், சாலாம்பிசின் oriental salep.

பழம்புண், நாட்பட்ட ஆறாத புண்; an old chronic ulcer.

பழம்புளி, see கொறுக்காய்ப்புளி; 2 பழைய புளி, இது பத்தியத்திற்குதவும் old tamarind, useful in diet; 3. தலைப்பிண்டத்து மூளை, referring to the brain of the first born foetus - a technical term used in Alchemy.

பழைய அரைப்பு, பழைய இலுப்பைக் கட்டி, oil cake of bassia fruit which has gone old.

பழயகிட்டான்.

பழையகிராணி, அசாத்தியகிராணி an incurable chronic diarrhoea.

பழையசாதம், பழஞ்சோறு cold rice.

பழயை புண்ணாளி, நாட்பட்ட நோயாளி, chronic patient; 2. பலரிடம் மருந்துண்டு நோய் தீராதவன் an ailing patient who had undergone treatment under various physicians.

பழைய வெதுப்பு நாட்பட்டசுரம் chronic fever.

பழரசம், பழங்களினின்று பிழிந்தெடுத்த சாறு, the juice extracted from fruits; 2. எலுமிச்சம் பழச்சாறு juice of lime fruit.

பழிதீதம், மகாரம் the mystic letter 'Ma'

பழு, விலா rib; 2. விலாவெலும்பு rib bone

பழுக்கச் சுடுதல், பொன்னை பழுப்பு நிறமாகும்படி ஊதுதல், heating gold to attain yellow colour.

பழுக்கல் பழுத்து வருதல் getting ripened.

பழுக்கவூதல், see பழுக்கச் சுடுதல்.

பழுக்கா, பொன்னிறம், gold colour.

பழுக்காய், பொன்னிறம் gold colour; 2. தேங்காய் cocoanut; 3. பாக்கு arecanut.

பழுதயம், ஓர் வகை மருந்து தயாரிப்பு, a medicinal preparation as நொச்சிப்பழுதயம்.

பழுதாயிரும்பு,

பழுதுடைநாயகம், தாமரை lotus flower.

பழுதுடை நெட்டி, பேராமுட்டி Ceylon stick mallow - Pavonia odorata.

பழுத்தகட்டி, அறுப்பதற்குப் பக்குவப்பட்ட கட்டி ripened or fully matured abscess fit for operation.

பழுத்த பழம், கனிந்த பழம் fully riped fruit; 2.வயதினால் மிகவும் தளர்ந்த ஆண் அல்லது பெண் a male or female much broken down by age, a very old person.

பழுத்த மண், செம்மண், red earth - red ochre.

பழுத்தல், பொன்னிறமாதல் being turned yellow, becoming yellow in colour 2. முதிர்தல் ripening; 3. பொன்னாதல் being transmuted into gold.

பழுபடுவன், வித்திரதிக்கட்டி carbunle.

பழுபாகல், இலையைக் கருதி இதில் அனேக விதங்களுண்டு. இதன் காய்களை சமைத்துண்பதுண்டு. இவ்விலையுடன் தேங்காய், மிளகு வைத்து அரைத்து தலைக்குப் பற்றுப் போட தலைவலி நீங்கும். வேரை இலேகியமாகச் செய்து இரத்த மூலத்திற்குக் கொடுக்கலாம். buffalo carolah - Momordica hispida. The young green fruit are used as vegetable and they are very whole some when cooked and eaten with food. The juice of the leaves mixed with cocoanut, pepper, red sandalwood etc. and applied in the form of liniment to relieve pain in the head. The root tuber is prescribed by Vaidyans in the form of electuary in cases of bleedings piles and bowel affections. The plant is a creeper. They are several varieties differing chiefly in the form of the leaves.

பழுபாகல் கிழங்கு, கூட்டுப் பாகலின் கிழங்கு. இக்கிழங்கிலிருந்தே காட்டுப்பாகல் பயிராக்கப்படுகிறது root tuber of buffalo carolah Momordica dioica alias M.hispida.

பழுபாக்கு, கொட்டைப் பாக்கு arecanut.

பழுப்படைதல் பொன்னிறமாதல் see பழுத்தல்

பழுப்பிலை, மஞ்சள் நிறமாக மாறிய பழுத்த இலை, aged leaf turned yellow.

பழுப்பு, அரிதாரம், yellow orpiment 2. இலைப்பழுப்பு riped yellow leaf 3. பொன், gold; 4. சீழ், pus.

பழுப்புக் கற்பூரம், மஞ்சள் கருப்பூரம் yellow camphor.

பழுப்புச் சருக்கரை, நாட்டுச் சருக்கரை brown sugar, unrefined sugar.

பழுப்புச்சாறு பழுத்த இலைகளின் சாறு the juice of riped or aged leaves that have turned yellow.

பழுப்புச்சாற்று சத்துக்காத செவ்வகத்தி red sesbane - Sesbania grandiflora (rubrum)

பழுப்பேறல், பழுப்படைதல் becoming aged and yellow.

பழுமரம் ஆலமரம் banyan tree; 2. பழுத்த மரம் tree bearing fruits.

பழுவக்கொடி, காட்டவரை wild beans; 2. காட்டுக் கொடி, any forest or wild creeper.

பழுவம், காடு forest, jungle.

பழுவறை.

பழுவனிலை

பழுவிடை, பழுவெலும்புக் கிடையேயுள்ள பாகம் inter costal space.

பழுவெலும்பு விலா எலும்பு, நெஞ்சறைச் சுவரில் பக்கத்திற்கு பன்னிரண்டாக வளைந்து நீண்ட மெல்லிய விலாவெலும்புகள் the twenty four soft ribes - true 20 false 4 - binding the chest literally twelve on each side - Ribbone.

பழுவெட்டிசலம், வடபூமி நீர் water.

பழை, புளித்த பனங்கள் sour palmyra toddy.

பழைய சீலை, பழஞ்சீலை old cloth

பழைய சுரம், வெகு நாட்களாக யிருக்கும் வெப்பு நோய், chronic fever.

பழைய சோறு, see பழையது.

பழையது, பழஞ்சோறு cold rice; 2. நாட்பட்டது that which is old by age; 3. பழைய சாதம் cooked rice in water and kept over night break fast.

பழைய பேதி, பழைய மலத்தைத் தள்ளும் பேதி மருந்து a drastic purgative elimanting old stools. 2. நாட்பட்ட பேதி chronic dysentery or diarrhoea.

பழையவரிசி, பத்தியத்திற்கு உதவும் நாட்பட்ட அரிசி old stock rice useful in diet.

பழைய வன்னம், பழைய சோறு see பழையது.

பழைய விருமல், நாட்பட்ட விருமல் chronic cough.

பழைய வெல்லம், மருந்திற்காகவுதவும் நாட்பட்ட வெல்லம் old jaggery used in medicine and in diet.

பளகம், coral, see பவளம்.

பளக்கு, கொப்புளம், boil ulcer.

பளிங்கம், கட்டுக்கொடை, Indian roller (a bird of large size) Coracias indicus; 2. கஞ்சாங்கோரை, white basil - Ocimum album.

பளிங்கறை பளிங்குப்பாறை, rock crystal - Crystallised quartz.

பளிங்கீச்சான் ஓர் சிறு கடல் மீன், இது கொசுப் புழுக்களைத் தின்னும். a small sea fish - Therapon jarbua living on mosquito, worms in the sea.

பளிங்கு, படிகம் crystal; 2. கண்ணாடி, glass, 3. கற்பூரம் camphor; 4. கற்கண்டு, sugar candy, sugar crystal 5. விந்து, a secret term for semen; 6. வெள்ளைத் தேக்கல் crystal quartz.

பளிங்கு கற்பூரம், சுத்தி செய்த கற்பூரம். refined camphor which is translucent as opposed to crude camphor.

பளிங்குருவங்கம், பளிங்குருவங்கம், தொழில் முறையில் அல்லது வைத்தியத்தில் உபயோகிக்கும் ஓர் வகை வங்க பற்பம் an oxide of lead used in medicine - Litharge.

பளிங்குக்கல், படிகக்கல், crystal; 2. ஓர் வகைத் தாது உப்பு a mineral salt having polyhedral structure; 3. வல்லத்துக்கல், crystallised quartz 4. தாதுக்கல் any mineral crystal.

பளிங்கு சாம்பிராணி, பளிங்கு போன்ற வெண்மையான சாம்பிராணி white crystals of frankincense.

பளிங்கு பாஷாணம், வெள்ளைப் பாஷாணம்; white arsenic.

பளிங்கு பாஷாண பற்பம், வெள்ளைப் பாஷாணத்தைக் கொண்டு ஞான வெட்டியில் சொல்லிய முறைப்படி தயாரித்த ஓர் வகைப் பற்பம், calcined oxide of white arsenic which is prepared as per the process laid down in Tamil Gnana vetti.

பளிங்குப் பாத்திரம், கண்ணாடி பாத்திரங்கள் glassware.

பளிங்குப்பு, பாறையுப்பு rock salt 2. ஓர் வகைக் கல்லுப்பு crystals of salt.

பளிங்குப் புட்டி கண்ணாடிக் குப்பி, glass bottle.

பளிங்குமத்து கண்ணாடியாற் செய்த மருந்தரைக்கு மத்து, a glass pestle for grinding or powdering and mixing up of medicines.

பளிங்குமாசிக் கட்டி, படிங்குருவான வங்கம், an oxide of lead itharge.

பளிதம், கற்பூரம் camphor; 2. பச்சைக் கற்பூரம் Crude camphor; 3. பச்சடி,

an adjunct for food, prepared with curd or jaggery and a vegetable like mango, cocoanut, onion etc. 4. கற்கண்டு, sugar candy.

பளுப்பு, அரிதாரம் yellow orpiment; see பழுப்பு.

பளுவு, பாரம் heaviness; 2. கடுமை seriousness.

பள்ளன், கடுகு mustard - Brassica jancea.

பள்ளாடு see பள்ளையாடு; 2. வெள்ளாடு, goat.

பள்ளி நித்திரை sleep 2. மக்கட்படுக்கை, human bed; 3.முனிவர்வாசம் habitation of holy sages.

பள்ளிகொள்ளுதல் நித்திரை செய்தல், sleeping, retering to bed.

பள்ளிப்பழக்கம் பள்ளிக் கூடத்தில் அல்லது மாணாக்கனாயிருக்கும் போது கைக் கொண்ட பழக்கம் habit acquired or contracted while studying; 2. நாட்கொண்ட பழக்கம் long habit, second nature.

பள்ளியறை, படுக்கையறை bed room.

பள்ளியெழுச்சி, நித்திரை விட்டெழுதல், awaking or arising from sleep.

பள்ளியெழுப்புதல், தூக்கத்தினின்றும் எழுப்புதல், waking one from sleeps.

பள்ளிவளர்தல், தூங்குதல் sleeping.

பள்ளை, வெள்ளாடு goat; 2. வயிறு பருத்தது that which is pot bellied; 3. குள்ளம் short.

பள்ளிவாளம், ஓர் வகை விஷப்பூச்சி a venomous insect.

பள்ளைச் சூடன், ஓர் வகைக் கற்பூரம் a variety of camphor.

பள்ளையத்தாடு see பள்ளையாடு.

பள்ளையம், உண்கலம் eating dish; 2. படையலிடும் சோற்றுக் குவியல் heap of cooked rice served on the leaf.

பள்ளையாடு, குள்ள வெள்ளாடு, short or dwarf goat.

பறக்குறவை, கருப்புக் குறவை, மீன், a dark doke fish- Pariah doke - Ophioecephalus gachua.

பறக்கத் தேய்த்தல், சூடுண்டாகும்படி தேய்க்குதல், rubbing so as to create heat.

பறக்கவிழித்தல், முழுமையாக கண் விழித்து எழுதல், waking fully from sleep; 2. ஏமாந்த பார்வை look disappointedly.

பறங்கி ஓர் மேக வியாதி venereal disease; 2. பறங்கிக்காய் yellow pumpkin - Cucurbita maxima; 3. பறங்கிப் பாஷாணம், which see 4. சீனதேசம், China; 5. அன்னிய தேசம், foreign country; 6. பூண்டின் முதற் பெயர் first term of a substance as பறங்கிப் பட்டை; 7. பிரான்சுக்காரர் French men.

பறங்கிக்காடி, பிரான்சு தேசத்திய காடி, french vinegar.

பறங்கிக்காய், பூசனிக்காய். இது ஓர் படர் கொடி. நமது நாட்டில் புழக்கடை, கொல்லை, தோட்டம் இவ்விடங்களிலும் பயிராகும். இதன் இலைகள் பெரியவை. சொர சொரப்புள்ளவை. மேற்புறம் பச்சை நிறம், அடிப்பக்கம் சாம்பல் நிறம். கொடி, இலை, காம்பு இவைகள் சுணையுள்ளன. பூ மஞ்சள் நிறம், இலையையும் கொழுந்தையும் கீரையாக உபயோகிப்பார்கள். தழை, கொடி ஆடுமாடுகளுக்கு உணவாகும். இளங்காய் மேற்புறம் பச்சையாயும் உட்பக்கம் வெண்மையாயும், முற்றிய காய் வெளிப்பக்கம் மஞ்சளாயும், உட்புறம் மஞ்சட் சிவப்புமாயுமிருக்கும். கறிக்குதவும்.

இது உடம்பின் அழற்சியையும் பித்தத்தையும் போக்கும். கபத்தையும் பசியையும் உண்டாக்கும். இதன் விதையை யூனானி வைத்தியர்கள் இலேகியத்தில் உபயோகப்படுத்துவார்கள். உஷ்ணம், மேக நோய்களைக் கண்டித்து தாதுவிருத்தியையும் தேக புஷ்டியையும் வீரிய விருத்தியையும் உண்டாக்கும். இவ்விதையைச் சூரணித்துத் தேனில் கொடுக்க மலக்கிருமி வெளிப்படும். பழத்தை வேக வைத்து கட்டி, பிளவை முதலிய அழுகிய கிரணங்களுக்கு வைத்துக் கட்டக் குணமுண்டாகும். இவ்விதையினின்று எண்ணெய் எடுத்து நரம்புக்குப் பலமுண்டாக்க மேற்பூசுவதுண்டு. பூசினிக்காயின் காய்ந்த சதைப்பற்றை இரத்தவொழுக்கு இரத்தங்கக்கல்முதலிய நோய்களுக்கு உபயோகப்படுத்தலாம்.

இப்பழத்தின் காம்பைக் காய வைத்துப் பிறகு அதைத் தண்ணீரில் இழைத்து மேற்பூச விஷக்கடி, பூச்சிக்கடி, அட்டைக்கடி முதலியவை போகும்.

இக்காய் சாப்பிட ருசியாயினும் உடம்பிலுள்ள இரத்தத்தைக் குழம்புபோல் உறையச் செய்யும். எளிதில் சீரணமாகாது. வயிற்றில் வாயுவைப் பெருக்கிப் பொருமலை யுண்டாக்கும். இதன் மேற்றோலைச் சீவியுலர்த்திச் சிறிது சீரகமும் கூட்டிச் சூரணம் செய்து சர்க்கரை கூட்டி உண்ண கோடைக் காலத்து அழற்சியை நீக்கும். இவ்விதையின் சூரணத்தைத் தேனில் குழைத்து உட்கொள்ள, குடலில் உள்ள நாக்குப்பூச்சி வெளிப்படும். pumpkin

- Cucurbita maxima. It is a climber cultivated almost in all backyards of houses, pastures, gardens etc. leaves large, rough, cordate and pubescent beneath, petioles hispid, leaves and young shoots are used as vegetable greens for making curry, creeper and leaf stalk serve as food for cattle. Young fruit is green outside and white inside and the ripe fruit which is reddish yellow outside is yellow inside, both are used as vegetable. Being tasteful form a sweet dish in food.

It not only eliminates bile from the body but also cools the system and increases appetite. The seeds are much employed by Unani Hakims in electuaries and prescribed for venereal complaints and as an aphrodisiac. They are also used as an anthelmintic, when the powdered seeds are given mixed up with honey. The boiled pulp of the fruit is often used as a poultice to boils, carbuncles and unhealthy sores etc. The seeds yield an oil which acts as an nervinetonic, the dried pulp is a remedy in haemoptysis and haemorrhages from the pulmonary organs. The fruit stalk immediately on the top of the fruit is made into to paste by rubbing in water is a specific for stings and bites of poisonous insects and centipedes.

The fruit though pleasant to taste is said to thicken the blood, it is easily digestible and increases Vayu in the stomach thereby creating rumbling noise. The outer rind of the fruit dried and mixed up with cumin seeds and sugar is an excellent remedy for allaying the enervating heat of the summer. The powdered seed mixed with honey and given internally, brings out the worms in the intestines.

பறங்கிக் கிழங்கு *சீனக் கிழங்கு*, China root.

பறங்கிக் குடிநீர்.

பறங்கிக் கூர்மை *காகிச்சாரம்*, a kind of prepared salt.

பறங்கிக் கொறுக்காய்ப்புளி, *சீமைக் கொறுக்காய்ப்புளி*, Manila tamarind - Pithecolobium duice.

பறங்கிச் சக்கை see *பறங்கிப்பட்டை*.

பறங்கிச்சலி, see *பறங்கிப்பட்டை*.

பறங்கிச்சாம்பிராணி, இதுவே *பால் சாம்பிராணி*. இது ஓர் மரத்தின் பால், இது பளபளப்பாயும் சிறிது மஞ்சளாயும் இருக்கும். சிறிது கசப்பு, காரமும் வாசனையும் பொருந்தியது. இதைக் கொளுத்த மிக்க வாசனையைத் தரும். ஆகவே இது புகை போடவுதவும். இதற்கு

மருந்துக் குணமுண்டு. இது துவர்ப்பு, வியர்வையையும் உற்சாகத்தையும் உண்டாக்கும். frankincense olibanum - Ooswellia serrata. It is a product of balsamiferous tree. The product is a gummi risina olibanum. Occurs in semi transport tears of light yellow colour, bitter to taste and some what pungent and aromatic, when burnt very fragrant and as such as used as an incense. In medicine it astringent, diapharotic and stimulent.

பறங்கிச் சாம்பிராணி, *பறங்கிச் சாம்பிராணி மரம்* male frankincense tree - Boswellia carteril; **2.** குந்துருக்கம் Indian frankincense, male oilbanum - Boswellia thurifera; **3.** குங்கிலியப்பிசின் conkan resin - Boswellia glabra.

பறங்கிச் சாம்பிராணிக் களிம்பு, *பறங்கிச் சாம்பிராணியால் செய்யப்படும் களிம்பு*, an external ointment prepared with frankincense as chief ingredient.

பறங்கிச்சாராயம், *பிரெஞ்சு சாராயம், இதுவே பிராந்தி எனப்படும்* the french liquor - brandy.

பறங்கிச் சிறுக்கி, *இரத்த பாஷாணம்*, a kind of prepared red arsenic.

பறங்கிச்செடி, *பறங்கிப்பட்டைச் செடி*. china root plant - Smilax China.

பறங்கித்தாழை, *அன்னாசித் தாழை* pine apple plant.

பறங்கித்திராய், *பம்பந்திராய்* which see.

பறங்கிநோய், *மேகநோய்* Syphilis.

It is originated by sexual contact with the diseased person or neglect to wash the organ after sexual contact. Symptoms; To begin with small pimples appear on the head of the penis or on the covering skin - Prepuce. These pimples become hard, suppurate and burst with eventual discharge of pus and other foetid matter. Subsequently other symptoms, bubo fever, nausea, loss of appetite, foulness of the tongue, pain and head ache appear.

If neglected ulcerations appear all over the body and pain appear in the joints. Muccous membrance of the nose is also affected with the loss of sense of smell. If advantageous it may take the form of leprosy infested with worms. Sometimes the entire penis begins to rot and it may drop off.

Bulo or inflammation of inguinal gland is very common. It is followed by fever etc. It is highly contagious. Every one in the family is exposed to danger. Children of the parents

who suffer from this disease syphilis, dievery soon.

NOTE: According to Tamil Medical Science, it is known as மேக நோய் generally mercury preparations are the effective remedies, if they are only properly finished Mercury not properly purified and prepared according to the rules may on the other hand, bring on complications and diverse diseases of severe types. Nose will be greatly affected and sometimes the teeth may fall off. Syphilitic poisons may run through several generations.

பறங்கிப்பட்டை சீனப்பட்டை, பறங்குச்சங்கை; இது சீனம், ஜப்பான், இத்தேசங்களுக்கே உரியது. நமது நாட்டில் கிடையாது. ஆகவே இப்பெயர் பெற்றது. தமிழ் வைத்தியர்கள் இதை நாட்பட்ட மேக வியாதிக்கு உபயோகிப்பார்கள். அதனால் இது எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். இதன் கஷாயம் வாதரோகம், பிரமேகம் இவைகளைப் போக்கும், இதைச் சூரணித்து திரிபலையோடு கலந்து கொடுக்க வாதரோகம், மூலம், பவுத்திரம், பிளவை, நீரழிவு சிரங்கு, குஷ்டம், விந்து நஷ்டம், கடி விஷம், முடவாதம் முதலியவைகள் போம்; இதைச் சுத்தி செய்து தான் உபயோகப்படுத்துவர். பாலில் சிறு துண்டுகளாக வெட்டிப் போட்டு காய்ச்சி ஒரு கொதி வந்தவுடன் இறக்கி, உலர்த்தி எடுத்துக் கொள்ளவும்; இதுவே சுத்தியாம், இதைச் சூரணஞ் செய்து திருகடி அளவு பாலில் கொடுத்து உப்பில்லாப் பத்தியம் வைக்க தீராத சொறி சிரங்கு கட்டாயம் தீரும். China root - Smilax China. It is a large tuberous plant. It is peculiar to Japan and China. A preparation obtained by a prolonged boiling of the root in water is said to be useful not only as a tonic but as a cure in rheumatic and venereal complaints. It is procurable in all bazaars. The decoction is used with the three myrobalans *(திரிபலை)* in cases of piles, fistula seminal loss, carbuncle, diabetes, poisonous bites, scabbies, leprosy and other cutaneous affections. It should always be used after purification which is done by boiling small bits of it in milk, and then dried. The powder of the purified root, if given in milk twice a day in half teaspoon doses and kept on salt free diet cures obstinate scabbies.

பறங்கிப் பாஷாணம் பதங்கித்த ஓர் இரச மருந்து a sublimate of mercury, mercurious sublimate.

பறங்கிப்பிச்சி, சீனப் பிச்சிக் கொடி a china creeper.

பறங்கிப்புண் ஓர் மேகப் புண் an infectious ore - Syphilitic sore - a disease imported by the French in olden days into India - Chancre.

பறங்கிப்புண் கிரந்தி, ஓர் வகை மேகக் கிரந்தி, இது பறங்கிக்காரர்களால் இத்தேசத்திற்குப் பரவிய நோய். இது கொருக்கைப்புண் இனத்தைச் சேர்ந்தது. syphilis which is a kind of venereal sore said to be imported to this country by the French.

பறங்கிப்பூரகி, ஒட்டுப் பலா which see.

பறங்கிப்பூசினி கோடை பூசினிக் கொடி, pumpkin chiefly cultivated in summer.

பறங்கியணிநுணா இராம சீத்தா Manilla custard apple tree - Anona reticulata.

பறங்கியாதளை, சிவப்பாதளை red castor plant see பறங்கியாமணக்கு.

பறங்கியாதீதம் பறங்கிப்பாஷாணம் which see.

பறங்கியாமணக்கு பப்பாளி மரம் common papaw, papaya - Carica papaya; 2. சீன தேசத்தாமணக்கு China castor plant see சிறிய ஆமணக்கு.

பறங்கி வாழை see இரசதாளி, a variety of plantain.

பறங்கிவியாதி, பறங்கிவிரணம் பறங்கிப் புண், ஒரு வகைக் கிரந்தி நோய்.

பறங்கிவேல், சீமை வேல் foreign solah - Parkinsonia aculeata.

பறட்டை, செழிப்பற்றது that which is not fertile; 2. வளர்ச்சியற்றது stunted growth; 3. பறட்டைக் கீரை, which see.

பறட்டைக் கீரை, ஒரு வகைக் கீரை a vegetable green - Justice madurensis; 2. காட்டுக் கீரை forest greens.

பறட்டைச்சி, தூரடர்ந்த தலை மயிருள்ளவள், a woman with stunted hair growth or of bushy hair.

பறட்டைத் தலை, தூரடர்ந்த தலைமயிர் hed with bushy hair.

பறணி பெருங்குரும்பை young unripe cocoanut fruit.

பறதை see செங்கத்தாரி, false peacock foot tree.

பறந்த முகம், விசாலமான முகம் broad face.

பறந்தலை, சுடுகாடு, cremation ground, போர்க்களம் battle field.

பறப்பன், தேள் scorpion.

பறப்பினம், பறவையினம் class of flying creatures; 2. பறவைச் சாதி class birds.

பறம்பு, மலை, mountain, 2. முலை women's breast.

பறம்பை, கருந்தாளி.

பறவை, பட்சி, bird; 2.கோழி fowl, hen; 3. புள்ளிறகு bird's feather; 4. see பறவை தோஷம்; 5. ஓர் வகை அம்மை a kind of small pox; 6. பருந்து kite; 7. பறவைநாகம், which see.

பறவைக்கட்டு, பருப்பருவாய் உடம்பில் எழும் ஓர் வகைக் கிரந்தி a kind of syphilis giving rise to several wart like growths on the surface of he body.

பறவைக் கெண்டை, பறக்குங் கெண்டை, flying carp Barbus parrah.

பறவைக்கோலா, ஓர் வகை பறக்கும் மீன் flying see fish.

பறவை தோஷம், பன்னிரண்டு பறவை தோஷங்களில் ஒன்று அதாவது அந்தி வேளையில் பட்சிகள் அஞ்சியோடும் சமயத்தை குழந்தைகள் பார்த்தலினாலும் இராக்காலத்தில் குழந்தைகளைத் தெருக் கடக்க எடுத்துச் செல்வதினாலும் உண்டாகும் தோஷம். இதனால் குழந்தைகளுக்கு உண்ணாக்கு வீங்கி வளர்ந்து பால் தங்காது, உடம்பு நொந்து குடித்த பால் சீரணமாகாது, நாற்றங் கண்டு கக்கும். கால் கை அழுக்கேறிக் காணும் ஓர் நோய்; (1) எட்சிதோஷம்; (2) வீங்குபுள் தோஷம்; (3) தூங்குபுள்தோஷம்; (4) விளக்கோளிக் கண்தோஷம்; (5) வெங்கண்புள் தோஷம்; (6) கருடக்கண் புள் தோஷம்; (7) செங்கண் புள்தோஷம்; (8) அந்திபுள் தோஷம்; (9) நீர்ப்புள் தோஷம்; (10) கணைப்புள் தோஷம்; (11) வரட்புள் தோஷம்; (12) பேய்க் கண்புள் தோஷம், one of the twelve morbid diathesis in children arising from the influence of birds. It is said to be caused by children observing birds rushing for shelter in the dusk or by taking across the street during night. It is marked by inflammation and elongation of uvula vomitting, or ejection of the milk, pain in the body, stink of ejected milk from the stomach, filthy limbs etc. The names of the twelve morbid diathesis are given above.

பறவைநாகம், பறக்கும் ஓர் வகைப் பாம்பினம் a kind of winged monster serpent - Basilisk Dragon see குக்குட சர்ப்பம்.

NOTE:- II. There are also other kinds of doubtful nature which could not be identified viz—

1. அலாம்பனை, 2. கொண்டைப் பனை; 3. ஏரிலைப் பனை; 4. ஏசறுப்பனை; 5. காட்டுப்பனை; 6.கதலிப்பனை; 7. வலியப்பனை; 8. வரதப்பனை; 9. அலகுபனை; 10. நிலப்பனை, பனைசை, பனசை.

பனைக்காரல், ஓர் வகைக் காரல் மீன் a kind of fish.

பனைக்குருவி, பனைமரத்துக் குருவி, இது 5 அங்குல நீளம். மேற்புறம் வழவழப்பும், சாம்பல் நிறமும், உள்ளது. வாலும் இறகு பக்கமும் கருப்பு. palmyra sparrow of five inches long, outside wholly glassy and ashy brown, darker on wings and tail. So called from its frequenting the palmyra trees.

பனைசதி, அரச மரம் peepul tree - Ficus religiosa.

பனைசருக்கரை see பனஞ்சருக்கரை.

பனைசை see பனிச்சை.

பனைச்சாரல், ஓர் சாரல் மீன்.

பனைச்சாறு, பனை மட்டையினின்று பிழிந்தெடுத்த சாறு the juice of the palmyra leaf stalk; 2. பனஞ்சாறு அதாவது, பாளையினின்று வடித்த இனியச்சாறு the sweet juice extracted from the spadix of the palmyrapalm; 3. பனங்கள்ளு palmyra toddy.

பனைச்சை, பனிச்சை.

பனைநார், பனை மட்டையினின்று கிழித்த நார் fibres separated from the leaf stalk palmyra fibre.

பனைப்பதினி, தித்திப்பு பனஞ்சாறு see பனஞ்சாறு.

பனைநீர்.

பனைநுங்கு, பனைநொங்கு, பனைநுங்கு which see.

பனைப்பாஷானம், வாதத்திற்கு உபயோகப்படும் ஓர் வகை பாஷாணம் an unknown poisonous compound used in Alchemy.

பனைப்பால், பனங்கள்ளு palmyra toddy.

பனைப்புல்லுருவி, பனைமரத்துப் புல்லுருவி a parasite of the palmyra palm.

பனைமடல், பனையோலை palmyra leaf.

பனைமட்டை, பனைமரத்தின் கிளை leaf stalk.

பனைமட்டைச்சாறு, பனை மட்டையில் பிழிந்த சாறு, the juice extracted from the stalk of palmyra leaf.

பனைமது, பனங்கள், இதில் பாஷாணம் சுத்தியாகும் palmyra toddy used for cleansing of purifying yellow orpiment and other poisonous compounds.

பனைமரம், மரங்களுக்குள் ஓர் உயர்ந்த மரம். இம்மரம் சாதாரணமாக எங்கும் விளையக் கூடியது; நமது தேசத்தில் மாத்திரமல்ல; உலக முழுவதும் ஆசியா, ஆப்ரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா முதல் எல்லாவிடங்களிலும் உண்டு. அடிமரம் 30 முதல் 40 அடி உயரமும், சுற்றளவு அடிப்பாகம் $5^1/_2$ அடியும், மேற்பாகம் $2^1/_2$ அடியும் உண்டு; இது கடற்கரை ஓரங்களில் மணற்பாங்கான நிலங்களில் உற்பத்தியாகும். இது தானாகவும் வளரும்; பயிரிடவும் செய்யலாம். இது 15 வருஷ முதல் 25 வருஷத்திற்குள் பலன் கொடுக்கும். இத தென்னையைப் போல் வளைவாக வில்லாமல் செங்குத்தாய்

பனை, பெண் பனை என இரண்டுவித முண்டு; அதில் பெண்பனைதான் பலன் கொடுக்கும்; ஆனால் இரண்டுவிதமான மரமும் பங்குனியில் பூக்கும். பெண் பனையோ குலைக்கு 10 — 20 காய்களாக 10 குலைகளுக்கு மேலும் விடும். ஆகவே சுமார் 200 காய்களுக்கு மேலும் ஒவ்வொரு மரமும் காய்க்கும். ஒவ்வொரு காய்க்குள்ளும் இரண்டு அல்லது மூன்று களைகள் உண்டு. பாளையில் சீவ சாறு மிகுதியாக வரும். குடிப்பதற்கும் இன்பமாயும் களைப்பைத் தீர்க்கும் குணமுள்ளதாயுமிருக்கும். இச்சாற்றை சூரிய உதயத்திற்குப் பின் சிறிது நேரம் வைத்திருப்பின் புளிப்பேறி கள்ளாக மாறிப் போதையைக் கொடுக்கும். இதன் இலைகள் தான் ஓலை எனப்படும். இது கூறைகள் மேய்வதற்கும் கவடிகள் எழுதுவதற்கும், விசிறி செய்யவும் உபயோகப்படும்.

அப்போது இறக்கிய இதன் புதிய சாறு மருந்திற்கு உபயோகப்படும். வெட்டைச் சூடு, பாண்டு இவைகளுக்குக் கொடுக்கலாம். புளித்த சாறு நீரிழிவுக்குக் கொடுப்பதுண்டு. பாளையைச் சுட்டுச் சாம்பலாக்கிப் பித்த ரோகங்களுக்கு உபயோகிக்கலாம்.

புளிக்காத அதாவது புதிய சாறு, குளிர்ச்சியும் போஷிக்குந் தன்மையுடையது. அன்றியும் நீரைப் போக்கவும் சீரணசக்தியை அளிக்கவும், பலத்தையும் ஆரோக்கியத்தையும் தரக் கூடியதாகும். ஒரு செம்பளவு சாப்பிட மலத்தைக் கழிக்கும். பிரதி வருஷமும் வேனிற் காலத்தில் இதைச் சாப்பிட சயம், நாட்பட்ட குன்மம், கிரந்தி, தொண்டைரோகம், சரும நோய்கள் முதலியவை குணமாகும். இதன் கிழங்கு சாப்பிடவுதவும், மேலும் பனஞ்சாறு மலபந்தம், மேகம், சோகை, சூதக தோஷம் இவற்றை நீக்கும். இதை பானங்களுக்கும், லேகியங்களுக்கும் மருந்துகளின் அனுபானங்களுக்கும் உபயோகப்படுத்தலாம். இதன் கற்கண்டு, தாகம், அம்மை உஷ்ணம், நீர்ச்சுருக்கு, மேகம் இவைகளைக் கண்டிக்கும். இதன் நுங்கு தேக அழற்சி, பிரமேகம், சீதபேதி இவைகளைப் போக்கும். நுங்குத் தண்ணீர் வேர்க்குருவை நீக்கும். பனங்கிழங்கு அஸ்தி வெப்பத்தையும், பித்த மேகத்தையும் பரிகரிக்கும். இதன் பூ குன்மம், மூத்திர நோய், பல்வலி, பழய சுரம் இவற்றிற்கு உபயோகமாகும். பனம் பஞ்சு காயங்களுக்குப் போட இரத்த ஒழுக்கை நிறுத்தும். கள்ளுடன் அரிசி மாவு கலந்து கிளறி, சீழ்க்கட்டி மேகக் கட்டிகளுக்கு, கட்டுக் கட்டவுதம். இதன் கற்கண்டோடு வாதுமைப் பருப்பையும் சேர்த்துச் சாப்பிட, சிறுவர்களுக்கு இருமல் சுவாச காசம் போம். இதன் பழம் கனிந்ததை ஏழை சனங்கள் பித்தத்தைத் தரக் கூடியதாயினும் சாப்பிடுவார்கள். palmyra palm or tree - Borassus flabelli formis alias Lonturus domestica. It is the tallest of the trees in our country. It is found grown every where not only in our country but all over the world, Asia, Africa, Europe, America etc. The trunk is 30—40 ft. in height and the girth $5^1/_2$ ft. at the bottom and $2^1/_2$ ft. at the top. It grows naturally and is also cultivated in favourable soil and circumstances it takes 15 to 25 years to yield fruits. Unlike the cocoanut; which is bent. It is straight and looks majestic. It consists of two kinds - male and female. The former bears only male flowers which do not possess pistill, and so does not yield fruits, the later bears only female flowers which do not possess pistil, and so does not yield fruits, the later bears only female flowers which contains pistil but no stamens and so yields fruits, but both flower in the same season once in a year in the month of pungun; (March - April). The female palm bears on each stalk ten to twenty fruits and bears ten such bunches in one season or year and thus yields about 200 fruits a year. In each fruit there are2 or 3 seed pulp which will be eaten. The sap or juice is obtained by wounding the spathe, this fresh juice is a cool and refreshing beverage but soon after sunrise it undergoes vinous fermentation and becomes converted into an intoxicating drink. The leaves when dried are used for writing purposes and also thatching roofs and making fans. The fresh sweet juice is medicinally used in inflammatory affections and dropsy while fermented juice is used in diabetes, ash of spadix is given in bilious affections.

The unfermented or fresh juice is refrigerant, nutritious diuretic, stomachic and alterative, a tumblerful, of juice proves a good laxative. If this is continued every year during the summer it proves useful in cases of tuberculosis, chronic dyspepsia syphilis, soprosis, skin disease etc. The juice is known to have cured constipation, veneral complaints, anemia, menstrual disorders etc. it is used in drinks, electuries and as vehicle in the administration of medicine. The sugar candy removes thirst, excessive heat of the system due to attack of small pox etc. urinary complaints arising from veneral causes. The seed pulp is a remedy for excessive heat of the system, venereal affections, dysentery and summer heat, the salt extracted from the ash of burnt male flowers is useful in cases of dyspepsia, urinary disorders, tooth ache and chronic fevers, the cotton is styptic and is used in bleeding injuries. The toddy mixed with rice flour, is boiled and made into a poultice for ordinary and venereal abscesses. The sugar candy mixed with almond is given to youngesters for cough and bronchitis. The ripened root though bilious is eaten by poorer classes. The first shoot from the seed called பனங்கிழங்கு in Tamil is also eaten.

பனைமீன், ஓர் நீளமான கடல் மீன் a long sea fish, see பனைக்காரல்.

பனைமுகரி, ஓர் வித சிறிய அம்மை. இதனால் உடம்பு காய்ந்து, கறுத்து, உடம்பு, கழுத்து வீங்கி, பிதற்றலோடு சன்னி காணும் a kind of small pox attended with moderate fever and swelling of the body and neck renders the body black and sometimes delirium follows.

பனைமுகிழ், பனங்காயின் மேற்பக்கத்து அரும்பு அல்லது காம்படி the fold or close up of the fruit of palmyra, the portion which is closing up the fruit.

பனையன், ஓர் வித அம்மை நோய் a kind of variols or small pox, see பனைமுகரி 2. ஓர் கடல் மீன் a kind of sea fish.

பனையேறி, ஓர் வகைக் கெண்டை மீன். இதன் சிலுவாய் விசித்திரமாய் அமைந்திருக்கும். ஆகவே இது தண்ணீருக்குள் இருப்பது போல வெளியில் பூமியிலும் உலாவும். ஆகவே செம்படவர்கள் இதைப் பானைக்குள்ளாவது, கூடைக்குள்ளாவது 5 — 6 நாள் வரையில் மூடி வைத்திருப்பார்கள். மூடாவிட்டால் வெளியில் வந்து விடும். பூமியில் வெகுதூரம் செல்லக் கூடியது. குளத்தில் தண்ணீர் வற்றி விட்டால் சேற்றுக்குள் புதைந்து விடும். a fish called climbing perch — Pristipoma percidac. It is a small fish gills are provided and it is this that enables it to breath out of the water as in it and so it can live both in water and on land. The fishermen keep this for 5 to 6 days in a covered, earthern pot or covered basket so as to keep it safe from escaping. It is 8 or 9 inches long and can travel long distances with great ease. When water is dried up in tanks it remains buried in the mud underearth and it is eaten by poorer classes.

2. ஓர் வகைப் பாம்பு. இதை கொம்பேறி மூக்கன் என்றும் சொல்வதுண்டு. இது பச்சை நிறம். மரங்களில் வசித்துக் கொண்டு பறவை பூச்சிகளைத் தின்று வாழும். இது மரத்தின் மேல் ஏறியவர்களைக் கடித்து விட்டால் இறந்த பிறகு அவர்களைச் சுடுகாட்டில் வைத்துக் கொளுத்திய புகையைக் கண்டால்தான் மரத்தின் உச்சியில் ஏறி நின்று பார்க்கும். இப்பாம்பு விஷத்தை இறக்குமென ஒரு கதையுண்டு. ஆகவே மனிதர் இதனால் கடித்து இறந்து விட்டால் சுடுகாட்டில் வெறும் வைக்கோலைப் போட்டுக் கொளுத்தினால் புகையைக் கண்டு பாம்பு விஷத்தை இறக்க மனிதன் பிழைத்துக் கொள்வான் என்றும் சொல்வதுண்டு. இதில் கிராம வாசிகளுக்கு மெத்த அனுபோகம் இருப்பதாகத் தெரிகிறது. a climbing snake - Ophidii colubriformes it has nocturnal habits and is known as tree snake, green in colour,lives on brids insects etc. There seems to a legand about it. When it bites a man who climbed the tree, the snake climbs to the top of the tree to watch the man who is dead by its bite on the supposition that, after his death he would be brought to the cremation ground for disposal. So persons who know all about this snake do not take the man who is dead after being bitten by the snake to the cremation ground but instead they simply burn some straw so as to raise sufficient smoke to reach the sight of the watching snake on the top of the tree. The snake on seeing this smoke is said to with draw its poison is the diseased, So much so, it is said that the man who died after its bite would regain his life. The villagers seem to have some knowledge and experience of such occurrences.

2. ஓர் வகைக் குருவி, இது 7 அங்குல நீளம், சாம்பல் வர்ணம், பூச்சிகளைத் தின்று பனை மரத்தில் வாழும். Palmyra swallow, also known as Ashy swallow shrika - Ocypterus lenco hynchus alias Ariamum fuscus. It is about 7 inches long. ash colour, mostly lives on insects and frequent the palmyra tree.

4. ஓர் வகைப் பனையேறி, இதற்கு கல் கொறுக்கை என்று பெயர். இது வெண்ணிறம். 6 கருப்பு வரிகளை உடையது. a kind of fish known as eykeehy - Pristipema furcatum. It is a species of climbing fish mentioned in No.1

5. வெள்ளை சாண்டுவாமீன். இது ஓர் வகைப் பனையேறி, இதன் நிறம் வெள்ளையாயும் சிறிய புள்ளிகள் பட்டையாயும், தலையும் கண்ணும் கருப்புமாயுமிருக்கும். white chandwah Ambassis dussumiere. It is a variety of climbing fish panayeri silver white with small dots, head and eyes black 4 inches long found in back waters.

6. கொடுவாய். இது ஓர் வகைப் பனையேறி மீன். முதுகு சாம்பல் நிறம். அடி வயிறு வெண்மை, இது கடல், கழி,கடலையடுத்த ஆறு இவ்விடங்களில் காணலாம். உண்பதற்கு உருசியாயிருக்கும். இதற்கு சிலுவாய்ப்பக்கம் முள்ளிருப்பதால் இப்பெயர் Indian perch, Nayarfish - Lates Culcuriper. It is a variety of climbing fish Pannyeri, back ash colour abdomen white, common in sea, back waters, river's opening into the sea. It often goes long distances to prey upon other small fishes, excellent to eat.

NOTE: It will be found as above mentioned that the term பனையேறி refers not only to several species of fish in No.1, 5 and 6, but also to snake and sparrow in No.2 and 4. So, the term literally means climbing the palmyra tree, probably it may also mean frequenting near it. They all refer to the creatures found in South India.

பனைவட்டு, பனைவெள்ளம் palmyra jaggery put in circular or cubic moulds.

பனை வாழை, அடுக்கு வாழை the tallest among the plantain, trees with bunches in ascending order. Common in Malabar.

பனைவிரியன், ஓர் வகை விரியன் பாம்பு. இதன் விஷம் கொடியது. இதை நாகப்பாம்புக்கு அடுத்தபடி சொல்லலாம். கடித்தால் மரணம் தான். சீண்டினால் நாகப்பாம்பை

போல் சீறும். இது வயல், குடிசை, வீடு, சன்னல் ஓரம் இவ்விடங்களில் வசிக்கும். palmyra viper also known as white - arched bangaur - Bungarus arcuatus, two to four and a half feet in length. It is extremely venomous and next to cobra, most destructive to human life. When disturbed, it attacks and defends itself fiercely commonly found in fields, huts, houses, near venetians or windows.

பனைவெட்டு see பனவெல்லம்.

பனைவெல்லம் see பனவெல்லம்.

பனைவேர், பனைமரத்தின் வேர் root of palmyra tree.

பன், ஓர் வகைப் புல் a species of grass - Bulrush.

பன்மயம், கருப்பு கரிசாலை a black variety of eclipse plant - Eclipta prostata for details, see கருங்கரிசாலை.

பன்றி, இது ஓர் இழிவான பிராணி. மலந்தின்று வாழும். இதை எங்கும் பார்க்கலாம். தொம்பசாதியார் மேய்ப்பார்கள். இறைச்சியும் தின்பார்கள். மற்ற சாதியார் இதைத் தீண்ட மாட்டார்கள். இதன் பால் அகப்படுவது கஷ்டம். வைத்தியத்தில் இதன் பாலுக்கு அபூர்வ குணங்களிருப்பதாகச் சொல்லப்படும். ஆனால் பாலைக் கறக்க முடியாது. கறந்தாலும் பால் வராது. இதன் கொழுப்பு மருந்துகளில் உபயோகப்படும். மேற்பூச்சு மருந்தாகவும் சீலை மருந்தாகவும் உபயோகிக்கலாம்.

இதில் அனேக வகையுண்டு அவையாவன; pig - Sus indicus it is considered as inferior animal, lives on feaces; common every where. It is generally reared by low class people known as Thombars, who also eat its flesh. Others treat the animals and their flesh with great contempt. It is very difficult to even a drop of milk from it and it cannot be milched, when tried it may be drawn in. It is said that the milk is highly useful in Alchemy. In Medicine the lard is much useful for ointment and plasters. Lard is melted and is very useful in herpes and in the mouth and foot disease of cattle. Those suffering from piles can find relief by eating its flesh. The animals is of different kinds viz;

1. ஊர்ப்பன்றி domesticated pig — Sus indicus.
2. காட்டுப் பன்றி Indian wild boar - Porcule sulvania.
3. நாட்டுப் பன்றி country pig as opposed to No.2
4. முட்பன்றி Bengal porcupine - Hystrix bengalenses.
5. கடற்பன்றி sea hog or hog fish - Dolphinus perniger.
6. முள்ளம் பன்றி procupine - Hystrix hirsutirostria alias Crista indica.
7. சீனப்பன்றி china hog.
8. சீமைப்பன்றி Europe pig or German boar it is white colour - Sus scrofa.
9. அந்தமான் பன்றி Andaman pig - Sus andamanensis.
10. மூக்கம்பன்றி.
11. பாஷப்பன்றி

NOTE: No.5 although termed sea hog, it is really a sea fish.

பன்றிக்கறி, பன்றி இறைச்சி, இது மூலத்திற்கு நன்று pork when eaten it gives relief to patients suffering from piles. It causes tapeworm.

பன்றிக்கிளி, ஓர் கடல் கிளிமீன் a kind of parrot fish.

பன்றிக்கிழங்கு see பன்றி மோந்தான் கிழங்கு.

பன்றிக்குட்டி பன்றியின் குட்டி the young of a hog; 2. ஓர் மரம் cynad mangrove - Cericops candolleana.

பன்றிக்குளி ஓர் வித மீன் a kind of fish.

பன்றிக்குறிப்பு பன்றிக் குறும்பு which see.

பன்றிக்குறும்பு, நிலப்பனைக் கிழங்கு ground palm root - Curculigo orchi - Oides.

பன்றிக் கொம்பு, பன்றியின் கோரப்பல் canine tooth.

பன்றிக்கொவ்வை, சிறு குறட்டை small coruttay gourd - Trichosanthes incisa.

பன்றிக் கொழுப்பு, பன்றியின் உடற் கொழுப்பு, இது மிகுதியாயும் வெள்ளையாயுமிருக்கும், மலத்தைக் கழிக்கும், கணைச்சூடு, மூலம் போம், இரணங்களுக்கும், அம்மை அக்கிக்கும் பூசலாம்; களிம்பு செய்யவுதவும், தைலங்களுக்கும் பிளாஸ்திரிக்கும் உபயோகப்படும். hogs lard — Adeps suillus. It is soft and white, Laxative. It cures piles and constitutional heat and is a sure remedy for herpes and useful in mouth and foot disease of cattle. It is useful in preparing ointments and plasters. It must be melted and used; 2. ஓர் மூலிகை an unknown drug.

பன்றிக்கோவை, கருங்கோவை black caper - Karivia amplexi caulis alias cocinia indica.

பன்றித்தகரை, ஓர் தகரை Decanny senna - Cassia montana see மலைக்கொன்றை.

பன்றித்தாளி, ஓர் வகைத் தாளி, இதற்கு மலையாளத்தில் மரவெட்டித் தாளியென்று பெயர் betal nut laurel - Litseac coriarea.

பன்றித்தோண்டி see பன்றித் தோன்றி.

பன்றித் தோண்டிப்பூடு, கோரைக் கிழங்கு which see.

பன்றித் தோன்றி, கோரைக் கிழங்கு coray root - Cyperus pertinuis

பன்றிநெய், பன்றிக் கொழுப்பை உருக்கி வடித்த நெய் a fixed oil expressed from lard - Adepooleum. இதன் உபயோகத்திற்கு for its uses see பன்றிக் கொழுப்பு.

பன்றி நெல், ஓர் தடித்த நெல் large variety of paddy.

பன்றிப்பாகல், ஒரு வகைப் பாகல் a variety of bitter gourd.

பன்றிப்பால் see பன்றி.

பன்றிப்பிச்சு, பன்றியின் பித்தப் பையிலிருக்கும் பித்தம் bile of pig.

பன்றிப்பிடுங்கன், ஓர் மூலிகை white climber, Indian linden - Grewia orientalis.

பன்றிப்பிடுங்கொடி, நீலகிரிப் பன்றிப் பிடுக்கன் Night honey suckle - Lonicera leschenaultil.

பன்றிப் புடுக்கன் see பன்றிப்பிடுங்கன்.

பன்றிப்புடம், வராகபுடம் 50 — 100 எரு கொண்டு போடும் புடம் calcination effected with the aid of 50 to 100 cowdung cakes 2. பன்றி உயரம் போடும் புடம் calcination effected with the aid of cowdung cakes piled upto the height of a pig for purposes of preparing metallic oxides.

பன்றிப்புடலங்காய், பன்றிப்புடலை, பன்றிப்புடோல், ஓர் வகைத் தடித்த கொம்புப் புடலங்காய். இது பலவித நோய்க்குக் காரணமாதலால் அதிகமாக உணவில் சேர்க்கிறதில்லை. பன்றிப்புடலை, a thick skined snake gourd. It is not conductive to health, and so it is not much used in food — Tichosanthes anguina.

பன்றிப்பல், ஓர் வகை ஒட்டுப் புல். இதுவே வலம்புரிபுல். இது நீளமாகவும் முறப்பாகவும் இருப்பதால் இப்பெயர். இதற்கு மிருதுவான முடிச்சுகள் உள்ளன. ஆடுமாடுகள் தின்பதற்குதவும். புல் மைதானங்களில் விளையும். இது நாராகவும் உபயோகப்படும். hygrometric grass, twist grass - Andropogon coptortus alias Heteropogon contortus, it is so called of its being long and stifft sheaths and nodes are smooth, leaves flat and is eaten by cattle when fresh. It is also used as a fibre; 2. ஓர் வகைப் பன்றிப் புல். இதில் அநேக முடிச்சுகள் உள்ளன. சாம்பல் வர்ணத்தோடு வெள்ளை, சிவப்பு, பச்சை நிறமும், கலந்த பூக்கள் இருக்கும். இதன் காய்ந்த வேருக்கு வலியைப் போக்கும் குணமுண்டு. விதைகள் வாந்தியையும், பேதியையும் உண்டாக்கும். swine grass - Polygonum aviculare. It is also known as knot grass or crab grass because of its numerous knots of joints flowers ash colour with variegated colours white, crimson and green. The dried root is anodyne and seeds are emetic and purgative.

பன்றி மந்தாளி,

பன்றி மயிர், எய்ப்பன்றி மயிர், முள்ளம் பன்றி மயிர் porcupine's spine- quill 2. பன்றியின் மயிர் hog's hair.

பன்றி மயிர், முள்ளம் பன்றி மயிர் hair of porcupine, quill.

பன்றி மீன், கொடுவாய் மீன் see பனையேறி.

பன்றிமுடி, பன்றி மயிரைக் கொண்டு திரட்டிய முடிச்சி. இது பதங்கத்தைத் திரட்டி எடுக்க உபயோகிப்பது. a brush made from a collection of hogs hairs. This is used in Tamil Medicine for removing the sublimed substances deposited in the process of sublimation as sublimed mercury.

பன்றிமுள், முட் பன்றியின் முள். இது உபரசச் சரக்குகளில் ஒன்று the spine of porcupine in Tamil Medicine this is one of the 120 kinds of natural substances called Uparasas.

பன்றி மொத்தை see பன்றி மோந்தான் கிழங்கு.

பன்றி மோந்தான் கிழங்கு, குளங்களில் முளைக்கும் ஓர் பூடு. இது மேகம், கபம், பித்தம், பைத்தியம், மந்தாக்கினிகளைப் போக்கும். வீரியத்தைக் கொடுக்கும். இதன் இலைகள் தண்ணீரில் மிதக்கும். கிழங்கு அடியில் நிற்கும். இதைப் பச்சையாகவும் சமைத்தும் தின்னலாம். இதன் விதைகள் பித்தாதிக்கத்தை விலக்கும். அசிரண பேதிக்கும் கொடுக்கலாம். இதை அரைத்து கட்டிகளுக்கு வைத்துக் கட்டலாம். பூ, சாயம் ஏற்ற உதவும். water chestnut - Trapa bispinosa. It is an aquatic plant found grown in tanks, leaves floating on water and root at the bottom. The root is eaten raw or cooked. Nuts are used in bilious affections and diarrhoea, also in the form of abscesses. Flowers give a dye.

பன்றியிறைச்சி, பன்றியின் மாமிசம் hog's flesh.

பன்றியிறைச்சி வற்றல், பன்றிக்கறி காய்ந்து உலர்ந்தது. the dried flesh of pig, dried bacon.

பன்றியீரல், பன்றியின் ஈரல். இதை வெட்டித் கொத்தித் தின்பதுண்டு. the liver of a hog. This chopped and minced and used as a second preparation - Hashlet.

பன்றி வாகை, பச்சிலை மரம் bastard rose wood - Dalbergia paniculata see வரியாங்கம்.

பன்றி வாழை, ஆனை வாழை, அதாவது நீண்ட குலையுள்ள ஓர் வித வாழை மரம் a plantain tree with long and stooping bunches.

பன்றுகம், அசம தாகம் Pimpinella involucrata alias Carum roxburghiana.

பன்றை, நெய்க் கொண்டான் soap nut tree - Hemigyrosa canescens.

பன்னகந்தி, கருவேம்பு curry leaf tree - Murraya Koenigil.

பன்னகம், சீதாங்கபாஷாணம், a kind of arsenic; 2. பாம்பு snake.

பன்னகவைரி, பாம்புக்கு பகையான கருடன், enemy of snakes i.e. Brahmini kite.

பன்னகாசபடலம், ஓர் வகைக் கண்படல நோய் a kind of eye disease attend with the growth of a film over the pupil of the eye.

பன்னகாசம் see பன்னகாசப் படலம்.

பன்னசி, தாமரை lotus flower.

பன்னத்தை, பனிநத்தை a kind of snail.

பன்ன போசனம், இலையுணவு, அதாவது இலை, தழை சாப்பிட்டுச் சீவித்தல் living upon leaves and herbs; 2. இலையில் சாப்பிடல், eating in a leaf which serves a dish; 3. இலைக் கறியுணவு food made of vegetable greens.

பன்னமாசாலம், பருத்தி மரம் cotton tree; 2. சாலமரம், அதாவது ஆச்சா, Ceylon ebony - Diospyros ebenaster.

பன்னமை, கபாதிக்கம் excessof phlegm humour; 2. பலவிதமான தினவு அல்லது நமைச்சல் several kind of itching sensation.

பன்னம், இலை leaf; 2.வெற்றிலை betel leaf; 3. பருத்தி cotton; 4.இலைக்கறி curry made of greens; 5.சாதிபத்திரி, mace; 6.பலாசு, அதாவது முருக்கமரம் coral tree - Butea frondosa.

பன்னலகை, வெற்றிலைக் கொடி betel creeper -Piper betel.

பன்னலதை see பன்னலகை.

பன்னல், பருத்தி cotton.

பன்னவல்லி see பன்னலகை.

பன்னறதி, நிலப்பனை ground palmyra - Curculigo orchioides.

பன்னா, ஓர் கடல் மீன் a sea fish as புள்ளிப்பன்னா, முஞ்சிப்பன்னா.

பன்னாகம், துளசி, holy basil- Ocimum sanctum.

பன்னாசி, see பன்னாகம்.

பன்னாடை, பனை மரம் அல்லது தென்னை மரத்தின் அடி மட்டையின் இலையோரத்தில் இருக்கும் வலையைப் போன்ற நார்ப்பாகம், இது கள் வடிகட்டவுதவும் the fibrous web or net like covering about the base of palmyra or cocoanut leaf stalks. It is used for straining toddy sometimes.

பன்னி, சணல் hemp flex; 2. பத்தினி, a chased woman; 3.பனி நீர் dew water; 4. குருவின் தேவி, the wife of a Guru (spiritual teacher)

பன்னி அப்சா, வாதத்திற்கு உபயோகிக்கும் பரிபாஷைப் பெயர், அதாவது வர்ணமேற்றல், மாற்றுயர்வு in Alchemy a secret term used for increasing the quality or carat of gold.

பன்னியமேனி, இருப்பவல் indian cut weed - Gnaphalium indicum.

பன்னிரண்டாங் குட்டம் see பன்னிரெண்டாங்குட்டம்.

பன்னிரண்டுங் கடந்த பின், சாமங் கடந்த பின், பன்னிரண்டு வயதுங் கடந்த பின்.

பன்னிரண்டு, பகலுக்குரிய 8 யாமமும் இரவு சூரிய அஸ்தமான முதல் சூரிய உதய கால வரையிலுள்ள 4 யாமமும் ஆக 12 யாமத்தையும் குறிக்கும் சாமம், the numeral twelve refers to the twelve watches of the night and day - four of the night and night of the day Night is from sunset to surise; 2. பெண்ணின் 12 வயது; (உ.ம்) பன்னிரண்டும் கடந்த பின்பு refers to the age 12 of a girl, the time of maturity.

NOTE: According to sexual science the maturity of a girl in tropical climate as India is fixed as 12 years at the termination of which the female genitals and breasts are supposed to reach full development just sufficient enough for sexual intercourse.

பன்னீர், ரோசாப்பூவைக் கொண்டு செய்யும் ஓர் வாசனை நீர் rose water - a perfume - Aqua rosea; *2.* பனிக் குடத்து நீர் liquor amnii amniotic fluid; *3.*ஊனீர், அதாவது காயம், புண் இவைகளினின்று வடியும் நீர், fluid oozing from sores or wounds; *4.* பன்னீர் மரம் which see.

பன்னீர்க்குடம், பெண்கள் கருப்பையில் பிண்டத்தைச் சூழ்ந்திருக்கும் சவ்வுப்பை the amniotic sac in the womb of a female.

பன்னீர்க்குடம் பியதல், பன்னீர்க்குட முடைதல், பன்னிக்குடம் கிழிதல் அல்லது பிளவு படல் rapture of the amniotic sac.

பன்னீர் பாய்தல், புண்ணினின்று ஊன் தண்ணீர் வடிதல் oozing of the fluid from sore or ulcer.

பன்னீர்ப்புட்பம் see பன்னீர்ப்பூ.

பன்னீர்ப்பூ, பன்னீர் மரத்தின் பூ the flower of the Indian zebra wood - Guettards speciosa; *2.* ரோசாப்பூ, rose flower.

பன்னீர்ப்பூ மரம் see பன்னீர் மரம்.

பன்னீர் மரம், பனி காலத்தில் பூக்கும் மரம். இது தோட்டங்களில் பயிராக்கப்படும். பூக்கள் வெண்மை மிக்க வாசனையுள்ளவை. சாயங்காலத்தில் பூத்து விடிவதற்குள் கொட்டி விடும். இப்பூ சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் பூசைக்குரியது. இப்பூவினின்று ரோசாப்பூவைப் போல பன்னீர் வாலையிலிட்டு இறக்கப்படும். இப்பூ வாந்தி, நாவறட்சி, சுக்கிலக்ஷீணம் இவற்றை நீக்கும். இலையைக் குழந்தைகளுக்கு காணும் கால் கடுவனுக்கு வைத்துக் கட்டலாம். dew flower tree; tree jasmina, evening flower tree - Gardenia speciosa alias Guettarda speciosa. It is cultivated in gardens, flowers are white and fragrant, bloom in the evening and drop down by the morning. They are sacred to both Shiva and Vishnu. Odoriferous water is distilled from the corolla like rose water. They are said to posses the virtue of removing vomitting, parched tongue and lack of secretion of semen. Its leaves can be applied to the eczema found in the legs of the children at night and bandaged, next morning clean the surface apply cocoanut oil, repeat for three days, the eczema will disappear; *2.* ரோசாப்பூ மரம், இது சாதாரணமாக சுரத்தின் உஷ்ணத்தைத் தணிக்கவும், வாசனைக்காக மேலே தெளித்துக் கொள்ளவும் உதவும். Indian rose tree - Rosa indica. Flowers are used as a cooling medicine in fevers. Rose water and a confection (குல்கந்து which see) are prepared.

பன்னை, ஓர் செடி, a plant *2.* கருப்பூரம், camphor; *3.* ஓர் வகைக் கடல் மீன் a kind of sea fish; *4.* தண்ணீர் விட்டான் கிழங்கு water root - Asparagus racemosus; *5.* வெடியுப்பு nitre or salt peter - Potassium nitrate.

பன்னைக் கீரை see பண்ணைக் கிரை.

பன்னோய், பற்பல நோய்கள் several kinds of diseases.

பா அழகு, beauty; *2.* பாம்பு snake; *3.* பூனைக்காலி cart's foot plant - Mucana pruriens; *4.* பரப்புதல் spreading; *5.* பாட்டு poems, verses as வெண்பா; *6.* பாவினைச் செய்தல் to compose or compile.

பாகம், ஓர் வகை உப்பு a kind of salt.

பாகசாலை, மருந்து கலக்கும் ஓர் இடம், a place for mixing medicine - Pharmacy; *2.* மருந்து முடிக்கும் இடம், place where medicines are prepared - Pharmacuetical works.

பாகசிலைக்கல், சிலாநாகம் zine spar; *2.* சூடாலைக்கல் zinc stone; zinc ore.

பாகஞ்செய்வோன், நோயாளியிடமிருந்து கொண்டு மருந்து பாகஞ் செய்து கொடுத்துக் கவனிப்பவன் one attending on the patient to compound and administer medicine and also to give all comforts to him.

பாகண்டை, சிவதை turbith root, Indian jalap - Ipomea turpethum.

பாகபேதம், தயாரிப்பதில் ஏற்படும் வித்தியாசங்கள் changes or differences arising in the course of preparation; *2.* கைபாகத்தவறு defects arising in compounding medicine.

பாகப்படவுருக்கல், பக்குவப்படும்படி உருக்குதல் melting to the required standard.

பாகப்படுத்தல், உபயோகப்படும்படி தகுதியாக்கல் making anything fit for use; *2.* பதப்படுத்தல் to prepare anything suitable for adaptation; seasoning as pickles.

பாகமாக்கல், பண்படுத்தல் making fit for use.

பாகமாதல், பூர்த்தியாதல் to come to perfection; *2.* பக்குவமடைதல் reaching a matured state as in preparation of medicine medicated oil electuaries etc.

பாகம், அச்சம் fear; *2.* முறை process; *3.* நளபாகம் cookery; *4.* நான்கு முழம், four Cubits; *5.* ஆந்தை owl; *6.* நரைமயிர், grey hairs; *7.* பக்கம் side; *8.* பகுதி part *9.*

பக்குவம் maturity *10.* கூட்டுமுறை, proportion *11.* புயம் arm, shoulder *12.* பதம் which see; *13.* பலண்டுறுக பாஷாணம் a kind of arsenic.

செய்முறை: இது வைத்தியத்தில் பல வகைப்படும். அவையாவன: methods of preparation. They are various, they are;

1. கைபாகம் methods gained by experience.

2. செய்பாகம் methods as given in texts.

3. அரைப்புப் பாகம் methods in grinding

4. கலப்புபாகம் process or mixing.

5. புடபாகம் methods of heating with cow dung cakes.

6. கொள்பாகம் methods of selecting drugs.

7. தைல பாகம் methods of oil preparing various medicinal oils.

8. இலேகிய பாகம் methods of preparing electuaries and confections.

9. மதுபாகம் methods of preparing syrup.

10. கிருதபாகம் methods of preparing medicinal ghee.

11. இரசாயன பாகம் methods of preparing tonics.

12. கஷாயபாகம் methods of preparing various decoctions.

13. வடகபாகம் methods of preparing vadagam.

14. சரணபாகம் method of preparing powders.

15. சாசன பாகம்

16. உருசி பாகம்

17. கூந்தற் பாகம் a linear measure refering to a distance between the finger tips of both arms when extended i.e. about 6 ft. in length as in 60 பாகம் கூந்தல் (a proverbial expression)

18. உடம்பில் அமைப்பு பாகங்களிலும் சப்த தாதுவிலும் நோய் பாகம் இவற்றின் மாறுபாடுகளின் பகுதி. the sum total of the biochemical changes that take place in a living cell, tissues and other structures of the body or reaction that takes place in diseases in the system.

19. ஓர் பைசாசம் a devil.

20. கற்கண்டு, sugar candy

21. புசிப்பதற்கு உண்டான பாகங்கள் *4.* அவையாவன: சித்தபாகம், வீமபாகம், நளபாகம், தேவபாகம் the four kinds of preparations namely; 1. Siddha preparation, 2. Bhima preparation; 3. Nala preparation and 4. Deva preparation.

பாகம் செய்வான், வைத்தியர்களிடத்தில் மருந்துகளை தயாரிக்கவும், கலந்து கொடுக்கவும், நோயாளிக்கு உதவியாகவிருப்பதும் ஆகிய தொழில் புரிவோன், an attendent attached to a physician for preparing medicine, compounding for nursing the patient etc.

பாகலட்சணம், பாகக்கிரமம் method or methods of preparation.

பாகலம், யானைக்கு வரும் சுரம் fever in an elephant; *2.* குதிரைக்கு வரும் நோய் a disease in a horse.

பாகலன், உன்மத்தன் lunatic.

பாகலிலை, பாகற்காயிலை, இதில் இரசம் முறியும் the leaf of the bitter gourd (carolah) Mercury is acted upon by the juice of the leaves.

பாகல், இதுவே பாகற்காய். இது இரண்டு வகைப்படும். 1. மிதிபாகல், 2. கொம்புபாகல். இதில் ஒன்று (மிதிபாகல்) கசப்பிராது. இரண்டாவதில் கசப்புண்டு. அன்றியும் பத்தியத்திற்கு முறிவான வஸ்து. இதற்கு வெல்லம் கூட்டிச் சமைப்பார்கள். இது சாதாரணமாய்த் தோட்டத்தில் விளையக் கூடியது. இலை ரசத்தை வெந்நீரோடு கலந்து கொடுக்க வயிற்றுக் கிருமிகள் சாகும். இதன் காய் உண்ண, மூலம், காமாலை மண்ணீரல், கல்லீரல் தோஷம், பயத்தினால் வரும் சுரம், பிரமேகம், இருமல், இரைப்பு, முந்தோஷம், மலக்கிருமிபோம். இது இரத்த மூலத்திற்கு ஒரு சிறந்த அவிழ்தம், பழுக்காத பாகலிலையை மிளகுடன் கூட்டி மடித்து விழுங்க இரத்தங் கசிவது நின்று கடுப்பு முதலான நோய் குணமாகும். கொம்பு பாகற்காய் அபத்தியமானதும் மருந்துகளை முறிக்கும் குணமுடையதுமாகும். வாத பித்தாதிக்கம், வயிற்றுக் கிருமிகளைப் போக்கும். சில விஷத்தையும் போக்கும். மிதி பாகற்காய், பித்தத்தையும், கரப்பானையும் உண்டாக்கும். இரசம் பாஷாண மருந்துகளை முறித்து தேகத்திற்கு கெடுதியையுண்டாக்கும். இதை மக்கள் சமையலிலிட்டும், வற்றலிட்டும் சாப்பிடுவார்கள். இது உருண்டையாயும் பச்சை

நிறமாயும் கசப்பாயுமிருக்கும். இதன் விதையினின்று தைலமிறக்கி மருந்துகளுக்கு உபயோகிப்பார்கள். இதன் இலையின் கஷாயத்தை இரசம், பாஷாணம் தோஷங்களுக்கு கொடுப்பதுண்டு. இது அடியிற் கண்டபடி பல வகைப்படும். அவையாவன: spiked bitter cucumber carolah, balsam pear - Momodica genus. It consists of two kinds ground creeper, with small variety of fruits - Momoridica charantia alias M.humilis. It is not very bitter, the other bears big long fruits. They are very bitter - Momordica chrantia. Both are used in diet. They are cultivated in the gardens. The juise of the leaves mixed with warm water is said to destroy the worms in the intestines. The fruit is prescribed in cases of piles, jaundice, liver and spleen affections, where as ripe fruit is given for fever, urniary complaints, cough, bronchitis, affections or derangement of the three humours and worms in the intestines. The ripe fruit is used to calcine or purity white arsenic. The decoction of the leaves is given as an antitode for the poisonous effects of mercury and arsenic.

பாகல், பலாமரம், jack tree - Arto carpus integrifolia; 2. வெண்பாவட்டை white pavettai - Pavetta indica.

பாகல் வகை the varieties are;

1. கொம்பு பாகல் அல்லது கொம்பன் பாகல் long balsam pear - Mimoridica charantia.
2. மிதிபாகல் ground creeper Mimordica humillis.
3. சின்னபாகல், the same as No.2
4. நிலப்பாகல் the same as No.2
5. காட்டுப் பாகல், forest carolah -Mimoridica dioica.
6. நாய்ப்பாகல், same as No.5
7. பழுபாகல் buffalo carolah - Mimordica hispida.
8. பேய்ப்பாகல், same as No.6
9. முட்பாகல் bristly balsam apple - Mimoridica misionis.
10. எருமைப் பாகல், same as No.5

NOTE: It appears that there are unknown varieties for which no corresponding botanical names could be traced as கொல்லம் பாகல், நரிப்பாகல், புனைப்பாகல், நீர் பாகல்.

பாகற்காய், பாகல்காய் see பாகல்.

பாகற்கொட்டை, பாகல் விதை, seeds of carolah.

பாகற்பலா, பெருங்குமிழ் lareg goomiz - Gmeline arborea.

பாகற்பழம், பழுத்த பாகற்காய். இதனால் சுரம், பிரமேகம், இரைப்பு, மூலம், குட்டம், மலக்கிருமி இவை போம் ripcd balsam pear. It is useful in cases of fever urinary disease, bronchitis, piles, leprosy, and worms in the intestines.

பாகா, பனைச் சர்க்கரை sugar obtained from palmya juice.

பாகாசயம், சாப்பிட்ட உணவைப் பக்குவப் படுத்தும் சிறுகுடல் small intestines capable of digesting the food taken into the system.

பாகாட்சணம்.

பாகாதிசாரம், நாட்பட்ட அதிசார பேதி chronic diarrhoea.

பாகாரி, வெண் பொன் impure gold of a white colour.

பாகி, நாய் dog.

பாகிடசாரியம், ஓர் வடமொழி வைத்திய நூல் an Ayurvedic medical science in Sanskrit.

பாகியம், வெளிப்புறத்தை யடுத்தது, relate to the external.

பாகியாரியாம வாதம், பாகிராயமா வாதம், பின்னிசிவு அதாவது உடம்பையும், தலையையும் குதிக்காலையும் பின்புறமாக வளைத்தும், மார்பு உயர்ந்தும்,கழுத்து இறுகி முகம் பல்லும் நிறமாறி, மலம் மூத்திரம் கட்டுண்டு, தாழ்வாய் பிடிப்பதுடன் மற்றும் வேறு குணங்களையு முண்டாக்கும் ஓர் வாதநோய், இவ்வாதம் பெண்களுக்கு சாதாரணமாய் பிரசவ காலத்திலும் அதற்குப் பிறகும் காணும். இதுவே தனுர் வாதமாக மாறும். a form of tetanic spasm in which the head and heels are bent backward, chest raised upwards, neck stiffened, face and teeth discoloured, natural urgings become fixed, the lower jaw locked up with other contiguous symptoms - Opisthotonos. Women are generally attacked by this nervous disease during delivery or subsequently.

NOTE: This is one of the two distinct types of tetanic spasms in which the extremely enraged and powerful bodily vayu (nerve force) is centred or lodged in ligaments which transverse the posterior side of the body, when the body is naturally bent backwards. The patient then experiences a sort of breaking pain at the chest, waist and

thighs. The disease is looked upon as beyond the pale of all medical treatment especially when a women is affected by this disease during her delivery or there after. See also தனுர்வாதம்.

பாகியிகவசோமம், உடம்பின் மீத்தோலில் காணும் வீக்கம் அல்லது கழலை epithelial tumour.

பாகியேந்திரம், வெளியுறுப்பு external organ.

பாகிரி, ஐயங்காயக்கரு, அதாவது பிரமமுனி சூத்திரம், 300-ல் சொல்லியுள்ளபடி தலைப்பிள்ளைக் கருவைக் கொண்டு செய்யும் ஓர் வித மெழுகு a wax like preparation derived by a secret process from the first foctus extracted from a women's womb as contemplated in work of Brahmamuni Sutram, 300; 2. ஐங்காயம் அதாவது மஞ்சள், கடுகு, வெள்ளுள்ளி, காயம் சதகுப்பை சேர்ந்த பிரசவ மருந்து a pulverised medicinal powder consisting of five stimulants viz. tumeric, mustard, garlic asafoetida, and dill seed given to women after delivery.

NOTE: ஐங்காயத்தில் வெந்தயம் என்று தமிழிலும் dill seed என்று ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளது. வெந்தயம் குளிர்ச்சி செய்யும், பிரசவித்தவர்களுக்கு உகந்த தல்ல. ஆகையால் இது dill seed என்கிற சதகுப்பையாகவே யிருக்க வேண்டும்.

பாகு, குழம்பு a liquid food; 2. சர்க்கரை sugar; 2. வெல்லப்பாகு a thick consistence of boiled jaggery; 4.கருப்பட்டி palm sugar; 5. களிப்பாக்கு boild arecanut; 6. கற்கண்டு sugar candy; 7. திரட்டுப்பால் boiled essence of milk; 9. புயம் shoulder; 10. சர்க்கரைப் பாகு syrup; 11. இலேகியமாகக் கிளறிய பழவர்க்கத்துடன் சேர்ந்த சர்க்கரைக் குழம்பு,இது மேல்நாட்டிற்கு தயாரித்து அனுப்பப்படும். a thickened juice of fruits boiled with sugar to a thick consistency or electuary - fruit jelly as guava jelly much used and exported to Europe, 11. தயிர் அல்லது மோர்க் குழம்பு a thick consitence of curd or butter milk mixed and warmed with spices.

பாகு கூடல், see பாகு சேரல்.

பாகு செய்தல், பாகு ஆகும்படி கொதிக்க வைத்தல் boiling anything to reach the stage of a syrup.

பாகு சேரல், பாகு திரளுதல், boiling anything to a thick consistence like syrup.

பாகுதம், கருஞ்சீரகம் black cumin - Neigella sativa.

பாகு தேர்தல், பாகு பக்குவப்படுத்தல், see பாகு செய்தல்.

பாகு தோஷம், கைகளைச் சூம்பச் செய்யுமோர்வித வாத நோய் a form in which the aggravated Vayu (wind humour) renders the arms atrophied.

பாகுநாத மந்திரம்.

பாகுபடுதல், see பாகுபடுத்தல்.

பாகுபடுத்தல், பாகு பதத்திற்கு கொண்டு வருதல், bringing anything to the stage of a thick consistence like a syrup; 2. பிரிவு படுத்தல் to analyse.

பாகுபதம், பாகுபக்குவம் gummy state, a stage of thick consistence.

பாகுபருவம், பாகாய்த் திரண்டு வரும் பக்குவ நிலை, see பாகுபதம்.

பாகுபாடு, பகுப்பு, பிரிவு division, 2. பிரிவு படுகை becoming analytic.

பாகுபிடித்தல், பாகு செய்து உண்டை பிடித்தல், to make a lump of jellied matter; 2. தேன் ஊற்றி இலேகியமாக செய்தல், making into an electuary by adding honey - a conserve.

பாகுமுறிதல், பாகு பதம் தவறுதல், பாகு பதம் முதிர்ந்து போதல் failing in the preparation of a syrup by exceeding the stage.

பாகையிடல், அளவிடல், to graduate.

பாகையிட்ட பாத்திரம், அளவு குறித்த பாண்டம் graduated vessel, e.g. an ounce glass.

பாகையெலும்பு, ஓர் மூக்கெலும்பு, a nasal bone - turbinal bone.

பாக்கடிக்கு நேரம், நிமிஷ நேரம் in a moments time.

பாக்கல், பரவுகல் a kind of flat marble stone.

பாக்கல்லு, பரவு கல், see பாக்கல்.

பாக்கன், செம்படவன் fisherman; 2. பூனை cat.

பாக்கியம், கஷாயம் decoction.

பாக்கு, துவர்க்காய் raw areca nut; 2. பால், milk; 3. கொட்டைப் பாக்கு dried areca nut; 4. களிப்பாக்கு boiled and cut or split areca nut; 5. சாயப்பாக்கு sliced and dyed areca nut.

பாக்கு, கமுக மரத்தின் காய். இதற்கே கொட்டைப் பாக்கு என்று பெயர். இக்காயின் குணம் இதின்

துவர்ப்புச் சத்தினின்று உயர்வு, தாழ்வு, எனக்கொள்வதுண்டு. இதை வெட்டிப் பார்க்கத் தெரியும். நடுப்பாகம் குறுகியிருந்தால் உயர்வு என்றும், பருத்திருந்தால் தாழ்வு என்றும் கொள்ளப்படும். கடைகளில் இது முழுசாகவும், வெட்டியும், சீவியும் விற்கப்படும். இதினின்று கத்தைக் காம்பும் காசுக் கட்டியும் தயாரிக்கப்படும். ஒன்று தாம்புலத்திற்கும் மற்றொன்று மருந்திற்கும் உபயோகப்படும். இந்தக் கொட்டைப் பாக்கினின்றே களிப்பாக்கு, வெட்டுப்பாக்கு, சாயப்பாக்கு, சுருள் பாக்கு, அலகு பாக்கு, சீவல் பாக்கு, தூள் பாக்கு முதலியவை தயாரிக்கப்படும். உலர்ந்த பாக்கு நரம்பு சுறுசுறுப்புண்டாக்கும். மாதவிடாய் போக்கும் குணமுண்டு, காசுக் கட்டி வாய்க் கொப்புளிக்கவுதவும். இப்பாக்கு தாம்பூலத்தில் அதிகமாக உபயோகப்படும். இது மலபந்தத்தையும் அசீரணத்தையும் போக்கும். பல்லிற்கு சாயமேற்றினது போலிருக்கும். சிலர் இதற்கு பல விருத்தியும் உண்டு என்று எண்ணுகிறார்கள். இதை கருக்கிப் பல் தூளாகவும் உபயோகிக்கலாம். வெறும் பாக்கை அதிகமாக உபயோகித்தால் சோகை உண்டாகும். இதன் துவர்ப்புச் சத்து, பலவீனத்தால் உண்டாகும் பேதியை கட்டும், வெற்றிலையோடுசேர்த்து தாம்பூலமாக உபயோகிக்க உடம்புக்கு ஒரு தெம்பும் சுறுசுறுப்பும் உண்டாகும். வாய் நாற்றம் போகும். பல் உறுதிப்படும். இது 1.வெற்றிலைப் பாக்கு, 2. சோலைப் பாக்கு, 3. கொட்டைப் பாக்கு, 4. களிப்பாக்கு, 5.அலகு பாக்கு, 6. சீவல் பாக்கு, 7. தூள் பாக்கு, 8. சொத்தைப் பாக்கு என்று பல வகைப்படும். the fruit of areca catechu tree, areca nut. The quality of the nut is judged by the amount of astringent matter contained in it, a point which is judged by cutting them. If the medullary portion be small and narrow the nut is of good quality, but when the portion is in large quantity it is esteemed as of less value, It is sold in the bazaar whooly, sliced, or pared From the nuts are prepared two astringent kinds of cutch called cutta cambu for chewing with betel leaf and kasucutyy for medicine. Different kinds of cutch called cutta cambu for chewing with betel leaf and kasucutty for medicine. Different kinds of nuts are prepared from these nuts as - boiled nut, sliced nut, dyed, curied or rolled, pared and powdered ones. Dried nut is medicinally a nervine tonic and emmenagogue, the cutch is a powerful astringent and slightly antiperiodic useful in gargle, douche etc. The nut is the famous masticatory, the nut is much used with betel in the East. Though astringent, it removes constipation and improves digestion. So it is suggested to use the nut in excess at night. It adds colour to the teeth, and improves or strenghtens the body. It is burnt to ashes and used as tooth powder. Excessive eating of the nut without the betel leaf, is said to cause anaemia. It arrest the motion in diarrhoea owing to its astringent properties. When chewed with betel and chunnam, it lends great exhilaration and also stimulation, sweetnes the breath and strengthens gum.

NOTE: The nuts are collected, the husks or outer fiber like pods are removed before using them. Hand-some beads are made by polishing them. In Europe several preparations are made from the nuts such as arecadin (an acid) arecalin (an crystaline alkaloid) arecalin (an oily alkaloid) arecane (a purgative) etc. It contains tannic acid as such can be used externally as an astringent, styptic and internally as an astringent in atonic diarrhoea

பாக்குக்கல், காகைக்கல்.

பாக்குச் சத்து, பாக்கினின்று தயாரிக்கும் ஓர் சிவந்த வஸ்து. இதைக் காசுக்கட்டி என்னலாம். a brown red colouring matter obtained from areca nuts, known as arecared - Arecin.

பாக்குச்சாரம், பாக்கை வேக வைத்து அதனின்று வடிக்கும் சாரம், essence of areca nut derived by boiling it; 2. பாக்கினின்று வடித்த எண்ணெய்ச் சத்து, இது பேதியையும் வாய் நீரையும் வடிக்குந் தன்மையது. அன்றியும், நாடி நடையையும் மெதுவாக்கும், an oily and volatilebasic substance obtainable from areca nut. It is said to be a purgative, a sialogogue and to slow the pulse - Arecane; 3. வெற்றிலைச் சாரம் அதாவது தாம்பூலத்தின் சாரம் the juice of betel and nut by chewing them with chunnam.

பாக்குச் சீவல், பாக்குச் சீவிய பொடி, the thin slices pared off from areca nut.

பாக்குணன், ஆற்று மருந்து healing medicine.

பாக்குநாதமந்திரம், பாக்கை பெண்கள் நாதத்தில் ஊற வைத்து புருடரை வசியத்திற்காக உபயோகிக்க உச்சரிக்கும் மந்திரம் a mystical formula chanted for purposesof facinating males. Before doing so, the arecanut is soaked in the menses of the female and the same is taken out and used for magical purposes.

பாக்குப்பனை, பாக்கு மரம் areca palm.

பாக்குப்பாளை, பாக்கு மரத்தின் பனை, the spadix of the areca nut tree.

பாக்குப்போல் சீவல், பாக்கைச் சீவுமாறு போலச் சீவுதல், to slice the arecanut.

பாக்குமட்டை, பாக்கு மரத்தின் இலைத் தண்டு, the stalk of the leaf of areca palm.

பாக்குமர பட்டை, பாக்கு மரத்தின் அடிவேர் பட்டை, the root bark of arecanut tree.

பாக்குமரப்பாளை, பாக்கு மரத்தின் பாளை, see பாக்குப்பாளை.

பாக்கு மரப்பூ, பாக்கு மரத்தின் சிறிய வெள்ளை வாசனைப் பூக்கள், small white fragrant flowers of areca palm.

பாக்குமரம், கமுகு, அதாவது கொட்டைப் பாக்கு காய்க்கு மரம். இம் மரத்தை எங்கும் பார்க்கலாம். தோட்டங்களில், வைத்துப் பயிராக்கப்படும். இது திருவிதாங்கூர் முதலிய மேற்குமாலை மாகாணங்களிலும் வடக்கே வங்காளம், நேபாளம் முதலிய இடங்களிலும், தெற்கே இலங்கை அதை அடுத்த தீவுகளிலும் விசேஷமாய்ப் பயிரிடப்படும். இது மற்ற மரங்களைப் போலல்லாமல், பார்ப்பதற்கு வெகு அழகாக விருக்கும், செங்குத்தாய் நேராக வளரும், 10 — 30 அடிவரையில் வளரும். அடிமரம் வளையம் போட்டது போல் வட்டமாகக் காணப்படும். தென்னை மரத்தைப் போல் சின்ன மட்டைகள் உண்டு. உச்சி மரத்தில் இலைகள் சிறகைப் போல் படர்ந்து நிற்கும். பூக்கள் சிறியன, வெண்மையாயும் வாசனையாயுமிருக்கும், ஆண் பூ மேலாகவும், பெண் பூ கீழாகவும் பூத்திருக்கும். இம்மரம் அனேக இலைகள் இலைகள் விடும், ஒரு மரத்திற்கு சுமார் 300 பாக்குகள் வீதம் பலன் தரும், இதன் பாக்கினின்று இரண்டு வஸ்துக்கள், கத்தைக் காம்பு, காசுக்கட்டி தயாரிக்கப்படும், கத்தைக் காம்பு வெற்றிலையோடு போட்டுக் கொள்ளவும். காசுக் கட்டி மருந்திற்கும் உபயோகப்படும். உலர்ந்த பாக்கு நரம்பிற்கு பலத்தைத் தரும். சூதகப் போக்கை குணமாக்கும் betel palm, catechu palm - Areca catechu alias Areca fanfel. The tree is common every where and it is cultivated in the gardens. It is grown in Travancore, Malabar, the Western province. S.India, North Bengal Nepaul and other mountainous regions. The best palm is found in Ceylon and other adjacent islands and Maldives etc, in abundance. It is most graceful of all palms and best to look at and is of remarkably erect growth a slender cylinderical annuate stem. It is 10—30 ft. high, stem with ring like bands at a distance of a few inches, spadix much branced like cocoanut palm. It has a tuft of feathering leaves at the extreme top, flowers white, small and fragrant, male flowers numerous above the female. It yields numerous above the female. It yields several branches and in each bunch nemerous nuts and so in a tree there may be about 300 nuts. From the nuts are prepared two astringent kind of cutch called katta cambu for chewing with the betel leaf and the kasukatti for medicine, Dried nuts are medicinally a nervine tonic and emmenagogue.

NOTE: The tree is abundantly grown in the strait settlement. The nut is the Arellana indica of old writers, the commom name by which it is known in commerce is Kalippakk *(களிப்பாக்கு)*, The ordinary nuts have a thin brown rind and in size are intermediate between walnut and hazedb nut. The palm is cultivated in sandy clay, best on sides of hills and margin of rivers and with moist climate. The cutch is a powerful astringent and slightly antiperiodic useful in gargle and douche. The dry and expanded petioles serve as ready made splints for fractures. The decoction of the roots is used as an external application for lipsores. A handsome bead is made by polishig the nut, sometimes necklace and tops of walking sticks.

பாக்குமுளை, பாக்கு விதையின் முளை the sprout of the areca nut seed; 2. பாக்கைப் போன்ற முளையுடைய மூலநோய் a vascular tumour of the rectal membrance of the size of an areca nut as in piles.

பாக்குவெட்டி, பாக்கை வெட்டுவதற்காக உபயோகிக்கும் கருவி an implement for crushing or cutting areca nut into thin slices.

பாக்கு வெட்டிக் கீரை, பாக்கு வெட்டியைப் போல் இலை பிரிந்த கீரை, a kind of greens the leaves of which is split into two parts just like the pincers.

பாக்குறண்டி see பால் குறண்டி.

